# ஈழம் தந்த நாவலர்




பொ. பூலோகசிங்கம்

காந்தளகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERADENIYA
4-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

462575

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் தந்த நாவலர்

கலாகீர்த்தி
பேராசிரியர், டாக்டர்
**பொ. பூலோகசிங்கம்,**
**B.A. (Hons), D.Phil. (Oxon.)**
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
இலங்கை

விற்பனை உரிமை

காந்தளகம்

834, அண்ணா சாலை, சென்னை-2

மறவன்புலவு, சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
462575

முதற் பதிப்பு : தி.பி. 2024
ஸ்ரீமுக கார்த்திகை மகம்
1993

உரிமை : ஆசிரியர்க்கு

விலை : இந்தியாவில் ரூ. 50/-
இலங்கையில் ரூ. 125/-

அச்சிட்டோர் : அலமு அச்சகம், சென்னை-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY 4-7-1995

# முன்னுரை

மக்களின் ஐதீகங்களும் நம்பிக்கைகளும் சடங்குகளும் மதங்களாக உருவாகின்றன. இவற்றின் அடிப்படையிலேயே அவர்கள் தம் சமூக நோக்கும் அமைந்து காணப்படுகின்றது. இது உலகெங்கணும் பொதுவாகக் காணப்படும் நியதி. எனவே, மக்கள் இனமொன்றின் பாரம்பரியத்திலே — பண்பாட்டு வளர்ச்சியிலே — மத அடிப்படை இல்லாத நிலையொன்றினைக் காண்பதரிது.

மிக நீண்டதொரு பாரம்பரியத்தினைக் கொண்ட ஈழத்துத் தமிழினம் கி.பி. பதினேழாம் நூற்றாண்டிலே தன் சுயாதிக்கத்தை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அந்நியராட்சி மட்டுமன்றி, அந்நியர் கொண்டு வந்ததும், மதங்களின் அடிப்படையினைக் கொண்டதுமான அவர்களுடைய பண்பாடும் அதற்குக் காரணமாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே நிலைமை மோசமா மாயிற்று. ஈழத்துத் தமிழினம் மூர்க்கமான பிறமதப் பிரசாரத்தினைத் தாங்கி நிற்க வேண்டியிருந்தது. ஆறுமுக நாவலரின் 'யாழ்ப்பாணச் சமயநிலை' தமிழ்ச் சமூகத்தின் சமய நிலையை மட்டுமன்றி அத்தளத்தினைக் கொண்ட சமூக நிலையையும் காட்டி நிற்கின்றது.

ஈழத்துத் தமிழ் இனம் தன் பாரம்பரியத்தை — பண்பாட்டை — பேண வேண்டியதும், பேராபத்துச் சூழ்ந்தது மான இக்கட்டத்திலே தோன்றியவர் தாம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். அவர் தமிழர் தம் சமய வாழ்க்கையிலே புகுந்துவிட்ட களைகளை நீக்க முயன்றும், புறச்சமய வெள்ளத்திலிருந்து அணை கட்டிக் காவல் செய்ய முயன்றும் பெருந்தொண்டாற்றினார். நாவலரவர்களின் பங்களிப்பு ஈழத்தினை மட்டும் தனித்து உள்ளடக்கியதாக இருக்கவில்லை. தமிழ்நாட்டினையும் உள்ளடக்கியதாகவே இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. ஆயினும், தமிழகம் அன்று அதனை உணர்ந்ததாகத் தெரியவில்லை ; இன்றும் அதனை உணராது வீம்பு பேசுவோர் தமிழ்நாட்டிலுளர்.

ஆறுமுக நாவலரின் பங்களிப்பினைக் கௌரவித்தவர்கள் அவரை ‘ ஐந்தாம் குரவர் ’ என்று போற்றிப் புகழ்ந்த போது, அவர்தம் முழுமையான பங்களிப்பினை உணர்த்தத் தவறிவிட்டனர். ஐந்தாம் குரவராக உயர்த்திக் ‘குருபூசை’ நாள்களிலே மட்டும் நினைவுகூர வேண்டிய நிலைக்கு அவரை ஒதுக்கிவிட்டனர். அத்தோடு, நாவலரவர்களைப் பொதுமக்கள் உணரமுடியாது போகவும் வாளாயிருந்து விட்டனர்; சமூகத்திலே மக்கள் விரும்பிய மாற்றங்களுக்கு எல்லாம் நாவலரவர்கள் விரோதி என்று கருதவைத்து விட்டனர். இந்நிலைக்கு நாவலர் மரபைப் பேண முற்பட்டவர்களிற் சிலர் காரணமாக அமைந்திருந்தமை விசனிக்கத் தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப சகாப்தங்களிலே தமிழ் மரபுக் கல்வி நிறுவன ரீதியிலே சிறப்பிடம் பெறத் தொடங்கியது. யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலைக் காவிய வகுப்பு என்பன காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி, 1921இலே உருவாகிய ஆரிய—திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், பிரவேச பால பண்டித தேர்வுகளை நடாத்தத் தொடங்கியதை அடுத்து, தமிழ் மரபுக்கல்வி இயக்க ரீதியிற் செயற்படும் வேகத்தினைப் பெற்றது. சுன்னாகம் பிராசீன பாடசாலை பின்பு பரமேசுவரா பண்டித ஆசிரியர் கலாசாலையும் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையின் காவிய பாடசாலையும் ஆரிய—திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் தேர்வுகளுக்குப் பாடங்கள் நடாத்தி அம்முயற்சிகளை ஊக்குவித்தன. 1923இலே உருவாகிய சைவ வித்தியா விருத்திச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் மூலை முடுக்குகளில் எல்லாம் சைவப் பாடசாலைகளைத் தாபித்தும், பழையனவற்றைப் பொறுப்பேற்றும் செயற்படத் தொடங்கியபோது. மரபுவழித் தமிழ்க் கல்வி உந்து சக்தியைப் பெற்றது. 1928இலே அமைக்கப்பெற்ற திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை, சைவப் பாட சாலைகளுக்கு ஆசிரியர்களை உருவாக்கியதோடு, தமிழ் மரபுக் கல்வியின் சிறந்த பிரசார சாதனமாகவும் அமைந்தது. இக்கட்டத்திலே முக்கிய தேவையாக அமைந்தவை தமிழ் நூல்கள். அப்போது நாவலரவர்கள் சுயமாக எழுதியவையும், உரை செய்தவையும், பதிப்பித்தவையுமான நூல்களின் இன்றியமையாமை உணரப்பட்டது. இதனால் நாவலர் வட்டம் விரிவடையத் தொடங்கியது. ' ஐந்தாம் குரவர் ' இலக்கிய இலக்கணப் பேராசானாக உணரப்படும் கட்டத்தினை அடைந்தனர்.

இக்கட்டத்திலே நாவலரவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு விளக்கிக் காட்டுவதில் முக்கிய பங்கினை வகித்தவர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது. நாவலர் இயக்கத்திலே அவர் பங்கு மிகப் பெரியது. ஈழத்துத் தமிழ்ப் பாரம்பரியம் நாவலர் வழியிலே வருவது என்பதை உணர்த்த முயன்றவர்கள் பண்டிதமணியவர்கள். நாவலர் ஆய்வுகளுக்குக் காலெடுத்துக் கொடுத்து, அவற்றை ஊக்குவித்து நின்றவர்கள் அவர்கள். அவர்கள் எழுதிய நாவலர் கட்டுரைகள் அண்மையிலேதான் நூலுருப் பெற்றபோதும், அவை தோன்றிய காலங்களிலேயே, அவற்றை வாசித்தவர்கள், நாவலர் மரபினை உணர்ந்து அதனை விளக்க முற்படுவதற்கு, அவை காலாயின.

1930இலே உருவாகிய வண்ணார் பண்ணை கலா நிலையம் எனும் ஆய்வுக் கழகத்திலே பண்டிதமணியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933ஆம் ஆண்டு, திசம்பர் மாதம், எட்டாம் தேதி நிகழ்த்திய சொற்பொழிவொன்றினைப் பற்றி ' ஞாயிறு ' குறிப்புரை வழங்கியுள்ளது. அச்சொற்பொழிவு நாவலரவர் களுடைய வாழ்க்கையைத் தேசிய வாழ்க்கை, தமிழ்ப்பாஷா வாழ்க்கை, சைவசமய வாழ்க்கை என மூன்றாகப் பகுத்துக் கொண்டு, அம்முப்பிரிவுகளையும் விளக்குவதாக அமைந் திருந்ததாம்.

> '' ....தம்முடைய தேசீய வாழ்க்கையில் அவர்கள்.. யாழ்ப்பாணத்தில் பஞ்சமும் பேதி நோயும் வந்த காலங்களில், பொதுமக்கள் அடைந்த துன்பங்கள் போயகலத் தம் உடலால் பணி செய்ததோடு, தம் மொழியாலும் துன்புற்று நலிந்த மக்களுக்கு அரசாங் கத்தார் வாயிலாய் உதவி புரிந்தமையைப் பற்றிப் பேசினார்கள். அவ்வாழ்க்கையில் அவர்கள் சாதி வேற் றுமை சமய வேற்றுமை என்னும் பொல்லாங்குகளை எள்ளளவும் பாராது, எல்லாரையும் ஒருபடித்தா நோக்கும் அருள் ஒழுக்கமுடையராய் நடந்தமை பண்டி தர் அவர்களால் அவையினர் உள்ளத்திற் பதியச் செய்யப்பட்டது ''.
>
> (ஞாயிறு, ஸ்ரீமுக ஆு ஐப்பசி — கார்த்திகை மீ பக். 370)

என்பது குறிப்புரைப் பகுதி. நாவலராய்வுகள் சமய தமிழ் வரம்புகளைத் தாண்டிச் சென்ற ஆரம்ப கட்டத் தினை இங்குக் காணலாம்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை முதலியனவும் நாவலர் இயக்கத்திலே தம்மாலியன்ற பங்களிப்பினை இக்கட்டத்திலே செய்து வந்துள்ளன. 1932ஆம் ஆண்டிலே கொழும்பு விவேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னந்த சபையினர் " நாவலர் வசனநடை " பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவித்தனர். கொழும்பு விவேகானந்த வித்தியாலய ஆசிரியர் சோ. ராமஸ்வாமிசர்மா எழுதிய " நாவலர் வசனநடை " போட்டியிலே முதற்பரிசு பெற்றது. இச்சிறுநூல் 1932ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்திலே வெளிவந்தது. இக்காலத்திலே வெளிவந்த பிறிதொரு சிறு நூல்தான் " நாவலர் நடைப்பாங்கு " ; அதன் ஆசிரியர் சி. சரவணனார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆறாவது சகாப்தத்திலே ஈழநாட்டில் உண்டுபட்ட மாற்றங்கள், தனிப்பாதையிலே ஈழத்துத் தமிழர் செல்ல வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்தின. அப்போது தோன்றிய தத்துவார்த்த ரீதியான தேவையைப் பூர்த்திசெய்யக் கூடிய சிறந்தவராக ஆறுமுக நாவலர் கருதப்பட்டார்.

" வேற்றுச் சமய விருண்மண்டி
மேலாஞ் சைவங் குன்றியநாள்
வேத மெழுந்து வாய்விண்டே
மெய்ம்மை நிறுத்தி நின்றதெனப்
போற்று மறிவுக் கதிரொளியாற்
போகாப் புன்மை போக்கியருட்
போது மலர்த்தித் தெய்வமணம்
புறத்து மகத்துங் கமழ்வித்தே
ஆற்றா தலந்த தமிழன்னைக்
கருமை யுரைநூற் கலன்பூட்டி
அரசு கட்டின் மிசைவைத்த
ஆறு முகநா வலரையா !
தேற்றங் காணா திலங்கையிலே
தேம்பு மன்னாள் திறத்திரங்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வா ! காக்க வருகவெனச்
செவ்வே கூவாய் பூங்குயிலே ''
(இளமுருகனார்)

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1962இலே நாவலரவர்களுக்குக் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்திலே எடுத்த விழா, காலவர்த்த மானத்திற்கேற்ப, நாவலரவர்களின் படிமம் அடைந்துவிட்ட புதிய பரிணாமத்தைக் காட்டுகின்றது. 1965இலே அரசாங்கத் துறைகளிலுள்ள தமிழ்ச் சங்கங்கள் ஒருங்கிணைந்து எடுத்த நாவலர் விழா, நாவலரவர்கள் தேசிய பாத்திரமாகிவிட்ட நிலையினைச் சுட்டி நிற்கின்றது.

ஆயினும், 1968ஆம் ஆண்டு, சனவரி மாத முற்பகுதியில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது, தமிழ்த் தொண்டருக்குச் சிலையெடுத்த காலை, ஆறுமுக நாவலர் புறக்கணிக்கப்பட்ட நிகழ்ச்சியே, ஈழத்துத் தமிழ்மக்களை நாவலர் இயக்கத்திலே சங்கமிக்கச் செய்தது. ஈழத்தின் தமிழ்ப் பத்திரிகைகள் நாவலரவர்களுக்குச் சிலை நிறுவப் படவேண்டும் என்ற, உணர்ச்சி பொங்கியெழக் காரணமாயிருந்ததை யாரும் மறுக்கமுடியாது.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் 17–6–1968இலே இலங்கை நடைமுறைத் தமிழ் இயக்கத்தினர் நடாத்திய கூட்டத்திலே அவ்வுணர்வுகளுக்கு உருவளிக்கக் கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கொழும்பு ஆறுமுக நாவலர் சபை யாழ்ப்பாணத்து நல்லூரில் 1969ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 29ஆம் தேதி நாவலரவர்களின் சிலையை நிறுவியது. சிலைநாட்டு விழாவை ஒட்டி நடந்த மாநாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலே நாவலர் சபையினர் ' நாவலர் மாநாடு விழா மலர் ' ஒன்றினை வெளியிட்டனர். அத்தோடு ' நாவலர் வாரம் ' நடாத்துவதையும் முறையாக வழக்கிற்குக் கொண்டு வந்த னர். நாவலர் வாரங்கள் நாவலரவர்களை நாடு முழு வதும் அறிமுகப்படுத்தும் பணியைச் செவ்வனே செய்து வந்தன.

ஆறுமுக நாவலர் சிலை நிறுவப்பட்டதை யடுத்து 1971ஆம் ஆண்டு, அக்தோபர் மாதம், 29ஆம் தேதி இலங்கை அரசாங்கம் நாவலர் முத்திரை வெளியிட்டு நாவலரவர்களைக் கௌரவவித்தது.

கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை 1972இலே ' நாவலர் பெருமான் 150வது ஜயந்தி மலர் ' எனும் தொகுப்பினையும் 1979இலே ' நாவலர் நூற்றாண்டு மலர் ' எனும் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளது. நாவலர் சபையினர் வெளியிட்ட மூன்று மலர்களிலும் குறிப் பிடத்தக்க கட்டுரைகள் பல இடம்பெற்றுள்ளன. இவற் றிலே சில, நாவலர் ஆய்வுகளுக்கும் வழிகாட்டியாகக் கருதத் தக்கவை.

யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்பிர காச வித்தியாசாலை நூற்றாண்டு விழாச் சபை 1968இலே வே. கனகரத்தின உபாத்தியாயரின் ஆறுமுக நாவலர் சரித் திரத்தை மறு பிரசுரஞ் செய்தனர். மு. ரா. அருணாசலக் கவிராயர் பாடிய ஆறுமுக நாவலர் சரித்திரமும் 1973இலே மூன்றாம் பதிப்பினைக் கண்டுள்ளது. மேலும், 1968க்குப் பின்பு நாவலரவர்களின் சரிதம் தொடர்பான புதிய நூல் கள் சிலவும் வெளிவந்துள்ளன. இவற்றிலே 1979இலே வெளிவந்த ' ஆறுமுக நாவலர் ' எனும் கட்டுரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு விதந்தோதத் தக்கது. இக் கட்டுரைகளின் ஆசிரியர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர் *1969*ஆம் ஆண்டு வெளியிட்ட ' நாவலர் மாநாடு விழா மலர் ' எனும் தொகுப்பில் இடம் பெறும் '' நாவலர் களஞ்சியம் '' நண்பர், பேராசிரியர் க. கைலாசபதியாலும் எம்மாலும் தொகுக்கப்பெற்றது. ' நாவலர் வாழ்க்கைத் திகதிகள் ' ' நாவலர் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத் தக்க சம்பவங்கள் சில ' என்பவை கைலாசபதி தொகுத் தவை ; எஞ்சியவை எம் முயற்சிகள். இம்மலருக்கு யாம் எழுதிய '' தமிழ் இலக்கியத்துக்கு நாவலர் புரிந்த பணி '' எனும் கட்டுரை ' தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள் ' எனும் எம் கட்டுரைத் தொகுப்பிலே (*1970* திசம்பர்) சிற்சில இடங்களிலே விரிவுபெற்று இடம் பெறுகின்றது.

' ஈழம் தந்த நாவலர் ' எனும் தொகுப்பிலே ஆறு கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இவற்றிலே இடம் பெறும் விடயங்களிற் சில, முன்னர் வேறு கட்டுரைகளிலே இடம் பெற்றனவாயினும், தொகுப்புக்காகத் திருத்தமும் விளக்கமும் விரிவும் பெற்றுள்ளன. இதனாலே தொகுப் பிலே இடம்பெறும் கட்டுரைகள், தொகுப்புக்கென எழுதப் பெற்ற, புதிய கட்டுரைகள் என்றுகூடக் கூறலாம்.

ஆறுமுக நாவலர் வரலாற்றின் சிற்சில அமிசங்களை, அவர் பற்றி எழுதப்பெற்ற சரித்திர நூல்களின் அடிப்படை யில் நோக்குவதை இலக்காகக் கொண்டது ' ஆறுமுக நாவ லர் வரலாறும் சரித்திர நூல்களும் ' என்னும் கட்டுரை. இக்கட்டுரையில் இடம்பெறும் பதிப்புகள் பற்றிய விபரங் களிற் சில, முன்னர் *1972*ஆம் ஆண்டு, திசம்பர் மாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியிட்ட ‘ நாவலர் பெருமான் 150வது ஜயந்தி மலர் ’ எனும் தொகுப்பில் இடம்பெறும் ‘ நாவலர் வரலாற்றாசிரியர்களும் நாவலரின் பதிப்புக்களும் ’ எனும் கட்டுரையில் இடம் பெற்றன. ஜயந்தி மலர்க் கட்டுரையில் இடம் பெற்ற சில விபரங்கள், தொகுப்புக் கட்டுரையிற் புதிய தரவுகளினாலே விளக்கமெய்துவதைக் காணலாம்.

நாவலர் வரலாறு பற்றிய நூல்களுக்கெல்லாம் வே. கனகரத்தின உபாத்தியாயர், த. கைலாசபிள்ளை என்பவர்கள் எழுதிய சரித்திரங்களும், மு. ரா. அருணாசலக் கவிராயர் பாடிய ஆறுமுகநாவலர் சரித்திரத்திற்கு 1934இல் எழுந்த முகவுரையும் தாம் மூலாதாரமாக அமைந்துள்ளன. எனவே இம்மூன்று மூலாதாரங்களுமே சிறப்பாகக் கட்டுரையில் நோக்கப்பெற்றுள்ளன. இவற்றிலே பயன்படுத்தப் பெறாத தரவுகளும் கட்டுரையிலே நோக்கப் பெற்றுள்ளன.

1980ஆம் ஆண்டு சனவரியிலே வெளிவந்த சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலைப் பொன்விழா மலருக்கு எழுதிய ‘ ஆறுமுக நாவலரும் ஆத்திசூடியும் ’ தொகுப்பிலே திருத்தமும் விரிவும் பெற்று இடம் பெறுகின்றது. கட்டுரை-1 யாசிரியனுக்கு எழுந்த ஐயங்கள் தமிழ் ஆசிரியர்களுக்கும் உதவலாம்.

ஆறுமுகநாவலர் நினைவு நூற்றாண்டினை ஒட்டி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் இராமநாதன் மண்டபத்திலே 1979ஆம் ஆண்டு, திசம்பர் மாதம், எட்டாம் தேதி நண்பர், பேராசிரியர் க. கைலாசபதி தலைமையில் நடைபெற்ற ‘ தமிழ்ப் பெரும் பாரம்பரியத்தில் நாவலர் ’ எனும் ஆய்வரங்கில் தமிழ்க் கல்வி பற்றிப் பேசியதன் விரிவு ‘ தமிழ்க் கல்வி வளர்ச்சியிலே நாவலரவர்களின் பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிப்பு' எனும் கட்டுரை; 1980இலே எழுதப்பட்டது; இப்பொழுதுதான் முதன் முதலாக அச்சிடப்பெறுகின்றது. பழைய தமிழ்க் கல்வியும் ஐரோப்பியர் அறிமுகஞ் செய்த கல்வித் திட்டமும் ஆறுமுக நாவலரின் பங்களிப்பினை உணர்த்துவதற்கு முன்னுரையாக அமைந்துள்ளன. இக் கட்டுரையிலே சில ஆங்கில மேற்கோள்கள், ஆங்கிலத்தில் இடம்பெறுதல் நன்று என்ற கருத்தினால் மொழிபெயர்ப் பின்றி இடம் பெறுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் படிமத்தினை யாழ்ப்பாணத் திலே நிறுவுவதனை ஒட்டிச் சிறப்புக் கட்டுரைகளைத் 'தினபதி' வெளியிட்டபோது, 27–6–1969இலே 'சிதம்பர மான்மியம்' எனும் சிறு கட்டுரை வெளிவந்தது. இதுவே பத்திரிகையிலே யாம் எழுதிய முதல் கட்டுரை யாகும். 'சிதம்பர மான்மியம்' எழுதியபோது, ம. பொ. சிவஞானக் கிராமணியாரின் 'வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு' எனும் நூலைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்க வில்லை. அந்நூலைப் பெற்றபோது 'சிதம்பர மான்மியம்' திருத்தி எழுதப்பட வேண்டியதன் இன்றியமையாமையை உணரமுடிந்தது. அதற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. நண்பர் முல்லைமணி' வே. சுப்பிரமணியத்தின் 'பண்டார வன்னியன்' நூல் வெளியீட்டு விழாவிலே 24-7-1970இலே பங்குகொண்டபோது, வரலாறு பற்றி விளக்கும் முகமாக 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' எனும் நூலிற் காணப் படும் பாரிய பிழைகளைச் சுட்டிக்காட்டி அந்நூல் வேண்டு மென்றே ஈழத்துத் தமிழ் மகனை இழிவுபடுத்துவதை உணர்த்தி, அந்நூலாசிரியரை ஈழத்தமிழ் இனத்தின் பாது காவலராகக் கருதப்படும் அரசியற் கட்சியினர் தம் வருடாந்தர விழாவிற்கு அழைத்தமைக்கு வருத்தம் தெரி விக்கப்பட்டது. அக்கட்சியின் சார்பான 'கண்ணியம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் பெயர் தாங்கிய பத்திரிகை 1–9–1970 இலே எம்மை " சரியாகத் தமிழ் தெரியாத விழாத் தலைவர் ம.பொ.சி. அவர்களைப் பற்றி இழிவாகப் பேசினார் என்று கண்ணி யத்தினை மறந்து கட்டியம் கூறியது.

இவ்வார்த்தைகள் கட்டுரையை விரித்தெழுத வைத் தன. நண்பர் செ. கதிர்காமநாதன் வேண்டுகோளின்படி வீரகேசரியில் தொடர் கட்டுரையாக 1970ஆம் ஆண்டு, அக்தோபர் 7, 14, 22, 29, நவம்பர் 6, 13, 21, 28, திசம்பர் 5, 12ஆம் தேதிகளிலே அது வெளிவந்தது. அப்பொழுது " நாவலருக்குப் பலிபீடமா ? " என்ற தொடர் பெயர்பெற்றிருந்தது. வீரகேசரி நோன்மதி வெளி யீட்டின் ஆசிரியர் இராஜகோபால் கட்டுரையைச் சிறந்த முறையிலே வெளியிட்டுதவினார். அப்பொழுது நண்பர், க. கைலாசபதியும், முதலியார் குல சபாநாதனும் கட்டுரையைப் பார்த்துதவினார்கள். வீரகேசரியில் பல வருடங்களுக்கு முன்பு தொடராக வெளிவந்த கட்டுரைத் தொகுப்பிலே இடம்பெறும் போது, தெளிவுபெற்ற செய்தி களின் உதவியுடன் திருத்தமும் விரிவும் பெற்று வருகின் றது. இக்கட்டுரைக்கு நீண்ட வரலாறு. அதனாலேயே அறிமுகமும் நீண்டுவிட்டது. கட்டுரையின் வரலாறு, கட்டுரையின் தன்மையைப் பாதித்துள்ளபோதும், உண்மை புறக்கணிக்கப் படவில்லை. ஈழத்துத் தமிழர் செய்ய வேண்டிய கடன் இது என்பதை மறுக்க முடியாது. வருடா வருடம் மறுபதிப்புகளைக் கண்டு, பரிசில்களைத் தட்டிக் கொண்டு போகும் நூலையும், அதனை எழுதிவிட்டுத் துணிந்து ஈழத்தவருக்கு நல்லவராக எழுந்தருளும் ஆசிரி யரையும் ஒதுக்கிவிட முடியாது.

இலங்கை வானொலியிலே நண்பர் க. கைலாசபதி ' கலைக் கோலம் ' நடாத்திய காலத்திலே கதிரைவேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை நினைவு தினத்தை ஒட்டி, ஆறுமுகநாவலரையும் கதிரைவேற்பிள்ளையையும் ஒப்பிட்டு நோக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது பயன்பட்ட குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு கொழும்புப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க வெளியீடான 'இளந்தென்றல்' எனும் சஞ்சிகைக்கு 1976இலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் சதா வதானம் நா. கதிரைவேற்பிள்ளையும் என்ற கட்டுரை எழுதப் பெற்றது. 1977ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 10ஆம் தேதி தினகரனிலே 'சதாவதானம் நா. கதிரை வேற்பிள்ளை அவர்களின் மறக்கப்பட்ட நூற்பதிப்பு' பற்றி எழுதப்பெற்றது. அது சைவபூஷண சந்திரிகையின் இரண் டாம் பதிப்புப் பற்றியது. 1979ஆம் ஆண்டு, ஆகஸ்டு, செப்தம்பர் மாதங்களிலே 'நாவலரும் பண்டிதமணியும்' பற்றித் தினகரனிலே தொடர்ந்து எழுதியபோது 'மறை மலையடிகள் வரலாறு' கூறும் செய்திகளை நோக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 1980—81ஆம் ஆண்டுகளிலே எடின்பரோ பல்கலைக் கழகத்திற்குப் பொதுநல நாடுகளின் புலமைப் பரிசில் பெற்றுச் சென்றிருந்தபோது, இலண்டன் நூதன சாலையிலுள்ள நூல்நிலையத்திலே கதிரைவேற் பிள்ளையின் கிடைத்தற்கரிய சில நூல்களையும் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. 1976இலே வெளிவந்த கட்டுரைத் தலைப்பினைப் பேணி, பின் தெரிந்த புதிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எழுதிய கட்டுரை 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை யும்' ஆகும்.

தினகரன் வார மஞ்சரியிலே 1977ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 24ஆம் தேதி வெளிவந்தது. 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் தருமச் சுமை'. அக்கட்டுரை திருத்தமும் விரிவும் பெற்று 'நாவலர் தருமச் சுமை' என்ற பெயரிலே இங்கு இடம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம், ஆறாம் கட்டுரைகள் நேரடியாக நாவலரவர்களைப் பற்றியவையல்ல எனினும், நாவலரவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவை ; நாவலரவர்களை உணர்ந்துகொள்ள உதவுபவை. எனவே பொருத்தம் நோக்கித் தொகுப்பிலே இடம் பெறுகின்றன.

ஆறுமுகநாவலர் தொடர்பான பல ஆய்வுகளுக்கு இடமுண்டு. இத்தொகுப்பிலே நாவலரவர்கள் பற்றி யாம் எழுதிய கட்டுரைகளிற் சில இடம் பெறுகின்றன ; வேறு சில இடம் பெறவில்லை. வேறு பல விடயங்களையும் நோக்கும் ஆவலுண்டு. இத்தொகுப்பு அதற்கு வழிசெய்ய உதவுமென்று நம்புகிறேன்.

இத்தொகுப்பில் இடம்பெறும் கட்டுரைகளின் தோற்றத்திற்கும் செப்பத்திற்கும் வெளியீட்டிற்கும் உதவி புரிந்தவர்கள் காலஞ்சென்ற நண்பர்கள் பேராசிரியர் க. கைலாசபதி, செ. கதிர்காமநாதன், க. அருமைநாயகம், சட்டத்தரணி சச்சிதானந்தசிவம் முதலியார் குல சபாநாதன் என்போரும் நா. சோமநாதன் , தினகரன் ஆசிரியர் க. சிவகுருநாதன், வீரகேசரி நோன்மதி வெளியீட்டாசிரியர் இராஜகோபால், தினபதி ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் என்போருமாவார் ; இவர்கள் யாவருக்கும் நன்றி கூறுதல் செய்ந் நன்றிக் கடன்.

தமிழ் மக்களிடையே எந்தச் சக்தியும் தமிழ்மொழி பற்றி ஏற்படுத்தாத எழுச்சியையும் பற்றையும் ஏற்படுத்திய நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு 1974 சனவரியிலே 3ஆம் தேதி முதல் பத்தாம் தேதி வரை யாழ்ப்பாணத்திலே நடைபெற்றது. கோலாலம்பூரிலும் (1966), சென்னையிலும் (1968) நடைபெற்ற முதலிரு அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலே இலங்கைத் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞரும் தமிழ் அபிமானிகளும் பெருமளவிற் கலந்து கொண்டனர். ஆனால், அவற்றின் பின்பு இலங்கைக் கிளை அரசியல் ஆசிகளை எதிர்பார்த்துச் செயற்படுவதாக மாறிற்று. அதற்கு அன்றைய அரசிலே சேவையாற்றிய தமிழ்ப் பிரமுகர் ஒருவர் முக்கிய காரணமானார். 1970இலே பாரீஸிற்கு ஓரிருவரே இலங்கைக் கிளையின் ஆசிகளுடன் கலந்துகொண்டனர். இலங்கைக் கிளையின் நிர்வாகத்தினர் பற்றியும் நிர்வாகத்தினர் பாரீஸுக்குத் தேர்ந்தெடுத்த முறை பற்றியும் தமிழபிமானிகளிடையே மட்டுமன்றித் தமிழறிஞரிடையேயும் அதிருப்தி ஏற்பட்டது. இலங்கைக் கிளையின் பொதுக்கூட்டம் பம்பலப்பிட்டி மிலா கிரியா அவெனியூவிலுள்ள ‘‘ சாந்தம் ’’ எனும் மனையிலே 1972இலே கூட்டப்பெற்றபோது முன்னைய நிர்வாகக் குழுவினர் எதிர்பார்த்தவாறு அல்லாமல் தமிழ் அபிமானத்தை மூச்சாகக் கொண்டவர்கள் ஆட்சிக் குழு விலே முக்கிய சக்தியாக இடம் பெற்றனர். இவர்கள் மாநாட்டைக் கொழும்பிலே வைக்கவும் பின்பு தள்ளிப் போடவும் எடுக்கப்பெற்ற முயற்சிகளை முறியடித்தனர். ஆயினும் அவற்றைச் சாதிக்க அவர்கள் பெரும்பாடு பட வேண்டியிருந்தது. இலங்கைக் கிளையின் பிதாகமர் கூட எதிரணிக்குச் சாய்ந்து போனார்கள். ஏனெனில் எதி ரணிக்குத் தலைமை தாங்கியவரின் தகைமைகளை அவர் ஐயுறவில்லை. போதாததற்கு இலங்கைக் கிளையிலிருந்து கொழும்புத் தமிழர் சிலர் யாழ்ப்பாணத்திலே மாநாடு வைப்பதை விரும்பவில்லை. தலைவர் பதவி துறந்தார். அவருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவி கிடைத்தது. அவரோடு வேறு சிலரும் நழுவி விட்டார்கள். 1973 அக்தோபரிலே பேராசிரியர் சு. வித்தியானந்தனைத் தலைவ ராக இலங்கைக்குழு நியமித்ததை அடுத்து மாநாட்டு முயற் சிகள் வேகத்துடன் முன்னேறி மாபெரும் தமிழ் விழாவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பேறியது. பேராசிரியர் சு.வி.யுடன் சேர்ந்து நின்று செயலாற்றிய ஒரேயொரு தமிழ் விரிவுரையாளர் அன்று நான்தான் என்பதை இன்று நினைத்துப் பார்க்கிறேன். சு.வி.க்கு இன்று அபூர்வமாக எடுக்கப்படும் விழாக்களை நோக்கும்போது அந்நினைவு தானாக வருகின்றது.

இலங்கைக் கிளையின் பொதுக் கூட்டத்திலே அரசின் ஆதரவாளரை நீக்கியதிலிருந்து மாநாடு முடியும் வரை எங்களில் ஒருவராக நிலைத்து நின்று பணிபுரிந்தவர் நண்பர் சச்சி. ஆம்! அவர்தான் மறவன்புலோ க. சச்சிதானந்தன். என்னுடைய கட்டுரைத் தொகுப்பினை அவர் வெளியிடுவதிலே எனக்குப் பெருமை அவருக்கு என் நன்றிகள்.

37, 32 ஆம் வீதி,
வெள்ளவத்தை.

**பொ. பூலோகசிங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. ஆறுமுகநாவலர் வரலாறும் சரித்திர நூல்களும்

## I

ஆறுமுக நாவலர் தம் வாணாளிலேயே ஐந்தாம் குரவ ரென்று துதிக்கப்பெற்றவர். பரசமயிகள் செய்யும் சிவ தூஷணமும் பரசமய போதனையும் தலைப்படக் கண்டு மயக்கமுற்றவர், தம்மைச் சைவசமய குரவர் நால்வரது திருவருள் வழிப்பட்டு, அவருடைய மகிமையையும் தேவார திருவாசகப் பொருளையும் உணர்த்திப், பரசமயப் படுகுழி யில் வீழாது உய்வித்த குரவரது கருணையைப் பாராட்டி, முதலாவது, சைவசமயக் குரவராலும், இரண்டாவது, இவ் வைந்தாம் குரவராலும் யாம் பரசமயத்தில் புகாது சைவ சமயத்தின் உண்மையை அறிந்து உய்ந்தனம் என்று கருதி, அவரை ஐந்தாம் குரவர் எனத் துதிப்பது சிவப்பிரீதிகரம் என்று கருதினர். கல்வி கேள்வி ஒரு சிறிதுமின்றித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலாயினார் குருபூசை யிலே போசனஞ் செய்ய வந்திருக்கிற மாகேசுரர்களைத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் முதலிய சமயகுரவ ராகப் பாவனை செய்து, பஞ்சாக்ஷர மந்திரத்தோடு கூடிய அவர் மந்திரத்தாலே பூசிக்கும்போது, எவ்வளவோ காலம் அவசமயிகளாலும் எவ்வளவோ இடையூறு செய்யப்பட்டுச் சைவசமயத் துண்மையைப் பிரசங்கங்களாலும் பத்திரிகை களாலும் புத்தகங்களாலும் வெளிப்படுத்தியருளிய ஒருவரை ஐந்தாம் குரவர் எனத் துதிப்பது செய்ந் நன்றிக் கடனாகக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்கள் 1870ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம், 24ஆம் தேதி வண்ணார் பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையில் அளித்த வரவேற்பின்போது, தம்மைச் சமய குரவர்கட்கு ஒப்பிட்டமை சிறிதும் பொருந் தாது என்றும், அப்பெரியாருடைய அடிப்பொடிக்குள்ள மகத்துவத்தில் ஆயிரத்திலொன்று தானும் தமக்கிலவென் றும் நாவலரவர்கள் கூறியுள்ளதை 'இலங்காபிமானி' காட்டுகின்றது.[1] நல்லூர் தர்க்ககுடாரதாலுதாரி வை. திருஞானசம்பந்தப்பிள்ளை 'ஐந்தாஞ் சைவ சமய குரவர்' என நாவலரவர்களைப் போற்றிப் பாடிப் பதிப்பித்ததை நாவலரவர்கள் கேள்வியுற்று, அதனை வேறு பிரகாரம் மாற்றிப் பதிப்பிக்கும்படி செய்தனர்.[2] இது நிகழ்ந்தது 1876க்கு முன்பாகும். பின்பு, 1878ஆம் ஆண்டு வட கோவை சபாபதி நாவலருக்கு எதிராகத் தர்க்ககுடாரதாலு தாரியவர்கள் எழுதிய 'பத்திராத்திரப் பிரயோக ஏகவசன தீபிகை'யிலும் நாவலரவர்களை 'ஐந்தாம் குரவர்' என்று போற்றியிருந்தார். அச்சமயம் நாவலரவர்கள், தர்க்க குடாரதாலுதாரியவர்களை அழைப்பித்துக் கண்டித்தும் தண்டித்தும் எஞ்சியிருந்த பத்திரிகைகள் எல்லாவற்றையும் வாங்கிச் சுடுவித்தும் விட்டனர்.[3] ஆவரங்கால் சு. நமச்

1. கா. பொ. இரத்தினம் (தொகு.), நாவலர் நினைவு மலர், 1938, பக். 91-92
2. த. கைலாசபிள்ளை (தொகு.), ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, இரண்டாம் பாகம், 1955, பக். 138
3. மு. ரா. அருணாசலக் கவிராயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், முக வுரை, 1934, பக். 12 ; சி. கணபதிப்பிள்ளை, நாவலர், 1968, பக். 34



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாயப் புலவர் நாவலரவர்களின் வியோகத்தின் பேரில் பாடிய சரமகவிகளும் அன்னாரைக் குரவராகப் போற்றி வந்த பண்பினைத் தெளிவாகக் காட்டுவன.[4]

## II

ஆறுமுகநாவலர் சிவபரிபூரணமெய்தி மூன்று ஆண்டுகள் கழியுமுன்னர் வெளிவந்தது வண்ணை வே. கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய 'ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம்'. நாவலரவர்கள் பரிபூரணமெய்தியது பிரமாதி ஞு, கார்த்திகை மீ (திசம்பர், 1879); உபாத்தியாயரின் ஆறுமுகநாவலர் சரித்திரம் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிற் பதிக்கப்பெற்றது சித்திரபானு ஞு, ஐப்பசி மீ (1882).

மு. ரா. அருணாசலக் கவிராயரின் 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்' கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தைப் புலனெறி வழக்கிற் கமையப் பாட எடுத்துக்கொள்ளப்பெற்ற முயற்சியேயாகும்.

"தண்ணிய சீர்தரு சைவந் தழைத்தோங்கித் தலையெடுப்ப
வெண்ணியதற் கேற்ற நூலெனைத்தும் வெளியேற்றி யெங்கள்
புண்ணியமே யெதிர்வந்தாற் போல வந்து போதிக்கு
நண்ணியமெய் யாறுமுக நாவலர் நற்சரிதம்"

"வசனநடையிற் சிறிதும் வழுவாது வரைந்தறிவா
லுசனன் பொன்னிரவி முதலோரனைய வுயர்கவிக
ணிசமிகும் யாழ்ப்பாணத்தினின் றனுப்ப நேர்ந்தெவரும்
விசனமற வாங்கியிது மெய்யென்ன மிகவியந்தார்"

---

4. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 132-136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தின உபாத்தியார் தந்த சரித்திரத்தைக் கண்டு வியந்த தமிழ்நாட்டவருள் ஒருவரான சேற்றூர் சிதம்பர தேசிக சுவாமிகள்,

" இருமையு நற்பயனுதவு மிவ்வசன மென்றருளி " சேற்றூர் சமஸ்தான வித்துவான் முகவூர் ராமசாமிக் கவிராயரின் குமாரர் அருணாசலக் கவிராயரைச் செய்யுளாகப் பாட வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளுக்கிணங்கப் பாடப்பெற்றதே அருணாசலக் கவிராயர் தந்த சரித்திரமாகும்.

இவ்வாறு அருணாசலக் கவிராயரின் ' நூல் வரலாறு ' கூறினும், ஆறுமுகநாவலர் சரித்திரத்தை அருணாசலக் கவிராயர் பாடியமைக்கு, அவர்தம் ஆசிரியர் திருவாவடுதுறை யாதீனம் சின்னப் பண்டார சந்நிதிகள் ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய தேசிகமூர்த்திகளும் (1869–1883) ஓரளவு காரணமாயிருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. திருவாவடுதுறை யாதீன கர்த்தராற் சென்னைக்கு நாவலரவர்களிடம் சித்தாந்த பாடம் கேட்பதற்காக முன்னர் அனுப்பப் பெற்ற, திருநெல்வேலிப்பேட்டை நமச்சிவாயத் தம்பிரான், பின்பு, 1864ஆம் ஆண்டு, நாவலரவர்கள் திருவாவடுதுறை யாதீனத்திலே தங்கியிருந்தகாலை, அவர்களிடம் ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தவர்;[5] 1869ஆம் ஆண்டு திருவாவடுதுறை யாதீனத்திற் சின்னப்பட்டத்தில் நமச்சிவாய தேசிகராக நியமிக்கப் பெற்றவர் ; 1883இலே சிவபரிபூரணமெய்தியவர். நாவலரவர்களைப் பற்றித் தம்மாசிரியர் மூலம் அறிந்துகொண்ட அருணாசலக் கவிராயர் சேற்றூர் சிதம்பர சுவாமிகளின் வேண்டுகோளுக்கு இணங்கியமை வியப்பிற்குரியதன்று. அருணாசலக் கவி

5. வே. கனகரத்தின உபாத்தியாயர் ; ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம், 1968, பக். 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராயர் பாடிய சரித்திரம் சென்னை அல்பீனியன் அச்சுக் கூடத்திலே 1898இலே பதிப்பிக்கப்பெற்றது.

அருணாசலக் கவிராயர் தந்த சரித்திரம் கனகரத்தின உபாத்தியார் எழுதிய நூலை அடியொற்றிச் செல்லுகின் றது. கனகரத்தின உபாத்தியாயரின் நூலைப் பின்பற்றி நாவலரவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை அவர் காலக் கிரமப்படி கூறினாலும், அந்நிகழ்ச்சிகளுக்குரிய ஆண்டு களைப் பொதுவாகத் தவிர்த்து, நிகழ்ச்சிகள் நடந்த காலத்து, நாவலரவர்கள் வயது இன்னது என்று மட்டும் சுட்டிச் செல்கிறார். இம்முறையும் கனகரத்தின உபாத் தியாயர் நூலிலிருந்து பெறப்பட்டதேயாகும். கூடலூர் கனகசபைப் பிள்ளை இயற்றிய 'வருணசிந்தாமணியைப் பரி சோதித்தவர் மு. ரா. அருணாசலக் கவிராயர் என்பதும் ஈண்டு மனங்கொள வேண்டியதாகும். வருண சிந்தாமணி முதற்பதிப்பு சார்வரி ஷு, தை மீ (1901) சென்னை அல்பீனியன் அச்சுயந்திர சாலையில் அச்சிடப் பெற்றது. இந்நூலில் வரும் நூற்புரட்டுகள் எனும் பகுதியில் (பக். 505-523) நாவலரவர்கள் கண்டிக்கப்பட்டுள்ளார்கள்.[6]

'ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும்' சி. செல்லையா பிள்ளையால் 1914ஆம் ஆண்டிற் பதிப்பிக்கப் பெற்றது. செல்லையா பிள்ளை நாவலரவர்களின் பாடல் களைத் தொகுப்பதிலே செலுத்திய கவனத்தை, வரலாறு

---

6. வருணசிந்தாமணி, 1901, பக். 516-519
இந்நூலின் இரண்டாம் பதிப்பு, விரிவுபெற்று, விவகார காண்டம் என்ற வசைக் காண்டமும் உடையதாய், விளங்கு கின்றது; விவகார காண்டம், நாவலரவர்கள் உட்பட்ட யாழ்ப்பாணத்தாரை வசைபாடுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவதிலே செலுத்தவில்லை. ஆயினும், கனகரத்தின உபாத்தியாயர் காட்டத் தவறிய முக்கியமான விடயமொன் றினைச் செல்லையா பிள்ளை போற்றித் தந்துள்ளார். நாவலரவர்களின் அணுக்கத் தொண்டராம் வி. சுப்பிரமணிய பிள்ளையின் தேகவியோகத்தைச் சுட்டும் கனகரத்தின உபாத்தியாயர்.[7] அவர்மீது நாவலரவர்கள் பாடிய சரம கவிகளைப் பற்றியோ, எழுதிய சரித்திரத்தைப் பற்றியோ யாதும் கூறவில்லை. செல்லையாபிள்ளை அச் சரமகவி களை அழியவிடாமற் பேணித் தந்துள்ளார். அவை நாவலரவர்களின் மனித உள்ளத்தைக் காட்டுவனவாம்.

> '' சுப்பிரமணிய பிள்ளையைக் குறித்துப் பாடிய செய்யுள் கள் நாவலரவர்கள் எழுதிய அச் சுப்பிரமணிய பிள்ளை சரித்திரத்தோடு சேர்த்து அச்சிட எண்ணியிருத்த லாலும் அவைகளும் அவைபோல்வன பிறவும் இங்கே அச்சிடப்படவில்லை ''

என்று ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டுக்குத் துர்மதி ஸு, ஆனி மீ (1921) எழுதிய முகவுரையிலே கூறும் மானேஜர் கைலாச பிள்ளையின் பிந்திய ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டுப் பதிப்புகளிலேயே சுப்பிரமணிய பிள்ளை மீது பாடிய சரமகவிகள் இடம் பெறுகின்றன. நாவலரவர் களின் சொத்துகளுக்கு ஆதிபத்தியம் பெற்ற நல்லூர் க. சதாசிவப்பிள்ளை 1910ஆம் ஆண்டிலே தில்லையம்பல வாணனின் குஞ்சிதபாத நீழல் அடைந்துவிட்டார். 1921ஆம் ஆண்டிலே மனேஜர் கைலாச பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை சரித்திரத்தை அச்சிட எண்ணியிருப்பதாகக் கூறு கிறார். சுப்பிரமணிய பிள்ளையின் சரித்திரம் பன்னிரண்டு

---

7. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயங்கள் கொண்டது என்றும், நாவலரவர்கள் அச் சரித்திரத்திலே தமது நோக்கங்கள் நம்பிக்கைகளை வெட்ட வெளிச்சமாகக் காட்டியிருக்கின்றார்கள் என்றும் பண்டித மணி கணபதிப்பிள்ளை கூறியிருக்கிறார்.[8]

"சுப்பிரமணிய பிள்ளையின் சரித்திரத்தை வெளியிடுவது போற் பாசாங்கு செய்து, பல வருடம் மறைத்து வைத்திருந்து பின் அதனைச் சாம்பர் செய்து விட்டார்கள்"[9]

செல்லையா பிள்ளையாற் பாடல்கள் ஒருவாறு உயிர் பிழைத்து வெளிவந்துவிட்டன. இதனாற் செல்லையா பிள்ளையின் சரித்திரச் சுருக்கம் நாவலரவர்களின் வரலாற்றிலே முக்கியத்துவம் உடையதாகும். ஆயினும், 1916ஆம் ஆண்டு வரையில், நாவலரவர்களின் வரலாற்றிற்குக் கனக ரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரமே மூலாதாரமாக விளங்கியது.

"பேரேறு சைவப் பெரும்பயிர் வளர்த்திடும்
 பெட்புடைக் காரையடியார்
பெயராத மலவிருள்க ளருகவிரி பரிதியைப்
 பிறைசூடி யேபரனெனா
நாரேற வழிபட்டு நாமெலா முய்யவரு
 ணங்குருவை நாவலப்பேர்
நவில்யோக ரூடியாப் பெற்றபெரு மானையடி
 நளினமலர் போற்றிசெய்வாம்"

என்ற குருவணக்கச் செய்யுட் பகுதியாலும்,

---

8. சி. சிவரத்தினம், நாவலர் சமயப்பணி, 1962, அணிந்துரை.
9. மேற்படி நூல், பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையின் அணிந்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA 4-7-1995 LIBRARY

" நம்மையு மொருபொருட்படுத்தித்
தமது சந்நிதானத்திலே
நிற்கு மொருவனாகச் சேர்த்த நமது
குருமூர்த்தி யினுடைய
திருவடிகளைத் துதித்து....... "

என்ற முகவுரையைப் பகுதியாலும் கனகரத்தின உபாத்தி யாயர் தம் குருவின் வரலாற்றினைப் பத்திபாவத்தோடு அணுகியவர் என்பது புலனாகும்.

" உத்தமநல் லிலக்கியவிலக் கணந்தேர்ந்தோன்
பரம்பரைசே ருபாத்தி யாயன்
சத்தியவா சகதேவ வனநாதன் றவவலியிற் றந்த பாலன்
அத்தகைய நாவலர்கோன் சீடருண்மா ணிக்கமென
வறையப் பட்டோன்
புத்திமிகுந் தொளிர்கனக ரத்தினநா மகசுகுண
பூபன் றானே "

என்பது என்னை அ. குமாரசுவாமிப் புலவர், கனகரத்தின உபாத்தியாயருக்குத் தந்த தகவுரைப் பத்திரமாகும்.

கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரம் கொஞ்சம் சுருக்கமானது என்ற உணர்வு, நாவலரவர்களின் சரித்திரத்தை விரிவாக எழுதவேண்டுமென்ற அவாவினைத் தோற்றுவித்தது. திரிகோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை (1863—1922) முதலானோர் அவ்வுணர்வுடையோராக இருந்தனர். அதனால், அவர்கள் மனேஜர் கைலாசபிள்ளையிடம் சரித்திரத்தை விரிவாக எழுதவேண்டும் என்ற அவாவினைத் தோற்றுவித்தனர். நல்லூர் வித்துவசிரோமணி ச. பொன்னம்பல பிள்ளை 1897இலே வியோகமடைந்துவிட்டார்; நல்லூர் தர்க்ககுடாரதாலுதாரி வை. திருஞானசம்பந்த பிள்ளை 1901இலே தில்லை நடராசனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சிதபாத நீழலையடைந்து விட்டார் ; வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை முதலுபாத்தியாயர் மா. வைத்திய லிங்க பிள்ளை 1902இலே மறைந்துவிட்டார் ; நல்லூர் க. சதாசிவப் பிள்ளை 1910இலே சிதம்பரத்தில் இறையடி நீழல் சேர்ந்துவிட்டார் ; காசிவாசி செந்திநாதையர் தமது கருமமே கண்ணாக இந்தியாவிலே திரிந்துகொண்டிருந்தார். ஆதலால், கனகசுந்தரம் பிள்ளை முதலானவர் கைலாச பிள்ளையைக் கேட்க வேண்டியிருந்தது.

மனேஜர் கைலாச பிள்ளை, நாவலரவர்களுடைய தமையனார் ஆராச்சி தம்புவின் புத்திரர் ; குழந்தைப் பருவந் தொட்டு இருபத்து நான்கு வயது வரை நாவலரவர் களின் சமூகத்திலே வளர்ந்தவர்; நாவலரவர்களுக்கு எழுத்து வேலைகள், ஏவல்கள் செய்தவர் ; நாவலரவர்களின் கடைசி வார்த்தைகளுக்கு இலக்கானவர்[10] ; யாழ்ப்பாணத்தி லிருந்த நாவலர் தருமங்களைப் பரிபாலனம் பண்ணியவர். எனவேதான், " (நாவலர்) அவர்களுடைய சரித்திரம் அதி கம் அறிந்தவன் " தான் என்று கூறிக்கொள்கிறார்[11].

மனேஜர் கைலாசப் பிள்ளை,

> " என்னைக் கேட்டவர்களுடைய சொல்லை மீளவும் தட்டாமல், என்னுடைய தகப்பனார், பெரிய தகப்ப னார் முதலானவர்கள் பலமுறை சொல்ல நான் கேட்ட வைகளையும், நாவலரவர்கள் தாமே சொல்ல நான் கேட்டவைகளையும், நானே நேரே கண்டவைகளை யும் ஒரு கோவைப்படுத்தி இச் சரித்திரத்தை எடுத் திருக்கிறேன் "

என்று முகவுரை கூறுவர். மேலும் அவர்,

---

10. த. கைலாச பிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 84.
11. மேற்படி நூல் முகவுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாவலரவர்களுடைய நடையிலோ குற்றமானது ஒன்றையும் நான் காணாமையால், குற்றஞ்சொல்ல எனக்கில்லை. குணங்களே சொல்ல வேண்டும். இச் சரித்திரத்தில் ஸ்துதியாயுள்ளவை இல்லை யென்பதே என் துணிபு"

என்று ஆங்குத் தம் நூலியல்பும் சுட்டியுள்ளார். கைலாச பிள்ளை தம் முயற்சிக்கு, நாவலரவர்கள் சரித்திரத்தை விரிவாக எழுதும் நோக்கத்துடன், வேறொரு காரணத்தையும் காட்டியுள்ளார்.

"கனகரத்தினப்பிள்ளை எழுதியது கொஞ்சம் சுருக்கமானது மாத்திரமன்றிச் சில கதை மாறுபாடுகளையும் உடையது"

என்பதே யது.

மனேஜர் கைலாச பிள்ளையின் 'ஆறுமுகநாவலர் சரித்திரம்' நள ஸு, மார்கழி மீ (1916) எழுதிய முகவுரையுடன் கூடியது. கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்திலேயுள்ள கதை மாறுபாடுகளைக் கைலாச பிள்ளை எடுத்துக் காட்டியிருப்பார் என்று எதிர்பார்ப்பவர், அந்த நம்பிக்கை விரக்தி யாவதையே காண்பர். கனகரத்தின உபாத்தியாயர் காலக் கிரமப்படி எழுத கைலாச பிள்ளை விஷயக் கிரமப்படி எழுதியுள்ளமையே இரு நூல்களுக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடாகும். கனகரத்தின உபாத்தியாயர் கூறிய விடயங்கள் சிலவற்றைக் கைலாச பிள்ளை விரித்தெழுதியுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை; அத்தோடு தம் உறவினர் கூறியவற்றையும் தாம் நேராகக் கண்டவை சிலவற்றையும் அவர் சேர்த்துள்ளார் என்பதையும் மறுப்பதற்கில்லை. நாவலரவர்களின் தோற்றம், தமையனார் தியாகராசருடன் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட கோபம், பதின்மூன்றாம் வயசளவிலே வெண்பா பாடியது, பூசை நைவேத்தியம் மட்டும் உண்டிருந்தமை, 'நான் ஆயத்தமில்லை' என்ற பிரசங்கத்தின் விருத்தாந்தம், உடையவரை நோக்கி அழுதல், ஜோன்வால்றன் பாதிரியார் விடயம், பெரியபுராண வசனம் தோன்றிய வாறு, றோசாப்பூக் கதை, பரிகா முத்திரை நிகழ்ச்சி, பேரம்பலப் பிரசங்கம், துவைனந்துரை விடயம், சுப்பிரமணிய பிள்ளை விடயம், டைக்துரை விடயம் என்பவை இவற்றிலே சில. இவற்றால் நாவலரவர்களின் இயல்புகள் சில முன்னுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆயினும், கனகரத்தின உபாத்தியாயர் விட்டுச் சென்ற சில முக்கியமான இடங்களைக் கைலாச பிள்ளையும் கவனிக்கவில்லை என்பதை மறுத்தலரிது. எனவே கனகரத்தின உபாத்தியாயர் நூலிலும், கைலாச பிள்ளையின் நூல் நாவலரவர்களின் வரலாற்றிலே சிறப்பிடம் பெறுகின்றது என்று கூறுவதற்கில்லை ; நூலெழுந்த நோக்கம் ஈடேறிவிட்டது என்று கூறமுடியாமலிருக்கிறது.

நாவலரவர்களின் வரலாறு பற்றிய ஆக்கங்களிலே அடுத்துக் கூறத்தக்கது ஒரு முகவுரையாகும். 'திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்கள் சரித்திரம்' முதற்பாகம் ஸ்ரீமுக ௵, கார்த்திகை ௴ (1933) வெளிவந்தது. அதன் ஆசிரியர் உ. வே. சாமிநாதையர். 'ஆறுமுகநாவலர் நூற் பதிப்களுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தது' என்றொரு விடயம் அதிலேயுண்டு (பக். 227-229). அங்கு நாவலரவர்கள் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் சிறப்புப்பாயிரம் பெறத் 'தவண்டையடித்த'தாகக் கதையொன்று கட்டப்பட்டுள்ளது. மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் வெளிவந்த ஒன்பதாவது மாதத்திலே, பவ ௵, ஆவணி ௴ வெளிவந்ததுதான் மனேஜர் கைலாச பிள்ளை எழுதிய முகவுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மு. ரா. அருணாசலக் கவிராயரின் 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்' இரண்டாம் பதிப்புக்கு எழுதப் பெற்றதாகும். சாமிநாதையரின் சிறப்புப்பாயிரக் கதையைத் தெளிவாகவும் ஆணித்தரமாக வும் பிழையென எடுத்துக்காட்டும் கைலாச பிள்ளை, நாவலரவர்களின் சரித்திரத்திற் சில முக்கிய நிகழ்ச்சிகளை அங்கு முதன் முதலாக எழுதித் தந்துள்ளார். முகவுரையோடு கூடிய நூலைப் பதிப்பித்தவர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை. அதற்கு முன்பு, அவர் பாடிய சுவாமிநாத பண்டிதர் இரங்கற்பாவும் சாமிநாதையரைச் சாடிய கண்டனமாகும் என்பது நினைவுகூரத்தக்கது.

சுத்தானந்த பாரதியார் ' அருட்சுடர் வள்ளலார் ' எழுதித் துதித்தவர். அந்நூலின் இரண்டாம் பதிப்பு 1940இலே வெளிவந்தது. அவர் 1948இலே 'நாவலர் பெருமான்' என்றொரு நூல் எழுதியுள்ளார். நாவலரவர் களின் வரலாற்றினை, தமக்கேயுரிய பாணியிலே, கற்பித்து, ஜனரஞ்சகமாக எழுதியுள்ளார் சுத்தானந்த யோகியார். அவருடைய நூலிலே கவனிக்கப்பட வேண்டியது நாவலரவர்களுக்கும் இராமலிங்கர் அவர்களுக்கும் இடையே யுண்டுபட்ட விவகாரம் பற்றியது. நாவலரவர்கள் இராம லிங்க சுவாமிகளின் பாடல்களை எதிர்த்தமைக்கான காரணங்கள் போலியருட்பா மறுப்பிலே தெளிவாகக் கூறப் பட்டுள்ளன. ' பாரத மகா சக்தி காவியம் ' பாடிய சுத்தானந்தர் அவற்றையெல்லாம் தெரியாதவர் போல,

> '' தேவார திருவாசகங்களைக் கைவிட்டு, நேற்றெழுந்த ஒருவர் பாடலையே போற்றக்கூடாது. பழைய தமிழ் மறைக்குச் சேதம் வரும்படி எதுவும் செய்யலாகா தென்பதே நாவலரின் எண்ணமாகும் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று துணிந்து கூறியுள்ளார்.[12] அவர் செய்த ஆராய்ச்சி பற்றியது மேல்வருவது.[13]

"ஒரு சமயம் வடலூரில் வள்ளலார் கையெழுத்துப் பிரதிகளை அலசிப் பார்த்தேன். இருபுறமும் வீசிய சொற்சிலம்பக் கடிதங்களும் கட்டுரைகளும் கிடைத்தன. ஆனால், **வள்ளலார் கைப்பட எழுதிய ஆதாரம் எதுவுமில்லை.** அவர் இவ்விவாதத்திலேயே தலையிடாமல் அடக்கமாகவே யிருந்ததாகத் தெரிகிறது."

கைப்பட எழுதிய சரக்கு இல்லாததால், தலையிடாமலே இராமலிங்கர் இருந்தார் என்று கண்ட முடிபு யோகியாரின் சாதனை போலும்!

"வள்ளலார் மாணவர் நாவலரைக் குறைவாகப் பேசியதாகத் தெரிகிறது. நாவலரால் மனப்புண்பட்ட **தீக்ஷிதர்களும்** இராமலிங்க சுவாமிகளைத் துணைக் கொண்டு கனகசபையிலே கூட்டங் கூட்டி (1869 ஜூன்) சுக்கில வருஷம், ஆனி மாதம் நாவலரைத் **தூஷித்தார்கள்.** அவர் பெயருக்கு விநோதமான அர்த்தங்கள் **செய்தார்கள்.**"

என்பது சுத்தானந்தரின் 'நாவலர் பெருமான்' நூலின் கொடுமுடி.[14]; 'அருட்சுடர் வள்ளலாரை'க் காப்பாற்ற எடுத்துக்கொள்ளப் பெற்ற சிறந்த முயற்சி; வரலாறு தெரியாமல் எழுதப்பட்டது சுத்தானந்தரின் 'நாவலர் பெருமான்'.

---

12. நாவலர் பெருமான், 1948, பக். 207.
13. மேற்படி நூல், பக். 205.
14. பக். 202–203.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, அருட்பாச் சம்பவம், ஆலயச் சீர்திருத்தம் முதலியவற்றைத் தெளிவுபடுத்த எழுந்தது பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையின் ' நாவலர் ' (1968) என்னும் நூல்.

1882ஆம் ஆண்டு முதல் வெளிவந்துள்ளனவும், நாவலரவர்கள் வரலாறு பற்றியனவுமாகிய சரித்திர நூல்களை எடுத்து, அவற்றின் குறைகளைத் தொட்டுக் காட்டுவது, நாவலரவர்களின் வரலாறு தெளிவாக அமையக் கூடிய சூழலை உருவாக்க உதவலாம் ; அத்தோடு அறிவியலடிப்படையில் நாலலரவர்களின் வரலாறு விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட வேண்டிய இன்றியமையாமையையும் உணர்த்தலாம்.

## சுற்றம்

ஆறுமுக நாலவரின் நேர் மரபிற், பூட்டன் இலங்கை காவல முதலியாருடன் அ. சதாசிவம் பிள்ளையும் த. கைலாச பிள்ளையும் தொடங்குவர்[15]. கல்லடி வேலுப் பிள்ளை நாவலரவர்களின் கொப்பாட்டன் சோதிநாதரையும் கோந்துரு மூத்ததம்பி முதலியாரையும் குறிப்பிடுவர்[16]. கோந்துருவுக்கு நேரே முற்பட்ட மரபினர் யாரென்பது தெரியவில்லை. இம்மரபினர் பொன்பற்றியூர் பாண்டி மழவன் வழிவந்தவர் என்று கனகரத்தின உபாத்தியாயர், சதாசிவம்பிள்ளை, கைலாச பிள்ளை முதலியோர் கூறுவர்[17].

---

15. பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 75 ; ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 4.
16. யாழ்ப்பாண வைபவ கௌமுதி 1918, பக். 222-223.
17. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 1 ; பாவலர் சரித்திர தீபகம் 1886, பக். 32 ; ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிமழவன் செய்தி கைலாச மாலையில் இடம் பெறுவது ; கைலாசமாலை கி.பி. பதினேழாம் நூற்றாண்டிற்கு முற்படாதது.

மூத்த தம்பியாருக்கு முதலியார் என்ற பட்டம் காணப்பெறுவதால், அவர் அன்றைய அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்தவராதல் சாலும். இலங்கை காவல முதலியாரும், அவர் மகன் பரமானந்தரும் அரசாங்க வைத்தியராய் விளங்கியவர்கள்[18].

பரமானந்தரின் மனைவி பெயர் உலகாத்தையார் என்பர் சதாசிவம் பிள்ளை[19]. இவர்களுடைய இரு புதல்வர்களிலே ஒருவர் நாவலரவர்களின் தந்தையார் ஆராச்சி கந்தப்பிள்ளை ; மற்றவர் இலங்கையர்[20]. இலங்கையருக்கு மூத்த தம்பி, சின்னப்பு, சின்னத்தம்பி, சரவணமுத்து எனப் பெயரிய நான்கு ஆண்களும், மூன்று பெண்களும் பிள்ளைகள் என்பர் கல்லடி வேலுப்பிள்ளை[21].

ஆறுமுகநாவலரின் முன்னோரில் ஒருவராகச் சிறப்பிக்கப்பெறுபவர் ஞானப்பிரகாச முனிவர். அவர் நாவலரவர்களின் நேர் மரபினர் என்று துணியச் சான்றுகளில்லை ; முன்னைய இனசன பந்துகளிலே ஒருவர் போலும். ஞானப்பிரகாச முனிவரின் தந்தை காராள

18. த. கைலாச பிள்ளை ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 4.
19. பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 75.
20. க. வேலுப் பிள்ளை , யாழ்ப்பாண வைபவ கௌமுதி, 1918, பக். 222-223 ; த. கைலாச பிள்ளை, ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 4.
21. யாழ்ப்பாண வைபவ கௌமுதி, 1918, பக். 222-223.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை எனப் பெயரியவர் என்று சிவஞான சித்தியார் சுபக்கம் அறுவருரைப் பதிப்பு கூறுகின்றது.

"நல்லறிவுச் சுடர் கொளுத்தல்" எனும் பிரசுரத்தில் நாவலரவர்கள் முனிவரை விதந்து கூறியிருக்கிறார். தர்க்ககுடாரதாலுதாரி திருஞானசம்பந்தப் பிள்ளை தமக்கு எதிராக எழுதிய 'பத்திராத்திரப் பிரயோக ஏக வசன தீபிகை' எனும் பிரசுரத்தை வடகோவை சு. சபாபதி நாவலர் திருவாவடுதுறை மடத்துக்கு அனுப்பியபோது, அது சமவாத சைவப் பிசாசாகிய ஞானப்பிரகாசருடைய மரபிற் பிறந்தவனும், நாவலருக்கு மருகன் முறையாயுள்ளவனும், அவருடைய வித்தியாசாலையிற் கற்பவனுமாகிய இன்னானால் எழுதப்பட்டது என்று கூறும் கடிதத்துடன் அனுப்பி வைத்தார். அக்கடிதத்தை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள், நாவலரவர்களுக்கு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார். ஞானப்பிரகாச முனிவரைச் சமவாத சைவப் பிசாசு என்றதைத் தாம் அறியட்டும் என்று கருதித் தான், தேசிகரவர்கள் அனுப்பினார் என்றெண்ணிய நாவலரவர்கள் 'பிசாசு யார்' என்று மிக நீண்ட கடிதம் எழுதித் தேசிகரவர்களுக்கு அனுப்பினார். தேசிகரவர்கள் ஒரு வகையான க்ஷமை வேண்டி நாவலரவர்களுக்குக் கடிதம் எழுதினார்[22].

பரமானந்தர் புதல்வர் கந்தப் பிள்ளை 1766ஆம் ஆண்டு பிறந்து, 1842ஆம் ஆண்டு, ஆனி மாதம், இரண்டாம் தேதி, புதன் கிழமை, 76 பிராயத்திலே வியோக

22. மு. ரா. அருணாசலக் கவிராயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, முகவுரை, பக். 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடைந்தவர்[23]. பதினெட்டு வருடம் ஆராச்சி உத்தியோகம் பார்த்தவர் ; வைத்தியராகவும் விளங்கியவர். கந்தப் பிள்ளையின் மனைவி சிவகாமிப் பிள்ளை திருநெல்வேலி வேதவனத்தார் புத்திரி. அவர் பிங்கள ஆு, மார்கழி மீ (1857) சிவபதமடைந்தார். இவர்களுக்குப் பன்னிரு பிள்ளைகள் ; இவர்களிலே அறுவர் ஆண் ; அறுவர் பெண்: ஆறு ஆண்களையும் தியாகர், சின்னத்தம்பி, பூதத்தம்பி, பரமானந்தர், தம்பு, ஆறுமுகவர் என்று சதாசிவம்பிள்ளை வரிசைப் படுத்தியுள்ளார்[24]. ஆறு பெண்களும் நாவலரவர் களுக்கு மூத்தவர்கள்[25]. ஆண்களிலே பூதத்தம்பி இளமை யிலேயே வியோகமடைந்து விட்டார். நாவலரவர்கள் தமக்குத் தமையன்மார் நால்வர் என்று 1868இலே கூறியுள்ளமை கவனிக்கத் தக்கது[26]. கைலாச பிள்ளை யின் கூற்றுப்படி பெண்களிலே மூவர் இளமையிலே மறைந்து விட்டனர் என்று கருதலாம்[27].

தியாகராசா, பரமாநந்தர், நொத்தாரிசு வேலை பார்த்தவர்கள் ; சின்னத்தம்பி, உடையார் உத்தியோகத் திலே விளங்கியவர் ; தம்பு நெடுங்காலம் யாழ்ப்பாணம் கச்சேரி ஆராச்சியாக இருந்தவர். நாவலரவர்களின் மைத்துனர் விசுவநாத முதலியார் நியாயதுரந்தரர்.

---

23. அ. சதாசிவம் பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 75 ; ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதத் திலே கணேசையர், வியோகமடைந்தது ஆடியில் என்பர்.
24. பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 75.
25. த. கைலாச பிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 4.
26. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 94.
27. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலரின் சுற்றம் செல்வாக்கு மிக்க சுற்றம்; பாண்டிமழவன் பரம்பரையினராகக் கருதப்பெற்றதோடு, ஞானப்பிரகாச முனிவர் என்ற பேர்பெற்ற முன்னோரையும் கொண்ட சுற்றம் ; ஒல்லாந்தர் கால முதலாக அரசாங்கத்தில் உத்தியோகங்கள் பல வகித்துச் செல்வாக்கினை விருத்தியாக்கிக் கொண்ட சுற்றம் ; சமூகச் செல்வாக்குடன் பொருள் வளமும் கொண்டு விளங்கிய சுற்றம்.

ஆயினும், நாவலரவர்கள் சுற்றத்திலே பற்றுவைத்து அதன் நிழலிலே நின்றவராகத் தெரியவில்லை. தாய் தந்தையினரின் வருஷ சிராத்தங்களை மிக்க சிரத்தையோடு அவர் செய்துவந்தபோதும்[28], குடும்பப் பற்று அற்றவராகவே சுற்றத்தவராற் கருதப்பட்டுள்ளார்.[29]

> " தம்முடைய சம்பாத்தியங்க ளெல்லாவற்றையுந் தமது வித்தியாசாலைக்கும் தாம் மேற்கொண்ட பிற தருமங்களுக்கும் செலவழித்ததேயல்லாமல் தமது சுற்றத்தாருக்குக் கொடுத்ததில்லை ".

என்பது பெருமகன் கைலாச பிள்ளைக் கூற்று.[30] நாவலரவர்கள் தம் ஈமக்கிரியைகளைச் செய்வதற்குத் தம் சுற்றத்தவரை நியமிக்கவில்லை. வி. சுப்பிரமணிய பிள்ளை 1873 இலே வியோகமடையுமட்டும், அவர் தம் ஈமக்கிரியைகளை நடத்துவார் என்று கருதியிருந்தார்.

" யான்பிழைத்தல் வேண்டுமென்ப தெனதைய நின்விருப்பே
யான்பிழையா தேமரிக்கி னென்கிரியை யனைத்துநீ

28. த. கைலாச பிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 82.
29. மேற்படி நூல், பக். 14.
30. மேற்படி நூல் , பக். 17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்பிழையா தியற்றிவிக்க வென்றுமொழிந் தனையவ்வா
றியான்பிழையா தியற்றுவிக்க யார்கருத்து முடிந்ததுவே ''

என்பது சுப்பிரமணிய பிள்ளை இரங்கற் பாமாலைப் பாடல். சுப்பிரமணிய பிள்ளை போனபின்பு, நாவலரவர்களின் வேண்டுகோளின்படி, அவர்தம் ஈமக்கிரியைகளைச் செய்தவர் சித. சு. சபாபதிச் செட்டியார். சபாபதிச் செட்டியாரின் தந்தை சுப்பிரமணியம் செட்டியார் என்பவர் சித. முத்துக்குமாரச் செட்டியாரின் தமையனாவார்; முத்துக் குமாரச் செட்டியார், பசுபதிச் செட்டியாரின் (1856–1906) தந்தையாவார். நாவலரவர்களின் தருமச் சொத்துகளின் பரிபாலனம்கூட, அவர்தம் சுற்றத்தவர் வசம் ஒப்புவிக்கப்படவில்லை. நாவலரவர்களின் தருமச் சொத்துகளுக்கு ஆதிபத்தியம் பெற்றவர் அவர் தம் மாணாக்கர் நல்லூர் க. சதாசிவப் பிள்ளையாவர். சதாசிவப் பிள்ளை வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலைக்குச் சம்பந்த நாத முதலியார் முதலாகப் பலரை நியமித்துவிட்டு, தம் பிற்காலத்திலேயே, கைலாச பிள்ளையை மனேஜராக நியமித்தனர் என்பதுவும் கவனிக்கத்தக்கது. ஆயினும், நாவலரவர்கள் சொன்ன கடைசியான வார்த்தை ''கைலாச பிள்ளையைக் கூப்பிடுங்கள்'' என்று கைலாச பிள்ளை கூறியிருக்கிறார்.[31]

ஆறுமுகநாவலர் தம் சுற்றத்தவரிலே வித்துவ சிரோமணி ச. பொன்னம்பல பிள்ளை மீது மிக்க பற்றுடையவராக இருந்தார் என்பர் பெருமகன் கைலாசபிள்ளை.[32] வித்துவசிரோமணியவர்கள் நாவலரவர்களின் தமக்கை பொன்னாச்சியின் நான்கு பிள்ளைகளிலே இரண்டாமவ

31. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 84.
32. மேற்படி நூல், பக். 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராவர் ; அவர்தம் தந்தை சரவணமுத்துச் செட்டியார். பொன்னம்பலப் பிள்ளையின் நடவடிக்கைகளால் நாவலரவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்.

> '' சைவப் பிரசாரகர் தமது சுற்றத்தார்களை முன்னர்த் திருத்தியன்றோ பின்னர்ப் பரார்த்த காரியங்களிற் தலையிடல் வேண்டும் என்றாய் ''

எனத் தொடங்கும் மித்தியாவாத நிரசனப்பகுதி, இதற்குச் சான்றாகும். நைட்டிக பிரமச்சரியம் அநுட்டித்த நாவலரவர்கள் மருகனின் புறவொழுக்கத்தை ஆதரிக்கவில்லை ; அவ்வாறிருந்தும் கேலி செய்யப்பட்டார். பொன்னம்பல பிள்ளை நொத்தாரிசு வேலையின் போது செய்த கருமமும் நாவலரவர்களைச் சாட்சிக்கூண்டுக்கு இழுத்தது. அப்பொழுது நாவலரவர்கள் மருகனுக்கு எதிராகக் கண்ணீருடன் சாட்சிகூற வேண்டிய நிலைமை உண்டாயது. நாவலரவர்கள் வியோகமடைந்தபோது பொன்னம்பலப் பிள்ளை சிறைச்சாலையிலே இருந்தனர்.

'' யாமெலாம்,
நின்னடி யேமென வுன்னப் பெறினும்
பணிகரி குயிலென் றணிபெறு மூன்றையும்
புற்றிற் கானின் மாவிற் புகுத்திய
சிற்றிடைப் பணைமுலைத் தேமொழி மடவார்
கண்ணெனுங் காலவே லெண்ணி னுழைய
நெஞ்ச மழிந்த நிலைய மாகிப்
பாடி காவலிற் பட்டுழன் றிட்டனம்
அதனால்,
எமைநீ யிகத்தல் லமைவுடைத் தாயினும் ''

என்பது அவர் அக்காலை பாடியவற்றிலே ஒன்றன் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளமை

ஆறுமுகநாவலரின் இளமைக் கட்டம், அவர்தம் வரலாற்றாசிரியர்களாலே தெளிவாக உணர்த்தப் பெற்றிருப்பதாகக் கூறுவதற்கில்லை. ஐந்தாம் குரவராக உயர்த்திப் போற்றப்பெற்ற ஒருவரின் வரலாற்றைக் கூறப் புகுந்தவர்கள், அந்நிலைக்கு ஏற்றவாறே சரித வளர்ச்சியை அமைத்தல், தவிர்க்க முடியாதவொன்று. இப்பண்பினை நாவலரவர்களின் பழைய சரித்திரங்களிலே காணமுடிகின்றது.

கைலாச பிள்ளை நாவலரவர்களுக்கு ஒன்பதாம் வயசாகும் போது தந்தை கந்தப் பிள்ளை வியோகமடைந்ததாகவும், அப்போது அவர் பாடிக் கொண்டிருந்த நாடகத்தை நாவலரவர்கள் பாடி முற்றுவித்ததாகவும், அதனாற் பிரீதியடைந்த தமையன்மார் நாவலரவர்களைச் சரவண முத்துப் புலவர், சேனாதிராய முதலியார் முதலான வித்துவான்களிடத்திலே தமிழ்க் கல்வி கற்குமாறு அனுப்பி வைத்தார்கள் என்றும் கூறியுள்ளார்.[33] இக்கூற்றுகளைப் பின்வந்தோர் பலர் படியெடுத்துத் தந்துள்ளனர்.

ஆராச்சி கந்தப்பிள்ளை வியோகமடைந்த போது, 1842ஆம் ஆண்டிலே, நாவலரவர்களுக்கு வயது இருபது; ஒன்பதன்று. எனவே, ஒன்பது வயதிலே நாவலரவர்கள் தந்தையின் முற்றாத நாடகத்தை முற்றுவித்தார் என்று கூறல் பொருந்தாது. மேலும், சேனாதிராய முதலியார், ஆராச்சி கந்தப் பிள்ளைக்கு முன்பு, 1840ஆம் ஆண்டிலே மறைந்துவிட்டார் என்பதுவும் மனங்கொளத்தக்கது.

---

33. ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 5.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையில் ஆறுமுக நாவலரின் தோற்றம், அவரைப் பாணாத்தலையர் என்றும் வாற்பேத்தையர் என்றும் அழைக்கப்படும் வகையிற், சரீரத்திலே தலை மிகப் பெருத்தும் மற்றைய உறுப்புகள் சூம்பியும் இருந்தன என்று கைலாசபிள்ளை கூறுவது நோக்கத்தக்கது.[34] பின்வருவது பிற்காலத் தோற்றம் பற்றியது.[35]

> '' பிற்காலத்தில், இவருடைய உருவத்தில் தலையும் நெற்றியும் மிகப் பெரியன ; காதுகள் கொஞ்சஞ் சிறியன ; கைகளும் கால்களும் மெல்லியன ; உடல் கொஞ்சம் பெருத்தது ; முக ரோமங்கள் மிக்க பெல முடையன ; கழுத்துக்கு மேலே உள்ள பெலமும் மனப் பெலமுமன்றி, சரீரம் ஒரு காலத்தும் வேலை செய்யாமையாற் பெலனற்றது, மிக மிருதுவுமானது ; நிறம் பொது நிறம்; புருடாகிருதி நன்றாயிருக்கும் ; உயரம் சாமானியமானது ''.

ஆறுமுக நாவலர் படமாக நடமாடுபவை இரண்டு ; இரண்டும் மாதிரியேயன்றி நிழற்பிரதியல்ல வென்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

ஆறுமுக நாவலர் ஐய ஞூ (1834) முதல் மெதடிஸ்த மத்திய பாடசாலையிற் கற்கும்போது, கிறிஸ்தவ மதானுசாரப்படி நடக்க வேண்டியிருந்ததோ என்பதை முன்னையோர் தெளிவாகக் கூறவில்லை. நாவலரவர்களுக்கு ' பைராட் ' என்பது கிறித்தவப் பேர் என்று தீவாந்தர சைவ விநோதம் கூறுகின்றது.[36] இக்கூற்றை ஆதரிக்க முடியாது. கிறித்தவராக இருந்துவிட்டு, மீண்டும் மதபேதியாகி யிருப்பின், மு. தில்லைநாத பிள்ளைக்கு

34. ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 5.
35. மேற்படி நூல், பக். 84.
36. சி. கணபதிப்பிள்ளை, நாவலர், 1968, பக். 25.

LIBRARY 4-7-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது,[37] நாவலரவர்களுக்கும் நடந்திருக்கும் ; சட்டாம் பிள்ளையைப் பேர்சிசல் பாதிரியார் தமக்குப் பண்டிதராக நியமித்திருக்க மாட்டார். நாவலரவர்களின் குடும்ப கௌரவமும் செல்வாக்கும் இளமையிற் கிறித்தவத்தைக் கட்டாயமாக ஏற்க வேண்டிய நிலையைத் தவிர்க்க உதவி யிருக்கலாம். ஜோன் வால்ரன் பாதிரியாருக்கு 1856ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எழுதிய கடிதத்திலே நாவலரவர்கள்

> '' நான் ஞானஸ்நானம் பெற்றிருப்பின் என்னுடைய சேவைகளின் மாதாந்தப் பெறுமானம் பத்துப் பவுன். அது பெறாததால் எனக்கு மாதம் முப்பது ரூபா மட்டும் கொடுக்கப்பட்டது. இங்கும் மாதாந்தம் ஏழு பவுன் தியாகஞ் செய்யப்பட்டதை நீர் காண லாம் ''

என்று கூறுதல் மூலம் கிறித்தவர் சூழலிலே நாவலரவர்கள் சைவராகவே தொடர்ந்திருந்தமை புலனாகின்றது.[38]

நாவலரவர்கள் மெதடிஸ்த பாடசாலை மாணவனாக இருந்த கட்டத்திலே *(1834–1841)* சட்டாம் பிள்ளை யாகவும் (Monitor) விளங்கினார். அப்பொழுதுதான் அவர் வேதனம் பெறாது கீழ் வகுப்பிற்கு ஆங்கிலமும் மேல் வகுப்புகளுக்குத் தமிழும் கற்பித்து வந்ததாம். இக் கட்டத் திலேதான் முன்னர் நல்லூர் வை. வேலாயுத முதலி யாரிடமும்,[39] பின்னர் இருபாலை நெ. சேனாதிராய

---

37. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம், 1968, பக். 15.
38. த. கைலாச பிள்ளை, ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 105.
39. அ. சதாசிவம் பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார் *(–1840)*, நல்லூர் ம. சரவண முத்துப்புலவர் *(–1845)* என்பவரிடமும் தமிழ்க் கல்வி பயின்றவராதல் வேண்டும். நாவலரவர்கள் யாரிடம் சங்கதம் கற்றனர் என்பது கூறப்படவில்லை. சரவண முத்துப்புலவர் சங்கதம் வல்லவர் என்பது மனங்கொளத்தக்கது.

நாவலரவர்கள் பதின்மூன்றாம் வயசளவிலே சிவபெருமானை நோக்கிச் சைவசமயங் குன்றுதலைப்பற்றி வெண்பாவொன்று பாடினதுண்டு என்பர் கைலாச பிள்ளை.[40] இப் பாடல் கிடைக்குமாறில்லை ; உண்மை பொய்மை தெரியாது. ஆயினும், *1868*ஆம் ஆண்டு நாவலரவர்கள் எழுதிய விக்கியாபனத்திலே,[41]

> " இதனை யான் என் சிறுவயசு முதலாகச் சிந்தித்துச் சிந்தித்து, ' சைவசமயத்தை வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே ! இதற்கு யாது செய்யலாம் ? சைவசமய விருத்தியின் கண்ணதாகிய பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சக்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சத்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே ' என்று இரவும் பகலும் பெருங் கவலை கொண்டு பெருமூச் செறிதலினும் பலருக்குப் பிதற்றுதலினுமே பெரும்பான்மையும் என் காலத்தைப் போக்குவேனாயினேன் "

என்று கூறும் கட்டத்திலே நிகழ்ந்ததாக இருக்கலாம்.

பேர்சிவலின் பண்டிதர் *(1841–1848 செப்தெம்பர்)*

ஆறுமுக நாவலர் பிலவ ஞு *(1841)* பேர்சிவல்

---

40. ஆறுமுக நாவலர் சரித்திரம், *1919*, பக். *17*.
. மேற்படி நூல், பக். *20*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிரியாருக்குத் தமிழ்ப் பண்டிதரானார்.[42] தமிழிலே ஆய்வுக் கட்டுரைகளையும் கீர்த்தனைகளையும் உருவாக்குவதோடு திருத்துவதிலும், செபப் புத்தகத்தையும் பைபிளையும் மொழி பெயர்ப்பதிலும் நாவலரவர்கள் பேர்சிவல் பாதிரியாருக்கு உதவி செய்தனர் என்பர் இ. ஜே. றொபின்சன் பாதிரியார்.[43] இரேனியுசின் திருப்புதலை ஆதாரமாகக் கொண்டு, பேர்சிவல் பாதிரியார் தம் துணைவரோடு பைபிள் மொழிபெயர்ப்பு வேலையிலே முழுநேரத்தையும் செலவிடத் தொடங்கியது 1846ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலே யாகும்;[44] 1848ஆம் ஆண்டு முற்பகுதியிலே யாழ்ப்பாணத்தில் பைபிள் திருப்புதல் வேலை முற்றுப்பெற்றதையடுத்து, அதனைச் சென்னையில் நியமிக்கப்பட்ட உபகுழுவுக்குச் சமர்ப்பிக்கப் பேர்சிவல் பாதிரியார், ஸ்போல்டிங் பாதிரியார் முதலியோருடன் ஆறுமுக நாவலர், அ. சதாசிவம்பிள்ளை(ஜே.ஆர். ஆணோல்டு), உடுவில் அ. சந்திரசேகர பண்டிதர் (நதானியல்) என்பவர்களும் சென்றனர்.[45]

கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய சரித்திரத்திலே பைபிள் வேலை சம்பந்தமாக நாவலரவர்கள் பேர்சிவல் பாதிரியாருடன் செய்த இந்தியப் பயணம், விசுவாவசு ௵, தை ௴ (1846) நாவலரவர்கள் ஆரம்பித்த திண்ணைப் பள்ளிக்கூட நிகழ்ச்சிக்கும், பிலவங்க ௵, ஆடி ௴ (1847)

---

42. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம், 1968, பக். 94.
43. Hindu Pastors : A Memorial, 1867, p. 121.
44. ச. குலேந்திரன், கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, 1967, பக். 126.
45. மேற்படி நூல், பக். 129 ; அ. சதாசிவம்பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 125.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கந்தசுவாமி கோயில் அதிகாரிக்கு நாவலரவர்கள் சிவாகம விரோதங்களை எடுத்துப் போதித்த நிகழ்ச்சிக்கும் இடையே வைக்கப்பட்டுள்ளது. இவ்விந்தியப் பயணம் 1848இலே நடைபெற்றது என்பது தெளிவாகும். மேலும் கனகரத்தின உபாத்தியாயர் இப்பயணத்தின் போது பேர்சிவல் பாதிரியாரும் நாவலரவர்களும் பைபிளை அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்தனர் என்றும் கூறியுள்ளார்[46]. 1848ஆம் ஆண்டு தொடக்கம் இரு வருடங்களாய் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பாதிரிமாரும் சென்னை உபகுழுவும் பலமுறை கூடிப் புதிய திருப்புதலிற் சிறிய திருத்தங்களைச் செய்த பிறகு, 1850ஆம் ஆண்டு, அக்தோபர் மாதம், 21 ஆம் தேதி யாழ்ப்பாணத் திருப்புதல் வெளிவந்தது[47]. நாவலரவர்கள் பேர்சிவலின் கீழ்ப் பார்த்த வேலையை விட்டு நீங்கி, இரு வருடங்கள் முடிந்த பின்பே யாழ்ப்பாணத் திருப்புதல் வெளிவந்தது. கைலாசபிள்ளை யாழ்ப்பாணத் திருப்புதல் வேலை, யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டிருந்தபோது , சென்னையிலும் பைபிள் திருப்புதல் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்ததாகக் கூறியுள்ளார்[48]. கைலாச பிள்ளையின் கூற்றுக்கு எவ்விதமான ஆதாரமுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சென்னைத் திருப்புதல் வேலை 1858ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதத்தில் ஆரம்பமாகி, 1869இலே முற்றுப்பெற்று, 1871 இலே அச்சிடப்பெற்றது.

ஆறுமுகநாவலர் 1841ஆம் ஆண்டு, செப்தம்பர், நவம்பர் மாதங்களிலே நயன சாஸ்திரம் பற்றி எழுதிய

---

46. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 12.

47. ச. குலேந்திரன், கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, 1967, பக். 130-131.

48. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள் ச. தனஞ்சயராச சிங்கத்தால் வெளியிடப் பெற்றுள்ளன.[49] பத்தொன்பது வயதிலே தமக்கிருந்த ஐயங்களைப் பிறர் வாயிலாகக் கேட்டுத் தெளிய நாவலரவர்கள் விழைந்ததையும் அறிவியற் கலைகளிலும் அவர்கள் ஆர்வம் கொண்டிருந்ததையும் இவை காட்டுவன. மேலும், இவை நாவலரவர்களின் ஆங்கிலப் புலமையை மட்டுமன்றித் தமிழிலே செய்யுளியற்றும் வன்மையையும் புலப்படுத்துகின்றன.

ஆறுமுகநாவலர் இருபது வயதிலே, 1842ஆம் ஆண்டு, தந்தையின் குறைநாடகமாகிய இரத்தினவல்லி விலாசத்தை முற்றுவித்தார்[50] ; சரவண முத்துப்புலவர் மீது பாடிய சரமகவி 1845ஆம் ஆண்டிற்குரியது. சரவண முத்துப் புலவருக்கும் களத்தூர் வேதகிரி முதலியாருக்குமிடையே உதயதாரகையில் உண்டுபட்ட தர்க்கத்திலும் நாவலரவர்கள் கலந்துகொண்டனர். நாவலரவர்களின் ‘ சனி நீராடு ’ எனும் சீட்டுக் கவியும் உதய தாரகையிலே, அப்பத்திரிகை 1847ஆம் ஆண்டு, திசம்பர் மாதம், 31ஆம் தேதி நாவலரவர்கள் சைவப் பிரசங்கம் தொடங்கியதை அடுத்து மேற்கொண்ட விரோத மனப்பான்மைக்கு முன்னர் வெளிவந்ததாதல் வேண்டும்.

1842ஆம் ஆண்டு, செப்தம்பர் மாதம், 30ஆம் தேதி வண்ணை சிவன்கோயில் மடத்திலே வேதாகமப் பள்ளிக்கூடம் நிறுவும் நோக்கத்துடன் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தின் முடிவுப்படி 1842ஆம் ஆண்டு, ஒக்தோபர் மாதம், 22ஆம் தேதி வேதாகமப் பள்ளிக்கூடம்

49. நாவலர் பணிகள், 1969, பக். 1-17.
50. அ. சதாசிவம் பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 75-76.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டது. இப் பள்ளிக்கூடம் அமைக்கக் கூட்டப் பெற்ற கூட்டத்திலே நாவலரவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்[51]. நாவலரவர்கள் சுயமத கல்வி விருத்தியிலே 1846ஆம் ஆண்டு முதலே அக்கறை செலுத்தி வந்தார் என்ற கருத்துப் பொருந்தாது என்பதை முற்கிளந்த நிகழ்ச்சி சுட்டுகின்றது.

வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் 1846ஆம் ஆண்டு, ஜூன் மாதம், எட்டாம் தேதி அருளம்பல முதலியார் குமாரர் அம்பலவாண முதலியாருடன், சென்னையிலுள்ள வித்தியாசாலைகளைப் பார்க்கவும், வித்துவான்களைக் காணவும் சென்ற ' மகாஸ்ரீ க. ஆறுமுகப் பிள்ளை அவர்கள் ' ஆறுமுக நாவலர் என்று துணிந்துள்ளார்[52]. அவர் துணிபுக்கு முக்கிய சான்று 1847ஆம் ஆண்டு, திசம்பர் மாதம், 31ஆம் தேதி வண்ணைச் சிவன் கோயிலில் நாவலரவர்கள் நிகழ்த்திய கன்னிப் பிரசங்க வைபவத்துக்கு அம்பலவாண முதலியாரே தலைமை தாங்கினர் என்ற செவிவழிச் செய்தியாகும். மகாவித்துவான் சி. கணேசையர் இருபாலை சேனாதிராய முதலியாரின் புதல்வர் இராமலிங்க முதலியார் ஆறுமுகநாவலருடைய முதற் பிரசங்கத்தில் அக்கிராசனாதிபதியாய் இருந்தவர் என்று கூறுவர் என எழுதிச் சென்றுள்ளார்[53]. புலோலி வித்துவான் க. முருகேசபிள்ளை 1942இலே பதிப்பித்த நல்லை வெண்பாவின் நூலாசிரியர் வரலாற்றிலே இராமலிங்க பிள்ளை தலைவராயிருந்து நடாத்தியது ஆறுமுகநாவலர் வண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையில் முதலிற்

---

51. K. Arumainayagam : Hindu Educational Movement, 1840–1880. *TRIBUNE*, Vol. 21, No. 20 p. 13 (23 Oct. 1976)

52. ஈழநாடு, 24-2-1971.

53. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம், 1939, பக்.34.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பிரசங்கம் நிகழ்த்திய கூட்டம் என்பர். மூவர் செய்தியும் செவி வழிப்பட்டவை. எனவே சித்தாந்தமாக, அம்பலவாண முதலியாருடன் சென்றவர் ஆறுமுகநாவலர் தாம் என்று துணிதல், வேறாதாரம் கிடைக்கும் வரையிற் பொருத்தமாகாது. உதயதாரகை கூறும் ஆறுமுகப்பிள்ளை உடுப்பிட்டிப் பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்களில் ஒருவராகவும் இருக்கலாம். உடுப்பிட்டி சி. ஆறுமுகப்பிள்ளையின் கிருஸ்து சமய பேதம், விவிலியநூல் வரலாறு நெற்கொலு வைரவர் பதிகம் முதலியவற்றை ஆறுமுக நாவலரின் ஆக்கங்களாக மயங்கித் தொகுத்தவர்களுமுளர் என்பது ஈண்டு மனங் கொளத்தக்கது. ஆயினும், முதலாவது இந்தியப் பயணம், இரண்டாவது இந்தியப் பயணம் என்று எண்ணிட்டுக் கூறு வதைத் தவிர்க்க வேண்டும் என்பதை இராமலிங்கம் தரும் செய்தி வற்புறுத்துகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

ஆறுமுக நாவலர் பேர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராய் இருந்த கட்டத்திலேயே சிவாகமங்களை ஐயந் திரிபறக் கற்றுவிட்டார் என்பதைக் கனகரத்தின உபாத் தியாயர் எழுதிய சரித்திரம் உணர்த்துகின்றது.[54] நல்லூர் கந்தசுவாமி கோயில், இரண்டாம் பத்திரிகை (1875) பழைய நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டத் தவறவில்லை. பில வங்க ஸு, ஆடி மீ (1847) இரகுநாத மாப்பாணருக்கு விளைவேலி வேதக்குட்டிக் குருக்கள் எதிரே போதித்தும், பின்பு பிலவங்க ஸு, தை மீ (1848) வண்ணைச் சிவன் கோயிற் பிரசங்கத்திலே கண்டித்தும் சிவாகம விரோதங் களைத் திருத்தாமை கண்ட நாவலரவர்கள், தாம் பிலவங்க ஸு, ஆடி மீ மேற்கொண்ட சங்கற்பத்தின்படி, நல்லை முருகனைத் தரிசிப்பதை இருபத்தைந்து வருட காலம்

54. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 16, 18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்து வந்தார்; அச்சங்கற்பத்தை ஆங்கீரச ஸு, ஆனி மீ (1872) தான் விடுத்தார்.

பேர்சிவல் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதர் 1847ஆம் ஆண்டிலேயே உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் பணிபுரிய நினைத்துவிட்டார். மேல்வருவது உதயதாரகையில் 25–3–1847இலே இடம் பெற்ற விளம்பரமாகும்[55] :

'' கோயிற் புராணவுரையும் சௌந்தரிய லகரியுரையும் தனித்தனியே, மீ, க, க்கு ௩௨ பக்கமுள்ள பிரிவு ஒவ்வொன்றாக அச்சிற் பதிப்பித்துக் கையெழுத்து வைத்து முன்பணங் கொடுப்பவர்களுக்கு பிரிவு க,க்கு அணா ச ஆகக் பொடுக்கப்படும். இரண்டும் வாங்கில், கழிவு கிடைக்கும். வாங்கப் பிரியமுள்ளவர்கள் தங்கள் கையெழுத்தை இதன் கீழ்க் கையெழுத்து வைத்த வரிடத்தில் அனுப்பலாம்.

இப்படிக்கு,

நல்லூர் கந்தர் குமாரர் ஆறுமுகவர் ''

சௌந்தரிய லகரி மூலமும் சைவ எல்லப்ப நாவலருரையும் சௌமிய ஸு, கார்த்திகை மீ (1849) வெளிவந்தன ; கோயிற்புராண மூலமும் ஆறுமுகநாவலர் உரையும் பிரபவ ஸு, தை மீ (1868) வெளிவந்தன.

## வித்தியாநு பாலன யந்திரசாலை

ஆறுமுகநாவலர் அச்சியந்திரம் கொண்டுவரும் பொருட்டு இந்தியாவுக்குப் பயணம் புறப்பட்டது சௌமிய

55. இதனை அனுப்பியுதவியவர் வட்டுக்கோட்டை, மு. இராமலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞ, ஆடி மீ (1849) என்பர் கனகரத்தின உபாத்தியாயர்[56] சதாசிவப்பிள்ளையோடு புறப்பட்ட நாவலரவர்கள் வேதாரணியம், மாயூரம் வழியாக, திருவாவடுதுறை அடைந்து, ஆதீனத்திலே தன் வாக்கு வல்லபத்தை நிலைநாட்டி, நாவலராகச் சென்னை சென்று, அங்கே சிலகாலம் இருந்து, சூடாமணி நிகண்டுரையையும் சௌந்தரிய லகரியுரையையும் பதிப்பித்துக் கொண்டு, அச்சியந்திரமும் வாங்கிக்கொண்டு புறப்பட்டு, திருவண்ணாமலை யடைந்து, அங்கிருந்து விட்டு யாழ்ப்பாணம் வந்தனர் என்பர் கனகரத்தின உபாத்தியாயர்.

ஆயினும், சூடாமணி நிகண்டுரை சௌமிய ஞ, ஆடி மீ அச்சிடப் பெற்றிருப்பதாக அறியக் கிடப்பதால் நாவலரவர்களின் பயணம் ஆடி மாதத்திற்கு முற்பட்டதாக இருத்தல் வேண்டும் என்று ஐயுற வேண்டியுள்ளது. நாவலரவர்களின் பயண விபரங்கள் ஐயத்திற்குக் காரணமாகின்றன. மேலும், சௌந்தரிய லகரியுரை அவ்வாண்டு கார்த்திகை மாதத்திலேயே அச்சிட்டு முடிந்தது. அதையும் முடித்துக்கொண்டு நாவலரவர்கள் புறப்பட்டிருந்தால், நல்லூரிலே வித்தியாநுபாலன யந்திரசாலை 1849ஆம் ஆண்டு திசம்பருக்கு முன்னர் தாபிக்கப்பட்டிருக்க முடியுமா என்பது சிந்திக்கத்தக்கது. கைலாச பிள்ளை வித்தியாநுபாலன யந்திரசாலை முதலிலே நல்லூரில் நிறுவப் பெற்றதை மறந்து விட்டார்[57]. கனகரத்தின உபாத்தியாயர் 1851ஆம் ஆண்டிலே அச்சியந்திரம் வண்ணைக்கு மாற்றப்பட்டது என்று கருத வைக்கிறார்[58]. வண்ணையிலே வைத்தீசு

---

56. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 28.
57. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 62.
58. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன் கோயிலுக்கு எதிரேயுள்ள வீட்டிலே ஏழு மாதங்களாகவும், பின்பு வைத்தீசுவரன் கோயில் மடத்திலும் நடைபெற்ற வித்தியாசாலை, சாதாரண ஸு, தை மீ (1851) முதலாகவே சுயமான கட்டடத்திலே நடைபெறத் தொடங்கியது. வித்தியாசாலை நன்முறையிற் காலூன்றி விட்ட தருணத்திலே அச்சியந்திரத்தை வைத்தீசுவரன் கோயிலுக்குத் தெற்கேயுள்ள மடத்திற்குக் கொண்டுவந்திருக்கலாம்.

சென்னை *(பிராட்வே)* தங்கசாலைத் தெருவிலே வித்தியாநுபாலன யந்திர சாலை எப்பொழுது நிறுவப் பெற்றது என்பதை நாவலரவர்கள் பற்றிய சரித்திரங்கள் தெளிவுபடுத்தவில்லை. திருக்கோவையாருரை ***(1860)***, சைவதூஷண பரிகாரம், இரண்டாம் பதிப்பு ***(1861)***, கந்த புராண வசனம் ***(1861)***, தருக்க சங்கிரகவுரை ***(1861)***, சேதுபுராணம் ***(1866)***, உவமான சங்கிரகமும் இரத்தினச் சுருக்கமும் ***(1866)***, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பிய விருத்தி ***(1866)***, சிதம்பர மும்மணிக் கோவை ***(1867)***, அருணகிரி நாதர் திருவகுப்பு ***(1867)***, புட்பவிதி, மூன்றாம் பதிப்பு ***(1867)***, கோயிற் புராணவுரை ***(1868)***, சைவசமய நெறியுரை ***(1868)***, விநாயக கவசம் ஆதியன, இரண்டாம் பதிப்பு ***(1868)***, கந்தபுராணம் ***(1869)***, பதினோராம் திருமுறை ***(1869)***, போலியருட்பா ***(1869)***, சைவ வினாவிடை, முதற் புத்தகம் ***(1870)*** முதலியன சென்னையிலே முத்தமிழ் விளக்கவச்சுக் கூடம், வாணி நிகேதன அச்சுக் கூடம், கலாரத்நாகரம் அச்சுக்கூடம், வர்த்தமான தரங்கிணீசாகையச்சுக் கூடம், தத்துவபோதினி அச்சுக் கூடம் என்பனவற்றிலே அச்சிடப் பெற்றுள்ளன. திருமுருகாற்றுப்படையுரை, மூன்றாம் பதிப்பு ***(1873)***,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வர் நான்மணிமாலை ஆதியன, இரண்டாம் பதிப்பு (1873), பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு, இரண்டாம் பதிப்பு (1873), இலக்கணச் சுருக்கம் (1874), இலங்கைப் பூமிசாஸ்திரம் (1874), திருக்குறளுரை, இரண்டாம் பதிப்பு (1875), இலக்கண வினாவிடை (1875), சைவ வினாவிடை, இரண்டாம் புத்தகம் (1875) முதலியனவே சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையிலே அச்சிடப் பெற்றுள்ளன. எனவே 1870ஆம் ஆண்டினை அடுத்தே சென்னையிலே வித்தியாநுபாலன யந்திரசாலை என்ற பெயருடன் இரண்டாவது அச்சியந்திரம் நிறுவப்பட்டதாதல் வேண்டும். சுக்கில ஸு, ஆனி மீ (1869) சிதம்பரத்திலே தங்கியிருந்த நாவலரவர்கள் சுக்கில ஸு, மாசி மீ, 27ஆம் தேதி (24–2–1870) ஈழம் திரும்பிவிட்டார் ; பின்பு, நாவலரவர்கள் தமிழ்நாட்டிற்குச் செல்லவில்லை.

## வித்தியாசாலைத் தாபகர்

ஆறுமுகநாவலர் தமது வித்தியாசாலையைத் தம் மாணாக்கராகிய கு. ஆறுமுகச் செட்டியாரிடத்திலே ஒப்புவித்துவிட்டு காலயுத்தி ஸு, ஆனி மீ (1858) சென்னைக்குப் பயணமானார் என்பர் கனகரத்தின உபாத்தியாயர்[59]. இவ்வாறுமுகச் செட்டியாரின் மாதாமகர் அ, ஆறுமுகச் செட்டியார் தாம் வண்ணையிலே சைவப்பிரகாச வித்தியாசாலை அமைக்க நிலம் தருமசாதனஞ் செய்தவர். அந்த நிலம் அப்போது ரூபா 197½ விலை மதிப்புள்ளது. நாவலரவர்கள் தமது வித்தியாசாலையை நடத்தும் அதிகாரத்தை மட்டுமன்றி வித்தியாசாலைக்குரிய பணங்களை

59. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஆறுமுகச் செட்டியாரிடம் கொடுத்துவிட்டுப் போனார். அவர் வியாபாரத்தால் மிகவும் நஷ்டமடைந்தபடியினால் அப்பணங்களைத் திருப்பிக் கொடுக்கச் சக்தியற்றவராய் விட்டார். நாவலரவர்கள் முன்பு செய்யப்பட்ட தருமத்திற்காக அப்பணங்களை இழந்தனர்.[60]

ஆறுமுக நாவலர் ஆங்கீரச வருஷத்திலே (1872–1873) கோப்பாயிலும் புலோலியிலும் சைவப் பிரகாச வித்தியாசாலைகளைத் தாபித்தார் என்பர் கனகரத்தின உபாத்தியாயர்[61]. ஆனால், நாவலரவர்கள் பிரமோதூத ௵ (1870–1871) விடுத்த விக்கியாபனத்திலே தாம் பிரமோதூத ௵ கோப்பாயிலே ஒரு வித்தியாசாலை தாபித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்[62].

கைலாசபிள்ளை பிரசோற்பத்தி வருடக் கடைசியில் (1871–1872) யாழ்ப்பாணத்திலுள்ள உவெஸ்லியன் மிஷன் ஆங்கில வித்தியாசாலைக்கு விபூதி பூசிக்கொண்டு கற்கப்போகும் சைவப் பிள்ளைகள் சகலரும் அதிபதியால் ஒரு நாள் வெளியே துரத்தப்பட்டார்கள் என்று எழுதியுள்ளார்[63]. கைலாசபிள்ளை தரும் காலவரையறை பிழையாகும். அவர் குறிப்பிட்ட ஒருநாள் 1871ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 16ஆம் தேதியாகும்[64]. எனவே பிரமோதூத வருடக் கடைசி என்றிருப்பின் பொருத்தமாகும்.

---

60. த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 95.
61. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 105.
62. த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 49.
63. மேற்படி நூல், பக். 52.
64. S. Thananjayarajasingam: The Educational Activities of Arumuga Navalar, 1974, p. 65.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களின் வண்ணார் பண்ணை அங்கில வித்தியா சாலை 1872ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 22ஆம் தேதி நிறுவப்பெற்றது.

## மஞ்சக்குப்பம் நீதிமன்ற விவகாரம்

"சுக்கில ஸு (1869) சிதம்பரத்திலே ஆறுமுகநாவலர் இருக்குங் காலத்திலே அவருக்கும் இராமலிங்க பிள்ளைக்கும் இராமலிங்கபிள்ளை பட்சத்தராகிய தீக்ஷி தருக்கும் இடையே அநேக வாதங்களும், வியாச்சியங் களும் சம்பவித்தன. திருமஞ்சனத்தன்று ஆயிரக்கால் மண்டபத்திலே அவரைத் தூஷித்தார்கள். தூஷித்த பின்பு அவரும் அவரைச் சார்ந்தோரும் தங்களை அடித்தார்கள் என்னும் பொய் வழக்கை எடுத்தார்கள். அவ்வழக்கு தீக்ஷிதர்களைச் சார்ந்த ஒரு சுதேச நீதி பதியினால் விளங்கப்பட்டுப் பொய் வழக்கெனக் காணப்பட்டபடியால் தள்ளப்பட்டது"

என்று கனகரத்தின உபாத்தியாயர் எழுதியுள்ளார்[65]. வழக்கு நடந்து பதின்மூன்றாவது வருடத்தில் எழுந்த சரித் திரத்திலேயே பாரிய தவறுகள் காணப்படின், இன்று எழும் சரித்திரங்களிலே அவை இடம்பெறுதல் வியப்பிற்குரியதன்று. பேரம்பலப் பிரசங்கத்திற்கு முன்பு ஆறுமுகநாவலருக்கும் இராமலிங்கர் கோஷ்டிக்கும் இடையே சிதம்பரத்தில் அநேக வாதங்களும் வியாச்சியங்களும் சம்பவித்தன என்று கூறு வதற்கு உபாத்தியாயர் அவர்களுக்குக் கிடைத்த ஆதாரம் யாதெனப் புலப்படுமாறில்லை. பேரம்பலப் பிரசங்கத் திலே தம்மை இகழ்ந்தவராக மானநட்டம் கோரிய நாவ லரவர்கள், முன்பு வாதங்களிலும் வியாச்சியங்களிலும் ஈடு

65. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருப்பின், அவ்வாறு மானநட்டம் கோரியிருப்பாரா என்பது சிந்திக்கப்படல் வேண்டும். வழக்கு நடந்த காலத்தில் வெளிவந்த 'பிறீமன்' பத்திரிகையின் செய்திகள் இத்தகைய வாதங்களும் வியாச்சியங்களும் நடைபெற்றதாகக் கூறவில்லை[66]. ம. பொ. சிவஞானக் கிராமணியாரும் இதே பாணியில் எழுதியிருப்பது ஈண்டு மனங்கொளத்தக்கது.[67] நாவலரவர்களைப் பேரம்பலப் பிரசங்கத்திலே தூஷித்த பின்பு, இராமலிங்கர் கோஷ்டியினர், நாவலரவர்கள் கோஷ்டியினர் தம்மை அடித்ததாக வழக்கெடுத்ததாகக் கூறப்பட்டுள்ள செய்தியும் மயக்கத்தைத் தருவதாகும். பேரம்பலப் பிரசங்கத்தின் அடிப்படையில் மானநட்டத்திற்கும் பயமுறுத்தலுக்கும் வழக்குத் தொடுத்தவர் நாவலரவர்களே. கைலாசபிள்ளையும்,[68]

> "தீக்ஷிதர்கள் இவர்மேற் றொடுத்த ஒரு வழக்கில், தாம் சிக்ஷிக்கப்படுவாரென்றே இவர் எண்ணியிருந்தார். விசாரனை நடக்குந் தினத்திலே காலையிற் பூசை முடித்துக்கொண்டு, உடையவரைத் தமது மாணாக்கர் சதாசிவப்பிள்ளையிடங் கொடுத்து 'நான் இன்று சிக்ஷிக்கப்படின் என்னுயிரை விட்டுவிடுவேன், நீ இவ்வுடையவரைக் கங்கையிலே விட்டுவிடு' என்று சொல்லிவிட்டுக் கோர்ட்டுக்குப் போயினர்....... இவ்வழக்கில் வழக்காளிகளுக்கே அபராதம் விதிக்கப்பட்டது"

---

66. K. Arumainayagam : Arumuga Navalar, Karungul, and the Dikshadars. *TRIBUNE*, Vol. 22, No. 36, pp. 18–21 (25–2–1978)
67. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு , 1967, பக். 186.
68. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 73-74.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியிருப்பதும் இங்குக் கவனிக்கப்பட வேண்டிய தாகும். இவ்வழக்கிலே நாவலரவர்களுக்கு ஏற்பட்ட வக்கீல் சௌந்தர நாயகம்பிள்ளை என்று கைலாசபிள்ளை கூறுவ தாலேயே மயக்கத்தை நீக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. நாவலரவர்கள் அறுவர்மீது வழக்குத் தொடுத்தார் ; ஐவர் தீக்ஷிதர் ; ஆறாமவர் இராமலிங்கபிள்ளை. முதலாம் எதிரி சபாநடேச தீட்சிதர் மீது பயமுறுத்தலுக்கும் மானநட்டத் திற்கும், ஆறாம் எதிரி இராமலிங்கர் மீது மானநட்டத்திற் கும், ஏனையோர் மீது பயமுறுத்தலுக்கும் வழக்குத் தொடுக்கப்பட்டது. நாவலரவர்களுக்கு ஏற்பட்ட வக்கீல் ஜி. பி. சவுந்தரநாயகம் பிள்ளை. முதலாம் எதிரி சபா நடேச தீட்சிதருக்கு ஐம்பது ரூபா அபராதம் விதிக்கப் பட்டது ; ஆறாம் எதிரி, நாவலரவர்களைத் தாம் அவ தூறாகப் பேசவில்லை என்று அடித்துச்சொன்னதால் விடு விக்கப்பட்டார். கனகரத்தின உபாத்தியாயர் கூறும் அடி பிடிவழக்கும் கைலாசபிள்ளை கூறும் தீக்ஷிதர் வைத்த வழக் கும் ஆதாரமற்று நிற்கின்றன.

## பதிப்பாசிரியர் - உரையாசிரியர்

ஆறுமுக நாவலர் சௌமிய ஞு (1849) இந்தியா சென்றபோது சூடாமணி நிகண்டுரையையும் சௌந்தரிய லகரியுரையையும் பதிப்பித்ததாகக் கனகரத்தின உபாத்தி யாயர் கூறியுள்ளார்[69]. சூடாமணி நிகண்டுரை சௌமிய ஞு, ஆடி மீ பதிக்கப் பெற்றது என்பர் ; உரையாசிரியர் நாவலரவர்களே போலும். இப்பதிப்பிலே முதற் பத்துத் தொகுதி மூலமும் உரையும் இடம் பெற்றிருந்தன போலும். ஏனெனில், சென்னை கலாநிதி யச்சுக்கூடத்திற் பிரபவ ஞு,

---

69. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 28-29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி மீ (1867) அச்சிடப்பெற்ற சூடாமணி நிகண்டுரை 'நாவலர் பதிப்பில்' பத்துத் தொகுதிகள் உரையுடன் காணப்படுகின்றன.; அடுத்து, சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1873இலே அச்சிடப்பெற்றதும், இரண்டாம் பதிப்பு என்ற முத்திரையுடன் காணப்படுவதுமான நாவலர் பதிப்பிலும் பத்துத் தொகுதிகள் உரையுடன் காணப்படுவதாகத் தெரிகிறது.[70] நாவலர் முத்திரையுடன் வெளிவந்த அடுத்த சூடாமணி நிகண்டுரைப் பதிப்பு விக்கிரம ஸு (1880) க்கு உரியது போலும். பதினோராவது, பன்னிரண்டாவது தொகுதிகள் நாவலரவர்கள் பதிப்பிலே எப்பொழுது சேர்க்கப் பெற்றன என்பது தெரியவில்லை ; ஆயினும், அவ்வாறு நிகழ்ந்தது, நாவலரவர்கள் சிவபரிபூரணமெய்தியதற்குப் பின்பேயாதல் சாலும்.

சௌந்தரிய லகரி மூலமும் 'சைவ எல்லப்ப நாவலர்' உரையும் ஆறுமுகநாவலராற் பரிசோதிக்கப் பெற்று, சதுரங்கப் பட்டணம் அண்ணாமலை முதலியாரால், தமது சரஸ்வதீவிலாச அச்சுக்கூடத்திலே, சௌமிய ஸு, கார்த்திகை மீ (1849) பதிப்பிக்கப் பெற்றன. சௌந்தரிய லகரியுரையை வெளியிடும் நோக்கத்துடன் நாவலரவர்கள் 1847ஆம் ஆண்டிலேயே விளம்பரம் விடுத்திருந்தமை ஈண்டு நினைவுகூரத்தக்கது.

கனகரத்தின உபாத்தியாயர் 1851ஆம் ஆண்டு நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்து, விரோதிகிருது ஸு, சித்திரை மீ கொலை மறுத்தல் முதலியவற்றையும், ஐப்பசி மீ நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தி னிரோட்டக யமக வந்தாதிக்

70. தமிழ் நூல் விவர அட்டவணை தொகுதி 1, பகுதி 1, 1961. பக். 331.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் தாம் எழுதிய உரை, திருமுருகாற்றுப்படைக்குத் தாம் எழுதிய உரை ஆகியனவற்றையும் நாவலரவர்கள் அச்சிட்ட தாகக் கூறியுள்ளார்[71]; கைலாசபிள்ளை திருமுருகாற்றுப் படையுரை, திருச்செந்தி னிரோட்டக யமக வந்தாதியுரை எழுதியது இருபத்தொன்பதாம் வயசாகிய விரோதி கிருது ஞூ என்றார்.[72]

திருச்செந்தி னிரோட்டக யமக வந்தாதி நாவலரவர் கள் உரையுடன் சாதாரண ஞூ, பங்குனி மீ (1851) வெளி வந்தது ; கனகரத்தின உபாத்தியாயர் கூறும் காலத்திற்கு ஏழு மாதங்களுக்கு முன்பு வெளிவந்தது ; கைலாசபிள்ளை, சாதாரண ஞூ பதிப்பிக்கப் பெற்ற உரையை, அடுத்து வந்த விரோதிகிருது ஞூ எழுதியதாகக் கூறியிருக்கிறார். கொலை மறுத்தலுரை, நன்னூல் விருத்தியுரை என்பன வற்றிற்கு முன்னர் திருச்செந்தி னிரோட்டக யமக வந்தாதி நாவலரவர்கள் உரையுடன் வெளிவந்துவிட்டது.

திருமுருகாற்றுப்படை மூலத்தை நாவலரவர்கள் உரை யுடன் சார்வரி ஞூ, சித்திரை மீ (1960) வெளியிட்ட தரும பரிபாலகர் தி. க. இராசேசுவரன், தமது பதிப்புரையிலே, முதன்முதல் நாவலரவர்கள் இதனை வெளியிட்டது பிரமா தீச ஞூ (1853) எனப் பழைய பிரதி ஒன்றால் தெரிய வருவதாகக் கூறியுள்ளார். திருமுருகாற்றுப்படை யுரை யின் முதற் பதிப்பினை நோக்கினாலன்றி உண்மை பொய்ம்மை கூறல் சாலாது.

---

71. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 32.

72. மு. ரா. அருணாசலக் கவிராயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, முகவுரை, பக். 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தின உபாத்தியாயர் விரோதிகிருது ஹு, சித்திரை மீ கொலைமறுத்தலை நாவலரவர்கள் பதிப்பித்தார் என்று கூறுகிறார் ; பிறிதோரிடத்து நல்லூர் க. சதாசிவப்பிள்ளை கொலைமறுத்தலை நாவலரவர்கள் முன்னிலையிற் பரிசோதித்து வெளிப்படுத்தினார் என்று கூறுவர்[73]. கைலாசபிள்ளை கொலைமறுத்தலைத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் உரையுடன் நாவலரவர்கள் பதிப்பித்ததாகக் கூறுவர்[74]. அண்டர்சன் பிரபுவுக்கு 1852ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் நாவலரவர்கள் விடுத்த விண்ணப்பத்தின் மூலம் கொலைமறுத்தல் உரையுடன் நாவலரவர்களாற் பதிப்பிக்கப் பெற்றமை புலனாகும்[75].

கனகரத்தின உபாத்தியாயர் திருக்கோவையாருரையும் திருக்குறளுரையும் பதிப்பிக்கப்பெற்ற ஆண்டுகளைப் பிறழவைத்துள்ளார்;[76] கைலாசபிள்ளை திருத்திக் காட்டியுள்ளார்.[77] திருக்கோவையாருரை சென்னை முத்தமிழ் விளக்கவச்சுக்கூடத்திலே ரௌத்திரி ஹு, ஐப்பசி மீ (1860) பதிப்பிக்கப்பெற்றது ; திருக்குறளுரை சென்னை வாணிநிகேதனவச்சுக் கூடத்திலே துன்மதி ஹு, வைகாசி மீ (1861) அச்சிடப் பெற்றது. நாவலரவர்கள் தாம் பதிப்பித்த திருக்கோவையாருரை நச்சினார்க்கினியரால் இயற்றப்

73. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 93.
74. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 63.
75. ச. தனஞ்சயராசசிங்கம், நாவலர் பணிகள், 1969, பின்னிணைப்பு.
76. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 42.
77. மு. ரா. அருணாசலக் கவிராயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, முகவுரை, பக். 7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதென்று கருதினார்; பேராசிரியருரை என்பது பின்பே விளக்கமெய்தியதாகும்; திருக்குறளுரை பரிமேலழகர் இயற்றியதாகும்.

கனகரத்தின உபாத்தியாயர் கந்தபுராணத்தை நாவலரவர்கள் அக்ஷய ஸு, கார்த்திகை மீ (1866) பரிசோதித்து வெளிப்படுத்தினார் என்பர்.[78] சென்னை வர்த்தமான தரங்கிணீசாகையச்சுக் கூடத்திற் சுக்கில ஸு, சித்திரை மீ (1869) பதிப்பிக்கப்பெற்ற நாவலரவர்களின் கந்தபுராணப் பதிப்பிலே இரண்டாம் பதிப்பென்ற முத்திரை இல்லை. " யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் திருத்தி வைத்த திருத்தத்தோடு நாவலரவர்கள் மருமகரும், மாணாக்கருமாகிய பொன்னம்பல பிள்ளையால் பிழையறப் பரிசோதித்து வை. ஆறுமுகப் பிள்ளையால் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணைச் சைவப் பிரகாச யந்திரசாலையில் " சுபானு ஸு, ஆவணி மீ (1883) அச்சிற் பதிப்பிக்கப் பெற்ற கந்தபுராணம் ' இரண்டாம் பதிப்பு ' என்ற முத்திரையுடையது. விகிர்தி ஸு, புரட்டாசி மீ (1890), நாவலரவர்களின் சொத்துகளுக்கு ஆதிபத்தியம் பெற்றவர்கள், வெளியிட்ட கந்தபுராணப் பதிப்பும் ' இரண்டாம் பதிப்பு ' என்ற முத்திரையுடையது. சூடாமணி யுரைப் பதிப்பிலும் இத்தகைய நிலைமை காணப்படுதல் ஈண்டு மனங்கொளத் தக்கது. எவ்வாறாயினும், சுக்கில ஸு (1869) பதிப்பே நாவலரவர்களின் முதற் பதிப்பாகத் தெரிவதால், கனகரத்தின உபாத்தியாயர் கூற்றினை ஏற்க முடியாது.

கனகரத்தின உபாத்தியாயர் விபவ ஸு, புரட்டாதி மீ தொல்காப்பியம் சேனாவரையருரையை நாவலரவர்கள்

78. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதித்து வெளிப்படுத்தினார் என்பர்.[79] சென்ன பட்டணம் ஊ. புஷ்பரதச் செட்டியாரது கலாரத்நாகர வச்சுக் கூடத்தில் நல்லூர் ஆறுமுகநாவலர் பல பிரதிருபங் களைக் கொண்டு பரிசோதித்த சேனாவரையருரை யாழ்ப் பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையால் விபவ ஞு, புரட்டாதி மீ (1868) பதிப்பிக்கப் பெற்றது.

கைலாச பிள்ளை சிவ தருமோத்தரத்திற்கு நாவல ரவர்கள் உரை செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்[80]. சைவ தூஷண பரிகாரத்தில் (1854) நாவலரவர்கள் சிவதரு மோத்தர பாடல்கள் சிலவற்றிற்குப் பொருள் கூறியுள் ளார். ஆயினும், முழு நூலுக்கும் உரை செய்தமை வேறிடங்களில் வழிமொழியப் படவில்லை. சிவதருமோத் தரம் மூலமு முரையும் கொண்ட, சாலிவாடீசுர ஓதுவா மூர்த்திகளின் பதிப்பு பிரபவ ஞு, மார்கழி மீ (1867) வெளிவந்தது.

கனகரத்தின உபாத்தியாயர்,

> ''அடுத்த யுவ தாது ஈசுர வெகுதானிய வருஷங்களிலே நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை, திருவிளை யாடற்புராணம், நன்னூற் காண்டிகையுரை முதலிய நூல்களைத் திருத்துவதிலும், சிவபூசாவிதி....... முதலிய நூல்களைப் புதிதாய் எழுதுவதிலும், சைவப் பிரசங்கங்கள் செய்தலிலுந் தங் காலத்தைப் போக்கி னார்''

---

79. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 93.
80. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 64.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்கள் என்பர்.[81] உபாத்தியாயர் கூறும் காலம் 1875ஆம் ஆண்டு முதல் 1879ஆம் ஆண்டு வரையிலான பிரிவாகும். நாவலரவர்கள் திருத்தியதாக இங்குக் கூறப் படும் மூலமோ, உரைகளோ அவர்கள் எழுதியவை யல்ல என்ற பொருள் கனகரத்தின உபாத்தியாயர் கூற்றாற் பெறப்படுகின்றது எனலாம். இவ்வாறிருப்பினும், நைடத வுரையும் நன்னூற் காண்டிகையுரையும் நாவலரவர்களால் எழுதப் பெற்றவை என்ற கருத்து நிலவுகின்றது. நைடதத் திற்கு ஆறுமுக நாவலர் ஒருரை இயற்றியுள்ளார் எனவும், அவ்வுரை வண்ணை சி. சுவாமிநாத பண்டிதரால் வெளியிடப் படவிருக்கிறது எனவும் மேலைப் புலோலி நா. கதிரைவேற் பிள்ளை கூறியிருக்கிறார்[82]. நன்னூற் காண்டிகையுரை நாவலரவர்கள் செய்த உரைகளுள் ஒன்றாகக் கைலாச பிள்ளையாற் குறிப்பிடப்பட்டுள்ளது[83]. கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பின் (1968) ஈற்றில், ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களால் அச்சிற் பதிப் பித்து வெளிப்படுத்தப்பட்ட புத்தகங்களில் ஒன்றாக நன்னூற் காண்டிகையுரையும், அச்சிற் பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடித்தவைகளில் ஒன்றாக நைடதவுரை யும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

நாவலரவர்கள் திருத்தியதாகக் கூறப்பெறும் நைடத வுரை வெளிவரவில்லை. திருத்தணிகை சரவணப் பெரு மாளையர் கைக்கிளைப் படலம் வரைக்கும் செய்தச்சிற் பதித்த உரையுடன், காஞ்சிபுரம் குமாரசுவாமி தேசிகர்

---

81. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 112.
82. நைடத மூலமும் விருத்தியுரையும், சென்னை : வித்தி யாரத்நாகர அச்சுக்கூடம், 1930, நாத்தியுரை.
83. ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 64.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாகிய சில வித்வான்கள் ஒத்தாசையைக் கொண்டு, சரவணப் பெருமாளையர் குமாரர், கந்தசுவாமியையர் மற்றப் படலங்களுக்கும் உரை செய்து, சென்னை கல்வி விளக்கவச்சுக் கூடத்திற் பதிப்பித்த நைடதவுரை சுபகிருது ஞூ, வைகாசி மீ (1842) வெளிவந்தது. காஞ்சிபுரம் குமாரசுவாமி தேசிகரும் நைடதவுரையினை 1842இலே வெளியிட்டுள்ளனர் போலும்[84]. களத்தூர் வேதகிரி முதலியாரும் (1795–1852) நைடதத்திற்கு உரை கண்டுள்ளார். அவருடைய நைடதவுரைப் பதிப்பின் பிரதிக்கிணங்க, மண்ணிப் பாக்கம் சபாபதி முதலியார் பார்வையிட்ட பிரதி, சண்முக விலாச அச்சுக்கூடத்தில் விரோதிகிருது ஞூ, புரட்டாதி மீ (1851) பதிப்பிக்கப் பெற்றுள்ளது. உதயதாரகையில் களத்தூர் வேதகிரி முதலியாருக்கும் நல்லூர் ம. சரவணமுத்துப் புலவருக்கும் இடையே நைடதப் பாட்டொன்றினையிட்டு உண்டுபட்ட பரிமாறுதல்களிலே நைடத வுரையின் சில பொருந்தாப் பாகங்களும் எடுத்துக்காட்டப் பட்டிருந்தன. சரவண முத்துப் புலவரின் மாணவர் ஆறுமுக நாவலரும் அப்பரிமாறுதல்களிலே இடம் பெற்றவர். எனவே, நாவலரவர்கள் நைடதவுரையினைத் திருத்துவதில் ஈடுபட்டிருந்தார் எனும் உபாத்தியாயர் கூற்றுப் பொருத்தமாகத் தெரிகின்றது. மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை 'புதுக்கியும் திருத்தியும் விளக்கியுஞ் சேர்த்துக் கொடுத்த விருத்தியுரை' நைடதத்திற்குண்டு ; அது பதிப்பிக்கப்பட்டுள்ளது.

"நல்லூர் ஆறுமுகநாவலர் திருத்தியும் விளக்கியுங் கூட்டியும் புதுக்கியது" என்ற முத்திரையுடன் நல்லூர் க. சதாசிவப்பிள்ளை விக்கிரம ஞூ, சித்திரை மீ (1880)

---

84. மயிலை சீனி. வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், 1962, பக். 382.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிட்டு வெளிப்படுத்திய நன்னூற் காண்டிகையுரையே, ஆறுமுக நாவலரின் நன்னூற் காண்டிகையுரையாக வழங்கி வரு கின்றது.

ஆறுமுக நாவலர் விரோதிகிருது ஷு, ஐப்பசி மீ (1851), சங்கர நமச்சிவாயப் புலவராற் செய்யப்பட்டு, சிவஞான முனிவராலே திருத்தப்பட்ட நன்னூல் விருத்தி யுரையை அச்சிட்டவராவர். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து மறைந்த கூழங்கைத் தம்பிரானின் நன்னூலுரை நாவல ரவர்களின் காலத்திற்குச் சிறிது முன்புவரை ஈழத்தில் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். மயிலைநாதரின் உரை 1918 இலேயே முதன்முதலாக அச்சிடப் பெற்றது. ஊற்றங் கால் ஆண்டிப் புலவரின் உரையறி நன்னூல் செய்யுணூல். நாவலரவர்களின் காலத்திலே தமிழ்நாட்டில் எழுந்த நன் னூற் காண்டிகையுரைகள் இரண்டு சிறப்புடன் உலவி வந்தன ; ஒன்று இராமாநுச காண்டிகை ; ஏனையது விசாகப் பெருமாளையர் காண்டிகையுரை. இராமநுச காண்டிகை 1847ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் முதன் முதலாக வெளிவந்தது.[85] இவ்வுரை பற்றி நல்லறிவுச் சுடர் கொளுத்தல் இரண்டாம் பந்தியிற் குறிப்பிடப்பட்டுள் ளது. முகவை. இ. இராமாநுச கவிராயரின் மாணவரே திருத்தணிகை விசாகப் பெருமாளையராவார். விசாகப் பெருமாளையரின் காண்டிகையுரை முதன் முதலில் எப் பொழுது வெளிவந்ததென்பது தெரியவில்லை[86]. ஆயினும்,

---

85. ச. பவானந்தம் பிள்ளை : நன்னூலுரை, முகவுரை, 1922.

86. விசாகப் பெருமாளையர் காண்டிகையுரை 1839இலே வெளி வந்ததென்று சிலர் எழுதியுள்ளனர் (க. ப. அறவாணன் : சைனரின் தமிழிலக்கண நன்கொடை, 1974, பக். 318) ; இக்கூற்று ஆராயப்பட வேண்டிய தொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வெளியீடு யுவ ஞு, ஐப்பசி மீ (1875) வெளிவந்த விசாகப் பெருமாளையரின் காண்டிகையுரைப் பதிப்புக்கு முன்பே வெளிவந்துவிட்டது. திருத்தணிகை விசாகப் பெருமாளையரால் உரை செய்து பதிப்பித்த பிரதிக் கிணங்க, களத்தூர் வேதகிரி முதலியார் குமாரர் ஆறுமுக முதலியாராற் பரிசோதித்து, ஆயலூர் அருணாசல முதலியாரவர்களது திருமகள் விலாச அச்சுக்கூடத்திற் பதிப் பிக்கப் பெற்ற நன்னூல் மூலமும் காண்டிகையுரையும் யுவ ஞு, ஐப்பசி மீ (1875) வெளி வந்தன. விசாகப் பெரு மாளையர் காண்டிகையுரை வெளிவந்த பின்பு அவ்வுரையே பெரிதும் பயிலப்படுவதாயிற்று ; இராமாநுச காண்டிகை ஒதுங்கிக் கொண்டது. நல்லறிவுச் சுடர் கொளுத்தலில் விசாகப் பெருமாளையரை நாவலரவர்கள் மெய்ப்புலவர் என்று சுட்டுதல் மனங்கொளத் தக்கது.

ஆறுமுகநாவலர்திருத்திய திருவிளையாடற் புராணத் தினை நல்லூர் க. சதாசிவப்பிள்ளை சென்னை வித்தியாநு பாலன யந்திர சாலையிற் பிலவங்க ஞு, ஐப்பசி மீ (1907) பதிப்பித்தார்.

கனகரத்தின உபாத்தியாயர் 1873ஆம் ஆண்டு நிகழ்ச்சிகளைக் கூறும்போது சிவஞானபோதச் சிற்றுரையை நாவலரவர்கள் பரிசோதித்துக் கொண்டு வந்தார் என்று கூறுவர்.[87] இவ்வுரையினை நல்லூர் க. சதாசிவப்பிள்ளை சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையிற் பார்த்திப ஞு (1885) பதிப்பித்தனர். கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தின் ஈற்றில் இடம் பெறும் ' ஸ்ரீலஸ்ரீ நாவலரவர் களால் அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்ட புத்தகங் கள் ' எனும் பட்டியலில் இடம் பெறும் நூல்களில் ஒன்று

87. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 109.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோக விவேகவுரை. நாவலரவர்கள் பரிசோதித்த பிரயோக விவேகவுரையினை நல்லூர் க. சதாசிவப்பிள்ளை சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் விஷு ஞு, தை மீ (1882) முதன் முதலாக அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பின் ஈற்றில் இடம்பெறும் ' ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களால் அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்ட புத்தகங்கள் ' எனும் பட்டியலில், சரித்திரத்தில் விதந்து கூறாதவையும் முன்பு எடுத்துக் கூறப் பெறாதனவுமாகிய மேல் வரும் நூல்கள் இடம் பெறுவன :

குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்
கந்தரலங்காரம், கந்தரனுபூதி
ஏரெழுபது, திருக்கைவழக்கம்
புட்ப விதி
மறைசை யந்தாதி
கோயிற்புராண மூலம்
திருக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி
சிதம்பர மும்மணிக் கோவை
உபநிடதவுரை
பட்டணத்துப் பிள்ளையார் பாடல்
அருணகிரிநாதர் வகுப்பு
மருதூரந்தாதியுரை
திருச்செந்தூரகவல்
விநாயக கவசம், சிவகவசம், சத்திகவசம்
உபமான சங்கிரகம் இரத்தினச் சுருக்கம்
பதினோராந் திருமுறை
நால்வர் நான்மணிமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புட்பவிதி யாழ்ப்பாணம் வித்தியாநுபாலன யந்திரசாலையிற் சாதாரண ஹூ, மாசி மீ (1851) அச்சிடப் பெற்றது.[88] மருதூரந்தாதியின் உரையாசிரியர் ஆறுமுக நாவலர் என்பர் கைலாசபிள்ளை. தலைமலை கண்ட தேவர் பாடிய மருதூர் யமக வந்தாதி ஆறுமுகநாவலருரையுடன் சென்னை கலாநிதி யச்சுக்கூடத்திலே 1868ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்றது என்பர்89. சொரூபானந்தப் பொருளாகிய உபநிடதம் மூலமும் உரையுமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது ; இரண்டாம் பதிப்பு சென்னை வித்தியாநுபாலன யந்திர சாலையிலிருந்து 1873ஆம் ஆண்டு வெளி வந்தது. கோப்பாய் ச. விசுவநாதபிள்ளையின் ஏழாம் பதிப்பு பிரபவ ஹூ, கார்த்திகை மீ (1927) சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிடப்பட்டுள்ளது; ஆயினும், நூலாசிரியர், உரையாசிரியர் இன்னார் என்னும் தகவல் தரப்படவில்லை.

சென்னை கலாரத்நாகரம் அச்சுக்கூடத்திலே உவமான சங்கிரகமும் இரத்தினச் சுருக்கமும் அக்ஷய ஹூ, ஐப்பசி மீ (1866)லும், சிதம்பர மும்மணிக் கோவை பிரபவ ஹூ, ஆனி மீ (1867)லும், அருணகிரிநாதர் திருவகுப்பு பிரபவ ஹூ, ஐப்பசி மீ (1867)லும், சென்னை வர்த்தமான தரங்கிணீ சாகையச்சுக் கூடத்திலே பதினோராம் திருமுறை சுக்கில ஹூ, வைகாசி மீ (1869)லும் அச்சிடப் பெற்றுள்ளன.

மறைசையந்தாதி, கோயிற்புராண மூலம் என்பன ரௌத்திரி ஹூ, ஐப்பசி மீ (1860) திருக்கோவையாருரை வெளிவருவதற்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டுள்ளன ; இப்

---

88. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 64.
89. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 2 (1962) பக். 573.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பில் இடம்பெறும் பிரகடனப் பத்திரிகையில் இதுவரையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் பற்றிய பட்டியலில் இவை இடம் பெறுவன. மறைசையந்தாதியின் மூன்றாம் பதிப்பு சதாசிவப் பிள்ளையால் சென்னை வித்தியாநுபாலனயந்திர சாலையில் 1873ஆம் ஆண்டிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[90] நாவலரவர்கள் காலத்திலேயே மறைசையந்தாதி சதாசிவப்பிள்ளை பேரால் வெளி வந்துள்ளமையால், அது நாவலரவர்கள் முன்னிலையிற் பரிசோதிக்கப் பெற்றதா அல்லது பதிப்பாசிரியர் தாமாகவே பரிசோதித்ததா என்பது நோக்கப்படல் வேண்டும்.

முற்கிளந்த பிரகடனப் பத்திரிகையில், இதுவரையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் பற்றிய பட்டியலில், “ விநாயகரகவல், திருச்செந்தூர்க் கலிவெண்பா ” என்ற பதிப்பும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருச்செந்தூர் அகவல் எனும் சுப்பிரமணியர் திருச்செந்தூரகவலே திருச்செந்தூர்க் கலிவெண்பா எனப் பிழைபடப் பிரகடனப் பத்திரிகையிற் குறிப்பிடப் பெற்றது போலும்.

விநாயக கவசம், சிவகவசம், சத்தி கவசம் எனும் மூன்று கவசங்களும் இணைந்த பதிப்பினைக் கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தின் பட்டியல் சுட்டுகின்றது. இத்தொகுப்பிலே சகலகலாவல்லிமாலை என்னும் சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம் என்பனவும் இடம் பெற்றிருந்தன. இத்தொகுப்பின் இரண்டாம் பதிப்பு சென்னை வர்த்தமான தரங்கிணீ சாகையச்சுக் கூடத்திலே 1868ஆம் ஆண்டிலே அச்சிடப் பெற்றுள்ளது.[91] முற்

90. தமிழ்நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 1, பக். 570.

91. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 1, 1961, பக். 214, 216.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிந்த பட்டியல் சுட்டும் நால்வர் நான்மணி மாலைப் பதிப்பிலே துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய நால்வர் நான்மணி மாலை, விருத்தாசலம் பெரியநாயகியம்மை நெடுங்கழி நெடிலாசிரிய விருத்தம், விருத்தாசலம் பெரிய நாயகியம்மை கலித்துறை, விருத்தாசலம் பழமலை நாதர் பிச்சாடன நவமணிமாலை எனும் நான்கு பிரபந்தங்கள் இடம்பெறுவன. இத்தொகுப்பின் இரண்டாம் பதிப்பு சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் ஆங்கீரச ஞு, பங்குனி மீ (1873) அச்சிடப் பெற்றது. பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டின் இரண்டாம் பதிப்பும் அதே இடத்தில் அதே காலத்தில் அச்சிடப் பெற்றது.

குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, ஏரெழுபது — திருக்கைவழக்கம், திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி ஆகிய ஏனைய நூல்களின் பழைய பதிப்பு விபரங்கள் கிடைக்கப் பெறுமாறில்லை.

திருக்கோவையாருரைப் பதிப்பின் (1860) பிரகடனப் பத்திரிகை கூறும் 'இது வரை அச்சிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள்' பட்டியலிற் 'போற்றிக் கலிவெண்பா'வும் இடம்பெறுகின்றது.

பதிப்பாசிரியர் — உரையாசிரியர் ஆறுமுகநாவலரின் கொலைமறுத்தலுரை (பக். 32), நன்னூல் விருத்தியுரை (பக். 32), தருக்க சங்கிரகவுரை (பக். 42), இலக்கணக் கொத்து — இலக்கண விளக்கச் சூறாவளி — தொல்காப்பியச் சூத்திர விருத்தி (பக். 72), சேதுபுராணம் (பக். 72),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிற்புராணவுரை (பக். 93), சைவ சமய நெறியுரை (பக். 93) என்பன பற்றிக் கனகரத்தின உபாத்தியாயர் தரும் பதிப்பு விபரங்கள், நாவலரவர்களின் முதற் பதிப்பு கள் மூலம், சரியானவை என்று அறியக் கிடக்கின்றது. கொலை மறுத்தலுரையும் நன்னூல் விருத்தியுரையும் யாழ்ப் பாணம் வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச்சிடப் பெற்றவை. சென்னையிலே தருக்க சங்கிரகவுரை வாணி நிகேதனவச்சுக் கூடத்திலும், இலக்கணக் கொத்து ஆகியன வும் சேதுபுராணமும் கலாரத்நாகரம் அச்சுக் கூடத்திலும், கோயிற்புராணவுரையும் சைவ சமய நெறியுரையும் வர்த்த மான தரங்கிணீ சாகையச்சுக் கூடத்திலும் அச்சிடப் பெற்றன.

## நல்லூர் க. சதாசிவப் பிள்ளை

கனகரத்தின உபாத்தியாயர் 1852ஆம் ஆண்டுக் குரிய நிகழ்ச்சியினைக் கூறும்போது, நாவலரவர்கள் சுன் னாகம் முத்துக்குமார கவிராயர் பாடிய ஞானக்கும்மியைப் பரிசோதித்து நல்லூர் சி. விநாயகமூர்த்திச் செட்டியார் பேரால் அச்சிட்டு வெளிப்படுத்தியதாகக் கூறுவர்[92]. இப் பதிப்பிலே அவர் பாடிய யேசுமத பரிகாரமும் இடம் பெற் றிருந்ததைக் கைலாசபிள்ளை கூறுவர்[93]. இவ்விரு நூல் களின் இரண்டாம் பதிப்பு ஆங்கீரச ஹூ, ஆனி மீ (1872) வெளிவந்தது.

ஆறுமுகநாவலர் இவ்வாறே திருவாசகம், திருக் கோவையார் என்னுமிரண்டையும் பரிசோதித்துச் சதாசிவப் பிள்ளை பேராற் சித்தார்த்தி ஹூ, வைகாசி மீ (1859)

92. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 33.

93. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 54.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையிலே வெளிப்படுத்தினார்[94]. இச்செய்தியினைத் தரும பரிபாலகர் தி. க. இராசேசுவரன் மறுத்து, இவ்விரு நூல்களின் முதற் பதிப்பு கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளையால் இராக்ஷச ஹு, தை மீ (1916) வெளியிடப் பெற்றதென்றும், இரண்டாம் பதிப்பு கோப்பாய் ச. விசுவ நாதபிள்ளையாலே துந்துபி ஹு, ஐப்பசி மீ (1922) வெளியிடப் பெற்றதென்றும் எழுதியுள்ளார்[95]. ஆயினும் தரும பரிபாலகரின் கூற்றுப் பிழையென்றே கொள்ளவேண்டியிருக்கின்றது. திருக்கோவையாருரைப் பதிப்பில் (1860) இடம்பெறும் பிரகடனப் பத்திரிகை 'இதுவரையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள்' பட்டியலிலே திருவாசகம், திருக்கோவை மூலம் என்ற பதிப்பினைச் சுட்டுகின்றது.

நல்லூர் க. சதாசிவப்பிள்ளை, நாவலரவர்கள் முன்னிலையிற் பரிசோதித்தும், தாமாகப் பரிசோதித்தும் பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். கனகரத்தின உபாத்தியாயர்,

> " அவர் மாணாக்கராகிய சதாசிவப் பிள்ளையும் பாரதம், கொலை மறுத்தல், வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம், திருவுந்தியார்[96], தாயுமான சுவாமி பாடல் முதலிய நூல்களை அவர் முன்னிலையிற் பரிசோதித்து வெளிப்படுத்தினார் "

என்று கூறுவர்[97]. அவர் இந்நூல் வெளியீடுகள் யாவும் 1868ஆம் ஆண்டிலே நடைபெற்றன என்று கருதும்படி

---

94. வே. கனகரத்தின உபாத்தியாயர் : ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 41.
95. இந்து சாதனம், 24-12-1971.
96. அவிரோதவுந்தியார் என்றிருத்தல் வேண்டும்.
97. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 93.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளார். திருக்கோவையாருரைப் பதிப்பில் (1860) இடம் பெறும் பிரகடனப் பத்திரிகை 'இதுவரையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள்' பட்டியலிலே வைராக்கிய சதகவுரை, வைராக்கிய தீபவுரை, அவிரோத வுந்தியாருரை என்பன சேர்த்துக் கட்டப்பெற்ற புத்தகத்திற்கும், அவை தனித்தனியே அமையும் புத்தகத்திற்கும், கொலை மறுத்த லுரைக்கும் விலை கூறப்பட்டுள்ளது. கொலை மறுத்தல் மூலம் என்ற பதிப்பொன்று இப்பட்டியலில் இடம் பெற வில்லை. கனகரத்தின உபாத்தியாயர் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்று மூலமென்ற கருத்துப்படவே கூறுவது கவனிக்கத்தக்கது. ஆயினும், அவை உரையுடன் கூடியவை என்பது திருக்கோவையார் பிரகடனப் பத்திரிகை மூலம் அறியக் கிடக்கின்றது. வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந் தியார் என்பனவும் 1851ஆம் ஆண்டில் நாவலரவர்கள் வெளியிட்ட கொலை மறுத்தலும் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டவை மட்டுமன்றி, ஒரே ஆசிரியரால் உரை எழுதப்பட்டவையுமாம்; நூலாசிரியர் திருப்போரூர் சாந்த லிங்க தேசிகர்; உரையாசிரியர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள். எனவே கொலை மறுத்தலுரையை 1851இலே நாவலரவர்கள் பதிப்பித்ததைத் தொடர்ந்து, ஏனைய வற்றை அவர்கள் முன்னிலையிற் சதாசிவப்பிள்ளை பரி சோதித்து வெளிப்படுத்தினராதல் வேண்டும். திருக்கோவை யாருரையின் பிரகடனப் பத்திரிகை கொலை மறுத்த லுரை ஒழிந்த ஏனைய மூன்றுமே ஒரே கட்டமாகத் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டதைச் சுட்டுகின்றது. பின்பு அத்தொகுப்பிலே கொலை மறுத்தலுரையும் சேர்க்கப்பட்டி ருத்தல் வேண்டும். கொலை மறுத்தலை இரண்டாவது முறை சதாசிவப்பிள்ளை பரிசோதிக்க வேண்டிய நிலை இருக்கவில்லை. மேலும் 1873ஆம் ஆண்டிலே சதாசிவப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை பேரால் வெளிவந்த கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் என்பன அடங்கிய தொகுப்புப் பற்றிக் கூறுமிடத்து, கொலை மறுத்தல் வினாவிடை முறையில் அமைந்த உரையுடையதாகக் கூறப்பட்டுள்ளது[98]. திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் உரை இவ்வாறு அமைந்தது என்பது மனங் கொளத்தக்கது. எனவே கனகரத்தின உபாத்தியாயர் திருப்போரூர் சாந்தலிங்க தேசிகர் நூல்கள் பற்றிக் கூறிய செய்தி பொருத்தமாகத் தெரியவில்லை.

கனகரத்தின உபாத்தியாயர் வில்லிபுத்தூராழ்வாரின் மகா பாரதத்தை நாவலரவர்கள் முன்னிலையிற் பரிசோதித்து நல்லூர் க. சதாசிவப் பிள்ளை பதிப்பித்தார் என்று கூறுவது சரியெனவே தோன்றுகின்றது. சதாசிவப் பிள்ளை பேராற் சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1874ஆம் ஆண்டு அச்சிடப்பெற்ற இரண்டாம் பதிப்பிலே இச்செய்தி இடம் பெறுகின்றது என்பர்.[99] சதாசிவப்பிள்ளையின் மகாபாரதம் மூன்றாம் பதிப்பு சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1883இலே அச்சிடப்பெற்றது என்பர்.[100] 1874இலே வெளி வந்தது ஆறுமுகநாவலர் பதிப்பு என்றும், 1884இலே வெளி வந்தது சதாசிவப்பிள்ளை பதிப்பென்றும் ஒருவர் எழுதியுள்ளார்.[101]

கைலாசபிள்ளை, நாவலரவர்கள் அச்சிட்ட நூல்களிற் பாரதம், சூடாமணி நிகண்டு என்னுமிரண்டனையும்

98. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 1, 1961, பக். 116, 117.
99. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 2, 1962, பக். 555.
100. மேற்படி.
101. மயிலை சீனி. வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், 1962, பக். 386.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மிகவும் மெச்சிக் கொள்ள வேண்டும் என்பர்[102]. நாவலரவர்களும் தமது மித்தியா வாத நிரசனத்திலே காட்டாலூர் சுந்தர சிவாசாரிய சுவாமிகளின் சிவாதித்யரத் நாவளி (முதற் பாகம்), கூடலூர் குமரகுருபர சுவாமிகளின் பாத்மோத்தர ரசா பாச தருப்பணம் என்பனவற்றிலிருந்து, தம்முடைய பதிப்பாக, முற்கிளந்த பாரதப் பதிப்பினைச் சிறப்பித்துக் கூறும் பகுதிகளை எடுத்தாண்டுள்ளார்.[103]

அகத்திய மகாமுனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு என்பன அடங்கிய தொகுப்பொன்று மூன்றாம் பதிப்பாகச் சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் சதாசிவப்பிள்ளையால் அச்சிடப் பெற்று விக்கிரம ஹு, ஆனி மீ (1880) வெளி வந்தது. இப்பதிப்பிலே அகத்தியர் தேவாரத் திரட்டும், திருவாசகமும் நாவலரவர்களின் முன்னிலையிற் சதாசிவப்பிள்ளையாற் பரிசோதிக்கப் பெற்றவை என்ற குறிப்புண்டு. இத்தொகுப்பின் இரண்டாம் பதிப்பு சென்னை வித்தியாநு பாலன யந்திர சாலையில் 1873இலே அச்சிடப் பெற்றது என்பர்.[104] இத்தொகுப்பின் முதலாம் பதிப்பு 1866இலே வெளிவந்ததென்பர் தருமபரிபாலகர் தி. க. இராசேசுவரன்.[105] அவர் இதனை நாவலரவர்களின் தொகுப்பாகக் கூறியுள்ளார்.

'' பெரிய புராணத்தின் ஒரு பகுதியை முதன் முதல் அச்சில் பதிப்பித்தவர், மழவை வீரசைவப்புலவர் மகா

---

102. ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 65.
103. த. கைலாச பிள்ளை (தொகு.), ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, 2ஆம் பாகம், 1955, பக். 133-134
104. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 2, (1962) பக். 492.
105. இந்து சாதனம், 24-12-1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்க ஐயர். அப்பதிப்பு வெளிவந்த ஆண்டு 1843. காஞ்சிபுரம் மகா வித்வான் சபாபதி முதலியார் பெரிய புராணப் பதிப்பிலே இருமுறை ஈடுபட்டனர். அவை முறையே 1859-ம் ஆண்டிலும், 1870-ம் ஆண்டிலும் நிகழ்ந்தன. சிதம்பரம் உபாத்தியாயர் பே. இராம லிங்கம் பிள்ளைப் பதிப்பு 1879-ம் ஆண்டில் வெளி யாயிற்று. ஆறுமுகநாவலர் முதற் பதிப்பு 1884-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது ''.[106]

சென்னை வித்தியாநுபாலன யந்திர சாலையில் 1884ஆம் ஆண்டு அச்சிடப்பெற்ற திருத்தொண்டர் புராணம் முதற் காண்டத்தின் பதிப்பாசிரியர் நல்லூர் க. சதாசிவப் பிள்ளை. இப்பதிப்பிலே, அது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் காரைக்காலம்மையார் புராணம் வரையில் பரிசோதித்து, ஒவ்வொரு புராணத் துக்கும் அவர்களால் எழுதப்பட்ட சூசனத்தோடு மேற் படியூர் சதாசிவப்பிள்ளையாற் பதிப்பிக்கப்பெற்றது என்ற குறிப்புண்டு; இரண்டாம் காண்டம் 1888இலே சதாசிவப் பிள்ளையாற் சென்னை வித்தியாநு பாலன யந்திர சாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.[107]

ஆறுமுகநாவலர், சதாசிவப்பிள்ளை முதலானவர் களுக்கு, முதலிற் படிப்பித்த காவியம் பெரியபுராண மென்பர்.[108] பெரியபுராணத்தில் நாவலரவர்களுக்கு மிக்க ஈடுபாடு ; அதன் கதைகள் கட்டுக்கதைகள் என்று கூறிய தமையனாரைக் கூட, மன்னிக்க அவர் தயாராய் இருக்க

106. திருவாரூர் வி. கலியாணசுந்தர முதலியார், பெரிய புராணவுரை, 1934, முகவுரை.

107. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 2, (1962) பக். 498.

108. த. கைலாச பிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை.[109] பெரியபுராண வசனத்தை எழுதி நாவலரவர்கள் 1852இலே பதிப்பித்துவிட்டார். திருக்கோவையாருரைப் பதிப்பில் (1860) இடம் பெறும் பிரகடனப் பத்திரிகையில் 'இப்போது அச்சிற் பதிப்பிக்கிற புத்தகங்கள்' பட்டியலில் 'பெரியபுராணம் சூசனங்களோடு' என்ற குறிப்புண்டு. ஆயினும் அப்பதிப்பு வெளி வந்ததாகத் தெரியவில்லை. அப்பொழுது அச்சிடப்பட்டுக் கொண்டிருந்தவை சூசனப் பகுதிகள் போலும்.

குகை நமச்சிவாயரின் அருணைகிரியந்தாதி, தருமை யாதீன கர்த்தர் சிவஞான தேசிகரின் காசித் துண்டி விநாயகர் திருவருட்பா, காசிக் கதிர்காம வேலர் திருவருட்பா, துறைசை சிவஞான முனிவரின் சிவதத்துவ விவேகம், நல்லாதனாரின் திரிகடுகம் என்பனவற்றைச் சதாசிவப்பிள்ளை அச்சிட்டுள்ளார்.[110] நமச்சிவாய மாலை பதிப்பித்தவரும் அவரே போலும்.[111] சதாசிவப் பிள்ளை பேரால் 1874இல் வெளிவந்த திருக்கருவை வெண்பா வந்தாதி ஒன்று அறியப் படுகின்றது.[112]

## சூடாமணிப் பதிப்பு

> "இவர் (ஆறுமுகநாவலர்) அச்சிட்ட புத்தகங்களுள் பாரதம், சூடாமணி நிகண்டு என்னுமிரண்டனையும் நாம் மிகவும் மெச்சிக் கொள்ள வேண்டும்"

---

109. த. கைலாசபிள்ளை, ஆறுமுக நாவலர் சரித்திரம், பக். 15-16.
110. அ. சதாசிவம்பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 105, 137-138, 140, 195.
111. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 2, (1961) பக். 230.
112. மேற்படி நூல், பகுதி 2 (1962) பக். 563.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர் கைலாச பிள்ளை.[113] சூடாமணி நிகண்டில் அறியாமையால் ஏற்பட்ட சொற் பிழைகளைத் திருத்தி நாவலரவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்தியமையாலேயே கைலாசபிள்ளை இவ்வாறு கூறினார் என்பது அவர் தரும் விளக்கத்தாற் புலனாகும். 'பரிகா முத்திரை' சைவ சமய நெறியுரையிற் 'பரிகார முத்திரை' என்று எழுதப் பட்டிருக்கிறது என்ற ஐயத்தைக் கேட்டவுடன் பிழைக்கஞ் சியவரும்,[114] றோசாப்பூவில் மிக்க பிரீதியுடையவரா யிருந்தும், புட்பவிதி முதலிய நூல்களில் இல்லாமையினாலே, பூசைக்குரிய புட்பங்களிலே சைவ வினா விடையிற் சேர்க்கா தவரும்[115] ஆகிய நாவலரவர்களின் சூடாமணி யுரைப் பதிப்பைப் பற்றிக் கைலாச பிள்ளை காலத்திலேயே பல கண்டனங்கள் வெளி வந்துள்ளன. ஆயினும் கைலாச பிள்ளை தந்த சரித்திரத்திலே அவை பற்றிய குறிப்போ கண்டனங்களுக்குப் பதிலோ காணப்படவில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் கூறிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்கூறிலும் வேளாளர் மூன் றாம் வருணத்தார் என்றும் நான்காம் வருணத்தார் என் றும் இரு சாரார் வாதிட்டனர். வேளாளர் மூன்றாம் வருணத்தார் என்பதை விளக்கு முகமாகச் "சென்னை அக்கவுண்டாண்டு ஜெனரலாபீசு பென்ஷன் சூப்பரிண்டெண் டாண்டு" கூடலூர் கனகசபைப் பிள்ளை வருண சிந்தா மணி என்ற நூலொன்றினை எழுதிச் சார்வரி ௵, தை மீ (1901) வெளியிட்டார்.

வருண சிந்தாமணியிலே, 'நூற்புரட்டுகள்' என்னும் பகுதியிலே (பக். 505–523), 'நிகண்டில் புரட்டு' என்னும்

---

113. ஆறுமுக நாவலர் சரித்திரம், 1919, பக். 65.
114. த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 66-67.
115. மேற்படி நூல், பக். 65.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவிலே (பக். 516 முதல்), சூடாமணி நிகண்டிலே ஆறுமுகநாவலர் இரண்டாவது மக்கட்பெயர்த் தொகுதியில் மண்டலபுருடர் இயற்றிய மூன்று விருத்தங்களை நீக்கிப் புதிதாக இரு விருத்தங்களைச் சேர்த்துக் கடைக் காப்புச் செய்யுளைப் புரட்டித் தம் பிந்திய பதிப்புகளை வெளியிட்டுள்ளார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. நாவலரவர்களின் முதற் பதிப்பிலே முன் கூறியவாறு நிகழ வில்லை என்பர் கனகசபைப் பிள்ளை. பிரபவ ஞூ, ஆனி மீ (1867) ஆறுமுகநாவலர் பெயரால் வெளிவந்த சூடாமணி நிகண்டுப் பதிப்பிலே வருணசிந்தாமணி கூறும் மாற்றங்கள் காணப்படுகின்றன. கனகசபைப் பிள்ளை பன்னிரண்டாவது பலபெயர்க் கூட்டத்தொரு பெயர்த் தொகுதியில் ஒரு விருத் தத்தை (செய்யுள் 54) மாற்றியும் நாவலரவர்கள் அச்சிட்ட தாகவும் எழுதியுள்ளார். பதினொராவது, பன்னிரண்டா வது தொகுதிகள் நாவலரவர்களின் சூடாமணியுரைப் பதிப் பில் அவர் காலத்திலே சேர்க்கப்பட்டிருந்தன என்று துணிவதற்கில்லை. அவை கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளை காலத்திற் சேர்க்கப் பெற்றன போலும்.

கனகசபைப்பிள்ளை,

> ‘‘இவர் நெடுநாள் சத்தியவந்தரென்று பெயரெடுத்துக் கடைசிக் காலத்தில் இத் தீய செய்கைக்கு உடன் படலாமா! ‘உள்ளியர் தெள்ளியராயினு மூழ்வினை மெள்ள நுழைந்துவிடும்’ என்ற பழமொழியும் பொய் யாகாதென்பதைப் பிரத்தியட்சமாகக் கண்டோம்’’

என்று ஆறுமுக நாவலரைக் கிண்டலாகக் கண்டித்திருக் கிறார். மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை குரு நிந்தை பொறா உள்ளத்தராய் மதுரையிலே மீனாட்சி யம்மன் திருக்கல்யாண மண்டபத்திலே வேளாளர் நான் காம் வருணத்தவர் எனும் நாவலரவர்களின் கோட்பாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரித்துப் பிரசங்கஞ் செய்தார். வருணசிந்தாமணி இரண்டாம் பதிப்புக் கண்டது. இரண்டாம் பதிப்பில் இடம் பெறும் விவகார காண்டம் எனும் பகுதி முழுவதும் யாழ்ப் பாணத்தாரை வைத பாகமாகும். வேளாளர் சிறப்புக் கூறப் புறப்பட்ட வருணசிந்தாமணி வசை நூலாய் முடிந்து விட்டது. இவ்விருத்தாந்தத்தைக் கா. சுப்பிரமணிய பிள்ளை சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும் பெரியபுராண ஆராய்ச்சியும் என்ற நூலிலே மீண்டும் உயிர்ப்பித்தனர்.[116] அந்நூலின் முதற் பதிப்பு 1928இலே வெளி வந்தது. ஆறுமுகநாவலரின் சூடாமணி யுரையை இவரைக் கொண்டு சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர் யுவ ஷு, சித்திரை மீ (1935) வெளியிட் டுள்ளனர்!

ஜீவபந்து ரி. எஸ். ஸ்ரீபால் என்பவர்,

> " யாழ்ப்பாணம் திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் பிற் காலத்தில் தோன்றியதும், தத்துவங் காணாததுமாகிய தம் சமயமாகிய சைவ சமயத்தைச் சூடாமணி நிகண் டில் நுழைக்க வேண்டி, தாம் சூடாமணி நிகண்டை அச்சிடுவதாகப் பறை சாற்றிக் கலைக்கொலை செய் துள்ள கோரச்செயலை நேர்மை உள்ளம் படைத்த எந்தத் தமிழரும் வருந்தாமலிருக்க மாட்டார். அவர் செயலைப் பாருங்கள் "

என்று கூறிப்[117] பன்னிரண்டாவது பலபெயர்க் கூட்டத் தொரு பெயர்த் தொகுதியிலிருந்து தம் கூற்றுக்கு உதார ணங்கள் தந்துள்ளார். பன்னிரண்டாவது தொகுதி விருத் தாந்தம் முன்பு கூறப்பட்டது.

---

116. ' வேளாள ராராய்ச்சி ' காண்க.
117. தமிழகத்தில் ஜைனம், 1975, பக். 38-39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப்பாயிரம்

ஆறுமுகநாவலர் தம் செலவிலே பதிப்பித்த நூல்களிலே பெரியபுராண வசனத்திற்கு நீர்வேலி சி. சங்கர பண்டிதரின் சிறப்புப்பாயிரம் உண்டு. தம்மிலும் ஆறு வயதிற்கு மேல் இளையவரான சங்கர நமச்சிவாயப் புலவரிடமிருந்து நாவலரவர்கள் சிறப்புப்பாயிரம் பெற்றமைக்கு, அவர் தம்மோடு தோள்கொடுத்து நின்று சைவப் பிரசாரணம் செய்தமையே முக்கிய காரணமாதல் வேண்டும். ஏனைய நூல்களிலே, பிறர் பொருளுதவியுடன் அவர் பதிப்பித்த நூல்களிலே சிறப்புப்பாயிரம் காணப்படுகின்றது. திருக்கோவையாருரை, திருக்குறளுரை, தருக்கசங்கிரக வுரை, சேதுபுராணம், பதினொராம் திருமுறை சான்று கூறுவன. இவற்றிலே முன்னைய நான்கும் இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுச்சாமித் தேவர் வேண்டுகோட்படி பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெற்றவை ; பின்னையது புத்தூர் இ. வேங்கடாசலச் செட்டியார் வேண்டுகோட்படி பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெற்றது. இவ்விருவர் வேண்டுகோள்களுக்கும், திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் வேண்டுகோளுக்கும் வேறுபாடு உண்டு போலும். தேசிக சுவாமிகள் வேண்டுகோட்படி பதிப்பித்த இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பியச் சூத்திர விருத்தி எனும் தொகுப்பிலே புதிய சிறப்புப்பாயிரம் இல்லை. இச் சிறப்புப்பாயிரங்கள் நூற் பதிப்புக்குக் காரணமானவர்களுக்குத் தக்ஷணை ; குறுக்கை வித்துவான் குமார சுவாமிப்பிள்ளை, மதுரை ஆறுமுகப்பிள்ளை பாடியவை சிறந்த எடுத்துக்காட்டு. ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகளும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் அவர் மாணாக்கரும் நாவலரவர்களை நன்கு அறிந்தவர்களாதலாலே, தக்ஷணைகள், நாவலர் தோத்திரங்களாகவும் தோன்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை நாவலரவர்களுடன் நெருங்கிய நட்புரிமை பாராட்டி வந்துள்ளார்; அந்நட்புரிமையால் நாவலரவர்கள் மீது பெருமதிப்பு வைத்திருந்தனர்; சிறப்புப் பாயிரங்கள் சான்று. அவர் நாவலரவர்களின் பதிப்புகளாம் திருக்கோவையாருரை, திருக்குறளுரை. தருக்கசங்கிரகவுரை என்பனவற்றிற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார்.

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை 1858க்குப் பின்பு திருவாவடுதுறை யாதீனத்திலே வித்துவானாக விளங்கியவர்; நாவலரவர்களின் திருக்கோவையாருரைப் பதிப்பிலே (ரௌத்திரி ஷு, ஐப்பசி மீ — (1860) திரிசிரபுரம், ம—ா—ா—ஸ்ரீ— மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்; ஆயினும் தருக்க சங்கிரக (துன்மதி ஷு, வைகாகி மீ — 1861) உரைப்பதிப்பிலே மகாவித்துவானாகிய ம—ா—ா—ஸ்ரீ திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். வேறுபட்ட முறையில் அடைகள் அமைந்த போதும் ஈரிடத்தும் ‘ மகாவித்துவான் ’ என்று குறிப்பிடப் பட்டுள்ளமை நோக்கத் தக்கது. பூவிருந்தவல்லி சு. கன்னியப்ப முதலியாரும் புங்கத்தூர் கந்தசாமி முதலியாரும் விபவ ஷு, ஐப்பசி மீ (1868) பதிப்பித்த கல்லாடத்தினைப் பரிசோதித்தவர் ‘ திரிசிரபுரம் மஹா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை ’ எனக் குறிக்கப்படுகின்றாரேயொழிய, திருவாவடுதுறை யாதீன மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்று குறிப்பிடப்படவில்லை. திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரின் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரைப் பதிப்பிலே (விபவ ஷு, கார்த்திகை மீ — 1868) அவர் தம் ஆசிரியர் ‘ திரிசிரபுரம் மஹா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்று அழைக்கப்படுகின்றாரேயொழிய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாவடுதுறை யாதீன மஹா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்று அழைக்கப்படவில்லை. அதவத் தூரிலே அவதரித்த மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் குடும்பத் தினர் பின்பு திரிசிரபுரத்தை வாழிடமாகக் கொண்ட திலிருந்து அவ்வூரையே தமதூராகக் கொண்டமையால் அவர் பெயருடன் திரிசிரபுரமே சேர்த்து வழங்கப்பட்டது. திருவாவடுதுறை யாதீன வித்துவான் ஆகிவிட்ட பின்பும் வழக்கம் மாறிவிடவில்லை. எனவே திரிசிரபுரத்திற்குப் பதிலாகத் திருவாவடுதுறை யாதீனம் என்று வழங்காமை யில் 1860இலே மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருவாவடு துறை யாதீன வித்துவானாக இருக்கவில்லை என்ற வாதம் விதண்டா வாதம். ஆறுமுகநாவலர் மித்தியா வாத நிரசனத்திலேயே (1876) 'திருவாவடுதுறை யாதீனத்து' என்று குறிப்பிடுவதால் அப்பொழுது தான் ஆதீன வித்து வான் ஆனார் எனாலமே! மித்தியாவாத நிரசனம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை மறைந்த மறுநாள் வெளியிடப் பெற்றது. மேலும், மீனாட்சிசுந்தரம் பிள்ளை சிறப்புற்ற காலத்திலே, ஸ்ரீலஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் சென்னை யிலே திருவாவடுதுறை யாதீன மடத்திலே வாழ்ந்து கொண்டிருந்தனர்.

## செய்யுளாசிரியர்

கனகரத்தின உபாத்தியாயர் நாவலரவர்களுக்குச் செய்யுளியற்றும் ஆற்றல் இருந்தது என்பதையே சுட்டாமல் சரித்திரம் எழுதிவிட்டார். கைலாசபிள்ளை நாவலரவர்கள் பத்தியரூபமாகச் செய்த நூல் ஒன்றும் இல்லையென்றும் அவர் பாடிய தனிச்செய்யுள்கள் பாடும் சக்தி அவருக்கு மிகவும் உண்டென்பதை நன்றாகக் காட்டும் என்றும் கூறு வர்.[118] அவர் நாவலரவர்கள் தனிச் செய்யுள்கள் மட்டு

118. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 58.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றிச் சில மொழிபெயர்ப்புச் செய்யுள்களும் கதிரை யாத்திரை விளக்கம் என்னும் நூலிற் சில செய்யுள்களும் செய்திருப்பதாகக் கூறுவர்.[119] மேலும், அவர் எழுதிய சரித்திரத்திலே சரவண முத்துப் புலவர் மீது பாடிய சரம கவியும் சுப்பிரமணிய பிள்ளை வியோகம் குறித்துப் பாடிய சில செய்யுள்களும் சுட்டப் பெறுவதோடு, ' சீர்பூத்த கருவி நூல் ' எனும் செய்யுளும், நல்லைக் கைலாசபிள்ளையார் மங்கள விருத்தமும் நல்லைக் கந்தசுவாமி வாழி விருத்தமும் எடுத்தாளவும் பெற்றுள்ளன. கைலாசபிள்ளைக்கு முன்பே செல்லையா பிள்ளை நாவலரவர்களின் தனிப்பாமாலை யைத் தொகுத்தளித்துவிட்டனர். அதிலே தனிச்செய்யுள் களுடன் கதிரை யாத்திரை விளக்கத்தில் இடம் பெற்ற நாவலரவர்களின் கீர்த்தனங்களும் சுப்பிரமணிய பிள்ளை இரங்கற் பாமாலையும் இடம் பெற்றிருந்தன. கைலாச பிள்ளை பின்னர் வெளியிட்ட ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டிலே கதிரையாத்திரை விளக்கக் கீர்த்தனைகளையும் சுப்பிரமணிய பிள்ளை இரங்கற் பாமாலையையும் நீக்கித் தனிப் பாமாலை தந்தார்.

நாவலரவர்கள் 1848ஆம் ஆண்டு, செப்தெம்பர் வரை செய்த செய்யுள் முயற்சிகளெனச் சிலவற்றை முன்னர் கூறி னோம். ' சீர்பூத்த கருவிநூல் ' எனும் தனிப்பாட லுக்குப்[120] பாவலர் சரித்திர தீபகத்திலே வேறுபாட முண்டு. இப்பாடலும், நல்லைக் கைலாசபிள்ளையார் மங்கள விருத்தமும் (சீர்கொண்ட) , நல்லைக் கந்தசுவாமி வாழி விருத்தமும் (அருணவிகசித) எப்பொழுது பாடப் பெற்றவை என்பதைத் துணிதற்கில்லை. கைலாசபிள்ளை நல்லைக் கைலாச பிள்ளையார் மங்கள விருத்தத்தினைத்

119. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 60.
120. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 58.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி விருத்தம் என்று கூறியிருக்கவும்[121] தனி நூலாகச் சிலர் மயங்கியுள்ளனர்.

கதிரை யாத்திரை விளக்கம் 1849க்குப் பின் அரங்கேறியது; ஏனெனில், ' ஆறுமுகநாவலன் சொல்லுரும் பதங்கள் ' என்ற குறிப்பு விநாயகமூர்த்திச் செட்டியார் பாடிய சிந்திலேயுண்டு. வண்ணை சி. விநாயகமூர்த்தி செட்டியார் பேராலே நாவலரவர்கள் ஞானக்கும்மி, ஏசுமத பரிகாரம் என்பனவற்றையும் வச்சிரதண்டத்தையும் 1852ஆம், 1853ஆம் ஆண்டளவிலே பதிப்பித்துள்ளார் என்று கருத வைக்கிறார் கனகரத்தின உபாத்தியாயர். செட்டியாரவர்கள் 1876இலே வியோகமடைந்தனர். எனவே 1849 க்கும், 1876 க்கும் இடையே கதிரை யாத்திரை விளக்கம் அரங்கேறியதாதல் வேண்டும். இந் நூலிலே நாவலரவர்கள் பாடிய ஆறு கீர்த்தனங்கள் உள.

பெரியபுராண வசனத்து விநாயக வணக்கம் பரிதாபி ஷூ (1852) பாடப் பெற்றதாகலாம். அராலி சித்தி விநாயகர் விருத்தம் (சீரேறு கருணை), அராலி விசுவநாத சுவாமி விருத்தம் (உலகெலாமாகி), அராலி விசாலாட்சியம்மை விருத்தம் (பொன்பூத்த) எனும் மூன்றும் 1856ஆம் ஆண்டு அராலியிலே கோயிற் பிரதிட்டையின் போது பாடப் பெற்றவை.[122] இவை மூன்றும் தனிப் பாடல்கள்.

செய்யுளியற்றும் வன்மையை அராலிச் சித்திவிநாயகர் விருத்தம் முதலியன காட்டுமெனத் தமிழ்ப் புலவர் சரித்திரத்திலே அ. குமாரசுவாமிப் புலவர் கூறியதைப் பிழை

121. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 58.

122. ச. தனஞ்சயராசசிங்கம், நாவலர் பணிகள், 1969, பக். 89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக விளங்கிக்கொண்டு அதனை நூலாகச் சிலர் கருதி வருகின்றனர். 'மணிகொண்ட' எனும் செய்யுள் 1857ஆம் ஆண்டிலே பாடப்பெற்றதாதல் வேண்டும் என்பதைக் கனக ரத்தின உபாத்தியாயரும் கைலாச பிள்ளையும் தரும் சரித் திரங்கள் மூலம் அறியலாம்.[123] அரிமழம் சுந்தரேசர் மீனாட்சி துதி 1864இலே பாடப்பெற்றன போலும்.[124] யாழ்ப்பாணச் சமயநிலை (1872) எனும் பிரசுரத்திலும் நாவலர் பாடலொன்றுண்டு என்பர்.

கைலாச பிள்ளை பத்தியரூபமாக நாவலரவர்கள் நூலொன்றும் செய்யவில்லை என்று கூறியிருக்கவும், அவர் பதிப்பித்த நெற்கொலு வைரவர் பதிகத்தையே நாவலரவர் கள் மீது சூட்டுவது விந்தையாகும். அதனைப் பாடியவர் உடுப்பிட்டி சி. ஆறுமுகப்பிள்ளை. அவருடைய வேறு நூல் களையும் கைலாசபிள்ளை பதிப்பித்துள்ளார். ' அந்நாளில் அவதரித்த குரவனாரும் ஆறுமுகநாவலன் ' பாடிய புலோலி நகர் ஸ்ரீ பசுபதீசுரப் பெருமானார் திருவூஞ்சல் எனும் நூல் பின்னாளிலே (கீலக ஷ புரட்டாதி மீ) அச்சிடப்பெற்று, மீண்டும் 1969இலே மறு பிரசுரங் கண்டுள்ளது.[125] இவ்வூஞ்சலை நாவலரவர்கள் எப்பொழுது பாடினார் என் பது தெரியவில்லை. தேவகோட்டைத் தலபுராணத்தை யும் நாவலரவர்கள் எப்பொழுது பாடத் தொடங்கினார் என்பது தெரியவில்லை. அப்புராணத்திலே ஐந்நூறு செய் யுள் வரை பாடினரென்றுங் கேள்வி.[126]

---

123. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 40 ; ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 34-35.

124. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம் 1968, பக். 62.

125. க. சொக்கலிங்கம், நல்லைநகர் தந்த நாவலர், 1969, பக். 73-79.

126. அ. சதாசிவம் பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம், 1886, பக். 34.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி. சுப்பிரமணிய பிள்ளை ஸ்ரீமுக ஞூ, சித்திரை மீ", 12ஆம் தேதி வியோகமடைந்தார்.[127] அவர் மீது 1873இலே நாவலரவர்கள் பாடிய இரங்கற் பாமாலை 20 செய்யுளுடைத்து.

" திருச்செந்தில் சந்த விருத்தம் – ஆறுமுகநாவலர் (1875) " என்ற குறிப்பொன்றுண்டு.[128] இதன் தாற் பரியம் விளங்குமாறில்லை.

### வசன ஆசிரியர்

கனகரத்தின உபாத்தியாயர் நாவலரவர்களின் பால பாடம், மூன்றாம் புத்தகம் 1864ஆம் ஆண்டிற்குப் பின்னர் எழுதி அச்சிடப் பெற்றதாக எழுதியுள்ளார்.[129] ஆனால், கைலாசபிள்ளை முதலாம், இரண்டாம், நான்காம் (மூன்றாம் என்றிருத்தல் வேண்டும்) பால பாடங்கள் செய் தது 28ஆம் வயசாகிய சாதாரண ஞூ, என்பர்.[130] அண்டர்சன் பிரபுவுக்கு நாவலரவர்கள் 11–8–1852 தேதி யிட்டுச் சமர்ப்பித்த விண்ணப்பத்திலே மூன்றாம் பால பாடம் விண்ணப்பதாரரின் அச்சியந்திர சாலையில் அச்சிடப் பெற்று, அவர்தம் வித்தியாசாலையில் பயன்படுத்தப்பெற்று வருதல் குறிப்பிடப்பட்டுள்ளது.[131] எனவே கனகரத்தின உபாத்தியாயர் கூற்றுப் பொருந்தாது.

---

127. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 108.
128. ந. சி. கந்தையா பிள்ளை, தமிழ் இலக்கிய அகராதி, 1952, பக். 80.
129. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 71.
130. மு. ரா. அருணாசலக் கவிராயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, முகவுரை, பக். 9.
131. ச. தனஞ்சயராசசிங்கம், நாவலர் பணிகள், 1969, பின்னிணைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் சரித்திர தீபகம் முதற் பகுதியின் (1975) அடிக்குறிப்பிலே,

"நாவலரவர்கள் மூன்று பால பாட நூல்களையும் இரண்டு சைவ வினா விடை நூல்களையும் இயற்றி யுள்ளார். பாலபாடங்கள் யாவும் 1852ஆம் ஆண்டு ஆவணிக்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டு விட்டன என்பது தெளிவாகத் தெரிகின்றது"

என்று கூறப்பட்டுள்ளது.[132] எடுத்துக்கொள்ளப்பெற்ற பாலபாடங்கள் நாவலரவர்களுடையவை என்பதை உணர முடியாத நிலையிலே, கைலாசபிள்ளை, நீர்வேலி சிவப் பிரகாச பண்டிதர் எழுதிய பால பாடங்களை எடுத்து, அவை 1852க்குப் பின்பு எழுந்தவை என்று கூறப்பட்டுள் ளது. தமிழ் ஆராய்ச்சி செல்லும் வழி என்னே! என்னே! வடகோவை வி. வேலுப்பிள்ளையின் பால பாடங்களை மறந்துவிட்டனர் போலும்.

கனகரத்தின உபாத்தியாயர் 1864ஆம் ஆண்டிற்குப் பின் பாலபாடம் மூன்றாம் புத்தகம் எழுதி அச்சிட்ட பின்பு, சேதுபுராணத்தைப் பரிசோதித்து அக்ஷய ஞு, புரட்டாதி மீ (1866) அச்சிடுவதற்கு முன்பு, பெரிய புராணம் சூசனத்தோடும், கந்தபுராணம் திருவிளையாடற் புராணம் வசனரூபமாகவும் அச்சிற் பதிப்பித்துக் கொண்டு வந்தார் என்பர்.[133] சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியா சாலைத் தரும பரிபாலகர், கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளை சாதாரண ஞு, பங்குனி மீ (1911) வெளியிட்ட கந்தபுராண வசனப் பதிப்பிலே,

132. பொ. பூலோக சிங்கம் (பதி.), பாவலர் சரித்திர தீபகம், பகுதி 1, 1975, பக். 158.

133. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 71-72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இன்றைக்கு ஐம்பது வருஷங்களுக்கு முன்னே இக் கந்தபுராண வசனத்தை அசுரகாண்டம் அசுர யாகப் படலம் வரையும் எழுதிச் சஞ்சிகையாக வெளிப்படுத்தினார்கள். எஞ்சிய பாகம் அவர்களால் எழுதப்படாமையால் நான் அதனை நூதனமாக எழுதி, அவர்கள் எழுதியதையும் சேர்த்து அச்சிட்டேன் "

என்று கூறியிருக்கிறார். அவர் கூற்றை ஆதரிப்பதாக அமைந்துள்ளது தருமபரிபாலகர் தி. க. இராசேசுவரனின் மேல்வரும் வசனம்.[134]

" கந்தபுராண வசனம் துன்மதி ஹூ, ஆவணி மீ (1861) சென்னைப் பட்டணம் வாணி நிகேதன அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது "

எனவே நாவலரவர்களின் கந்தபுராண வசனப் பதிப்புப்— பற்றிக் கனகரத்தின உபாத்தியாயர் கூறுவது பொருந்தாது.

கைலாச பிள்ளை, பெரியபுராண வசனம் சூசனம் எழுதி அச்சிட்டது 30ஆம் வயசாகிய பரிதாபி ஹூ (1852) என்பர்.[135] ஆனால் அவருடைய ஆறுமுகநாவலர் சரித்திரம் பிந்திய பதிப்புகளிலே பெரிய புராண வசனம் அச்சிடும் போதே சூசனமும் எழுத ஆரம்பிக்கப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது.[136] கைலாசபிள்ளை கூற்றுகளைத் துணிபுரைகளாகக் கொள்ளாதவிடத்தும், கனகரத்தின உபாத்தியாயர் கூறும் காலத்திற்கு முன்பே நாவலரவர்கள் பெரியபுராண சூசனம் எழுதி அச்சிடத் தொடங்கிவிட்டார்

---

134. இந்துசாதனம், 24-12-1971.

135. மு. ரா. அருணாசலக் கவிராயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, முகவுரை, பக். 9-10.

136. 1955, பக். 73.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கருதத் திருக்கோவையாருரைப் பதிப்பு (1860) இடமளிக்கின்றது. அங்கு இடம் பெறும் பிரகடனப் பத்திரிகையில் ' இப்போது அச்சிற் பதிப்பிக்கிற புத்தகங்கள் ' எனும் பிரிவிலே ' பெரியபுராணம் சூசனங்களோடு ' என்ற குறிப்புண்டு.

கைலாசபிள்ளை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாருக்கு எதிராக நாவலரவர்கள் இரண்டு பத்திரிகைகளை எழுதி வெளியிட்டார் என்பர்.[137] நாவலரவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் (யுவ ஹு, ஆடி மீ – 1875), நல்லூர்க் கந்தசுவாமி கோயில், இரண்டாம் பத்திரிகை (யுவ ஹு, ஆவணி மீ – 1875), மித்தியாவாத நிரசனம் (யுவ ஹு, தை மீ – 1876) எனும் மூன்று கண்டனங்களை நல்லூர்க் கோயிலாருக்கு எதிராக எழுதி வெளியிட்டுள்ளார்.

கைலாசபிள்ளை நாவலரவர்கள் விவிலிய நூலிலுள்ள அசப்பியங்களை எடுத்துத் திரட்டி விவிலிய குற்சிதம் என்னும் பெயர் கொடுத்துச் செந்திநாதையரைக் கொண்டு அச்சிட்டு வெளியிட்டதாகக் கூறுவர்.[138] ஆயினும், காசிவாசி சி. செந்திநாதையர், தாம் எழுதிய விவிலிய குற்சித கண்டனதிகாரத்திலே விவிலிய குற்சிதத்தைத் தாமே எழுதியதாகக் கூறியுள்ளார். செந்திநாதையர் விவிலிய குற்சிதக் குறிப்பும் எழுதியவராவர்.

நாவலரவர்கள் முதலிரு பாலபாடங்களையும் 1850ஆம் ஆண்டிலே அச்சிட்டார் என்பது கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தாற் பெறப்படுவதாகும்.[139]

---

137. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 76-77.

138. மேற்படி நூல், பக். 55.

139. 1968, பக். 31-32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபிள்ளை அவை செய்தது சாதாரண ஸு என்பர்.[140] அண்டர்சன் பிரபுவுக்கு நாவலரவர்கள் 11–8–1852இலே சமர்ப்பித்த விண்ணப்பத்திலும் இவை அச்சிடப்பெற்று வழங்கிவருதல் கூறப்பட்டுள்ளது.[141] எனவே கனகரத்தின உபாத்தியாயர் முதலிரு பாலபாடங்களின் பதிப்புக் கால வரையறை பற்றிக் கூறுவது சரியெனவே படுகின்றது. திருத் தொண்டர் புராணம் (பெரியபுராண வசனம்) 1852இலே பதிப்பிக்கப் பெற்றது என்று கருத வைக்கிறார் கனக ரத்தின உபாத்தியாயர்;[142] கைலாசபிள்ளை பரிதாபி ஸு என்பர்.[143] அது பரிதாபி ஸு. சித்திரை மீ (1852) யாழ்ப்பாணம் வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச் சிடப் பெற்றது. சுப்பிரபோதம் 1853இற் பதிப்பிக்கப் பெற்றது என்ற கருத்து கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தில் உண்டு.[144] கைலாசபிள்ளை சுப்பிரபோதம் முதலிய துண்டுப் புத்தகங்கள் எழுதி அச்சிட்டது 31ஆம் வயசாகிய பிரமாதீச ஸு என்பர்.[145] அதுவும் சரியே யாகும். சைவதூஷண பரிகாரம், யாழ்ப்பாணச் சமய நிலை என்பன முறையே ஆனந்த ஸு, ஆங்கீரச ஸு என்

---

140. மு. ரா. அருணாசலக் கவிராயர், யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, முகவுரை, பக். 9.

141. ச. தனஞ்சயராச சிங்கம், நாவலர் பணிகள், 1969, பின்னிணைப்பு.

142. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 32-33.

143. மு. ரா. அருணாசலக் கவிராயர், மேற்படி நூல், 1934, முகவுரை, பக். 9-10.

144. 1968, பக். 33-36.

145. மு. ரா. அருணாசலக் கவிராயர், மேற்படி நூல், 1934, முகவுரை, பக். 10 ; பிரமாதி ஸு என்பது அச்சுப் பிழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனவற்றிலே பதிப்பிக்கப்பெற்றன என்னும் உபாத்தியாயரவர்களின் கூற்றுகள் உண்மை. இவை முறையே ஆனந்த ஸு, வைகாசி மீ (1854), ஆங்கீரச ஸு, ஐப்பசி மீ (1874) பதிப்பிக்கப் பெற்றன.

சைவ சமய சாரம் எனும் துண்டுப் பிரசுரத்தையும் முதலிரு அநுட்டான விதிகளையும் கனகரத்தின உபாத்தியாயர் கூறவில்லை; அவர் மூன்றாம் அநுட்டான விதி முதலிய நூல்களைப் புதிதாய் யுவ தாது ஈசுர வெகுதானிய வருஷங்களிலே (1875–1879) எழுதிக் கொண்டிருந்ததைக் குறிப்பிட்டுள்ளார்.[146] கைலாசபிள்ளை சைவ சமய சாரத்தையும் மூன்று அநுட்டான விதிகளையும் குறிப்பிடுவதோடு மூன்றாம் அநுட்டான விதி அச்சிடப் பெறாமல் இருப்பதையும் குறிப்பிடுவர்.[147] அநுட்டான விதிக்கு நித்திய கரும விதி என்பது மாற்றுப் பெயர்.

கைலாச பிள்ளை சிவாலய தரிசன விதி எழுதியது 29ஆம் வயசாகிய விரோதி கிருது ஸு என்பர்.[148] சிவாலய தரிசன விதிப் பதிப்பொன்று சென்னை வாணி நிகேதன வச்சுக் கூடத்திலே துன்மதி ஸு, ஆனி மீ (1861) அச்சிடப் பெற்றுள்ளது.

சைவ வினா விடை முதற் புத்தகம் சென்னை வர்த்தமான தரங்கிணீ சாகையச்சுக் கூடத்திலே 1870இலே பதிப்பிக்கப் பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது;[149]

---

146. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 112.

147. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 63 ; 1955, பக். 77.

148. மு. ரா. அருணாசலக் கவிராயர், மேற்படி நூல், 1934, முகவுரை, பக். 9.

149. தமிழ் நூல விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 1 (1961) பக். 110.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை வித்தியாநுபாலனயந்திரசாலையில் ஆங்கீரச ஹூ, பங்குனி மீ (1873) சைவ வினா விடை முதற் புத்தகம் அச்சிடப் பெற்றது.

சென்னை வித்தியாநுபாலன யந்திர சாலையிலிருந்து 1874ஆம் ஆண்டிலே " இலங்கைப் பூமி சாத்திரம் " எனும் பதிப்பொன்று வெளிப்போந்தது. இப்பிரசுரத்தின் மேலட்டையிலோ அல்லது உள்ளட்டையிலோ நூலாசிரியர், பதிப்பாசிரியர் ஆகியோர் பற்றிய விவரங்கள் இடம்பெற வில்லை.

ஆறுமுக நாவலரின் இலக்கணச் சுருக்கம் சென்னை வித்தியாநுபாலன யந்திர சாலையிற் பவ ஹூ, கார்த்திகை மீ (1874) பதிப்பிக்கப்பெற்றது. 1873இலே நாவலரவர்கள் இலக்கணச் சுருக்கத்தைப் புதியதாகச் செய்து கொண்டிருந் தார் என்று கனகரத்தின உபாத்தியாயர் கூறல் கவனிக்கத் தக்கது.[150]

சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையிலே இலக் கண வினாவிடை யுவ ஹூ, புரட்டாதி மீ (1875) மும், சைவ வினாவிடை இரண்டாம் புத்தகம் யுவ ஹூ, ஐப்பசி மீ (1875) மும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் சைவ வினா விடையை 1873இலே நாவலரவர்கள் புதிதாகச் செய்து கொண்டிருந்தார் என்று கனகரத்தின உபாத்தி யாயர் கூறியுள்ளார்.[151]

கனகரத்தின உபாத்தியாயர் தந்த சரித்திரத்தின் பட்டியலில் இடம்பெறும் சிதம்பர மான்மியம் அச்சிடப் பெற்றுள்ளது. ஆயினும், முதன் முதலில் அவ்வசன நூல்

150. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 109.

151. மேற்படி நூல், பக். 109.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுது அச்சிடப்பெற்றது என்பதை அறிய முடிய வில்லை. நாவலரவர்கள் விநாயகமூர்த்திச் செட்டியார் பேரால் வெளிப்படுத்திய வச்சிரதண்டம் எனும் கிறித்தவ கண்டனம் 1853ஆம் ஆண்டிலே அச்சிடப்பெற்றது என்று கருத வைக்கிறார் கனகரத்தின உபாத்தியாயர்.[152] உண்மை பொய்ம்மை தெரியவில்லை. பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை 1854இலே வெளிவந்த வச்சிரதண்டப் பதிப்பினைக் குறிப்பிட்டுள்ளார்.[153]

கனகரத்தின உபாத்தியாயர் திருவிளையாடற்புராணத்தை நாவலரவர்கள் வசனரூபமாக அச்சிற் பதிப்பித்துக் கொண்டு வந்தது 1864ஆம் ஆண்டுக்குப் பின்பும் சேது புராணத்தை அக்ஷய ஹு, புரட்டாதி மீ (1866) அச்சிடுவதற்கு முன்பும் என்று கூறினார்.[154] அவர் கூற்றை ஆதரிக்கவோ மறுக்கவோ முடியவில்லை. சதாசிவப்பிள்ளை சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையிலே 1895இலே நாவலரவர்கள் எழுதிய திருவிளையாடற்புராண வசனத்தை அச்சிட்டுள்ளார் எனத் தெரிகிறது.[155] இப் பதிப்பு முதற் பதிப்போ அல்லது வேறொரு பதிப்போ என்று துணிய முடியவில்லை. வண்ணை சி. சுவாமிநாத பண்டிதர் தமது சைவ வித்தியாநுபாலன யந்திர சாலையிற் சாதாரண ஹு, புரட்டாதி மீ (1910) த. கைலாச பிள்ளையால் முற்றுவிக்கப்பெற்ற திருவிளையாடற் புராண வசனத்தைப் பதிப்பித்தனர்.

---

152. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 33-34.

153. K. Kanapathipillai, Tamil Publications in Ceylon. *University of Ceylon Review,* 16, 1/2 (1958), p. 12.

154. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 71-72.

155. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 2 (1962) பக். 551.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாச பிள்ளை தந்த சரித்திரத்திலே 'போலியருட்பா மறுப்பு' நாவலரவர்களால் எழுதப் பெற்று, மாவண்டூர் தியாகேச முதலியாரால் வெளியிடப்பெற்றது என்ற குறிப்புண்டு.[156] சுக்கில ஞூ, வைகாசி மீ (1869) வெளிவந்த 'போலியருட்பா'விலே, இஃது மாவண்டூர் தியாகேச முதலியாரால் இயற்றி, சென்ன பட்டணம் தத்துவபோதினி யச்சுக் கூடத்தில் கி. திருவேங்கட முதலியாரால் அச்சடுக்கிப் பதிக்கப்பட்டு, திருவூர் கந்த சுவாமி முதலியாரால் பெருமா முதலி தெரு உ.கூ—ம் இலக்க வீட்டில் வெளிப்படுத்தப்பட்டது'' என்று கூறப்பட்டுள்ளது.

ஆறுமுகநாவலரின் பெரியபுராண வசனத்தை ஊ. புஷ்பரதச் செட்டியாரும் வேறு சிலரும் நாவலரவர்களின் பெயரின்றியே பதிப்பித்துள்ளனர். புஷ்பரதச் செட்டியார் பதிப்பு 1864ஆம் ஆண்டிலே வெளிவந்துள்ளது. சதாசிவப் பிள்ளை 1891ஆம் ஆண்டிலே பெரியபுராண வசனத்திலுள்ள இலைமலிந்த சருக்கம் தொடர்பான கதைகளை 'பெரியபுராண வாசகம்' என்று வெளியிட்டுள்ளார்.[157]

ஆறுமுகநாவலர் பத்திரிகையில் எழுதிய சைவசமயம், சைவசமயி, அநாசாரம், திருக்கோயிற் குற்றங்கள் என்பன வெகுதானிய ஞூ, ஐப்பசி மீ (1878) தொகுப்பாக வெளியிடப் பெற்றுள்ளன.

ஆறுமுகநாவலர் பற்றிய சரித்திரங்களிற் கூறப்பெறா சில நூல்களும் ஆங்காங்கே பேசப்பட்டுள்ளன. '' திருவாசக பூசாவிதி — ஆறுமுகநாவலர் (சாமிநாத பண்டிதர்

---

156. 1919, பக். 72.

157. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 2 (1962), பக். 499.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலவங்க) '' என்ற குறிப்பும், '' வசவ புராணம் – (ஆறு முகநாவலர், 1873) '' என்ற குறிப்பும் காணப்படுகின் றன.[158] குறிப்புகள் அமைந்திருக்கும் முறையில், நாவ லரவர்கள் முன்னையதற்கு ஆசிரியர் என்றும் பின்னை யதற்குப் பதிப்பாசிரியர் என்றும் கொள்ளவேண்டியிருக் கிறது. வேறொருவர்,

'' யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர் கள் எழுதிய சாதன சதுஷ்டய தர்ப்பணம் என்னும் சிறு நூலுக்கு இவரும் இவரது ஆசிரியர் சபாபதி முதலி யாரும் சேர்ந்து சாதன சதுஷ்டய தர்ப்பண வச்சிர சூசிகா என்ற கண்டன நூலும் வெளியிட்டனரென் பர் ''

என்றுரைத்துள்ளார்.[159] திருவாசக பூசாவிதி, சாதன சதுஷ்டய தர்ப்பணம், வசவ புராண பதிப்பு என்பன பற்றிய உண்மை பொய்ம்மை தெரியவில்லை.

நீதிவெண்பாவுக்கு ஆறுமுகநாவலர் உரை இயற்றி யுள்ளார் என்ற கூற்றுக்கு ஆதாரம் இல்லை.[160] வேறொரு வர் ' கிறிஸ்து மத கண்டனத் திரட்டு ' என்ற தொகுதியி லுள்ள பல நூல்களை நாவலரவர்களின் தலையிலே சுமத்தி யுள்ளார்.[161] அவற்றிலே விவிலிய குற்சித கண்டனதிக்காரம், சிவனுந்தேவனா என்னுந் தீயநாவுக்கு ஆப்பு, இந்து

158. ந. சி. கந்தையா பிள்ளை, தமிழ் இலக்கிய அகராதி, 1952, பக். 89, 138.

159. வித்வான் ந. சுப்ரமண்யன், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞன்), 1950, பக்.22.

160. மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், 1968, பக். 458.

161. வி. செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, 1957, பக். 97.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயபேரிகை, வஜ்ரடங்கம் என்பன காசி வாசி செந்தி நாதையர் எழுதியவை ; ஏனையவை யாரெழுதியவை என்பது தெரியவில்லை. ஆயினும் அவற்றுக்கு நாவலர் முத்திரை இட ஆதாரமில்லை.

கனகரத்தின உபாத்தியாயர் நாவலரவர்கள் *1875*க்கும் *1879*க்கும் இடையிலே சிவபூசாவிதி, குரு சிஷ்யக் கிரமம், பூசைக்கிடம் பண்ணும் விதி, சிராத்த விதி, தருப்பண விதி, போசன விதி முதலியவற்றையும் அகராதிகளையும் புதிதாய் எழுதிக் கொண்டிருந்தார் என்பர்.[162] இவற்றிலே குருசிஷ்யக் கிரமம் எழுதி முடிக்கப் பெற்றிருந்தது என்று அவர்தம் சரித்திர நூலின் ஈற்றில் இடம் பெறும் பட்டியலாற் புலனாகும்.

---

*162.* ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், *1968*, பக். *112*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. ஆறுமுகநாவலரும் ஆத்திசூடியும்

'' அறஞ் செய விரும்பு '' என்று சிறுவர்களுக்குப் பாடஞ்சொல்லி ஆரம்பித்து வைக்கும் மரபொன்று அண்மைக் காலம் வரை இருந்துவந்தது. அம்மரபு '' படம் பார் ; பார் படம் '' என்று தேய்ந்த வரலாறு விசனிக்கத் தக்கது.

அகர வரிசையில் ஆர்வமேற்படுத்தவும், மனனம் செய்யும் பழக்கத்தினை விருத்தி செய்யவும் ஆத்திசூடியிலே தொடங்கிய முறை வழிவகுத்தது ; அம்முறை வெற்றியளித்ததையும் முந்திய பரம்பரையினர் உணர்வர்.

ஆத்திசூடியகவல், ஆத்திசூடிச் சிந்து, ஆத்திசூடித் திறவுகோல், ஆத்திசூடி புராணம், ஆத்திசூடி வெண்பா, புதிய ஆத்திசூடி முதலான நூல்கள் ஆத்திசூடியின் பெயர் தாங்கி, அதன் செல்வாக்கிற்குச் சான்று பகர்ந்து நிற்கின்றன.

ஆத்திசூடியின் சூத்திரப் பொருளை விளக்கும் முகமாக ஆத்திசூடி வெண்பா என்ற பெயரிலே இரு நூல்கள் எழுந்தன. இவற்றிலே ஒன்றன் ஆசிரியர் இராம பாரதி ; ஏனையதின் ஆசிரியர் இரட்டணை அசலாம்பிகை அம்மையார். இராம பாரதியின் நூலுக்குச் செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகம் சேர்வை உரையுண்டு. இவ்வாத்திசூடி வெண்பா கூறும் நிகழ்ச்சிகள் பலவற்றிற்குரிய கதைகளை நல்லூர் வே. கனகசபாபதியையர், சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், தெல்லிப்பழை இ. பாலசுப்பிரமணியையர் ஆகியோரைக் கொண்டு எழுதுவித்து, தெல்லிப்பழை இ. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் பரிசோதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன், கொக்குவில் இ. சிவராமலிங்கையர் சோதிடப்பிர காச யந்திர சாலையிற் பிலவ ஌ு, ஆடி ௴ (1901) பதிப் பித்துள்ளார். ஆத்திசூடிச் சூத்திர விளக்கமாக, நவீன முறையிலே, தெ. பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், கடலூர் பலராமையர் முதல் நா. மகேசன் ஈறாகப் பலர் கதை களை எழுதியுள்ளனர்.

ஆத்திசூடிக்கு முகவை இ. இராமாநுசக் கவிராயர், திருத்தணிகை க. சரவணப் பெருமாளையர் என்பவர்கள் ஆறுமுகநாவலருக்கு முன்பு உரையெழுதியிருக்கிறார்கள் ; ஆங்கில விளக்கத்துடன் ஜே. சுக்தென் பாதிரியார் [Rev. J. Judgen] ஆத்திசூடியைப் பதிப்பித்துள்ளார் ; நாவ லர் அவர்களுக்குப் பின்பு கா. பச்சையப்ப முதலியார், அரியூர் எஸ். சாமிநாதையர், காஞ்சிபுரம் மகா வித்துவான் இராமசாமி நாயுடு, ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலி யோர் உரை கண்டுள்ளனர். காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் 1930இலே ஆத்திசூடியையும் கொன்றை வேந் தனையும் பழைய உரைகளுடனும் புதிய உரையுடனும் பதிப்பித்துள்ளார். மாகறல் கார்த்திகேய முதலியார் ஆத்தி சூடி முதற் சூத்திர விருத்தியுரை கண்டுள்ளார்.

ஆறுமுகநாவலர் பால பாடம் முதற் புத்தகத்தின் இறுதியில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்பனவற்றின் மூலத்தையும் இரண்டாம் புத்தகத்திலே அவற்றின் உரை களையும் எழுதிச் சேர்த்து அச்சிட்டனர் என்பர் வண்ணை வே. கனகரத்தின உபாத்தியாயர் ;[1] பின்வந்த பதிப்பு களிலே மூலங்களும் உரைகளும் இரண்டாம் புத்தகத்திலே காணப்படுகின்றன.

---

1. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிரு பால பாடங்களும் நாவலரவர்களால் 1850ஆம் ஆண்டிலே அச்சிடப் பெற்றன என்று கருத வைக்கிறார் கனகரத்தின உபாத்தியாயர்.[2] இவை செய்தது 28ஆம் வயசாகிய சாதாரண ஞூ என்பர் கைலாச பிள்ளை[3]. அண்டர்சன் பிரபுவுக்கு 11–8–1852இலே நாவலரவர்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்திலே இவை விண்ணப்பதாரரின் அச்சியந்திர சாலையில் அச்சிடப் பெற்று, அவர்தம் வித்தியாசாலையில் வழங்கப்பட்டு வருதல் குறிப்பிடப்பட்டுள்ளது.[4]

"எவ்வளவோ காலமாகப் பற்பலராலே பற்பல விதமாக அருத்தம் பண்ணப்பட்டு, அநேகருக்கு இதுதான் பொருளோ, அதுதான் பொருளோ என்று சந்தேகமுறக் கிடந்தவைகளாகிய 'அஃகஞ் சுருக்கேல்' முதலியவைகளின் பொருள் மிக எளிதில் விளங்கக் கிடந்தன"

என்று நாவலரவர்களின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் உரையியல்பு பற்றிக் கனகரத்தின உபாத்தியாயர் தாம் எழுதிய சரித்திரத்திலே கூறுவர்[5]. ஆயினும், நாவலரவர்களின் பாடத்திலும் உரையிலும் சிற்சில இடங்களிலே சந்தேகங்கள் இல்லாமலில்லை. முந்நீர்ப் பள்ளம் சி. பூரணலிங்கம் பிள்ளை 1908ஆம் ஆண்டு எழுதிய 'ஔவையார்

---

2. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 31-32.

3. மு. ரா. அருணாசலக் கவிராயர் : யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம், 1934, முகவுரை, பக். 9.

4. ச. தனஞ்சயராச சிங்கம், நாவலர் பணிகள், 1969, பின்னிணைப்பு.

5. 1968, பக். 30-31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமொழியுரை மயக்கம்' எனும் கட்டுரையிலே சந்தேகங்களிற் சில எடுத்துக் காட்டப் பெற்றன.[6]

பொதுவாக, 108 சூத்திரங்களைக் கொள்ளும் ஆத்திசூடிக்கு, நாவலரவர்கள் தந்த பாடங்களை, 107 சூத்திரங்களுக்கு விளக்கம் கூறும் இராம பாரதியின் ஆத்திசூடி வெண்பாவுடன் ஒப்பிடும்போது, மேல் வரும் பதினொரு சூத்திரங்களிலே பாடவேறுபாடு காணப்படுகின்றது :—

| நாவலர் பாடம் | இராமபாரதி பாடம் |
|---|---|
| 14. கண்டொன்று சொல்லேல் | கண்டன சொல்லேல் |
| 23. மன்று பறித்துண்ணேல் | மண் பறித்துண்ணேல் |
| 24. இயல் பலாதன செய்யேல் | இயங்கித் திரியேல் |
| 50. சேரிடமறிந்து சேர் | சேர்விடமறிந்து சேர் |
| 66. நாடொப்பன செய் | நாடேற்பன செய் |
| 72. நேர்படவொழுகு | நேர்கோனெறி நில் |
| 80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ் | புகழ்பட வாழ் |
| 81. பூமி திருத்தியுண் | பூமி விரும்பு |
| 86. போர்த்தொழில் புரியேல் | போற்றடிப் பிரியேல் |
| 93. மெல்லினல்லாடோள் சேர் | மெல்லியாடோள் சேர் |
| 105. வேண்டிவினை செயேல் | வேண்டி வினை செய் |

இருவர் பாடங்களையும் ஒப்பிட்டு நோக்குவது சுவையான விருந்தாகும். முற்கிளந்தனவற்றிலே நாலவரவர்கள் கொண்ட பாடங்கள் எல்லாவிடத்தும் சிறந்தவை என்றோ, பொருத்தமானவை என்றோ கொள்ள முடியுமோ என்பது சிந்திக்கத் தக்கது. ஏழு சூத்திரங்களிலே இருவரும் முற்றாக வேறுபடுதல் கவனிக்கத்தக்கது. இராமாநுசக் கவிராயர், சரவணப் பெருமாளையர் பாடங்களையும்

6. செந்தமிழ், தொகுதி 6, பகுதி 8, பக். 351-355.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்து நோக்கினாலன்றி, பாட ஆராய்ச்சி துணிதற்கரிதாம்.

'அரவமாட்டேல்' (25), 'அறனை மறவேல்' (30) என்ற சூத்திரங்களுக்கு, 'அரவமாடேல்', 'அரனை மறவேல்' என்ற பாடங்கள் சில பதிப்புகளிலே காணப்படுகின்றன. 'பாம்பொடு பழகேல்' (77) என்ற சூத்திரம் இடம் பெறுவதால் 'அரவ மாடேல்' என்பது மிகையாம். 'அரனை மறவேல்' என்பது நகாரத்திடத்திலே வருவதால் 'அரனை மறவேல்' என்பது பிழையாகும். திருமாலுக்கு இடமிருப்பதைக் கண்டவர்கள் (56) சிவனுக்கும் இடமளிக்க ஆசைப்பட்டுவிட்டனர் போலும்.

'கௌவை அகற்று' என்ற சூத்திரம் சில பதிப்புகளிலே உண்டு. கொன்றைவேந்தனிலும் 'கௌவன்னா' இடம் பெறுதல் மனங் கொளத்தக்கது.

சூத்திரப் பாடாந்தரத்தைத் துணிதலரிதாதலால், அதனை விடுத்து, சூத்திரப் பொருளை நோக்குமிடத்து நாவலரவர்கள் கண்ட உரையிலே சிற்சில ஐயங்கள் தோன்றாமல் இல்லை.

(5) '' உடையது விளம்பேல் '' — (உனக்கு) உள்ள பொருளை (நீ பிறர் அறியும்படி) சொல்லாதே என்பது ஆறுமுகநாவலர் உரை. இங்கு 'உடையது' பொருளைச் சுட்டுகின்றது எனல் பொருந்துமோ ? ஆத்திசூடி வெண்பாவில் இராம பாரதி 'இரகசியம்' என்று பொருள் கொண்டிருக்கிறார் ; தன் சிறகிலேதான், தன் பலம் தங்கியிருக்கிறது என்ற இரகசியத்தை இராவணனுக்குக் கூறிச் சடாயு சிறகு வெட்டப்பட்டுப் பூமியிலே விழுந்த கதையை அவர் எடுத்தாண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(13)* " அஃகஞ் சுருக்கேல் " — தானிய விலையை (நீ அதிக லாபத்துக்காகக்) குறையாதே என்பது ஆறுமுக நாவலர் உரை. அதிக லாபம் கருதித் தானிய விலையைக் குறைத்தல் வழக்காறா ? பிறர்கேடு சூழினும், தன் கேடு சூழு மானிடருளரோ ? விலையைக் கூட்டினும் அளவைக் குறைத்தல் தருமமன்று. ' குறையச் சொல்லி நிறைய அள ' என்பது பழமொழி. அளவைக் குறைத்து, தான்ய வியாபாரம் செய்தலாகாது என்பது பொருந்துவதாகத் தெரி கின்றது.

*(31)* " அனந்தலாடேல் " — நித்திரையை (நீ அதிக மாகச் செய்யாதே என்பது ஆறுமுகநாவலர் உரை. இராம பாரதி,

" காலைதுயில் சீலம்போங் கண்டபக லாக்கம்போம்
மாலைதுயி னோயாம் வகையறிந்து — ஞாலமதிற்
புண்ணியகா லந்தெரிந்து புன்னைவன பூபாலா
எண்ணி யனந்தலா டேல் "

என்று கூறுவது கவனிக்கத் தக்கது. ' அதிகமாக ' என்ப தற்குப் பதிலாகக் ' கண்டபடி ' என்ற பொருளை வழங்கு வது பொருத்தமாகலாம். அனந்தல், அனந்தர் என்பன போலிகள். இவற்றிற்கு நித்திரையை விட வேறு பொருளுமுள ; மயக்கம், மனத் தடுமாற்றம், உணர்ச்சி, செருக்கு, மதம் என்பன. இவற்றுடன் இணைத்துச் சூத்திரத்திற்குப் பொருள் காணலாகாதோ ?

*(33)* " காப்பது விரதம் " — (உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவைகளைக்) காப்பாற்றுவதே விரதமாம் என் பது ஆறுமுகநாவலர் உரை. ' ஆறுவது சினம் 'போன்று காக்க வேண்டியது (பேண வேண்டியது) விரதம் என்று கொள்ளல் பொருந்தாதோ ? திருமாலுக்கு அடிமை செய்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் இகழேல் என்று கூறியவர் சமய விரதங்களைப் பேணவேண்டும் என்று கூறலாகாதோ ?

*(34)* " கிழமைப்பட வாழ் " — *(உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கும்)* உரிமைப்படும்படி நீ வாழு என்பது ஆறுமுகநாவலர் உரை. ஏனையோர் உரிமை கொண்டாடும்படி வாழு எனலாகாதோ ? இராம பாரதி ' தண்டமிழ்க்காகக் கம்பருக்குத் தாமடிமை யென்று தொண்டை மண்டலத்தார் ஏட்டில் வரைந்தது போல ' கிழமைப்பட வாழ் என்பர்.

*(43)* " சக்கர நெறி நில் " — *(அரசனுடைய ஆக்ஞையாகிய)* சக்கரம் செல்லும் வழியிலே *(நீ அடங்கி)* நில் என்பது ஆறுமுகநாவலர் உரை. குடிமக்களுக்கு மட்டுமா இச்சூத்திரம் ? அரசனுக்குப் பொருந்தாதோ ? இராம பாரதி தண்டகன் கோல் வளைந்து தண்டகாரண்யம் ஆகிய கதை கூறுவர்.

*(45)* " சித்திரம் பேசேல் " — மெய் போலத் தோன்றும் பொய்மொழிகளை நீ பேசாதே என்பர் ஆறுமுக நாவலர். உள்ளதை உள்ளபடியே சொல் ; உண்மைக்கு விசித்திரம், அலங்காரம் வேண்டியதில்லை. இராம பாரதி சூர்ப்பனகை சீதை பண்பினை இராவணனுக்குக் கூறிக் குலத்தைக் கெடுத்த கதை கூறுவர். பொய் பேசுதலா, தந்திரமாகப் பேசுதலா, அலங்காரமாகப் பேசுதலா ஈண்டு பொருந்தும் ?

*(51)* " சையெனத் திரியேல் " — *(பெரியோர் உன்னைச்)* சீ என்று அருவருக்கும்படி, *(நீ துட்டனாய்த்)* திரியாதே என்பது ஆறுமுகநாவலர் உரை. கொன்றை வேந்தனில் ' சை ' என்பதற்குப் பொருள் ' என்றும், ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பு என்றும் வேறுபடப் பொருள் கூறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. மனித வாழ்வுக்குரிய புருஷார்த்தங்கள் வேறு முள, பொருள் மட்டுமன்று. எனவே " எப்பொழுதும் பொருளே என்று திரியாதே " என்று ஆத்திசூடிச் சூத்திரத் திற்குப் பொருள் கூறலாகாதோ ? ' தக்கோனெனத் திரி ' (54) என்று பின்பு ஆத்திசூடியிற் கூறுகின்றாரே !

(58) " துன்பத்திற் கிடங்கொடேல் " — (தொழில் செய்யும்போது) முயற்சியினாலே வரும் சரீரப் பிரயாசத் தால் ஆகிய துன்பத்துக்கு, (நீ சிறிதாயினும்) இடங் கொடாதே என்பர் ஆறுமுகநாவலர். ' நீயாக, உன்னு டைய தீச்செயலால் துன்பத்தை வருவித்துக் கொள் ளாதே ' என்று கொள்ளலாமன்றோ ? வலிந்துரை செய்ய வேண்டுமோ ? ' துன்பம் வந்துறா வண்ணம் நடந்து கொள் ' என்பது வெளிப்படையன்றோ ?

(63) " தொன்மை மறவேல் " — பழமையாகிய சிநேகத்தை நீ மறந்து விடாதே என்பது ஆறுமுகநாவலர் உரை. தொன்மையை — குடிப்பழமையாக, குலப்பழமை யாகக் கொள்ள முடியாதோ ?

(96) " மொழிவது அறமொழி " — சொல்லப் படும் பொருளை (சந்தேகம்) நீங்கும்படி, நீ சொல்லு என்பர் ஆறுமுகநாவலர். ஆறுவது சினம், காப்பது விரதம் என்பன போன்று மொழிய வேண்டியது அறமொழி என்று கூறலாகாதோ ?

(99) " வாது முற்கூறேல் " — வாதுகளைப் (பெரி யோர்) முன்னே, நீ பேசாதே என்பது ஆறுமுகநாவலர் உரை. நீ கூற இருக்கும் வாதங்களை, எதிர்த்தார் கூறு வதற்கு முன்பு, நீ கூறாதே என்று கூறுதல் பொருத்தமா காதோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு ஆத்திசூடிச் சூத்திரங்கள் பற்றி ஆறுமுக நாவலர் கூறிய பொருள், ஐயங்களைத் தோற்றுவிக்கின்றன என்று கருத இடமுண்டு. நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று கூறும் கதையொன்று தமிழர் மரபிலேயுண்டு.

ஆறுமுகநாவலரின் சூடாமணி நிகண்டு முதற் பத்துத் தொகுதியுரை *1849*இலே வெளிவந்தது. திருச்செந்தினிரோட்டக யமக வந்தாதி எனும் கருகல் மிகுந்த நிரோட்டக யமக வந்தாதிக்கு நாவலரவர்கள் தந்த உரை *1851*இலே அச்சிடப் பெற்றது. நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி நாவலரவர்கள் திருமுருகாற்றுப்படைக்கு எழுதிய உரை அடுத்துப் பிரசுரமாயிற்று. கோயிற் புராணம், சைவ சமய நெறி, மருதூர் யமகவந்தாதி என்பனவற்றிற்கு நாவலரவர்கள் கண்ட உரைகள் *1868*இலே வெளிவந்தன. கொன்றைவேந்தன், வாக்குண்டாம் (மூதுரை), நல்வழி, நன்னெறி எனும் நீதி நூல்களுக்கும் ஆறுமுகநாவலர் உரையெழுதியிருக்கிறார்.

ஆத்திசூடி குறள் வெண்பாவிலும் குறுகி நிற்கும் செறிவினையுடையது. அச்செறிவிலே ஆழத்தைத் தேடிக் காண்பது அரிது ; ஆழ்ந்து போய்விடவும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-7-1993
Library

# 3. தமிழ்க் கல்வி வளர்ச்சியிலே நாவலரவர்களின் பங்களிப்பு

தமிழ்க் கல்வி, பொதுவாக, இந்திய பாரம்பரியத்தின் கூறாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அதனால், தமிழ்க் கல்வியின் வளர்ச்சிக் கிரமங்களைத் தனிப்பட்ட நோக்குடன் ஆராயும் முயற்சிகள் பொதுவாக வளர்ச்சியடையாது போயின. தமிழர் பண்பாட்டிலே கவனஞ் செலுத்தப்பட வேண்டிய முக்கிய துறையாகத் தமிழ்க் கல்வி நிலவி வருகின்றது.

## I

பழைய காலத்திற் கிராமங்களின் பொது இடங்களிலே அமைக்கப் பெற்றிருந்த மன்றங்களிலே (அம்பலங்களிலே) மாணாக்கருக்குக் கல்வியறிவு ஊட்டப் பெற்றது போலும்.[1] இக்கருத்தினை,

'' அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ ''

என்ற படுமரத்து மோசிகீரனார் கூற்று ஆதரிக்கின்றது என்று கூறலாம்.[2] மன்றங்களிலே இடம் பெற்ற கல்விச் சாலைகள் நாளடைவிற் சிறு குடிசைகளுக்கு இடம் விட்டு ஒதுங்கியிருத்தல் வேண்டும். உபாத்தியாயரின் வதிவிடங்களாம் சிறுகுடிசைகள் குருகுலங்களாக உயர்ந்தன. தெய்வம் எழுந்தருளிய கோயில் ' தேவகுலம் ' ஆனது போல, குரு எழுந்தருளிய கோயில் ' குரு குலம் ' ஆனது. இளம் பாலாசிரியர், பாலாசிரியர், கணக்காயர், ஆசான், ஆசிரியர்,

---

1. உ. வே. சாமிநாதையர், நல்லுரைக் கோவை, முதற்பாகம், 1950, பக். 120.
2. குறுந்தொகை, 33.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலபதி என்ற பெயர்கள் பண்டைய புலவர் பட்டியலிலே காணப் பெறுவனவாம்.[3] இப்பெயர்கள் மூலம் தமிழ்க் கல்வியிலொரு படிமுறை வளர்ச்சியைக் காட்ட முயறல் விருந்தாவதன்றிச் சித்தாந்தமாகக் கொள்ளத்தக்கதன்று.[4]

நன்மை பயவாதன மூன்றினைக் கூறவந்த நல்லாதனார்,

" கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும் பாத்துண்ணும்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல "

என்ற இடத்துக்[5] கணக்காயரின் இன்றியமையாமையை வற்புறுத்திக் கூறியுள்ளார். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற ஆன்றோர் வாக்குடன் திரிகடுகக் கூற்று ஒப்பிட்டு நோக்கத் தக்கது. 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்'[6] நிலை ஏற்பட்டுவிட்ட தன்மையினைத் திரிகடுகம் விளக்குகின்றது.

பௌத்த — சைனச் செல்வாக்கு உண்டுபட்ட காலத்தில் 'சாத்திரதானம்' சமய பரப்பல் நோக்குடன் சிறப்பாகப் போற்றப்பெற்றது. அவர்களுடைய பள்ளிகள் கல்விச்சாலைகளாகவும் விளங்கின. இவர்களுடைய காலத்திலே கல்வி நிறுவன ரீதியிலே சிறப்பிடம் பெறத் தொடங்கியது.

---

3. மா. பால சுப்பிரமணிய முதலியார், சங்கநூற் புலவர்கள் பெயர் அகராதி, 1934, பக். 9, 17, 23, 39, 40, 43, 44, 46.
4. மொ. அ. துரை அரங்கசாமி, கட்டுரை எழுதும் முறை, 1963, பக். 18-28.
5. திரிகடுகம், 10.
6. வெற்றிவேற்கை, 1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கற்கும் கணக்கியல் வாய்பாடுகளிற்கூடத் தம் சமயக் கருத்தை நுழைக்க அவர்கள் தவறவில்லை.[7]

" வன்மதி முக்குடையான் மலரடிதொழ
நெல்லணி லக்கம் நெஞ்சில் வருமே "

என்பது நெல்லிலக்க வாய்பாட்டின் காப்பு.

" அருகனை அமலனை அசலனை யடிதொழ
சிறுகுழி முப்பதும் சிந்தையில் வருமே "

என்பது சிறுகுழி வாய்பாட்டின் காப்பு. அவர்களுட் செல்வம் படைத்தவர்கள், தம் சமய நூல்களைப் பிரதி பண்ணுவித்து விசேட தினங்களிலே தானமாக வழங்கி வந்தமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.[8]

பௌத்த – சைனரின் முன்மாதிரியைப் பின்பற்றிப் பல்லவர் காலத்திற் சிறப்பிடம் பெற்ற வைதீக மடங்களும் கல்வியிற் கவனஞ் செலுத்தி வந்தன.

சோழப் பெருமன்னர் காலத்திலே எண்ணாயிரம், திரிபுவனி, திருமுக்கூடல், திருவொற்றியூர் முதலான திருத்தலங்களிலும் கல்விச்சாலைகள் நிறுவப்பெற்றதாகச் சாசனங்கள் கூறுவன.[9] சோழ மன்னர்கள் கல்விப் பணியிலே ஈடுபட்டிருந்த பட்டர்களுக்கும், பள்ளிகள் மடங்கள்

7. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, " சமண முனிவரின் தமிழ்த் தொண்டு ", கரந்தைக் கட்டுரைக் கோவை, *1941*, பக். *25*.

8. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், *1959*, பக். *44*.

9. S. Arumuga Mudaliar : A survey of the Political and Cultural History of the Age of the Imperial Cholas. *A Glimpse of Tamitology*, Ed. by V. SP. Manickam, 1968, pp. 28–29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் முதலிய நிறுவனங்களுக்கும் நிபந்தங்கள் வழங்கி ஆதரித்துள்ளனர். அவர்கள் கொடுத்த ஆதரவு வடமொழி தொடர்பான கல்விக்கே என்பதுதான் இன்று சாசனமூலம் அறியக்கூடியதாக உள்ளது. வேத பாடசாலைகளும் ஆகம பாடசாலைகளும் சோழர் காலத்திலே பல இடங்களிலே காணப்படுவன. திருமுக்கூடலிலும் திருவாவடுதுறையிலும் சோழர் காலத்தில் நிலவிய வைத்தியக் கல்விச் சாலைகள் பற்றியும் அறியமுடிகின்றது. தமிழ்க் கல்விக்குச் சோழர் தம் ஆதரவு கிடைத்ததை உணர்த்தும் சாசனங்கள் வெளிப் போந்ததாகத் தெரியவில்லை.

பதினாறாம் நூற்றாண்டிலே தாபிக்கப்பெற்ற திருவாவடுதுறை பஞ்சாக்கர தேசிகராதீனம், தருமபுரம் குருஞான சம்பந்தராதீனம், சூரியனார் கோவிலாதீனம் முதலியன, ஆங்கிலேயர் தமிழ்க் கல்வியிலே அக்கறை காட்டத் தொடங்கிய காலத்திலே, அதன் இருப்பிடங்களாக விளங்கி நின்றன.

## II

தமிழ்க் கல்வி தனிப்பட்டோராலும் நிறுவனங்களாலும் வழங்கப்பெற்று வந்த நிலையினை ஆங்கிலேயர் தமிழ்க் கல்வியிற் கவனஞ் செலுத்த முற்பட்டபோது நாம் காணலாம். அவர்கள் வழங்கிய சாத்திர தானத்தைப் பொதுவாக இருபெரும் பிரிவாக வகுத்துக் கொள்ளலாம் : ஆரம்பக் கல்வி, உயர்கல்வி. ஆரம்பக் கல்வியை வழங்கிய கல்விச் சாலையைப் பொதுவாகத் திண்ணைப் பள்ளி என்பர் ; தெற்றிப் பாடசாலை என்றும் வழங்குவர். உயர் கல்வியைப் பொதுவாகக் குருகுலவாசம் செய்து பெறுதல் வழக்காக இருந்தது. தனிப்பட்ட குருவுடன் உறைந்து கற்றவர்களும், மடங்கள் முதலியனவற்றிலே தங்கியிருந்து கற்றவர்களும் என அவர்களைப் பிரித்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுல வாசமின்றி உயர்கல்வி கற்கவேண்டிய நிலையும் தமிழ்ப் பிரதேசங்களிற் சிற்சில பகுதிகளிற் காணப்பட்டது.

## III

திண்ணைப் பள்ளியிலே பொதுவாக ஐந்தாம் பிராயத்தில் வித்தியாரம்பம் நடைபெறும். வைதீக சமயத்தவர்கள் விஜயதசமியில் பள்ளிக்கூடம் வைப்பது மரபு ; அன்று தொடங்குவதானாற் கலைமகள் திருவருள் உண்டாகும் என்று நம்பினார்கள். சுவடி தொடக்கலை 'மையாடல் விழா' என்றும் கூறுவர்.

" ஐயாண்டெய்தி மையாடி யறிந்தனர் கலைகள் " என்று சிந்தாமணி கூறுகின்றது.[10] மைதடவிய ஏட்டினை வாசிக்கத் தொடங்குவதால் அவ்வாறு அழைக்கப்பெற்றது.

" மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் "

என்பர் தமிழ்விடு தூதுடையார்.

நெடுங்கணக்கினை ஆசிரியர் அல்லது சட்டாம்பிள்ளை சொல்லப் பின்பற்றிச் சொல்லப் பழகிக்கொள்ளும் முறை வைப்பினைத் தொடர்ந்து, வரிவடிவத்தினை மாணாக்கர் மணலிலே எழுதிப் பழகுவார்கள். நெடுங்கணக்கின் ஒலி வடிவங்களையும் தெரிந்துகொண்ட பின்பு, ஏட்டிலே எழுதும் பயிற்சியையும், சிறுநூல்களையும் கணித வாய்பாடுகளையும் மனனம் செய்யும் வழக்கத்தினையும் விருத்தி செய்துகொள்வர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, உலகநீதி, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய நூல்களை ஆரம்பத்திலே மனனஞ்

---

10. செய்யுள், 2706.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த மாணாக்கர் பின்பு, அந்தாதி, சதகம், நிகண்டு, சின்னூல், நன்னூல் முதலியனவற்றை மனனஞ் செய்வர்.

திண்ணைப் பள்ளிகளிலே மனப்பாடஞ் செய்வதற்கே முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றது.[11] அகர வரிசை யிலமைந்த ஆத்திசூடி முதலியனவும், அந்தாதித் தொடை யிலமைந்த நூல்களும், எதுகை மோனையுடைய செய்யுள் களும் அப்பயிற்சிக்குப் பேருதவியாக இருந்தன. அச்சு யந்திரங்களும் அச்சுப் புத்தகங்களும் இல்லாத காலத்தில், நூல்கள் கிடைப்பது அருமையாக இருந்ததால், மனப் பாடம் செய்வது அத்தியாவசியமாயிற்று. வரிவடிவங் களை எழுத அறிந்துகொள்வதும், செய்யுள்களையும் சூத்தி ரங்களையும் மனனஞ் செய்வதும் திண்ணைப் படிப்பின் நோக்கமாக முடிந்தன. தாம் மனனஞ் செய்தனவற்றின் பொருளை மாணாக்கர் பெரும்பாலும் தெளிவாக உணரும் வாய்ப்பினை அப்பொழுது பெறுவதில்லை.

திண்ணைப் பள்ளிப் படிப்போடு நின்றுவிடுகின்ற மாணவரும் இருந்தனர். அத்தகையோரின் ' நாப்பாடம் ' பற்றி நாலடியாரிற் சில செய்யுள்கள் இடம் பெறுகின்றன.

'' பாடமே ஓதிப் பயன்றெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால் — கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
ஈன்றாட் கிறப்பப் பரிந்து '' *(316)*

என்பது அவற்றிலொன்று.[12]

---

*11.* மயிலை சீனி. வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற் றாண்டில் தமிழ் இலக்கியம், *1962*, பக். *63-64.*

*12.* செய்யுள், *312, 314.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IV

திண்ணைப் பள்ளிப் படிப்பினைத் தொடர்ந்து உயர் கல்வி படிக்க முற்படும்போது, மாணாக்கர் தாங்கள் பொருளறியாமல் முன்னர் மனனஞ் செய்த நூல்களை, அவற்றுக்குப் பாடஞ் சொல்ல வல்ல ஆசிரியரிடம் கேட்டனர். சிறுநூல்களுக்குப் பாடங் கேட்ட பின்பு, பிரபந்தங்களையும் இலக்கணங்களையும் பெருநூல்களையும் பாடங்கேட்பர்.

திண்ணைப் பள்ளியிலும் பார்க்க, உயர்கல்வி கேட்ட குருகுலத்தில் மாணாக்கர் எண்ணிக்கை குறைந்ததாகவே அமைதல் போற்றப்பட்டு வந்தது. இதனால், தம் வதிவிடங்களிலிருந்து சென்று கற்றவர்களும், ஆசிரியருடன் உறைந்து கேட்டவர்களும் குருவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது[13]. ' குருவே துணை' யாகக் கொண்டு மாணாக்கர் ஒருமுகப்பட்டுக் கற்கவும், ஆசிரியர் கற்பிக்கவும் முடிந்தது. குலபதியாகக் குரு விளங்கக்கூடிய வசதிகளை மக்கள் செய்துகொடுத்தலைக் கடமையாகக் கொண்டிருந்தனர். " வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம் " என்பது உலகநீதி. " ஓதி வைத்தவர் கூலிகொடாதவர்..... எழுநரகுழல்வாரே " என்பது திருப்புகழ்.

சில ஆசிரியர் ஒரு நூலையே தெரிந்தவர்களாக இருந்தனர் ; வேறு சிலர் சில நூல்களைத் தெரிந்தவர்களாக இருந்தனர் ; பல நூல்களைத் தெரிந்தவர்களைக் காண்பது அரிதாக இருந்தது. எனவே ஒருவரிடம் அல்லாது பலரிடம் நூல்களைக் கேட்க வேண்டிய சூழல் நிலவியது.

---

13. செ. வேங்கடராமச் செட்டியார். முல்லையும் பூத்தியோ, 1963, பக். 43.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சென்னப் பட்டணத்தில் இற்றைக்கு ஐம்பதறுபது வருஷத்தின் முன்னிருந்த வரதப்ப முதலியாரின் பின் எழுத்துஞ் சொல்லுமே யன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உரை யுதாரணங்களோடு பாடங் கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய் இல்லை யென்றே சொல்லலாம். வரதப்ப முதலியார் காலத் திலுந் தொல்காப்பியங் கற்றவர்கள் அருமையென்பது அவர் தந்தையார் வேங்கடாசல முதலியார் அதனைப் பாடங் கேட்கும் விருப்பமுடையரானபோது பிறை யூரிற் றிருவாரூர் வடுகநாத தேசிகர் ஒருவரே தொல் காப்பியம் அறிந்தவர் இருக்கிறாரென்று கேள்வி யுற்றுத் தமது ஊரை விட்டு அதிக திரவியச் செல வோடு அவ்விடம் போய் இரண்டு வருஷமிருந்து பாடங்கேட்டு வந்தமையானும், வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்தவ ரென்பதனாலும், அது காரணமாக அவருக்குத் தொல் காப்பியம் வரதப்ப முதலியாரென்று பெயர் வந்த மையானும், பின்பு அவர் காலத்திருந்த வித்துவான் கள் தமக்கு யாதாயினும் இலக்கண சமுசயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமை யானும் நிச்சயிக்கலாம் "

என்று தொல்காப்பியம் பொருளதிகாரப் பதிப்பாசிரியர் சி. வை. தாமோதரம் பிள்ளை கூறல் ஈண்டு நினைவு கூரத்தக்கது.[14]

மேலும், மாணாக்கர் குருவின் நம்பிக்கைகளை அனு சரித்தே பாடங் கேட்க வேண்டியிருந்தது. கோமளபுரம் இராசகோபால பிள்ளையிடம் கம்பராமாயணம் பாடங்

---

**14.** சி. வை. தாமோதரம் பிள்ளை : தாமோதரம், **1971** பக். **121-122.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கத் திருமயிலை சண்முகம் பிள்ளை நெற்றித் திருநீறழித்துத் திருமண் அணிந்து, சண்முகம் என்ற பெயரை இராமாநுசன் என்று மாற்றி வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.[15] வெங்கடராமன் என்ற பெயரைச் சாமிநாதன் என்று மாற்றித் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை உ. வே. சாமிநாதையருக்குப் பாடஞ் சொன்னார்[16].

திருமடங்களிலே போதிக்கப்பெற்றுவந்த தமிழ்க் கல்விப் பரப்பிலும் புறச்சமய நூல்களும் லௌகிக நூல்களும் பொதுவாகத் தவிர்க்கப்பட்டு வந்தன. திருவாவடுதுறை யாதீனத்தின் இரண்டாம் சின்னப் பட்டத்தில் ஈசான தேசிகராக விளங்கியவர் சுவாமிநாத தேசிகர் ; கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் கடைக்கூறிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்கூறிலும் வாழ்ந்தவர்.

"மாணிக்கவாசகர் அறிவாற் சிவனேயென்பது திண்ணம் ; அன்றியும், அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற் கலந்திருந்து அருமைத் திருக் கையாலெழுதினார். அப்பெருமையை நோக்காது, சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை சங்கப்பாட்டு கொங்குவேண் மாக்கதை முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடொன்றாக்குவர் .......... அதுமட்டோ இறையனாரகப் பொருள் முதலான இலக்கணங்களையும், தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் சிவப் பிரகாசம் பட்டணத்துப் பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும்,

15. மயிலை சீனி. வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், 1962, பக். 87.
16. மேற்படி நூல், பக். 87.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொருளாக எண்ணாது, நன்னூல் சின்னூல் அகப்பொருள் காரிகை அலங்கார முதலிய இலக்கணங் களையும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு இராமன் கதை நளன் கதை அரிச்சந்தி ரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஓர் பொரு ளாக வெண்ணி வாணாள் வீணாள் கழிப்பர். அவ ரிவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப் பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல்போல அவரதியற்கை யென்க''

என அவர் இலக்கணக் கொத்திற் கூறுவதிலிருந்து மடங் களின் தமிழ்க் கல்விப் பரப்பினை மதிப்பிடல் இலகு வானது.[17] சமயப்பற்று தமிழ்க் கல்வி விருத்திக்குத் தடை யாக அமைந்த நிலையை நாம் இங்குக் காண்கிறோம்.

''சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
தூக்கியுப தேசித்தார் சோமேசா – நோக்கில்
பயனில்சொல் பாராட் டுவானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்''

என்று 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருவாவடுதுறை யாதீனம் சிவஞான முனிவர் முதுமொழி கூறுவர். ''சிந்தா மணி என்றது உபலக்கண மாதலின், அது போலும் சிலப்பதி காரம், மணிமேகலை, சூளாமணிப் பயிற்சியும் சைவ வைணவ நன்மக்களுக்கு ஆகா'' என்பது முதுமொழி விளக்கமாம்.

---

17. இலக்கணக் கொத்து, சென்னை, வித்தியாநுபாலன யந்திர சாலை, 1952, பக். 14-15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாவடுதுறை யாதீனம் மகா வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவகர் உ. வே. சாமிநாதையர்,

> " அவரிடம் என் நல்லூழ் என்னைக் கொண்டு போய் விட்டது. அவருடைய நட்பினால் என் வாழ்க்கையில் ஒரு புதுத்துறை தோன்றியது. தமிழிலக்கியத்தின் விரிவை அறிய முடிந்தது. அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங் களிலும் தமிழின்பம் கண்டு மகிழ்வதோடு நில்லாமற் பழமையும் பெருமதிப்பு முடைய தண்டமிழ் நூல் களிற் பொதிந்து கிடக்கும் இன்றமிழியற்கை யின்பத்தை மாந்தி நான் மகிழ்வதோடு பிறரும் அறிந்து இன்புறச் செய்யும் பேறு எனக்கு வாய்த்தது"

என்று சேலம் கோ. இராமசாமி முதலியாரைச் சந்தித்த தால் ஏற்பட்ட நன்மை பற்றிக் கூறுதல் ஊன்றி நோக்கத் தக்கது.[18] சிலப்பதிகாரமோ அல்லது சிறப்பதிகாரமோ என்று நூற்பெயர் கூடத் தமிழறிஞர் பலருக்குத் தெரியா மலிருந்தது ஈண்டு நினைவுகூர வேண்டியதொன்று.[19] அக் காலத்திலே, 1848ஆம் ஆண்டிலே, அந்நூலின் கதைப் போக்கையும் செய்யுளியல்பையும் அறிந்திருந்தவரும் புது முறைக் கல்வி கற்றவருமாம் கற்பிட்டி சீமான் காசிச் செட்டியும் ஈண்டு குறிப்பிடத் தக்கவராவர்.[20]

உயர்கல்வி கற்கப் புறப்பட்டுப் பாடங் கேட்டவர் களுக்குப் போதனை எவ்வாறு அமைந்திருந்தது என்று

---

18. என் சரித்திரம், 1950, பக். 726
19. உ. வே. சாமிநாதையர், என் சரித்திரம், 1950, பக். 936-937.
20. பொ. பூலோகசிங்கம், தமிழ் இலக்கியத்தில் ஈழத் தறிஞரின் பெருமுயற்சிகள், 1970, பக். 31, 46.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாகக் கூறமுடியாமலிருக்கிறது. தொல்காப்பிய உரையாசிரியர் பேராசிரியர் " வையங் காவலர் " என்ற புறப்பாடலுக்கும் (உவமவியல், 32), " முல்லை வைந்நுனை " என்ற அகப்பாடலுக்கும் (செய்யுளியல், 104) தரும் விளக்கங்களை அவ்வுயர் கல்வியின் கொடுமுடிகளாகக் கொள்ளலாமோ?[21] ' புலமை விருந்தாய் அமைந்து, இலக்கியச் சுவை நல்கிக் கற்போரை இன்பக் கடலுள் ஆழ்த்தும் ' இவ் விளக்கங்கள்.[22] காலத்தினின்றும் மனித வாழ்க்கையினின்றும் பிரித்தெடுத்துத் தனித்து வாழும் நிறை பொருளாக இலக்கியத்தைக் கருதியமைக்குச்[23] சான்று பகர்வன ; பெருங்கடலுள் ஓர் அலையுள் ஒரு நுரையுள் ஒரு துளியில் ஓர் அணுவை எடுத்து அதனுள் தம் அறிவிற்கெட்டிய மட்டும் புகுந்து பார்க்கும் ரசனைப் பரம்பரையொன்று உருவாக்கப்பெற்றது.

உயர் கல்விக்கென்று பாடவிதான மொன்றினை அமைத்துக் காட்டமுடியாது என்று கூறுவதிற் பிழை இருப்பதாகக் கூறுவதற்கில்லை. ஆயினும் தமிழ்க் கல்வியிற் குருகுலம் இலக்கிய இலக்கண தத்துவப் பிரிவுகளுக்கே சிறப்பிடம் கொடுத்து வந்ததாகத் தெரிகின்றது. வான சாத்திரம், வைத்திய சாத்திரம் போன்றவை தொழின்முறைப் பயிற்சிகளாக விலகி நின்றன.

---

21. தொல்காப்பியம், பொருளதிகாரம், இரண்டாம் பாகம், சி. கணேசையர் பதிப்பு, 1943, பக். 168-170, 430-433.
22. மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், 1968, பக். 36.
23. க. கைலாசபதி, " உரையும் விமரிசனமும் : ஒரு குறிப்பு ", கலைப்பூங்கா, 1961, பக். 15-17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V

மேனாட்டார் வருகையை அடுத்துத் தமிழ்ப் பிரதேசங் களிலே, அதுகால வரை வழக்கில் இருந்த கல்விமுறை யினும் வேறுபட்ட கல்விமுறையொன்று தமிழ் மக்களுக்கு அறிமுகமாயிற்று. அந்நிய ஆட்சியாளரின் தேவைகளும் நோக்கங்களுமே இவ்வறிமுகத்திற்கு முக்கிய காரணங்களா யின. ஆங்கிலேயருக்கு முன் வந்த மேனாட்டாருள், யேசு சபையினர் ஒழிந்த ஏனையோர் பொதுவாக ஆரம்பக் கல்வி யிலேயே கவனஞ் செலுத்தினர். ஆங்கிலேய அரசு ஸ்திர மடைந்த காலகட்டத்திலே அவர்களும் ஆரம்பக் கல்வி யிலேயே நாட்டம் உடையவர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே கீழைத் தேயங்களிலே மதப் பரம்பலுக்குப் புறப்பட்ட மிஷனரிமார் தாம் பத்தொன் பதாம் நூற்றாண்டிலே உயர் கல்வி வரை செல்ல முற்பட்டவராவர்.

ஆங்கிலேய அரசு இந்தியாவிற் கல்வியிற் செலுத்திய அளவு கவனத்தை இலங்கையிற் செலுத்தவில்லை என்று கருதப்படுகின்றது. இலங்கையில் ஒல்லாந்தர் தம் ஆட்சிக் காலத்திலே (1658–1795) ஆரம்பக் கல்வியைக் கட்டாய மாக்கி இலவசமாக வழங்கி வந்தனர். இவர்கள் நல்லூரிலே 1690 முதல் 1723 வரை செமினறி ஒன்றினையும் நடாத்தி யுள்ளனர். பழவேற்காட்டினைப் பிறப்பிடமாகக் கொண்ட வரான அட்றியானஸ் தெ. மே. பாதிரியார் (–1699) அதன் முதல் தலைவராக விளங்கினார். பாதிரிமார், உபதேசி மார், இலிகிதர், மொழி பெயர்ப்பாளர், ஆசிரியர் முதலி யோரை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு ஒல்லாந் தரின் நல்லூர் செமினறி இயங்கியது.[24] 1796 பெப்ருவரி

---

24. S. A. W. Mottau, "Education under the Dutch", *Education in Ceylon, Part I,* The Ministry of Education and Cultural Affairs, 1969, p. 310.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் *1798* அக்தோபர் வரை நடைபெற்ற சென்னை நிருவாகத்தின் போது, ஒல்லாந்தர் கல்வி அமைப்புக் கவனிப்பாரற்றுச் சிதைந்து போனது. பிரடரிக் நோத் பிரபு (அக். *1798*–ஜுலாய், *1805*) ஒல்லாந்தர் கல்வி அமைப்பினை உயிர்ப்பிக்க முயன்றதோடு, உயர்கல்விக்கான திட்டத்தையும் வகுத்துச் செயற்படுத்த முற்பட்டனர்.[25] *1800* இலே யாழ்ப்பாணக் குடாநாட்டிலே *47* அரசாங்கப் பாடசாலைகள் நிலவின என்று கிறிஸ்தியன் டேவிட் எழுதிய சுயசரிதைக் கையெழுத்துப் பிரதிமூலம் அறியப் படுகின்றது.[26] ஆயினும் *1803*ஆம் ஆண்டிலே கல்விச் செலவுகளுக்கான மானியம் குறைக்கப் பெற்றதனால், அப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வேதனம் கொடுக்கப்படாமல், அவை மூடப்பட வேண்டிய நிலையை அடைந்தன. *1805*ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம், நாலாம் தேதி ஈழம் வந்த இலண்டன் மிஷனறி சங்கத்தினைச் சேர்ந்த நான்கு ஜேர்மனியருள் ஒருவரான பாம் பாதிரியார் (Rev. J. P. Palm) தேசாதிபதியால் அரசாங்கப் பாடசாலைகளை மேற் பார்வை செய்ய யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டார்.[27] அவர் தெல்லிப்பழையிலும் பிற இடங்களிலும் இருந்த பாடசாலை களை *1812*ஆம் ஆண்டு, செப்தம்பர் மாதம் ஒல்லாந்தர் மத குருவாக நியமனம் பெற்றுக் கொழும்புக்குத் திரும்பும்

---

25. Ranjit T. Rubery, "Early British Educational Activities", *Education in Ceylon Part II,* ibid, 1969, p.p. 360–365.

26. Sir Jamos Emerson Tennent, *Christianity in Ceylon,* 1850, p. 81.

27. R. Lovett, *The History of the London Missionary Society*, 1899, p. 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை மேற்பார்வை செய்துவந்துள்ளார்.[28] அவர் காலத்திலே தொமஸ் மெயிற்லண்ட் பிரபு தாய்நாட்டிலே தம் மதத்தவர் ஏற்படுத்திய தாக்கத்தினால் உருவாகிய புதிய கொள்கையாற் பாடசாலைகளை 1810ஆம் ஆண்டிலே மீண்டும் உயிர்ப்பிக்க முயன்றனர்.

1829ஆம் ஆண்டிலே விசாரணை செய்ய ஈழம் வந்த டபிள்யூ. எம். ஜி. கோல்புறூக் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப் பெற்ற தரவுகள் மூலம் நான்கு அல்லது ஐந்து அரசாங்கப் பாடசாலைகள் தமிழ்ப் பிரதேசங்களில் நிலவியதை அறியலாம்.[29] இப் பாடசாலைகள் ஆரம்பக் கல்வி அளிப்பனவாக விளங்கின. ஆண்களும் பெண்களும் சேர்ந்து படித்த இப் பாட சாலைகளில் வாசிப்பு, எழுத்து, கணிதம், கிறித்தவம் என்பன தமிழ் மூலம் போதிக்கப் பெற்றன ; வாசிப்புக்கும் கிறித்தவ வேதாகமே பயன்படுத்தப்பட்டது. இப் பாட சாலைகளைப் பற்றிக் கோல்புறூக் கூறுவது கவனிக்கத் தக்கது.[30]

> " பாடசாலை ஆசிரியர்களிடம் ஆங்கில மொழியை உணரக்கூடிய ஆற்றல் எதிர்பார்க்கப்படவில்லை. அதனை அவர்களிற் பெரும்பாலோர் அடியோடு அறிய

---

28. Ranjit Rubery "Educational Work of the Christian Missionary Societies in Ceylon During the Early Years of British Rule" *The Ceylon Journal of Historical and Social Studies*, 3.2, 161–162 (1960).
29. Education in Ceylon, Part II, Pub. by the Ministry of Education and Cultural Affairs 1969, pp. 370, 391, 392, 393.
30. G.C. Mendis (Ed.) The Colebrooke Cameron Pages, 1956, 1, p. 72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டார்கள். அவர்கள் வகித்த பதவிக்கு, அவர்கள், பெரும்பாலும், அடியோடு தகைமையற்றவர்கள். பாடசாலைகளிற் சுதேசிய மொழியில் வாசிப்பதும் சுதேசிய வடிவங்களை எழுதுவதுமன்றி வேறெதுவும் போதிக்கப்படுவதில்லை. ஆசிரியரோ அல்லது மாணாக்கரோ பாடசாலைக்கு வருகை தருவதைத் தூண்டத்தக்க கண்காணிப்புப் போதாததனாற் பல துஷ்பிரயோகங்கள் நிலவுகின்றன. அரசாங்கப் பாடசாலைகள் பல இடங்களிற் பெயரளவில் மட்டுந்தான் இருக்கின்றன. மாணாக்கர் பரிசோதனைக்காக மட்டும் அப்பப்போ கூட்டப் படுகின்றனர். அவர்களிற் பலர் மிஷனரிமார் பாடசாலைகளிலே பயிற்சி பெற்றவர்கள். அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் மிஷனரிமார் பாடசாலைகள் மீது பொறாமை கொண்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. ''

கோல்புறூக் அவர்களின் கண்டனத்தை அடுத்து அரசாங்க சுதேசிய பாடசாலைகள் 1832இலே மூடப்பட்டன.[31] முதலாம் பாடசாலை ஆணைக்குழு (1834–1841) முறையாகச் செயற்படவில்லை. இது யாழ்ப்பாணத்திலே ஒரு ஆங்கிலப் பாடசாலையையும் நான்கு தமிழ்ப் பாடசாலைகளையும் நிறுவியது.[32] 1841இலே நிறுவப் பெற்ற மத்திய பாடசாலை ஆணைக்குழு அவை முறையாக நடைபெறாததால் அவற்றை 1842இலே மூடிவிட்டு 1843இலே வேறு பாடசாலைகளைத் திறந்தபோதும் அவற்றை மேற்பார்வை செய்ய முடியாத நிலையில் நடத்தாமல் விட்டுவிட்டது.[33]

---

31. G.C. Mendis, Ceylon under the British, 1952, p. 76.
32. K.M. De Siva Social Policy and Missionary Organizations in Ceylon 1840–1855, 1965, p. 157.
33. Ibid, p. 157.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ் மக்களின் கல்வியைப் பொறுத்த மட்டில், காலனித்துவ அரசாங்கம், அவர்களை மிஷனரிமாரிடமே தஞ்சமடைய வைத்துவிட்டது. அரசாங்கப் பாடசாலைகள் முறையாக நடைபெறாத போதும், மிஷனரிமாரின் பாட சாலைகளுக்குச் செல்ல விரும்பாதவர், அவை மூடப் பெற்ற போது கவலைப்பட்டதை ஆறுமுகநாவலர் 1852இலே அண்டர்சன் பிரபுவுக்கு அனுப்பிய மனுவிலே காணலாம்.[34] தமிழ்நாட்டிலே அரசாங்கமும் தனிப்பட்டோரும் கல்வியில் அக்கறை செலுத்தியதால், அங்கு மிஷனரிமாரை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலை காணப்படவில்லை. இதனா லேயே ஆறுமுகநாவலரும், பின்பு அநகாரிக தர்மபாலாவும் முறையே சைவரையும் பௌத்தரையும் இந்தியா சென்று கற்கும்படி கூறினார்கள்.[35]

1793ஆம் ஆண்டு வில்லியம் கேரி பாதிரியார் இந்தி யாவுக்கு வருகை தந்ததோடு ஆங்கிலேய மிஷனரிமாருடைய நடவடிக்கைகள் தொடங்குவதாகக் கருதப் பெற்றபோதும், 1814இலே அங்கு மிஷனரிமார் நடவடிக்கைகளுக்குப் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியார் இடமளித்தனர்.[36] 1814ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 29ஆம் தேதி ஈழம் வந்த ஐந்து வெஸ்லியன் மிஷனரிமாரிலே மூவரே[37] ஆங்கி லேயருள் முதன்முதலாக ஈழத்தின் தமிழ்ப் பிரதேசங்களிலே

---

34. S. Thananjayaraja Singham, The Education Activities of Arumuga Navalar, 1974, p. 15.

35. K. Arumai Nayagam : "Hindu Education, 1840–1880" *TRIBUNE*, 30 Oct. 1976.

36. W.J.T. Small (Ed.) A History of the Methodist Church in Ceylon, 1814–1864, pp. 15, 16, 20.

37. James Lynch (1775–1858), Thomas Hall Squance (1790–1868), William Ault (1778–1815).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனரி வேலையில் ஈடுபடத் தொடங்கியவராவர்.[38] இவர்களிலே லிஞ்ச் பாதிரியாரும் ஸ்குவான்ஸ் பாதிரியாரும் அவ்வாண்டு ஆகஸ்டு மாதம், பத்தாம் தேதி யாழ்ப்பாணம் வந்தபோதும், *1816*ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், முதலாம் தேதி பழைய அனாதை விடுதியையும் லூதரின் கோயிலையும் அரசாங்கத்திடமிருந்து வாங்கிய பின்பே, தம் மிஷனரி வேலையை யாழ்ப்பாணத்திலே விரிவாக்கத் தொடங்கினர்.[39] *1816*ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், *22*ஆம் தேதி ஈழம் வந்த அமெரிக்கன் மிஷனரிமாரில் எட்வேட் வாறன் பாதிரியார் *(—1818)* அவ்வாண்டு ஜூலாய் மாதம் பதினோராம் தேதிதான் யாழ்ப்பாணம் வந்தார்.[40] பின்பு தானியல் பூர் *(—1855)*, ஜேம்ஸ் நிசட்ஸ் *(—1822)*, பெஞ்சமின் மெக்ஸ் பாதிரியார்களும் அவர்களுடைய மனைவிமாரும் வாறன் பாதிரியாருடன் சேர்ந்துகொண்டனர். அவர்கள் தெல்லிப்பழையைத் தம் மிஷனரி வேலைக்கு ஆரம்ப தலமாகத் தீர்மானித்து அங்கு *1816*ஆம் ஆண்டு, அக்தோபர் மாதம், *15*ஆம் தேதி தங்கத் தொடங்கியதை அடுத்துத் தம் மிஷனரி வேலையை விரிவாக்கத் தொடங்கினர்.[41] *1816*ஆம் ஆண்டிலே அமெரிக்கன் மிஷனரிமார் தம் முதல் தமிழ்ப் பாடசாலையைத் தெல்லிப்பழையிலே நிறுவினர்.[42] *1817*ஆம் ஆண்டிலே வடபகுதி வெஸ்லியன்

---

38. லிஞ்ச் பாதிரியார் *1817* இலேயே இந்திய மெதடிஸ்த தாபனத்திற்குச் சென்னையிலே அடியிட்டார் (W.J.T. Small, Ibid, p. 94).
39. W.J.T. Small, Ibid, p. 89.
40. John H. Martyn, Notes on Jaffna, 1923, p. 12 ; அமெரிக்கன் மிஷனரிமார் *1812*இலே மராட்டியர் மத்தியிலே தம் முதலாவது மிஷனை இந்தியாவில் நிறுவியவராவர்.
41. C.D. Velupillai, A History of the American Ceylon Mission, 1922, p, 34.
42. Ibid, p. 39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷன் தலைவர் ஜேம்ஸ் லிஞ்ச் பாதிரியார் பள்ளிக்கூடங்கள் இல்லாமற் சமயக் கூட்டங்களை அமைத்தல் அரிது என்பதைத் தாய்ச் சபைக்கு அறிவித்தனர்.[43] 1818இலே வெஸ்லியன் மிஷனரி ஸ்குவான்ஸ் பாதிரியார் இங்கிலாந்திற்கு எழுதிய கடிதமொன்றிலே வண்ணார் பண்ணை, நாவற்குழி, புத்தூர் எனும் இடங்களிலே மூன்று தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப் பெற்றிருந்ததைக் குறிப்பிட்டார்.[44] மட்டக்களப்புக்கு 1814இலே சென்ற வில்லியம் ஒல்ற் என்னும் வெஸ்லியன் பாதிரியார் 1815ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம் மரணிக்கு முன்பு எட்டுப் பாடசாலைகளை அங்குத் தாபித்து விட்டார்.[45] 1818ஆம் ஆண்டு, ஜூன் மாதம் ஈழம் வந்த சேர்ச்சு மிஷனைச் சேர்ந்த நான்கு பாதிரிமாரிலே ஜோசப் நைற் என்பவர், அவ்வாண்டின் பிற்பகுதியிலே யாழ்ப்பாணம் வந்து நல்லூரைத் தளமாகக் கொண்டு சேர்ச்சு மிஷன் சங்கத்தின் மிஷனரி வேலையை விரிவாக்கினார். இம்மூன்று மிஷனரிமார் பிரிவுகளிலே, அமெரிக்கன் மிஷனரிமார், ஈழத்திலே, யாழ்ப்பாணப் பிரதேசத்திலே மட்டுமே தம் கவனத்தைச் செலுத்தியதால், ஏனைய பிரிவினராலும் பார்க்கச் சிறப்பாக மிஷனரிவேலை ஆற்றக் கூடியதாக இருந்தது. வெஸ்லியன் மிஷனரிமார் ஈழத்தின் தமிழ்ப் பிரதேசங்களிலே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை எனும் மூன்று பிரதேசங்களிலும் பணிபுரிந்தனர்.

தமிழ்ப் பிரதேசங்களிலே பணிபுரிய வந்த மிஷனரிமாருக்குப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கட்டியெழுப்பி

---

43. W.J.T. Small (Ed.), A History of the Methodist Church, in Ceylon, 1814–1864, p. 110.

44. Ibid, p. 110.

45. Ibid, p. 89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்த கோயில்களையும் ஏனைய சமயக் கட்டடங்களையும் அரசாங்கம் கொடுத்துதவியதால் அவர்களுக்குப் பாடசாலைகளையும் கோயில்களையும் அமைப்பது இலகுவாக முடிந்தது.[46] தமிழ்ப் பிரதேசங்களிலே மிஷனரிமார் பிரிவுகள் தமக்கிடையேயுள்ள வேறுபாடுகளை மறந்து, சமயப் பரம்பலிலே சேர்ந்துழைத்தனர். 1819ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் அமெரிக்கன், வெஸ்லியன், சேர்ச்சு மிஷனரிமார் கூட்டிய முதலாவது மாதாந்தக் கூட்டத்திலே 'சகோதர பாசம்' விடயமாக அமைந்தது என்பது குறிப்பிடத் தக்கது.[47] இவ்வொற்றுமை ஈழத்தின் தென் பிரதேசங்களிலே காணப் பெறவில்லை. தமிழ்ப் பிரதேசங்களிலே ஒரு பிரிவினர் களமாகக் கொண்ட இடத்தை, ஏனைய பிரிவினர் தவிர்த்து, ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளாது ஒற்றுமையுடன் செயலாற்றினர். அவர்கள் தம் ஒற்றுமை சுதேசிய சமயத்தின் முன் வலுவான அரணாக அமைந்தது.

இளமையிலே அகப்படுத்தல் கிறித்தவத்தின் பரம்பலுக்கு உதவுமென்பதை உணர்ந்த மிஷனரிமார் அதுகாலம் வரை திண்ணைப் பள்ளிகளும் குருகுலங்களும் கவரமுடியாத அளவிற்கு மாணாக்கரைக் கவர்ந்தனர். எழுத்தறிவின்மை வீதாசாரம் மிஷனரிமாரின் கல்வி முயற்சிகளுக்கு முன்பு உயர்ந்ததாகவே இருந்து வந்துள்ளமை மறுக்கொண்ணாதது. மிஷனரிமார் பாடசாலைகளிலே பயின்ற மாணாக்கர் தொகை திண்ணைப் பள்ளிகளிலும் குருகுலங்களிலும் பார்க்க அதிகமாகவே காணப்படுகின்றது. 1850இலே

---

46. Sir James Emerson Tennent, Christianity in Ceylon, 1850, p. 112.

47. W.J.T. Small, Ibid, p. 104.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கன் மிஷனின் கிராமியப் பாடசாலைகளிலே 4000 மாணாக்கரும் வெஸ்லியன் மிஷனின் கிராமியப் பாடசாலைகளிலே 700க்கு மேற்பட்ட மாணாக்கரும் சேர்ச்சு மிஷனின் கிராமியப் பாடசாலைகளிலே 600 மாணாக்கரும் வட பகுதியிலே படித்ததாகவும், திரிகோணமலை மட்டக்களப்புப் பிரதேசங்களிலுள்ள வெஸ்லியன் மிஷனின் கிராமியப் பாடசாலைகளிலே ஈராயிரத்திற்கு மேற்பட்ட மாணாக்கர் படித்ததாகவும் அறிய முடிகின்றது.[48] வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திய ஆங்கிலக் கல்வியின் கவர்ச்சி இதற்கு முக்கிய காரணமான போதும், புதிய கல்வியின் அமைப்பு முறை, போதனா முறை முதலியனவற்றின் வேறுபாடுகளும் முக்கிய காரணங்கள் என்பதை மறுத்தலரிது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திலே பாடசாலைகளை நிறுவத் தொடங்கிய மிஷனரிமாரை மூன்றாம் தசாப்தத்தின் இறுதியில் ஈழம் வந்த கோல்புறூக் அவர்கள் விதந்து போற்றியுள்ளார்.[49] அரசாங்கப் பாடசாலைகளோடு ஒப்பிட்டபோது, மிஷனரி பாடசாலைகள் சிறந்த முறையிலே செயற்பட்டு வந்ததை அவர் கண்டு கூறியுள்ளார்.

## VI

மிஷனரிமார் தம் கல்வித் திட்டம் ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரை படிமுறையில் வளர்ந்து செல்வதாக அமைந்திருந்தது. ஆரம்பத் தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் அல்லது ஆரம்ப விடுதித் தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் இருந்து, ஆங்கிலப் பள்ளிக்குச் சென்று, பின்பு மத்திய கல்லூரிக்கு

48. Sir James Emerson Tannent, Christianity in Ceylon, 1850, pp. 144–145.

49. G. C. Mendis (Ed.). The Cole brooke Cameron Papers, 1956, 1, p. 74.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது செமினறிக்குச் செல்லும் வாய்ப்புகளை மிஷனரிமாரின் கல்வித் திட்டம் அளித்தது. வெவ்வேறு தரத்தில் அமைக்கப் பெற்ற தம் கல்விச் சாலைகளிற் போதனை செய்யத் தேவைப்படும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரும் நோக்கோடு பயிற்சிக் கல்லூரிகளைக் கூட அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுத்த முனைந்தனர். தம் பராமரிப்பிலுள்ள பாடசாலைகளை மிஷனரிமார் கருத்தோடு கண்காணித்து வந்தனர். ஆசிரியர்களை வாரந்தோறும் அழைத்து அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கினர்.

கட்டடங்கள், தளபாடங்கள், உபகரணங்கள் ஏற்படுத்தக்கூடிய மனோநிலையைத் திண்ணைகளால் மாணாக்கருக்கு ஏற்படுத்தல் சாலுமோ என்பது சிந்திக்கத் தக்கது. ஆசிரியர் மாணாக்கர் உறவு கடப்பாடுகள் குறைந்ததாக மாற்றமடையத் தொடங்கியது. வரையறுக்கப்பெற்ற பாட நேரங்கள் ‘ குருவே துணை ’ என்ற மந்திர கட்டத்தை நீக்கித் தன்னுணர்வுகளை வளர்க்க வாய்ப்பளித்திருக்க வேண்டும். போதனா முறை தெரிந்த ஆசிரியர்களால் நன்மை அதிகரிக்கும் வாய்ப்புகள் கூடியிருக்க வேண்டும். அச்சியந்திரமும் கடதாசி முதலிய உபகரணங்களும் போதனா முறையிலே மாற்றங்களை ஏற்படுத்தவும் அதனை இலகுவாக்கவும் பேருதவி புரிந்தன.

பழைய கல்வி முறையிலே மனனப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய இன்றியமையாமை நிலவியது. இந்நிலைமை ஈழத்திலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் நான்காம் தசாப்தத்திலிருந்து மாறத் தொடங்கியது. மிஷனரிமார் தம் கல்விச் சாலைகளுக்கு வேண்டிய பாட நூல்களை அச்சிட்டு வழங்க முற்பட்டதால் மனனப்பயிற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிலைக்குத் தள்ளப்பட்டது. முன்பு ஏடெழுதுவோர் பெறவேண்டியிருந்த எழுத்துப் பயிற்சியும் சிரமமிக்கதாகவே இருந்தது. கற்பலகை, கடதாசி முதலிய உபகரணங்களால் எழுத்துப் பயிற்சியும் முன்னைய காலத்திற் போன்று சிரம மிக்கதாக அமையாது இலகுவானதாக அமையத் தொடங்கி விட்டது ; பிரதி பண்ணும் தேவை இன்மையும் அதற்கு ஒரு காரணமாதல் வேண்டும்.

வெஸ்லியன் மிஷனரிமாரும் சேர்ச்சு மிஷனரிமாரும் ஆரம்பக் கல்விக்கும் இடைநிலைக் கல்விக்குமே அதிகம் முக்கியத்துவமளித்தவராவர் ; உயர் கல்விக்கு முக்கியத் துவம் கொடுத்தவர்கள் அமெரிக்கன் மிஷனரிமாராவர்.

ஜோசப் நைற் பாதிரியார் பொறுப்பிலே நல்லூரில் 1823இலே நிறுவப் பெற்ற சேர்ச்சு மிஷன் சங்கத்தின் ஆண் பிள்ளைகள் ஆங்கிலப் பாடசாலை, சுண்டிக்குளிக்கு ஜே. ரி. ஜோன்ஸ்ரன் பாதிரியாரால் 1841இலே மாற்றப் பெற்று. சுண்டிக்குளி செமினறி என்ற பெயருடன் நிலவிப் பின்பு அர்ச். யோவான் கல்லூரி எனப் பெயர் பெற்றது. வெஸ்லியன் மிஷனரிமார் பேர்சிவல் பாதிரியார் பொறுப் பிலே 1834இல் யாழ்ப்பாணம் மத்திய பாடசாலையை நிறுவினர். பெத்தாசினி சுவாமிகள் யாழ்ப்பாணம் கத்தோ லிக்க ஆங்கிலப் பாடசாலையை (யாழ்ப்பாணம் ஆண் பிள்ளைகள் செமினறியை) 1850ஆம் ஆண்டு, ஜனவரி யிலே நிறுவினார். இதுவே பின்பு சம்பத்திரிசியார் கல்லூரி எனப் பெயர் பெற்றதாகும்.

இடைநிலைக் கல்வி வழங்கிய இப்பாடசாலைகளுக்கு முன்பு 1823ஆம் ஆண்டு, ஜூலாய் மாதம், 22ஆம் தேதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டையில் அமெரிக்கன் மிஷனரிமார் ஆரம்பித்த மத்திய பாடசாலை (பின்பு வட்டுக்கோட்டை செமினறி) உயர்கல்வியை அளிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். 1817இலே இந்தியாவில் நிறுவப்பெற்ற செரம்பூர் கல்லூரிக்கு அடுத்ததாகத் தோன்றிய உயர் கல்லூரியாக வட்டுக்கோட்டை செமினறி கருதப்படுகின்றது. 1855ஆம் ஆண்டு, செப்தம்பர் மாதம் மூடப்படும் வரை அது சிறந்த பணியாற்றியது.

> '' முன்னைய காலங்களிலே பெற்றிருந்ததும் சிறந்ததுமான சமயாதீன வன்மை துண்டிக்கப்பெற்று, கட்டுப்பாட்டிற் கப்பாற்பட்ட சந்தர்ப்பங்களின் வலுவாற் பெரும்பாலும் இந்து இளைஞரின் உலகியல் நன்மைக்கே பணிபுரிதவாக அமெரிக்கன் மிஷனரிமார் எண்ணியமையே வட்டுக்கோட்டை செமினறி மூடப்படுவதற்குக் காரணமாகும் ''

எனும் கூற்று[50] கல்வியிற் சிறந்த வகையிற் பணியாற்றிய செமினறி அடிப்படையான சமய நோக்கம் எதிர்பார்த்த அளவு வெற்றி அளிக்காதபோது மூடப்பட்டதைக் காட்டுகின்றது.

> '' இந்த மிஷனின் அறிக்கைகளிலே பள்ளிக் கூடங்களின் ஏற்புடைய நோக்கம் என்று குறிப்பிடப்படுவது கிறித்தவத்தைப் படிப்பிப்பதேயாகும். வேறு பாடங்கள் எவையேனும் பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கப் பெற்றால், அவையும் அந்தப் பாரிய முடிவை விருத்தி செய்யும் கருவியாகவே பயன்படுத்தப்படுவன ''

---

50. W. J. T. Small (Ed.), A History of the Mathodist Church in Ceylon, 1814–1864, p. 216.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வெஸ்லியன் மிஷன் பற்றிக் கூறப்படுவது ஈண்டு நினைவு கூரத்தக்கது.[51]

வட்டுக்கோட்டை செமினறியும் ஏனைய மிஷனரிமாருடைய மத்திய கல்லூரிகளும் புதிய பாடங்களுக்குத் தம் பாடவிதானத்திலே இடமளித்தன. ஆங்கில இலக்கணம், மொழி, இலக்கியம், கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம், தத்துவம், தருக்கம், வரலாறு, புவியியல், வான சாஸ்திரம், பௌதிகம், இரசாயனம் போன்ற பாடங்களைத் தமிழ் மாணாக்கர் வட்டுக் கோட்டையிலே கற்றனர்.[52] தமிழ்க் கல்வியின் விதானம் ஆழமும் விரிவும் அடைய மிஷனரிமார் வழி செய்துள்ளனர். வசன நூல்கள் மூலம் புதிய பாடங்கள் அங்குப் போதிக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

மிஷனரிமார் வழங்கிய புதுமுறைக் கல்வித் திட்டத்திலே விதந்து கூறத்தக்கனவற்றுள் ஒன்று பெண் கல்வியாகும். கிறிஸ்றியன் டேவிட் ''ஒரு பெண்ணை மதம் மாற்றுவது ஆறு ஆண்களை மதம் மாற்றுவதிலும் முக்கியத்துவமுடையது'' என்று கூறினாராம்.[53] மதப் பரம்பலுக்கு வந்த மிஷனரிமார் அக் கூற்றின் தாற்பரியத்தை

---

51. Ranjit T. Ruberu: Educational Work of the Christian Missionary Societies in Ceylon During the early years of British Rule III. The Ceylon Journal of Historical and Social Studies, 4.2, 159 (July/Dec.1961).

52. S. Vithiananthan: Tamil Literature and Scholorship: The Pioneer Work of Christians in Ceylon, Proceedings of the 1st International Conference Seminar, of Tamil Studies, Vol. II, 1969, p. 331.

53. W. J. T. Small (Ed.). A History of the Methodist Church in Ceylon, 1814-1864, p. 320.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு உணர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். 1818இலே அமெரிக்கன் மிஷனரிமார் தம் தெல்லிப்பழைப் பாடசாலையில் ஐந்து பெண் பிள்ளைகளை மட்டுமே சேர்க்க முடிந்தது;[54] பின்பு அவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தது. தெல்லிப் பழைக்குப் பின்பு வேறு நான்கு இடங்களிற் பெண் பிள்ளைகளைச் சேர்த்த அனுபவத்துடன் 1824இலே உடுவில் பெண்கள் விடுதிப் பாடசாலையை ஏறக்குறைய முப்பது பெண் பிள்ளைகளுடன் திருமதி வின்ஸ்லோ தலைமையில் அமெரிக்கன் மிஷனரிமார் ஆரம்பித்தனர். மட்டக்களப்பிலே 1820இலே பெண் பிள்ளைகள் பாடசாலை ஒன்றினை ஆரம்பித்த வெஸ்லியன் மிஷனரிமார் 1834இலே பெண்கள் விடுதிப் பாடசாலை யொன்றினை யாழ்ப்பாணத்தில் ஐந்து பெண் பிள்ளைகளோடு திருமதி பேர்சிவல் தலைமையில் ஆரம்பித்தனர் ; அவர்கள் 1838 வரையிலே வேம்படி வளவுக்குள்ளே பெண்களுக்கான இரு ஆங்கிலப் பாடசாலைகளையும் நிறுவினர். சேர்ச்சு மிஷனரிமார் 1842இலே நல்லூரிலே பெண்கள் விடுதிப் பாடசாலை யொன்றினைத் தொடங்கினர். இதுவும் பின்பு சுண்டிக்குளிக்கு மாற்றப்பட்டது. கத்தோலிக்க மதத் தலைவர் 1850ஆம் ஆண்டு ஜனவரியிலே யாழ்ப்பாணத்திலே பெண்கள் செமினறியை ஆரம்பித்தார். 1875இலே பருத்தித்துறையிலும் 1883இலே கல் முனையிலும் வெஸ்லியன் மிஷனரிமார் பெண்கள் விடுதிப் பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

அமெரிக்கன் மிஷனரிமார் 1818இலே பெண் பிள்ளைகளைச் சேர்க்க முடியாது பாடுபட்ட போதும், 1842இலே சேர்ச்சு மிஷனரிமார் அளவிறந்த விண்ணப்பதாரரை எதிர்

---

54. Ibid, p. 283.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்க வேண்டியிருந்தது.[55] ஆயினும் 1867ஆம் ஆண்டு சட்டசபையின் கல்வி உபகுழுவுக்கு மறுமொழி கூறியபோது யாழ்ப்பாண பிரதிநிதித்துவக் குழுவினர் பெண் கல்வியை ஆதரிக்காமை கவனிக்கத் தக்கது.[56] ஆறுமுகநாவலர் 1848இலே ஆரம்பித்த வித்தியாசாலையிலே 1872இலே தான் பெண் பிள்ளைகளுக்கு இடங் கொடுத்தார்.[57]

மிஷனரிமார் கல்வித் திட்டம் தமிழ்ப் பிரதேசங்களில் நிலவிய சாதியமைப்பையும் பாதிப்பதாக அமைந்தது. சாதி வரம்புகளைப் பேணாது அவர்கள் மாணாக்கருக்குக் கல்வி அளிக்க முற்பட்டார்கள். ஓரிரு சந்தர்ப்பங்களிலே உயர் சாதியினராகக் கருதப்பட்டோருக்கு மிஷனரிமார் விட்டுக் கொடுத்த போதும் பொதுவாகத் தமது நோக்கத்தைச் செயற்படுத்துவதிலே அவர்கள் தயங்கவில்லை. ரென்னன்ட் பிரபு சாதியமைப்பினால் வட்டுக்கோட்டை செமினறியில் ஆரம்பத்தில் ஏற்பட்ட சில பிரச்சினைகளைத் தமது நூலிலே கூறியுள்ளார்.[58] விக்டோரிய இங்கிலாந்தின் வர்க்க அமைப்பினை ஏற்றுக்கொண்ட மிஷனரிமார் சாதியமைப்புத் தம் மதப் பரம்பலுக்குத் தடையாக அமைந்ததைக் கண்டு கொண்டதை மேல்வரும் மேற்கோள் காட்டும்.[59]

---

55. Sir James Emerson Tennent, Christianity in Ceylon, 1850, p. 169.
56. Report on Education, Sessional Paper 1867 Part II, pp. 119–121.
57. S. Thananjayaraja Singam, The Educational Activities of Arumuga Navalar, 1974, p. 57.
58. Christianity in Ceylon, 1850, pp. 145–147.
59. K. M. De. Silva, Social Policy and Missionary Organizations in Ceylon, 1840–1855, 1965, p. 186.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இக்காலத்தில் இலங்கையில் வேலை செய்த மிஷனரி மாரின் கடிதங்களிலும் சஞ்சிகைகளிலும் சாதி பற்றிய ஒவ்வொரு குறிப்பும் பெரும்பாலும் அது மதமாற்றத் திற்குத் தடையாக அமையும் கட்டம் தொடர்பான தாக அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. இதுவே மிஷனரிமாரைப் பொறுத்த வரையில் கிறித்தவப் பரம் பலுக்கு அதி பாரதூரமான இடையூறாக அமைந் திருந்தது. சாதிப் பிரச்சினையில் இக்கட்டத்திலேயே அவர்கள் கவனஞ் செலுத்தினர் "

மினரிமார் வழங்கிய புதுமுறைக் கல்வியிலே குறிப் பிடத்தக்க குறைகளிலொன்றினை வட்டுக்கோட்டை செமி னரி மாணவர் சி. வை. தாமோதரம் பிள்ளை மேல்வரு மாறு கூறுவர்[60] :

" நீந்துதற் றொழிலைக் கற்பிப்பான் ஓர் நீராசிரியன் கற்பானை ஏரி நதி கிணறு குளங்களில் இறங்கவிடாது குடத்திற் றண்ணீர் மொண்டு சிறுகுழியில் விட்டுக் கால் மறையாத் தண்ணீரில் மாரடிக்க விட்டாற் போலக் கடனீரெனில் உடல் கசியும் உப்புப் பூக்குங், குளநீரெனிற், சளி பிடிக்குந் தலைநோவுண்டாம், யாற்று நீரெனிற் சர்ப்பந் தீண்டும் முதலை பிடிக்கும் என்று ஓரோர் நீருக்கு ஓரோர் குற்றஞ் சாற்றி ஒன்றிலும் இறங்கவிடாது ஒரு நீரில் ஒரு குடமும் இன்னொரு நீரிற் பின்னொரு குடமுமாக அள்ளி வைத்துப் படிப்பிக்கும் அவரது முயற்சியாற் பயன் விளைவதேயில்லை. "

---

60. தாமோதரம், 1971, பக். 22.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஷனரிமார் தமிழ் இலக்கியங்களை முழுநூலாகக் கொண்டு போதிக்காமைக்குரிய காரணத்தினை நோக்குவோம் :

" ஆயினும், நாங்கள் பாரதத்தையும் அல்லது நைடதத்தையும் அத்தன்மைத்தான வேறு நூல்களையும் முழுதாகப் படிப்பிக்காமல் (அவற்றின் பல பகுதிகள் பெரும் ஆட்சேபத்திற்குரியனவாக இருப்பதால்) எங்கள் பாடசாலைகளின் பயன்பாட்டிற்காகச் சிறந்த தமிழ்ப் புலவர்களின் நூல்களிலிருந்து தெரிந்து ஒரு தொகுப்பினை அச்சிட்டுத் தமிழ் மாணாக்கர் தாம் விரும்பும் புலவர்களின் நடையையும் பொருள்களையும் அறிந்துகொள்ளும் பொருட்டு அவர்களுக்கு அறிமுகப் படுத்தியுள்ளோம் என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும் "

என்று அமெரிக்கன் மிஷனரிமார் கூறியுள்ளனர்.[61] ஆட்சேபத்திற்குரிய பகுதிகள் எவையென அவர்கள் விண்டு காட்டவில்லை. வெஸ்லியன் மிஷனரிமார் கருத்து அவற்றைக் காட்டித் தருகின்றது.[62]

" மிஷனால் வெளியிடப் பெறாத சகல இலக்கியமும் பள்ளிக்கூடங்களிலே தடுக்கப் பட்டுள்ளன. 1865ஆம் ஆண்டிலே மேல்வரும் குறிப்பு மாவட்டக் கூட்டத்திலே நிறைவேற்றப்பட்டது. மெய்விளக்கம் பெறாதோர் நூல்களை எங்கள் பள்ளிக்கூடங்களிலே அறிமுகப் படுத்துவதைத் தடுக்க, அச்சிடப்பெற்ற சுற்றறிக்கை ஒன்று ஒவ்வொரு பள்ளிக்கூட ஆசிரியனுக்

61. Morning Star, 23 June, 1853, 'Native Education III'.
62. W. J. T. Small (Ed.), A History of the Methodist Church in Ceylon, 1814–1864, p. 179.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கும் ஆசிரியைக்கும் அனுப்பப்படல் வேண்டும். அதிலே அத்தகைய நூல் எதுவும் அவர்கள் பள்ளிக்கூடங் களிலே காணப்படின் அவர்கள் உடனடியாக வேலை யிலிருந்து நீக்கப்படுவர் என்றும் மீண்டும் வேலையிற் சேர்த்துக் கொள்வதற்குத் தகுதியற்றவர்கள் என்றும் விளம்பரப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்படல் வேண்டும் ............... ஆயினும் பெற்றோர் தம் மொழியின் சிறந்த நூல்களாகக் கருதுவனவற் றைப் பிள்ளைகள் வாசிப்பதைத் தடுக்காது, சுதேசிய ஆசிரியர்களின் படைப்புகளிலிருந்து எங்கள் பாட சாலைகளின் பயன்பாட்டிற்காக ஒரு தெரிவு செய்யப் படும். அப்பொழுது நடத்தைக்கு முரணானவையோ அல்லது வேறு வகையில் ஆட்சேபத்திற்குரியனவோ ஆகிய சகல பகுதிகளும் நீக்கப்படும் ''

கிறித்தவ மிஷனரிமார் ஏனைய மதத்தவரின் கருத்துகளைக் கூறும் பகுதிகளைத் தம் பாடசாலைகளில் அனுமதிக்காமல் தடுக்கவே தமிழ் இலக்கியங்களிலிருந்து பாடல்களைத் தெரிந்து வழங்கினார்கள். அவர்தம் தெரிவு முறை மதத் தினையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. மத அடிப் படையைக் கொண்டிருந்த தமிழ் இலக்கியத்திலே அவர்தம் வேலை அரிதாக முடிந்தது. எனவே தமிழ் இலக்கியத்தின் பெரும் பகுதி — உயிர்ப் பகுதி — மிஷனரிமார் கல்வியிலே தவிர்க்கப்பட்டு, அறம் நீதி உணர்த்தும் பகுதிகளே பாட மாக அமைந்தன. நீதிநூற்றிரட்டு, தமிழ்ச் செய்யுட் கலம்பகம் முதலான தொகுப்புகளுக்கான சூழல் எவ்வாறு எழுந்தது என்பது தெளிவாகின்றது.

மிஷனரிமார் வழங்கிய கல்வியைப் பற்றி ஆறுமுக நாவலர் கூறும் கருத்து அக்கல்வியின் அடிப்படையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக்குகின்றது :[63]

"It would however be dis in genous on his part were he to hesitate respectfully and with deference to express his own conviction that had the influence in the Missionary Schools been less exacting in the renunciation of the conscientious attachment to the religious predilection entertained by the Tamil Youths instructed therein, the latter would have derived morally greater advantages from the tuition imparted to them".

மிஷனரிமாருக்குக் கல்வி காரணமே யன்றிக் காரியமாக அமையவில்லை. மதமாற்றத்திற்குக் கருவியாகவே கல்வி கருதப்பட்டது. ஆரம்பப் பள்ளியிலிருந்து செமினறி வரை கிறித்தவ மதக் கல்வி இன்றியமையாத இடத்தினைப் பெற்றிருந்தது. வாசிப்பு, சொல்வதெழுதல் என்பனவற்றில் மட்டுமன்றி புவியியல், வான சாஸ்திரம், வரலாறு முதலியனவற்றிலும் கிறித்தவக் கல்வி முக்கியத்துவம் பெற்றிருந்தது. கல்வியில் மட்டுமன்றிக் கல்விச் சூழலிலும் கிறித்துவம் போற்றப்பட்டது.

" அநுமதிக்குப் பூர்வாங்கமாகக் கிறித்தவ மத நம்பிக்கை வெளிப்படையாக அறிவிக்கப்படல் வேண்டும் என்பது தேவைப்படவில்லை. ஆனால், மாணவனாகப் பதியப்பட்டவுடன், சிறிய இந்து மாணவன், எந்தச் சமயத்தின் உதவிகளுக்கு மிக்க கடமைப்பாடு உடையவனாயினானோ அதற்கு வெளிப்படையாக மதிப்புக்

63. S. Thananjayaraja Singham : The Educational Activities of Arumuga Navalar, 1974, p. 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ட, தன் சுரூப வழிபாட்டினை வெளிக்காட்டும் சின்னங்களைத் தற்போதைக்கு ஒதுக்கி வைக்க வேண்டியிருந்தது. அவன் நெற்றியிலே திருநீறு இட்டுக்கொண்டு நுழைய அனுமதிக்கப்பட மாட்டான். ஒவ்வொரு மாணவனும், அவன் மெய்விளக்கம் பெறாதவனோ அல்லது மதம் மாறியவனோ, ஓய்வுப் பருவத்திலே பொது வழிபாட்டிலே பங்குகொள்ள வேண்டி இருந்ததோடு, ஒவ்வொரு நாளும் கிறித்தவ வேதாகமங்களை வாசிப்பதிலும் கிறித்தவத்தின் ஆரம்பக் கோட்பாடுகளைப் படிப்பதிலும் கலந்து கொள்ள வேண்டியும் இருந்தது''

(ரென்னென்ட்)[64]

பாடசாலை ஆணைக்குழு பெற்றோர் அல்லது பராமரிப்பாளரின் விருப்புக்கு எதிராக, அவர்களுடைய பிள்ளைகளுக்குச் சமய போதனை கட்டாயமாக்கப்படக் கூடாது என்பதை உதவிப்பணம் பெறுவதற்கு ஒரு நிபந்தனையாகக் கொண்டிருந்தபோதும், உதவிப் பணம் பெற்றுத் தம் பாடசாலைகளை நடாத்திய மிஷனரிமார் அந்நிபந்தனையைப் புறக்கணித்தே வந்தனர். அரசும் அச் செய்கையைத் தெரிந்திருந்த போதும் பாராமுகத்துடன் உதவியைத் தொடர்ந்து செய்து வந்தது. இதனால் ஏற்படுத்தப்பட்ட பொதுசன அபிப்பிராயத்தினாலே பாடசாலை ஆணைக்குழு சமயபோதனையை விருப்புக்கு மாறாகத் திணிப்பதை அனுமதிக்க முடியாத நிலை உருவாகியது. இதனால் அமெரிக்கன் மிஷனரிமார் 1855இலும் சேர்ச்சு மிஷனரிமார் 1862இலும் அரச நிதியுதவியைக் கைவிட்டுத் தனித்தியங்க முற்பட்டனர். வெஸ்லியன் மிஷனரிமாரும்

---

64. Sir James Emerson Tennant, Christianity in Ceylon, 1850, p. 148.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதலிக மிஷனரிமாரும் ஆணைக்குழுவின் நிபந்தனைகளை ஏற்று, சமய போதனையை விருப்புக்கு மாறாக வற்புறுத்தாது தொடர்ந்து அரச உதவிப் பணம் பெற்றுவந்தனர்.

மிஷனரிமார் கல்வித் துறையினைத் தம் ஏகபோக உரிமையாகவே வைத்திருக்க விழைந்தனர்; தம் மதச் சார்பற்ற கல்வி யெதனையும் கால்கொள்ள விட அவர்கள் விரும்பவில்லை.

> "The British Government both in theory and practice, did regard the Christian element, as contained in the revelation of God, as a primary and indispensable importance in every education whether for natives or Europeans."

என்பது 'உதய தாரகை' ஐந்து இதழ்களிலே நாவலரவர்களின் வித்தியாசாலைக்கு நிதியுதவி கோரியபோது வெளியிட்ட கண்டனங்களின் சாராம்சமாகும்.[65] ஸ்போல்டிங் பாதிரியார்,

> "I understand that the Jaffna Saivites claim for a Government College where Heathenism with all its abominations may be patronised by Government. Such a step would prove positively that Victoria is not only a defender of our Faith, but a defender, promoter and patroness of Saivism."

என்று சட்டசபையின் கல்வி உபகுழுவுக்கு 1867இலே அனுப்பிய மறுமொழியிலே கூறலும் கவனிக்கத் தக்கது.[66]

---

65. 28 July 1853.
66. Appendix to *Report on Education*, Sessional Paper, 1867, Part II, p. 99.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மனோபாவத்தோடு செயலாற்றிய மிஷனரிமார் கேந்திரமான இடங்களிலே பாடசாலைகளை அமைத்து, ஏனையோர் அவ்வெல்லைகளுக்குள்ளே தம் பாடசாலைகளை நிறுவி அரசாங்க நிதியுதவி பெற முடியாதவாறும் செய்து வந்தனர். நாவலரவர்கள் 1872இலே நிறுவிய சைவ ஆங்கில வித்தியாசாலைக்கு அண்மையிலே கிறித்தவ பாடசாலை ஒன்று இருந்ததால் அரசாங்கம் நிதியுதவி மறுத்தமை ஈண்டு மனங் கொளத் தக்கது.

## VII

கிறித்தவ மிஷனரிமாரின் எதிர்ப்பின் மத்தியிலே 1848இலே தோன்றியதுதான் வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை. அதற்கு முன்பு அ. அருளம்பல முதலியாரின் ' உடுப்பிட்டிப் பள்ளிக்கூடம் ' (தருமப்பள்ளிக்கூடம்), வல்வை குமாரசுவாமி முதலியாரின் ' உடுப்பிட்டி திரு. வல்வை குமாரசுவாமியார் பள்ளிக்கூடம் ' முதலிய சில பள்ளிக்கூடங்கள் ஆங்காங்கே நிலவி வந்தன. ஆயினும், அவை மிஷனரிமாரின் சமயப் பரம்பல் நோக்கிற்கு இடையூறாக அமையவில்லை. உடுப்பிட்டிப் பள்ளிக்கூடத்திலே 1844ஆம் ஆண்டு பின்பற்றப்பட்ட பாட விதானத்தை நோக்கும்போது இவ்வுண்மை தெளிவாகும்.[67] மேலும் அருளம்பல முதலியாரும் குமாரசுவாமி முதலியாரும் அமெரிக்கன் மிஷனரிமாரின் நண்பர்களாக விளங்கி அவர்களுக்குப் ' பூதானம் ' செய்தவர்கள் என்பதுவும் மறக்கொண்ணாதது. குமார சுவாமி முதலியார் கிறித்துநாதர் மீது பாடிய ஐந்து கீர்த்தனங்கள் ' குமாரசுவாமி முதலியார் கவித்திரட்டு ' எனும் தொகுப்பிலே இடம் பெறுகின்றன.

---

67. மு. இராமலிங்கம் " நாவலருக்கு முந்திய கல்வி முயற்சிகள் "—2, ஈழநாடு, 29-10-1971.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்துவப் பரம்பலைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் 1842ஆம் ஆண்டு, அக்தோபர் மாதம், 22ஆம் தேதி ஆரம்பிக்கப் பெற்ற வேதாகமப் பள்ளிக்கூடம் செட்டிமாருடைய ஆதரவு பெற்றிருந்தும் முன்னேற முடியாமல் நின்று விட்டது. 1848ஆம் ஆண்டு வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை தோன்றிய போது, அமெரிக்கன் மிஷனரி மாருக்கு மட்டும் யாழ்ப்பாணத்திலே 105 தமிழ்ப் பள்ளிக் கூடங்களும் 16 ஆங்கிலப் பள்ளிக் கூடங்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.[68] கிறித்தவரின் எதிர்ப்பினால் 22 வருடங்களாக நிதியுதவி பெறாமல் நடத்தப்பெற்றதுதான் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை.

யாழ்ப்பாணம் வெஸ்லியன் மத்திய பாடசாலைக்குப் பன்னிரு வயதிலே ஆங்கிலம் கற்க அனுப்பி வைக்கப்பெற்ற ஆறுமுகநாவலர் பதின்மூன்றாம் வயதளவிலே சிவபெருமானை நோக்கிச் சைவ சமயம் குன்றுதலைப் பற்றி வெண்பா ஒன்று பாடினதுண்டு.[69] விபவ ஹு, சித்திரை மீ (1868) வெளியிட்ட சைவ சமயிகளுக்கு விக்கியாபனம்' என்ற பத்திரிகையில் நாவலரவர்கள் தம் இளமைக் காலத்துக் கவலைகளைப் பற்றியும் கூறியுள்ளார்.[70] 1842 இலே வேதாகமப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க எடுக்கப் பெற்ற முயற்சிகளிலும் நாவலரவர்கள் பங்குகொண்டனர்.[71] விசுவாவசு ஹு, தை மீ (1846) முதல் இரவிலும் காலையிலும் சைவ சமயப் பிள்ளைகளைச் சேர்த்துக் கருவி நூல்

---

68. S. Kulendran : *Prize Day Speech* Jaffna College, Vattukottai, 23rd February, 1963. Madras-1964.

69. த. கைலாச பிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 17.

70. ஷெ நூல், பக். 20.

71. K. Arumainayagam: Hindu Educational Movement 1840–1880, *Tribune*, 23 Oct. 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் சமய நூல்களையும் வேதனம் பெறாது நாவலரவர்கள் கற்பிக்கத் தொடங்கினார். இத்திண்ணைப் பள்ளிக்கூடம் அளித்த ஊக்கத்தினாலும் இறை நம்பிக்கையினாலும் துணிந்து கீலக ஸு, ஆவணி மீ, ஐந்தாம் தேதி (1848) அவர் வண்ணையிலே சைவப் பிரகாச வித்தியா சாலையைத் தாபித்தார். பிதிரார்ச்சிதமோ தேட்டமோ பொருளுதவியோ இன்றித் தொடங்கப் பெற்ற வித்தியா சாலை, வண்ணை வைத்தீசுவரன் கோயிலுக்கு எதிரேயுள்ள வீட்டிலும் பின்பு அக்கோயில் மடத்திலும் இயங்கி, அடுத்து வண்ணையில் அ. ஆறுமுகச் செட்டியார் கொடுத்த நிலத்திலே புண்ணியவான்களுடைய உதவியினால் அமைக்கப் பெற்ற கட்டடத்திலே சாதாரண ஸு, தை மீ (1851) முதலாக நடாத்தப் பெற்றது. இவ் வித்தியாசாலையிலே நாவலரவர்களிடம் விசுவாவசு ஸு முதல் வேதனம் கொடாது பயின்ற நல்லூர் க. சதாசிவப்பிள்ளை, வண்ணை கு. ஆறுமுகச் செட்டியார், இணுவில் நடராசையர், ஆறுமுகப் பிள்ளை (பின்பு ஆறுமுகத் தம்பிரான்), கந்தசுவாமிப் பிள்ளை, சுவாமிநாதையர், விசுவநாதையர் எனும் எழுவரும் நாவலரவர்களுடன் ஆசிரியர்களாக விளங்கினர்.

> '' அவ்வித்தியாசாலையிற் படிப்பித்தவர்கள் அவர் மாணாக்கராதலால் வேதனம் பெறாது படிப்பித்து வந்தார்கள். பின்னர் அவ்வித்தியாசாலையை, பிடியரிசி தண்டி, அதனாலே சிலகாலம் உபாத்தியாயர்களுக்கு வேதனங் கொடுத்து நடத்தி வந்தார். பின்பு பிடியரிசி வரவு தண்டற் கூலிக்குத் தானும் போதாமை கண்டு விடப்பட்டமையால், உபாத்தியாயர்களுட் சிலர் நீங்கிவிட, சிலர் படிப்பித்து வந்தார்கள் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர் வே. கனகரத்தின உபாத்தியாயர்.[72] 1852இலே நாவலரவர்களும் ஏனையோரும் அண்டர்சன் பிரபுவுக்கு அனுப்பிய மனுக்களை நோக்கும்போது, அப்பொழுது பிடியரிசி தண்டுவதனால் வருடாந்தம் 20 அல்லது 24 பவுண் வருமானம் கிடைத்ததாகவும், அதிலிருந்து எழுவருள் ஒரு சில ஆசிரியரே சிறிது வேதனம் பெற்றதாகவும், ஏனையோர் எதுவும் பெறவில்லை என்பதுவும், மிதமாக வேதனம் வழங்குவதானாலும் 100 பவுண் தேவைப்படும் என்பதுவும் கூறப் பெற்றிருத்தல் காணலாம்.[73] காலயுத்தி ஞூ, சித்திரை மீ (1858) முதலாகவே நாவலரவர்களின் வித்தியாசாலை ஆசிரியர்கள் முறையாக வேதனம் பெறத் தொடங்கினார்கள். அப்பொழுது மு. தில்லைநாத பிள்ளை (–1867) வித்தியாசாலையின் முதலுபாத்தியாயராக நியமனம் பெற்றார். அவரை யடுத்து மா. வைத்திய லிங்கபிள்ளை (–1902) முதலுபாத்தியாயரானார்.

1852ஆம் ஆண்டிலே வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையிலே 189 மாணவர் வரை படித்தார்கள் ; 1870இலே அங்கு 260 மாணாக்கர் கற்றனர்.[74] இவர்களிலே பலர் 10, 15, 20 மைல்களுக்கு அப்பால் இருந்தும் வந்து, வேறிடங்களிலே தங்கியிருந்து கொண்டு படித்தார்கள். வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையிலே 1852இல் எட்டு வகுப்புகள் அமைந்திருந்தன.

நாவலரவர்களும் யாழ்ப்பாணத்துச் சைவப் பெருமக்களும் வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையை

---

72. ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம், 1968, பக். 25, 39.

73. S. Thananjayaraja Singham : The Educational Activities of Arumuga Navalar, 1974, pp. 17, 24.

74. Ibid, pp. 16, 57.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் நிதியுதவிக்கு 1852 இலே அண்டர்சன் பிரபுவுக்கு விண்ணப்பித்தபோது, யாழ்ப்பாணத்துச் சைவ மக்களுக்கு இருந்த முக்கியமான வித்தியாசாலை அதுவொன்றே. ஆனால், அவ்வாண்டிலே வெஸ்லியன் மிஷனரிமார் எட்டுப் பாடசாலைகளையும், சேர்ச்சு மிஷனரிமார் 29 பாடசாலைகளையும், அமெரிக்கன் மிஷனரிமார் 95 பாடசாலைகளையும் குடா நாட்டிலே நடாத்தி வந்தனர்.[75] பல ஆண்டுகளாக அமெரிக்கன் மிஷனரிமாருக்கு 200 பவுனும் வெஸ்லியன் மிஷனரிமாருக்கு 150 பவுனும் சேர்ச்சு மிஷனரிமாருக்கு 150 பவுனும் 1851இலே இருந்து கதலிக மிஷனரிமாருக்கு 150 பவுனும் நிதியுதவியாக வழங்கிய காலனித்துவ அரசு, சைவர்களுடைய விண்ணப்பத்திற்குச் செவி சாய்க்கவில்லை ; கிறித்துவ வேதாகமத்தை ஆங்கிலப் பாட நூலாக ஆக்கிய பின்பே, 1870இலே, நிதியுதவி கொடுத்தது. ஆங்கிலம் அங்குப் பாடமாக இருந்தபோதும் சுய பாஷைப் பள்ளிக்கூடமாகப் பதிந்து, ஆங்கிலப் பள்ளிகளிலும், குறைந்த நிதியுதவியே அளித்தனர்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களைப் பற்றியோ குருகுலங்களைப் பற்றியோ கவலையுறாத மிஷனரிமார் நாவலரவர்கள் வித்தியாசாலை தோன்றியபோது அச்சங்கொண்டு ஆவேசமாக எதிர்த்தமைக்குக் காரணம் காண்பது எளிது. பழைய கல்வி முறையின் நல்ல அமிசங்களையும் புதிய கல்வி முறையிற் பாரம்பரியமான பண்பாட்டுக்கு உகந்த அமிசங்களையும் சேர்த்து நாவலரவர்கள் சைவ சமயப் பண்பாட்டினைப் பேணும் கல்வித் திட்டத்தை உருவாக்கி

75. K. Arumainayagam, Hindu Educational Movement, 1840–1880, *TRIBUNE*, 23 Oct, 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டமையே காரணமாகும். அத்திட்டத்தின் செயற்பாட்டினால் தமது சமயப் பரம்பல் தடைப்படும் என்று மிஷனரிமார் அச்சங்கொண்டு எதிர்த்தனர்.

## VIII

மிஷனரிமார் கல்விப் போதனையிலே பாரம்பரியமாகத் தமிழ் மக்கள் போற்றிவந்த கோட்பாடுகளும் சிந்தனைகளும் எள்ளி நகையாடப் பெற்றன. அவற்றைப் போதித்து வந்த ஆசிரியரும் சமூகத்திலே வகித்து வந்த இடத்தினை இழக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆங்கிலக் கல்வியின் முன் அவர்கள் பரிதாபத்திற்கு உரியவரானார். அவர்கள் தமிழ்ச் சமூகத்திலே புது அலையினால் பெற்ற அவமதிப்பினை ராஜமையரின் கமலாம்பாள் சரித்திரத்தில் வரும் ஆடுசாபட்டி அம்மையப்பப் பிள்ளை மூலம் அறியலாம். கல்வியிலும் சமயப் பரம்பலுக்கு முக்கியத்துவம் கொடுத்த மிஷனமார் ஆசிரியர்களைக் கருவிகளாகவே கருதினர். பாரம்பரியமாக அவர்கள் பெற்றுவந்த சமூக மதிப்பினைக் குறைப்பதனாற் கிறித்தவ சமயப் பரம்பல் இலகுவாகும் என்பதை உணர்ந்த மிஷனரிமார் அவர்களுக்கு உயர்ச்சி கொடுக்க முன்வராதது வியப்பிற்குரியதன்று.

குரு சிஷ்யக் கல்வி முறையின் அடித்தளமாக அமைந்திருந்த குரு மதிப்பின் சிறப்பினை உணர்ந்த நாவலரவர்கள் ஆசிரியர்களின் சமூக அந்தஸ்தினை உயர்த்த முன்னின்றார்.

'' உபாத்தியாயருக்கு அமைந்து நட ''[76]

'' அழிவு உள்ளதும் துக்கமயமுமாகிய உன் சரீரத்தைத் தம் பயன் கருதிப் பெற்று வளர்த்த உன் தந்தை

---

76. ஆறுமுகநாவலர், பாலபாடம் முதற்புத்தகம், 1950, பக். 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யரினும், அழிவு இல்லதும் இன்ப மயமுமாகிய உன் அறிவை உன் பயன் கருதிப் பெற்று வளர்த்த உன் ஆசாரியரே மேலானவர் "[77]

"ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச் சிறந்த கருவி "[77]

"(கல்வி கற்றற்கு) மிகச் சிறந்த கருவி ஆசிரியருடைய உள்ளத்திலே அருளுண்டாகும்படி நடத்தல். ஆதலினாலே கல்வி கற்கும் மாணாக்கர் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும். வழிபாடாவது, இன்சொற் சொல்லல், வணங்குதல், உற்றவிடத்துதவுதல் முதலாயின "[78]

பால பாடங்களிலே மாணாக்கருக்கு நாவலரவர்கள் கூறிய, முற்கிளந்த பகுதிகள் அக்காலப் பின்னணியில் வைத்து நோக்கப்பட வேண்டியவை. அதே நேரத்தில் நாவலரவர்கள்,

"தாங் கற்ற கல்வியை நன்மாணாக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சு மா மரமாவர் "

என்று கூறுவதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.[79]

பாரம்பரியமாகப் போற்றப்பெற்று வந்த பழைய கல்வி முறையிலே முழுநூல்களைப் பாடஞ் சொல்வதே வழக்காக இருந்து வந்தது. மிஷனரிமார் இவ்வழக்கினை

---

77. ஆறுமுகநாவலர், பாலபாடம் இரண்டாம் புத்தகம், 1949, பக். 8.

78. ஆறுமுகநாவலர், பாலபாடம் நான்காம் புத்தகம், 1950, பக். 46.

79. ஷெ நூல், பக். 49.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றி யமைத்ததையும் அதற்கான காரணத்தையும் முன் னர்க் கண்டோம். நாவலரவர்கள் பழைய முறையையே தம் வித்தியாசாலையிற் செயற்படுத்தினார். பெரிய புராண வசனம், சூடாமணி நிகண்டு, நைடதம் முதலாயின ஒன் றிற்கு மேற்பட்ட வகுப்புகளிலே பாடஞ் சொல்லப்பட்ட இவ்வுண்மையை வற்புறுத்துகின்றது.

மிஷனரிமாரிடம் கற்று, அவர்களிடம் ஆசிரியர்த் தொழில் புரிந்த நாவலரவர்கள், மிஷனரிமாரைப் போன்று, கல்வியைக் கருவியாகக் கருதினார் ; சைவ சமய வளர்ச்சிக் குக் கருவியாக நாவலரவர்கள் கொண்டனர். அவருடைய வித்தியாசாலைப் பெயரும் அவ்வித்தியாசாலையின் பாட விதானமும் அவர்தம் சமய நோக்கத்தினைப் புலப்படுத்து வன. கருவி நூல்களையும் லௌகிக நூல்களையும் கற்பித்து வந்த பரம்பரையினருக்குச் சமய நூல்களை இன்றி யமையாதனவாக்கிப் பண்பாட்டுப் பேணலுக்கு நாவலரவர் கள் வழியமைத்தனர்.

> " கிறிஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமய நூலைத் தாங்கள் கற்றும், வெகு திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிற ருக்குக் கற்பித்தும், தங்கள் ஆலயங்களிலும் பிற இடங் களிலும் யாவர்க்கும் போதித்தும், வருகிறபடி யினாலே, அவர்கள் சமயம் எத்தேசங்களிலும் வளர்ந் தோங்கி வருகின்றது. நம்முடைய சைவ சமயிகள் சைவ நூல்களைக் கல்லாமையினாலும், எங்கேயாயி னும் சிலர் கற்றாலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்த லும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயா சாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும், நமது சற்சமயமாகிய சைவ சமயம் வரவரக் குன்று கின்றது "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நாவலரவர்களின் கூற்று,[80] அவர்தம் நோக்கத்தினையும் முன் மாதிரியையும் விளக்குவதாகும்.

> " அழுக்குப் படியாத சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும் ; அழுக்குப் படிந்த சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்க மாட்டாது. சிறு பிராயத்தில கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப் பதியும். புத்தி சமுசாரத்திலே விழுந்து வருத்தத்தை அடைந்து கொண்டிருக்கின்ற முதிர்ந்த பிராயத்திலே கற்றாலும் கல்வி நன்றாகட் புத்தியிலே பதியமாட்டாது "

என்று கூறும்.[81] நாவலரவர்களின் கல்வித் திட்டம் சிறுவர் முதல் வாலிபர் வரை பொருந்துமாறு அமைக்கப் பெற்றது. எண்ணக் கரு வளர்ச்சி பற்றிய பூரண உணர்வுடன் அமைக்கப்பெற்ற திட்டமாக அது அமைவதை அவருடைய பாடநெறிகள் காட்டுவன. முதலிரு பால பாடங்களும் பிற்காலத்தில் எழுதிய சைவ வினாவிடைகளும் இவ்வுணர்வுடன் எழுதப் பெற்றவை ; மூன்றாம் பால பாடம் (நான்காம் பால பாடமாக வழங்குவது) இரண்டாம் பால பாடத்திற்கு அடுத்து வைக்கத் தக்கதாகக் கூறுவதற்கில்லை ; வண்ணைப் பிரசங்கங்களின் தொகுப்புப் போல அது காணப்படுகின்றது. பழைய தமிழ்க் கல்வி முறையிலே இத்தகைய எண்ணக் கரு வளர்ச்சி உணர்வினை நாம் எதிர்பார்த்தல் பொருந்தாது. மிஷனரிமார் பயன்படுத்திய முறையினை நாவலரவர்கள் தம் நோக்கத்திற்கேற்பப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

---

80. த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 36.

81. ஆறுமுகநாவலர், பாலபாடம் நான்காம் புத்தகம், 1950, பக். 46.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' தமிழ்க் குருகுலத்தில் பிரமசாரிகள் படிக்கப் பாடப் புத்தகம் தேடினோம். ' நாவலர் பால பாடத்தை விட நயமான புத்தகம் உண்டா ? அதையே மாணவர் படிப்பது சிறந்தது ' என்றார் வ. வே. சு. ஐயர் ''

என்பர் சுத்தானந்த பாரதியார்.[82] இருபதாம் நூற்றாண்டு விமர்சகர்களின் முன்னோடிகளுள் ஒருவரான வ. வே. சு. ஐயர் கூற்று கவனிக்கத் தக்கது.

'' நாவலர் எழுதிய பால பாடங்கள் மூலமாக அந்நிய நாட்டிலிருந்து இங்கு வருவோர் இந்நாட்டு மக்களின் பழக்க வழக்க ஒழுக்கங்களையும் கொள்கைகளையும் அறிதலாகும் ''

எனும் சென்னை ' நேரிவ் பப்ளிக் ஒபீனியன் ' எனும் ஆங்கிலப் பத்திரிகையின் கருத்து.[83] நாவலர் பால பாடங்களின் அடிப்படையைத் தெளிவாகக் காட்டுவதாகும். சைவப் பண்பாட்டுணர்வினை இளமையிலே திடமான அத்திவாரமாக இடமுனைந்த நாவலரவர்கள், கிடைத்தற்கரிய ஏடுகளாக உலவிய நூல்களைப் பதிப்பித்தும், அவற்றிற்கு உரை தந்தும், அவற்றை வசனமாக எளிதுபடுத்தியும், அதனை விருத்தியாக்கி, அந்நிய மதத்தவரிலிருந்து அதனைப் பாதுகாத்து நின்றனர்.

நாவலரவர்கள் மிஷனரிமாரைப் பின்பற்றிக் கல்விக்குகந்த புதிய உபகரணங்களைப் பயன்படுத்தினார். ஓலையின் உபயோகம் தொடர்ந்தபோதும், காகிதத்தில் எழுது

---

82. நாவலர் பெருமான், 1948, பக். 2.
83. கா. பொ. இரத்தினம் (தொகுப்பு), நாவலர் நினைவு மலர், 1938, பக். 94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஏடுகளுக்குப் பதிலாகக் கல்விக்குப் புத்தகங்கள் பயன்படுத்தப் பெற்றன. இவற்றின் உபயோகம் கல்வியை நவீனமயப்படுத்தின என்பதை மறுத்தலரிது.

வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் பாடவிதானத்தை நோக்கும்போது மிஷனரிமார் அறிமுகஞ் செய்த அறிவியற் பாடங்கள் பல இடம் பெறாமை காணக் கூடியதாகவுள்ளது. வெஸ்லியன் மிஷன் பாடசாலையிற் பயின்ற நாவலரவர்கள் அவற்றை அறியாதவராக இருக்க முடியாது. ஆயினும் அவற்றைத் தம் வித்தியாசாலையிற் போதிக்க அவர் முற்படவில்லை.

> " I believe that the training which they receive at the Saivite School is Calculated to make estimable and useful member of society. It is not intended to furnish them with technical knowledge, Scientific attainments butrather to include religion and morality as the best bases of the boy's characted."

என்று எச். எஸ். ஓ. ரசல் 1869இலே நாவலரவர்கள் வித்தியாசாலையின் பயன்பாட்டைக் கூறியுள்ளார்.[84] நாவலரவர்களும் அவரைச் சார்ந்தோரும் 1852இலே அனுப்பிய மனுக்களை நோக்கும்போது மாணாக்கருக்குப் பயன்படக் கூடியனவாகவும் லாபகரமாகவுள்ளனவுமான பயிற்சி முறைகளையும் அறிமுகப்படுத்த ஆவலுடையவராக நாவலரவர்கள் இருந்தமை புலனாகும்.[85] ஆயினும், சங்கத

---

84. S. Thananjayarajasingam : The Educational Activities of Arumuga Navalar, 1974, p. 48.
85. Ibid., pp. 17, 24.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களையே நியமிக்க முடியாது திண்டாடிய நேரத் திலே நாவலரவர்கள் லௌகிக நூற் கல்வியை எவ்வாறு விருத்தி செய்திருக்க முடியும் என்பது சிந்திக்க வேண்டியது.

> " சைவ சமயிகளே !.............சாதாரணக் கல்வி விசாரணைத் தலைமைத் துரைக்கு விண்ணப்ப மெழுதிக் கவர்ண்மெண்டாரிடத்திலே பொருளுதவி பெற்று, லௌகிக நூற் கல்வியை விருத்தி செய்யுங்கள். அதற்குப் பாதிரிமார்கள் இடையூறு செய்யின், நீங்க ளெல்லாந் திரண்டு கொழும்புக் கவர்ண்மெண் டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள். அதற் குக் கொழும்புக் கவர்ண்மெண்டார் பராமுகர்களா யிருப்பின் இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள். இந்தியாவை யாளும் இங்கிலாந்துக் கவர்ண்மெண்டாரே இலங்கை யையும் ஆளுகின்றனர். இந்தியாவிற் குடிகளனுப்பும் விண்ணப்பங்களைச் சீர்தூக்கிப் பார்த்து அவர் களுக்கு நன்மை செய்யுங் கவர்ண்மெண்டார், இலங் கையிற் குடிகள் விண்ணப்பமனுப்பினால், அதைச் சீர்தூக்கிப் பார்த்து நன்மை செய்யாது விடுவார் களா ? குற்றம் உங்களிடத்ததே யன்றிக் கவர்ண் மெண்டாரிடத்தன்று "

என்று 'யாழ்ப்பாணச் சமயநிலை'யிலே நாவலரவர்கள் கூறுவது[86] மனங் கொளத் தக்கது. நாவலரவர்கள் வேண்டுமென்றே லௌகிகக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காது விட்டுவிட்டார் என்று கூறுதல் பொருத்த மாகத் தெரியவில்லை. அவரால் அப்பொழுது எதைச் செய்யக் கூடியதாக இருந்ததோ, அதனையே அவர் செய்

86. த. கைலாசபிள்ளை (தொகு.) ஆறுமுகநாவலர் பிர பந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 71-72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர் என்று கூறுவதிற் பிழையிருப்பதாகத் தெரியவில்லை. அவரால் அப்பொழுது கிறித்தவ சமயப் பரம்பலைத் தடுத்து நிறுத்தும் முயற்சிகளையே செய்ய முடிந்தது. அதற்குரிய திட்டத்தினையே அவர் செயற்படுத்தினார். அதற்கு அப்பாற் செல்ல அவருக்கு ஆதரவு கிடைக்கவில்லை ; நேரமும் இருக்கவில்லை. காலனித்துவ அரசாங்கமும் மிஷனரிமாருக்கு எதிராக எதனையும் செய்ய முன்வரவில்லை. 1855இலே வட்டுக் கோட்டை செமினறி மூடப்பட்ட காலத்திற்கு முன்பிருந்து தமிழ் மக்கள் செய்த விண்ணப்பங்கள் யாவும் புறக்கணிக்கப்பட்டே வந்தன. 1872இலே மீண்டும் அமெரிக்கன் மிஷனரிமாரே காலேஜ் நிறுவினார்கள். நாவலரவர்கள் கிறித்தவப் பரம்பலைத் தடுக்கும் முகமாகச் சைவப் பண்பாட்டினை உணர்த்தும் வித்தியாசாலைகளின் தாபகராகவே, ஆதரவின்மையால், அமைய வேண்டியிருந்தது. அவர் முன் மாதிரியைப் பின்பற்றி யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பல இடங்களிலும் சைவ வித்தியாசாலைகள் உருவாகியமை குறிப்பிடத் தக்கது.

ஆறுமுகநாவலரின் கல்வி முயற்சிகள், மிஷனரிமாரின் மதப்பரம்பல் வேகத்தினைத் தணித்து, தமிழ்க் கல்விக்குப் புதிய அமிசங்களை அளித்து, சைவ பாரம்பரியம் கால் கொள்ள வழியமைத்துக் கொடுத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

# 4. சிதம்பர மான்மியம்

## I

ஆறுமுகநாவலர் " 'றோசா'ப் பூவில் மிக்க பிரீதி யுடையவர். அதனை அதிகமாக உபயோகித்துத் தமது பூசையைச் செய்கின்றவர். அப்படி அவ்வளவு விருப்ப முடையவராயிருந்தும், இரண்டாம் சைவ வினா விடை எழுதும்போது அதிற் பூசைக்குரிய புட்பங்கள் எழுது மிடத்து, இந்த 'றோசா'வுக்கு ஜபா முதலிய பெயர்கள் சம்ஸ்கிருத அகாராதிகளிலிருந்தும், அதனைப் பூசைக்குரிய புட்பங்களோடு சேர்க்கலாமோ சேர்க்கலாகாதோ என்று பலமுறை ஆலோசித்து, இறுதியிற் புட்பவிதி முதலிய நூல் களில் இல்லாமையினாலே சேர்க்காதுவிட்டார் "[1]. இத் தகைய இயல்பினரான நாவலரவர்கள் சிதம்பர மகிமை பற்றி உரைத்தவை மேல்வரும் கூற்றுகள் :[2]

" எல்லாவறிவும் எல்லா முதன்மையும் எல்லாவநுக்கிரக மும் உடைய முழுமுதற் கடவுள் தாம் ஒருவரேயாய்ப், பசுக்களாகிய ஆன்மாக்களெல்லாந் தமக்கு என்றும் உடைமைப் பொருள்களே யாகத் தாம் என்றும் உடை யவராயே நின்று, பசுபதி எனப்படுஞ் சிவபெருமான், பிரபஞ்சம் எங்குமாகி, நீக்கமற வியாபித்து நிற்பர் ; ஆயினும், அவ்வுண்மை யாவருக்கும் விளங்காது ; ஆதலினாலே, முத்தியடைதல் எளிதன்று. இதனைச் சிவபெருமானே திருவுளங்கொண்டு, தம்மை ஆன் மாக்கள் வழிபட்டுய்யும் பொருட்டு, எண்ணில்லாத

---

1. த. கைலாச பிள்ளை , ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 65.
2. சிதம்பர மான்மியம், 1953, பக். 1-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய ஸ்தலங்களைப் பூமியில் வைத்தருளினார். அவைகளுள்ளே, அறுபத்தெட்டுத் தலங்கள் சிறந்தன; அவ்வறுபத்தெட்டுத் தலங்களுள்ளே, ஆறு தலங்கள் சிறந்தன. அவ்வாறு தலங்களுள்ளே, திருவாரூர் காசி சிதம்பரம் என்னும் மூன்று தலங்கள் சிறந்தன. திருவாரூரிலே பிறந்தவர்களும், காசியிலே இறந்தவர்களும், சிதம்பரத்திலே சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்தவர்களும், முத்தியை அடைவர்கள்.

திருவாரூரிலே பிறத்தல், முன்செய்த புண்ணிய மிகுதியினாலே, தானே நேர்படினல்லது, செயற்கையால் அடையத் தக்கதன்று. காசியில் இறக்கலாமெனின், பிறர் பொருள் கொள்ளாது, பாவத்துக்குப் பயந்து தரும நெறியினாலே சம்பாதித்த பொருள் கொண்டு, சென்ம தேசத்தை விடுத்து, வழியிலே இறவாது உயிர் தாங்கிச் சென்று, காசியை அடைந்து, இறக்கும் வரையும் நல்லொழுக்கத்தோடும் அத்திருப்பதியில் இருந்து, இறப்பது எளிதின் முடிவதன்று. சிதம்பரத்திலோவெனிற் சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்த மாத்திரத்தே முத்தி சித்திக்கும். இன்னும், தக்கிண தேசத்தார் சிதம்பரத்தை நீங்கி முத்தியைத் தேடிக் காசியிலே சென்றால். அது முத்தியைக் கொடுப்பதில்லை ; உத்தர தேசத்தார் சிதம்பரம் முத்தி தரும் என்று வந்து சேர்ந்தால், இது முத்தியைக் கொடுக்கும். ஆதலினாலே, சிதம்பரமே எல்லாத் தலங்களினுஞ் சிறந்தது ''.

இவை நாவலரவர்கள் தாமே படைத்துக் கொண்டவையல்ல ; முன்னோர் கூறிய கருத்துகளேயாம்.

'' சிதம்பரத்துக்குச் சிதம்பர மான்மியம், புண்டரீகபுர மான்மியம், வியாக்கிரபுர மான்மியம், ஏமசபா மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியம், தில்லைவன மான்மியம் என வடமொழியில் ஐந்து மான்மியங்கள் உள்ளன ''

என்பது நாவலரவர்கள் கூற்று.[3] இம்மான்மியங்களுள்ளே சிலவற்றையேனும் நாவலரவர்கள் அறிந்திருந்தார்கள் என்று கூறுவதிற் பிழையிருப்பதாகத் தெரியவில்லை. சிதம்பரத்தின் மாண்பினைத் தனியே எடுத்துக் கூறும் பழைய புராணம் கோயிற் புராணமாகும். நாவலரவர்களால் ரௌத்திரி ஞூ, ஐப்பசி மீ (1860) சென்னை முத்தமிழ் விளக்கவச்சுக் கூடத்திற் பதிப்பித்து வெளியிடப் பெற்ற திருக்கோவையாருரைப் பதிப்பில் இணைக்கப் பெற்றுள்ள 'பிரகடனப் பத்திரிகை'யில் '' இது வரை அச்சிற் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் '' பட்டியல் மூலம் கோயிற் புராணம் நாவலரவர்களால், ஏலவே வெளியிடப் பெற்றுள்ளது என்பதை அறியலாம். அவ் வெளியீடு மூலப் பதிப்பாகும். நாவலரவர்களின் உரையுடன் கூடிய கோயிற் புராணப் பதிப்பு சென்னை வர்த்தமான தரங்கிணீ சாகையச்சுக் கூடத்திலிருந்து பிரபவ ஞூ, தை மீ (1868) முதன் முதலாக வெளிவந்தது. எனவே, கோயிற்புராணப் பயிற்சியும் நாவலரவர்களுக்குண்டு என்பது தெளிவாகும். சங்கத மொழியிலும் தமிழ் மொழியிலும் சிதம்பரம் பற்றிக் கூறப் பெற்ற கருத்துகளை நாவலரவர்கள் தம் சிதம்பர மான்மியத்திலே தமக்கேயுரிய தெளிவுடன் அடக்கித் தந்துள்ளார் எனல் பொருத்தமாகும்.

கோயில் என்ற பொதுப் பெயர், சிதம்பரத்தினையே சிறப்புப் பெயராய் நின்று குறிக்கின்றது. குமரகுருபர சுவாமிகள்,

---

3. சிதம்பர மான்மியம், 1953, பக். 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தீர்த்த மென்பது சிவகங் கையே
ஏத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே "

எனச் சிதம்பரத்தின் மான்மியம் கூறுகின்றது.[4] சிதம்பரம் சைவ மக்களிடையே பெறும் உயர்ச்சியினைச் சுவாமிகளின் கூற்றுத் தெளிவாக்குகின்றது. சிதம்பரத்திலே வித்தியா சாலையும் மடமும் நிறுவக் கருதி ரௌத்திரி ஸு, வைகாசி மாதத்தில் (1860) நாவலரவர்கள் சென்னையில் வெளி யிட்ட விக்கியாபனத்திலே " சிவஸ்தலங்கள் எல்லாவற்றுள் ளும் மிக மேலாகி, எல்லார்க்கும் பொதுவாயுள்ள " சிதம்பரம் என்று கூறியதும் இக் கருத்தினை வலியுறுத்து கின்றது.[5]

சைவ மக்களின் இதயம் போல விளங்கிய சிதம்பரம் சைவப் புலவர்களின் உள்ளங்களையும் ஈர்த்த பாடுபொரு ளாகும். சிதம்பரத்திற்குரிய இலக்கிய வளத்தை நோக்கும் போது, அதன் முக்கியத்துவம் தெளிவாகும்.

" இத்தலத்திற்குத் தேவாரப் பதிகம் பதினொன்றும், திருவாசகப் பதிகம் இருபத்தைந்தும், திருக்கோவை யாரும், திருவிசைப்பாப் பதிகம் பதினைந்தும், திருப் பல்லாண்டும், பத்தாம் திருமுறையில் சில மந்திரங் களும், பதினோராம் திருமுறையில் கோயில் நான் மணிமாலை, கோயில் திருப்பண்ணியார் விருத்தங் களும், பெரிய புராணமும் ஆகப் பல அருட்பனுவல் கள் இத்தலத்திற்கு உள்ளன. இவைகளன்றி கோயிற் புராணம், சிதம்பர புராணம், சபாநடேச புராணம்

---

4. சிதம்பரச் செய்யுட் கோவை, 45.
5. த. கைலாச பிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 38.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் புராணங்கள் தமிழிலும், சூதசம்மிதை, சிதம்பர மான்மியம், புண்டரீகபுர மான்மியம், வியாக்கிரபுர மான்மியம் முதலான நூல்கள் வடமொழியிலும் இருக்கின்றன. இவைகளேயன்றி, குமரகுருபர அடிகளால் ஆக்கப்பெற்ற சிதம்பரம் மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை; இரட்டைப் புலவர்களால் பாடப்பெற்ற தில்லைக் கலம்பகம் என்னும் நூல்களும் இத்தலத்திற்கு உரியனவாகும்.''[6]

இவைகளேயன்றிச் சிதம்பரக் கும்மி, சிதம்பர நாதர் கீர்த்தனை, சிதம்பரேசர் மாலை, சிதம்பரேசர் விறலி விடு தூது முதலிய நூல்களுமுள. பல்லவர் ஆட்சிக் காலம் முதலாகத் தற்காலம் வரை இலக்கிய வாணர்களாற் போற்றப்பெற்ற தலம் சிதம்பரம். நாவலரவர்கள் இத்தலத்தைப் போற்றும் நூல்கள் சிலவற்றைப் பதிப்பித்துள்ளார்.[7] திருவாசகம், திருக்கோவையார் என்னுமிரண்டையும் நாவலரவர்கள் பரிசோதித்து, நல்லூர் க. சதாசிவப் பிள்ளை பேராலே சித்தார்த்தி ஞு, வைகாசி மீ (1859) வெளிப்படுத்தினார் என்பர்.[8] திருக்கோவையாரைப் பழைய வுரையுடன் சென்னை முத்தமிழ் விளக்கவச்சுக்

---

6. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள், மூன்றாவது திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1955, ''மூன்றாவது திருமுறையிலுள்ள தலங்களின் வரலாற்றுக் குறிப்பு'' பக். 55.
7. கோயிற் புராண மூலம், கோயிற் புராண வுரை பற்றி முன்னர்க் கூறப்பட்டது.
8. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968. பக். 41.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடத்திற் பதிப்பித்து ரௌத்திரி ஸ்ரீ, ஐப்பசி மீ (1860) நாவலரவர்கள் வெளியிட்டனர் ; பதினோராம் திருமுறையைச் சென்னை வர்த்தமான தரங்கிணீ சாகையச்சுக்கூடத்திற் பதிப்பித்துச் சுக்கில ஸ்ரீ, வைகாசி மீ (1869) வெளியிட்டனர் ; சிதம்பர மும்மணிக் கோவை (சென்னை, கலாரத்நாகரம் அச்சுக்கூடம், பிரபவ ஸ்ரீ, ஆனி மீ (1867) பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டு (இரண்டாம் பதிப்பு, சென்னை, வித்தியாநுபாலன யந்திரசாலை, ஆங்கீரச ஸ்ரீ, பங்குனி மீ (1873) என்பனவும் அவரால் வெளியிடப்பட்டவை.

## II

சிதம்பரத்தில் நாவலரவர்களுக்கு இருந்த ஈடுபாடு ஈழத்துச் சைவர்களிடையே பரம்பரை பரம்பரையாக இருந்த ஈடுபாட்டின் அடிப்படையிலே தோன்றியதாதல் வேண்டும். தில்லைக் கூத்தன் மீது தளராத பேரன்பு பூண்ட ஈழத்துச் சைவர் தரும சாதனமாக வழங்கிய நில புலங்கள் பெருந் தொகையாக ஈழத்திலுள. ஆரியச் சக்கரவர்த்திகளிற் பரராச சேகரன் எனும் பட்டப் பெயர் தரித்த மன்னனொருவன் சிதம்பர தரிசனம் செய்து, அங்கொரு அறநிலையத்தை ஏற்படுத்தியதாகச் செப்பேடு ஒன்று கூறுகின்றது.[9] சிதம்பரத்திலுள்ள பரராச சேகரன் மடம் அதன் கூற்றை ஆதரிக்கின்றது போலும். இம்மடத்திற்கு வன்னிநாட்டைச் சேர்ந்த கயிலாய வன்னியன் தானமளித்த செய்தியை வேறொரு செப்பேடும் உரைத்து நிற்கின்றது.[10]

---

9. சி. பத்மநாதன், ' இரு தமிழ்ச் செப்பேடுகள் ', சிந்தனை, 3-1, 52-57 (ஜனவரி, 1970).
10. செ. குணசிங்கம், ' கயிலாய வன்னியனார் சிதம்பர தரும சாதனப் பட்டையம் ', சிந்தனை, 4.1/2, 41-96 (ஜனவரி-ஜுலாய், 1971).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரராச சேகரன் மடம் நீங்கலாக வேறு சில மடங்களும் ஈழத்தவராற் சிதம்பரத்திலே தாபிக்கப்பட்டுள்ளன.

நாவலரவர்களின் முன்னோர்களிலொருவரும் திருவண்ணாமலை ஆதீனத் தம்பிரானும் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவருமான ஞானப் பிரகாச முனிவர் நடராச தரிசனம் செய்ய விரும்பித் திருவண்ணாமலையை நீங்கிச் சிதம்பரத்தை அடைந்து, ஞானப் பிரகாசம் என்னும் திருக்குளத்தை அமைப்பித்துச் சிலகாலம் அங்கேயே வதிந்து தேக வியோகமாயினார். ஞானப் பிரகாச முனிவர் காலத்தவராகக் கருதப் பெறுபவரும் அளவெட்டியைப் பூர்வீகமாகக் கொண்டவருமான வியாக்கிரபாத புராண ஆசிரியர் வைத்தியநாத முனிவரும் சிதம்பரத்தில் வாழ்ந்து சிவபதம் அடைந்தவராவர். வைத்தியநாத முனிவர் மரபினரும் அளவை வே. கனகசபைப் புலவரின் (1816–1873) தாய் மாமனாருமான சுப்பிரமணிய தம்பிரானும் சிதம்பரத்திலே வாழ்ந்து தேகவியோகமடைந்தவராவர். ஞானப் பிரகாச முனிவர், வைத்தியநாத முனிவர், சுப்பிரமணிய தம்பிரான் முதலியோரைப் போன்று சிதம்பரத்தை வாழிடமாகக் கொண்ட ஈழத்தவர் பலர். நாவலரவர்கள் காலத்திலும் ஈழத்தவர் சிதம்பரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.

> '' சிதம்பரத்துள்ள கட்டளை மடங்களுள் எட்டு மடங்கள் யாழ்ப்பாணத்து மடங்கள். அவைகளுக்குத் தாவர சங்கமப் பொருளைத் தானஞ் செய்தவர்கள் யாழ்ப்பாணத்தார்கள். அம் மடங்களுக்கதிபதிகள் யாழ்ப்பாணத்தார்கள் ''

என்பன ' நல்லறிவுச் சுடர் கொளுத்தல் ' தந்தனவாம்.[11]

---

11. த. கைலாசபிள்ளை (தொகுப்பு), ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 128.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்தில் ஈழத்தவருக்கு இருந்த ஈடுபாடு ஈழத்துப் புலவர்களின் ஆக்கங்களாலும் புலனாகும். புலியூர் யமக வந்தாதி சிதம்பரத்திற் கோயில் கொண்ட நடராச மூர்த்தி மீது மாதகல் மயில் வாகனப் புலவராற் சூட்டப் பெற்ற பாமாலையாகும். புலிப்பாதன் பூசித்த தலமாதலின் சிதம் பரத்திற்குப் புலியூர் என்ற பெயருமுண்டு. இவ்வந்தாதி யினை மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தியாயர் உரை யுடன் 1882ஆம் ஆண்டிலே பதிப்பித்துள்ளார்.

சுன்னாகம் அ. வரத பண்டிதர் சிதம்பரத்திலுள்ள அறிஞர் வேண்டுகோட்படி தாம் சிவராத்திரி புராணத்தைப் பாடியதாகக் கூறியுள்ளார்.

“ கந்தமலர்ப் பொழில் புடைசூழ் தில்லைவனத்
 தறிஞர்திருக் கடைக்கணோக்கி
முந்தவுரைத் தனர்பலரு மாயினும் யாகமநூன்
 மொழிவ ழாமற்
பந்தமறுத் திடுசிவராத் திரிவிரத சரிதைதனைப்
 பாடு கென்னச்
செந்தமிழி னுயர்விருத்தப் பாவதனாற் றிரட்டி
 யொன்றாச் செப்ப லுற்றேன் ”

என்பது சிவராத்திரி புராணத்தின் பாயிரச் செய்யுள். இப் புராணத்தினை வல்வை ச. வயித்தியலிங்கபிள்ளை சென்னை வித்தியாவர்த்தினி அச்சுக்கூடத்தில் விசு ஷு, ஆவணி மீ (1885) பதிப்பித்து வெளியிட்டனர்.

நாவலரவர்கள் காலத்திலும் சிதம்பரம் ஈழத்துப் புலவரைக் கவராமல் விட்டுவிடவில்லை. சுன்னாகம் அ. முத்துக்குமார கவிராசர் தில்லை நடராசப் பெருமான் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிகமொன்று பாடியுள்ளார் என்றும் அது அகப்படவில்லை என்றும் தமிழ்ப் புலவர் சரித்திரத்தின் ஆசிரியர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் கூறியுள்ளார். ஆயினும் கவி ராசர், தில்லை நடராசமூர்த்தி மீது பாடிய தனி நிலைக் கவிகள் சிலவுள. ‘ முத்தக பஞ்ச விஞ்சதி ’ என்ற தொகுப் பிலே இவற்றிலே சில இடம் பெற்றுள்ளன. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தொகுத்துக் குறிப்புரை எழுதிய முத்தக பஞ்ச விஞ்சதியை வண்ணை சி. சுவாமிநாத பண்டி தர் சென்னையிலே தமது சைவ வித்தியாநுபாலன யந்திர சாலையிலே 1907ஆம் ஆண்டு பதிப்பித்தனர். யாழ்ப் பாணம் காரைதீவு மு. கார்த்திகேய ஐயர் *(1819–1898)* சிதம்பரத்திலே வசிக்கும்போது திருத்தில்லைப் பல் சந்தமாலை என்னும் பிரபந்தத்தைப் பாடினார்.

## III

சைவர்களுக்கு மேலாகிய சிதம்பரத்தோடு நாவலரவர் கள் கொண்ட தொடர்பு, அவர் காலயுத்தி ஞு, ஆனி மீ *(1858)* மேற்கொண்ட இந்திய பிரயாணத்தோடு தொடங்குகின்றது போலும். சிதம்பரத்திலே பெரிய சைவ வித்தியாசாலையும் மடமும் நிறுவக் கருதிச் சென்னை யிலிருந்து நாவலரவர்கள் ரௌத்திரி ஞு, வைகாசி மீ *(1860)* தம் கருத்தை விக்கியாபனம் ஒன்றின் மூலம் வெளி யிட்டார். இவ்விக்கியாபனத்திற்குப் போதிய ஆதரவு தமிழகத்திலே கிடைக்கவில்லை என்று கருத இடமுண்டு. ஏனெனில், ஈழத்திற்குத் துன்மதி ஞு, பங்குனி மீ *(1862)* திரும்பிய நாவலரவர்கள், துந்துபி ஞு, வைகாசி மீ *(1862)* 26ஆம் தேதி வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்திலும், ஆடி மாதம் 21ஆம் தேதி பருத்தித் துறை சித்தி விநாயகர் கோயிலிலும் சிதம்பரத்திலே சைவ வித்தியாசாலை நிறுவும் எண்ணத்தை விளக்கிப் பிரசங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கள் செய்தார்.[12] ஈழத்திலே சேர்த்த பொருளுடன் நாவலரவர்கள் இந்தியாவுக்குத் தம் இறுதிப் பயணத்தை ருதிரோற்காரி ஞு, தை மீ (1864) மேற்கொண்டார். சிதம்பரத்திலே சைவப் பிரகாச வித்தியாசாலை நாவலரவர்களால் இரத்தாக்ஷி ஞு, ஐப்பசி மீ (1864), 28ஆம் தேதி நிறுவப்பட்டது. இவ்வித்தியாசாலையின் வளர்ச்சியைக் கண்ட நாவலரவர்கள் வேறிடங்களிலும் வித்தியாசாலைகளை நிறுவ ஆசை கொண்டார். அவற்றிற்கு உபாத்தியாயர்களாகத் தக்கவர்களை முதலிற் சேர்த்துக் கற்பிப்பதற்குச் சிதம்பரத்திலே தாம் முன்பு தாபிக்கக் கருதிய பெரிய வித்தியாசாலையை நிறுவ, மீண்டும் ஆசைகொண்டு, விபவ ஞு, சித்திரை மாதத்திலே (1868) சென்னையிலிருந்து வேறொரு விக்கியாபனம் வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து பிரமோதூத ஞு (1870) இதே நோக்கத்துடன் மீண்டுமொரு விக்கியாபனம் வெளியிடப் பெற்றது. ஆனால், மூன்றாவது விக்கியாபனத்திற்கு முன்பு சிதம்பரத்தில் நடந்த நிகழ்ச்சிகள் நாவலரவர்கள் தமிழகத்திற்குச் செய்த பாரிய தொண்டினைத் தடைப்படுத்துவன போல அமைந்தன. சுக்கில ஞு, மாசி மீ (1870) ஈழம் திரும்பிய நாவலரவர்கள் பின்பு சிதம்பரம் போகவில்லை.

சிதம்பரத்திலே 1869ஆம் ஆண்டு நடந்த நிகழ்ச்சிகளைத் தெளிவாக உணர்வதற்கு ஐந்து ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான், சிதம்பர மான்மியத்தின் முக்கியமானதொரு கூறு, நன்கு புலப்படும்.

---

12. வே. கனகரத்தின உபாத்தியாயர், ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 47-48.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்திலே **1864**ஆம் ஆண்டிற் சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவிய நாவலரவர்கள் நடராச தரிசனம் செய்து வரும் காலத்திலே பூசைக் கிரமங்களையும் தீக்ஷிதர் களின் அநுட்டான ஆசாரங்களையும் கவனிக்க நேர்ந்தது. தீக்ஷிதர்கள் செய்யும் குற்றங்களைக் கண்ட நாவலரவர்கள், சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையிலே கூட்ட மொன்றினைக் கூட்டித் தீக்ஷிதர்களின் தவறுகளை எடுத்துக் கண்டித்தார். அக்கூட்டத்தின் வரலாற்றை நாவலரவர்கள் தாம் எழுதிய சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலை முதலாம் ஆவேதனத்தில் மேல் வருமாறு தருகின்றார்.[13]

"சிதம்பராலய பூசகர்களுள்ளே சிலர் சைவாகமங்கள் பிரமாணமல்ல என்றும், சிவதீக்ஷையினால் உயர்ச்சி இல்லை என்றும், சிவதீக்ஷை பெற்றவர்கள் பிரஷ் டர்கள் என்றும், சிதம்பராலயக் கிரியைகள் வைதிகக் கிரியைகளே என்றும், சிதம்பராலயக் கிரியைகளுக்குச் சிவ தீக்ஷையில்லாதவர்களே அருகர்கள் என்றும், துர்ப் போதனை செய்து பலரையும் மயக்கிக் கொண்டு திரிந்தார்கள். மார்கழி மாத ரதோற்சவ தினத்துக்கு முதற்றினமாகிய **27**ஆம் தேதி சோம வாரத்திலே, நமது வித்தியாசாலையிலே, வெகுஜன சமூகத்திலே, அவர்கள் கூற்றுக்களெல்லாவற்றையுங் கண்டித்து, சைவாகமங்கள் முக்கியப் பிரமாணம் என்றும், சிவ தீக்ஷையே உயர்வுடையது என்றும், கர்ஷணாதிப் பிரதிஷ்டாந்தம் பிரதிஷ்டாதி யுற்சவாந்தம் உற்ச வாதிப் பிராயச்சித்தாந்தம் என்னுந் தேவாலயக் கிரி யைகள் சிவாகமத்திலன்றி வேதத்தில் இல்லையென் றும், யவர்க்கும் சிவதீக்ஷையின்றிச் சிவாகமம் படித்

---

*13.* த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், *1919*, பக். *70*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் கூடாது என்றும், சிதம்பராலயக் கிரியைகளின் பொருட்டுப் பதஞ்சலி மகா முனிவர் வேத சிவாகம முறைப்படியே பத்ததி செய்தருளினார் என்றும், ஆதியில் இருந்த தில்லைவாழந்தணர்கள் சிவதீக்ஷையும் சிவாகமவுணர்ச்சியும் சிவாகமாநுஷ்டானமும் உடையவர்கள் என்றும், தற்காலத்தில் உள்ள பூசகர்கள் சிவதீக்ஷையும் சிவாகம வுணர்ச்சியும் சைவாநுஷ்டானமும் இல்லாதவர்களாய் இருந்து கொண்டு சிதம்பராலயக் கிரியைகளைச் செய்தல், சிவவாக்கும் நடேசர் திருமேனியுமாகிய சிவாகமத்துக்கும் வியாக்கிரபாத முனிவர் பதஞ்சலி முனிவர் தில்லை மூவாயிர முனிவர் என்பவர்களுடைய அநுஷ்டானத்துக்கும் விரோதமே என்றும், பல சாத்திரப் பிரமாணங்கள் கொண்டு விரித்துப் பிரசங்கித்தேன் ''.

சைவப் பிரகாச வித்தியாசாலை நிறுவச் சென்ற நாவலரவர்கள் சிதம்பரத்திலே பகையையும் தேடிக் கொண்டார். ஆத்திரமடைந்த தீக்ஷிதர்கள் நல்ல தருணம் நோக்கியிருந்தார்கள். அத்தருணம் வரத்தான் செய்தது.

தொழுவூர் செ. வேலாயுத முதலியார் *(1832–1889)* **1867**ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளின் *(1823–1874)* செய்யுள்களையும் வசனங்களையும் நான்கு 'திருமுறை'களாக வகுத்துத் 'திருவருட்பா' என்ற பெயர் சூட்டி வெளிப்படுத்தினார். இராமலிங்கரின் பாடல்கள் சென்னையிலுள்ள சில கோயில்களில் உற்சவ காலங்களிற் பஞ்ச புராணத்திற்குப் பதிலாக ஓதப்பட்டு வந்தன. இந்நிகழ்ச்சிகளைக் கண்ட ஆறுமுக நாவலர் சென்னையிலே தாம் செய்த சுக்கிரவாரப் பிரசங்கங்களிலே அருட்பாக்கள் பற்றி விளக்கி வந்தனர். நாவலரவர்களின் கூற்றுகளைக் கேள்விப்பட்ட இராமலிங்கரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோஷ்டியினர் ஆத்திரங் கொண்டனர் ; ' திருவருட்பா தூஷணைப் பரிகாரம் ' எனவொரு கண்டனமும் வெளி யிட்டனர்.[14] இவற்றைப் பொருட்படுத்தாது நாவலரவர் கள் தம் அருட்பா விளக்கப் பிரசங்களைத் தொடர்ந் தாற்றி வந்தனர். இராமலிங்கரின் கோஷ்டியினருக்கு அச் செயல் மேலும் ஆத்திரமூட்டியது. அவர்களுக்கு அதனைத் தணிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதுவே சி. வை. தாமோதரம் பிள்ளை (1832—1901) ' தினவர்த்தமானி ' யிலே தொல்காப்பியம் சேனாவரையப் பதிப்புப் பற்றிச் செய்த விளம்பரம். 1868ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 31ஆம் தேதி முதல் சேனாவரையப் பதிப்புப் பற்றிய விளம்பரம் 'தினவர்த்தமானி'யில் வெளிவந்தது.[15] அவ் விளம்பரத்திலே பிள்ளையவர்கள் நாவலரவர்களைத் '' தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர் '' என்று குறிப்பிட்டிருந்தார். இராமலிங்கரின் ' திருவருட்பா' விலே இணைக்கப் பெற்றிருந்த தொழுவூர் வேலாயுத முதலியார் இயற்றிய ' திருவருட்பா ' வரலாற்றில் '' அருட் பிரகாச நாதனார் கருணைக் குறையுளார் வீரா சாமிப் பேர் நற்றவக் கொழுந்து '' என்று போற்றப்பெற்ற நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், ' தினவர்த்தமானி ' விளம்பரத்தில் இலக்கணப் பிழை கண்டு பிடித்துத் தாமோ தரம் பிள்ளையை நிந்தித்தும் நாவலரவர்களைத் தூற்றி யும் 1869ஆம் ஆண்டு, மாசி மாதத்திலே 'விஞ்ஞாபனப் பத்திரிகை ' என்ற கண்டனத்தை வெளியிட்டார். இக் கண்டனத்திற் பிள்ளையவர்களையும் நாவலரவர்களையும் இழித்துரைப்பதோடு அமைதி காணாத வீராசாமி முதலி

---

14. ம. பொ. சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு, 1967, பக். 189-190.

15. சி. கணபதிப் பிள்ளை, இலக்கிய வழி, 1964, பக். 132.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் ஈழத்தையும் பழித்துரைத்தார். அருட்பா மருட்பா விவகாரத்தைப் பிரதேச அடிப்படையில் இட்டுச் செல்வதற் கான ஆரம்ப வேலையில் வீராசாமி முதலியார் ஈடுபட்டிருந் தார். வீராசாமி முதலியாரின் கண்டனத்தைக் கண்ட எதிர்க் கட்சியினர் மாசி மாதத்திலேயே ' நல்லறிவுச் சுடர் கொளுத்தல் ' என்னும் கண்டனத்தை வெளியிட்டனர். தமிழ் பேசு நல்லுலகத்தின் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற் கும் ஈழத்தவர் ஆற்றிய பணியினை ' நல்லறிவுச் சுடர் கொளுத்தல் ' எடுத்துக் கூறுகின்றது. ' நல்லறிவுச் சுடர் கொளுத்தல் ' சென்னை சிவபாத நேச பிள்ளையால் எழுதப் பெற்று நாவலரவர்கள் சம்மதத்தோடு பதிப்பிக்கப் பெற்றது என்பர் த. கைலாசபிள்ளை.[16]

இக் கண்டனத்தை அடுத்து வெளிவந்தது '' போலி யருட்பா மறுப்பு '' என்னும் பிரசுரமாகும்.[17] போலி யருட்பா மறுப்பு மாமண்டூர் தியாகேச முதலியார் பேராலே, சென்னை தத்துவ போதினி யச்சுக்கூடத்திற் சுக்கில ஸூ, வைகாசி மீ (1869) பதிப்பிக்கப்பெற்றது.

போலியருட்பா மறுப்புப் பற்றிக் கூறவந்த ம. பொ. சிவஞான கிராமணியார்,

'' நாவலருடைய எழுத்தோவியங்களை யெல்லாம் தொகுத்து ' ஆறுமுகநாவலர் பிரபந்தம் ' என்ற பெயரில் நூலாக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகுப்பில் ' போலியருட்பா மறுப்பு ' என்ற பிரசுரமும் சேர்க்கப் பட்டுள்ளது. பெரும் புலமை பெற்ற நாவலர் பெரு

16. ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற்பாகம், 1954, பக். 122.

17. இப்பிரசுரத்தின் தலைப்பு ' போலியருட்பா ' என்று 1869ஆம் ஆண்டுப் பதிப்பின் அட்டையிலே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான், இராமலிங்க சுவாமிகளை மிகவும் தரக் குறை வான முறையில் கண்டித்தெழுதி அதனைப் பிறிதொருவர் பெயரால் வெளியிட்டார் என்பதனை நம்பவே முடியவில்லை. ' யானைக்கும் அடி சறுக்கும் '' என்பார்களே, அது போன்ற நிகழ்ச்சி இது ''

என்று இரங்கியுள்ளார்.[18] இராமலிங்கர் மீது அத்தகைய குற்றம் ஏதும் சுமத்த சிவஞான கிராமணியார் விரும்ப வில்லை. அவருடைய பார்வைக்ககப்படாததும் தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதியதுமான ' போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க் காரணிய நாச மஹா பரசு ' எனும் உக்கிர கண்டனத்தின் இறுதியில்,

'' இங்ஙனம் நமது குருநாதர் கட்டளையானிவ்வளவி னிறுத்தினா மென்க ''

என்றிருக்கின்றதே.[19] ' தனிப் பெருங் கருணை ' இராம லிங்கரின் நேரடியான பங்களிப்பினைப் பின்பு நோக்கு வோம்.

சிவகங்கையிற் பிறந்தவரும் ' அருட்சுடர் வள்ள லார் ' என்னும் நூலினை இயற்றியவருமான சுத்தானந்த பாரதியார், இராமலிங்கரின் பாடல்களை நாவலரவர்கள் எதிர்த்தமைக்கான காரணத்தே மேல்வருமாறு கூற முயலு கின்றார்.[20]

'' தேவார திருவாசகங்களைக் கைவிட்டு, நேற்றெழுந்த ஒருவர் பாடலையே போற்றக்கூடாது. பழைய தமிழ்

---

18. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 189.
19. சி. கணபதிப் பிள்ளை, நாவலர், 1968, பக். 23.
20. நாவலர் பெருமான், 1948, பக். 207.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்குச் சேதம் வரும்படி எதுவும் செய்யலாகா தென்பதே நாவலரின் எண்ணமாகும்.''

இதே கருத்தினையே கா. மாயாண்டி பாரதியும் கூறியுள்ளார். த. கைலாச பிள்ளை,

'' பாட்டுக்கள் தோத்திரம் ஒன்றற்கே யல்லாமல் மற்றவைகளுக்கு அவ்வளவு சிறந்தன அல்ல என்பதும் ........தோத்திரத்துக்கும் தேவார திருவாசகம் முதலிய அருட்பாக்கள் இருக்கும்போது அவற்றிற்கு மேலாக நாம் என்ன தோத்திரத்தைச் செய்யப் போகிறோம் என்பதும் இவர் கருத்துக்களாம் ''

என்று நாவலரவர்கள் பெருமளவிற் பாடல்களை இயற்றாமைக்குக் கூறிய காரணத்தை,[21] அவர் ஆதாரமாகக் கொண்டு,

'' இந்த அழுந்திய மனப்பான்மையே இராமலிங்கர் பாக்களை அருட்பா என ஒப்புக்கொள்ள மறுத்தது என்பது உறுதியாகின்றது ''

என்று முடித்துள்ளார்.[22]

நாவலரவர்கள் இராமலிங்கரின் பாடல்களை எதிர்த்தமைக்கான காரணங்களைப் 'போலியருட்பா மறுப்பு' மூலம் தெளிவது பொருத்தமாகும். இராமலிங்க சுவாமிகளைச் சமயாசாரியர்களோடு சமத்துவமுடையவரென்று சைவ மக்களிலொரு பிரிவினர் நம்பினர். இந்நம்பிக்கையினால் அநுட்டானம், பூசை, சிவதரிசனம் முதலிய செய்யும் காலங்களில் இராமலிங்க சுவாமிகளின் பாடல்களை ஓதினர்.

---

21. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 60-61.
22. நாவலர் பெருமான், 1955, பக். 139-140.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> " சில போது சென்ன பட்டணத்துள்ள சிவாலயங்களில் உற்சவத்திலே தேவார முதலிய அருட்பாக்களை நிறுத்திவிட்டு இராமலிங்கபிள்ளை பாடலையே "

ஓதுவித்தார்கள்.[23] தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் எனும் அருட்பாக்களின் இடத்தினை இராமலிங்க சுவாமிகளின் பாடல்கள் பெற்றமை மட்டுமன்று நாவலரவர்களின் எதிர்ப்புக்குக் காரணம் இராமலிங்க சுவாமிகளின் பாடல்களை மக்கள் மீது திணிப்பதற்குச் செய்த முயற்சியையும் நாவலரவர்கள் கண்டனர். போலியருட்பா மறுப்பு,

> " ஐயையோ ! அவர்கள் அதுமட்டோ, தங்களிச்சைக் கேற்றபடி ஒழுகுங் கோயிலருச்சகர் சிலர் பொருட்டுச் சில தேவாலயங்களிலே தேவாரஞ் சொல்லப் புகுந்த பரம்பரை யோதுவார்களைச் சிவசந்நிதியிலே துர்ப் பாஷைகளினால் வைது அடித்து ஓட்டுதற்குத் துணை செய்தார்கள் "

என்று கூறுகின்றது.[24] இராமலிங்கரின் பாடல்களைப் பிரபல்லியப் படுத்துவதற்காகத் தேவார திருவாசகங்களின் ஒலியையே அடக்குவதற்கான முயற்சி யெடுக்கப்பட்டதைப் போலியருட்பா மறுப்புக் காட்டுகின்றது. இராமலிங்கரைச் சமயாசாரியருடன் சமத்துவப் படுத்துவதற்காகச் சமயாசாரியர் செய்திகள் சிலவற்றைப் பொய்யுரையாக்கும் முயற்சியும் நடைபெற்றது. போலியருட்பா மறுப்பு,

> " ஒகோ அதுமட்டோ, அவ்வருச்சகர்கள் கல்வியறிவில்லாத ஒருவன் பேரால் எழுதி அச்சிற் பதிப்பித்து

23. த. கைலாசபிள்ளை (தொகு.), ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 93.
24. ஷெ நூல், பக். 110.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்திய ' சிவாலய குருமான்மியம் ' என்னும் புத்தகத்திலே திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கும் மாணிக்க வாசக சுவாமிகளுக்கும் உண்மை முத்தி கிடைக்கவில்லை என்றெழுதிய குழறுபடையைக் கேட்டும், சிவசிவ ! அவ்வதிபாதகனைப் பாராட்டிப் பலரெதிரே அவனுக்குச் சம்மானஞ் செய்தார்களே ? இந் நகரத்துப் புலவர்களிற் சிலர், ஹரஹர ! அப்பெருங் கொடும்பாவிகள் சபையிலிருந்து அதனைக் கேட்டு மௌனமாய்த் திரும்பினார்களே ! சிவ தூஷணஞ் செய்த தக்கன் பட்டபாடும், அதனைக் கேட்டுக் கொண்டிருந்த தேவர்கள் பட்டபாடும் அறியார்களா? அறியார்களா? சிவபெருமான் தம்மைத் தூஷித் தலைப் பொறுப்பினும், தம் மெய்யன்பர்களாகிய சமயாசாரியர்களைத் தூஷித்தலைப் பொறுப்பாரா? பொறுக்க மாட்டாரே ! பொறுக்க மாட்டாரே !''

என்று அந்நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுகின்றது.[25] போலியருட்பா மறுப்பில் இடம் பெறாத வேறொரு செய்தியும் ஈண்டு கவனிக்கத் தக்கது.[26]

'' பாதிரிமார்கள் ஒரு துண்டுப் பத்திரிகையில் நால்வர் குரவர்கள் செய்த அற்புதங்களும் இராமலிங்கரின் ' செத்தோரை எழுப்புதல் ' போன்ற அற்புதங்களே என்று பரிகாசஞ் செய்திருந்தார்கள். அதனைத் தியாகேச முதலியாரும் குருவும் நாவலருக்குக் காட்டி மேலும் வேண்டுதல் செய்தார்கள் ''

---

25. த. கைலாசபிள்ளை (தொகு.) ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 110-111.
26. சி. கணபதிப் பிள்ளை, நாவலர், 1968, பக். 19.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயாசாரியர்கள் இராமலிங்கரின் கோஷ்டியினரால் இழிக்கப் பட்டதோடு, புறச் சமயிகளாலும் பழிக்கப்பட்டதைக் கண்ட நாவலரவர்கள் நிலைமையைத் தெளிவுபடுத்த விரும் பினார். போலியருட்பா மறுப்பு தோன்றுவதற்கான சூழல் எழுந்துவிட்டது. ம. பொ. சிவஞான கிராமணியார்,

> '' இராமலிங்கருடைய புரட்சிகரமான சீர்திருத்தக் கருத் துகளை அறவே மறைத்துவிட நான் விரும்பி னாலொழிய , அருட்பா – மருட்பாப் போராட்ட நிகழ்ச்சியை மறைப்பது சாத்தியமில்லை ''

என்று கூறியுள்ளார்.[27] இராமலிங்கரின் பாடல்களை நாவலரவர்கள் எதிர்த்தமைக்கு அப்பாடல்களிற் காணப் பெற்ற புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகளே காரணம் என்பது சிவஞான கிராமணியாரின் கொள்கையாகும். ஆயினும் ' போலியருட்பா மறுப்பு ' எனும் பிரசுரத்திலே இராமலிங்கரின் சீர்திருத்தக் கருத்துகளைப் பற்றிய பேச்சே இடம் பெறவில்லை என்பதைக் கண்ட அவர்,

> '' வைதிகச் சைவர்கள், இராமலிங்கரை வெறுக்கலாயி னர், கொள்கை வழி உள்ள கருத்து வேறுபாடுகளை மறைத்துக்கொண்டு, தனிப்பட்ட முறையில் அடிகளா ரைக் குறைத்தும் பழித்தும் பேசினர் ''

என்று அந்நிலைக்குச் சமாதானம் கூறுகின்றார்.[28]

நாவலரவர்களைப் பொறுத்த வரையில், இராமலிங் கரின் சீர்திருத்தக் கருத்துகள், அவர் இராமலிங்கருடைய பாடல்களை எதிர்ப்பதற்கு எந்தவளவிற்குக் காரணமாக

---

27. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக்.7.
28. ஷெ நூல், பக். 182-183.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தன என்பதை நாம் நோக்க வேண்டும். சாமி சிதம்பரனார்,

"திருஅருட்பாவில், முதல் ஐந்து திருமுறைகளைக் காட்டிலும் ஆறாம் திருமுறையிலே அரும்பொருள்கள் பல அடங்கியிருக்கின்றன. மூட நம்பிக்கைகள், சாதி பேதம், மதவெறி, அரசியல் கொடுமை, ஏழைகளைத் துன்புறுத்தும் வஞ்சகர்கள் வாழ்வு இவைகளையெல்லாம் வன்மையாகக் கண்டிக்கும் பாடல்கள் நிரம்பியிருக்கின்றன"

என்று கூறியுள்ளார்.[29] இதே கருத்தை ம. பொ. சிவஞான கிராமணியாரும்,

"முதலைந்து திருமுறைகளில் பக்திப் பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. குறிப்பாக – திருவொற்றியூர், திருத்தணிகை, கந்தகோட்டம் ஆகிய தலங்களிலுள்ள தெய்வங்களின் மீது பாடியுள்ள பாடல்களையே முதலைந்து திருமுறைகளிலும் காண்கிறோம். ஆறாவது திருமுறை பூர்வஞான சிதம்பரம், உத்தரஞான சிதம்பரம், சித்தி வளாகம் ஆகிய தலங்களில் அடிகள் தங்கியிருந்த போது பாடியவையாகும். கருங்குழியிலிருந்த காலத்திலும் எழுதப் பட்டிருக்கலாம்.

முன் தோன்றிய ஞானியர் எவரிடமும் காணாத புரட்சிகரமான சமயச் சீர்திருத்தக் கருத்துக்களை ஆறாந் திருமுறையில் மட்டுமே காணமுடிகின்றது"

என்பர்.[30]

---

29. வடலூரார் வாய்மொழி, 1959, பக். 18.
30. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 177.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்கள் காலத்திலே தொழூவூர் வேலாயுத முதலியார் வெளியிட்ட ' திருவருட்பா 'விலே முதல் நான்கு ' திருமுறை 'கள் மட்டுமே இடம் பெற்றிருந்தன என்பது மனங்கொளத் தக்கது. மாமண்டூர் தியாகேச முதலியார் பேரால் வழங்கும் ' போலியருட்பா மறுப்பு ' எனும் பிர சுரத்தில் எடுத்தாளப் பெற்றிருக்கும் பாடல்களும் தொழு வூர் வேலாயுத முதலியாரின் 1867ஆம் ஆண்டுப் பதிப்பில் இடம்பெறும் பாடல்களாகவே காணப்படுகின்றன. இந் நிலையில், புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகளை எடுத்துக் காட்டும் இராமலிங்கரின் பாடல்கள் எவையேனும் போலியருட்பா மறுப்பின் தோற்றத்திற்கு முன்பு வெளி வந்திருந்தனவா அல்லது பிரபல்லியமுற்றிருந்தனவா என் பதை நாம் ஆராய வேண்டும். ம. பொ. சிவஞான கிராமணியார்,

" ஐந்து திருமுறைகளிலுள்ள பாடல்களைப் பாடி முடித்த பிறகே ஆறாந் திருமுறைப் பாடல்களைத் தனித்தனியாகப் பாடியிருப்பார் என்று எண்ணுவதற் கில்லை. அச்சிட்ட முறையில் ஆறாந் திருமுறை தனிப் புத்தகமாக விருப்பதால் அப்படி ஒரு மயக்கம் ஏற்பட இடமிருக்கிறது. ஆனால் அது பிழையாகும் "

என்று கூறுகின்றாரேயொழிய 'ஆறாந் திருமுறை'யில் இடம்பெறும் பாடல்களைக் காலவரிசைப்படி ஒழுங்கு படுத்தி, 1869ஆம் ஆண்டிற்கு முன்பு இயற்றப்பெற்ற பாடல்கள் எவையெவை 'ஆறாந் திருமுறை'யில் இடம் பெறுகின்றன என்று கூறவில்லை.[31] பல ஆண்டுகளாக இராமலிங்கரின் பாடல் ஆராய்ச்சியிற் காலத்தைக் கழித்த ம. பொ. சிவஞான கிராமணியார் ' ஆறாந் திருமுறைப் '

---

31. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 177.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களின் கால நிர்ணயத்திற் கவனம் செலுத்தாதது வருந்தத் தக்கது.

" இது போல் சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும், லக்ஷியம் வைக்க வேண்டாம். (அவற்றில் தெய்வத்தைப் பற்றி) குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதே யன்றிப் புறங்கவியஞ் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமானால் நமக்குக் காலமில்லை. ஆதலால் அவற்றில் லக்ஷியம் வைக்க வேண்டாம். ஏனெனில் அவைகளிலும் — அச்சமய மதங்களிலும் — அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக் கூடுமேயல்லாது ஒப்பற்ற "பெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப் பெற்றுக் கொள்ளுகிறதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. மேலும் இவைகளுக்கெல்லாம் சாக்ஷி நானேயிருக்கிறேன். நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது. அது பட்டணத்துச் சுவாமிகளுக்கும் வேலாயுத முதலியாருக்கும் இன்னும் சிலர்க்குத் தெரியும். அந்த லக்ஷியம் எப்படிப் போய் விட்டது ? பார்த்தீர்களா ! அப்படி லக்ஷியம் வைத்ததற்குச் சாக்ஷி வேறே வேண்டியதில்லை. நான் பாடியிருக்கிற திருவருட்பாவில் அடங்கியிருக்கிற பாடலையும், மற்றவர்கள் பாடலையும் சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது "

இவை இராமலிங்கர் ' கொடியேற்று விழாவில் திருவாய் மலர்ந்தருளிய உபதேசம் ' என்ற விடயத்தில் இடம் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவை ;[32] 1873ஆம் ஆண்டிலே கூறப் பெற்றவை ; இராமலிங்கர் காலத்தில் வெளிவந்திருந்த ' திருவருட்பா ' முதல் நான்கு ' திருமுறை ' கொண்ட 1867ஆம் ஆண்டுப் பதிப்பாகும். அப்பதிப்பிலே இடம் பெறும் பாடல்கள் தாம் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்த காலத்திற் பாடப் பெற்றவையென்றும், அப்போது தமக்கு அறிவு அற்பமாகவே இருந்தது என்றும், அந்த லக்ஷியம் போய் விட்டது என்றும் இராமலிங்கர் கூறுகின்றார். சைவ சமயத்திலே லக்ஷியம் போய்விட்ட கட்டத்திலேதான் இராமலிங்கர் தமது புதிய தத்துவத்தைக் கட்டவிழ்த்தார். அந்நிலையிலேதான் அவர் பாடல்கள் புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகளுடன் வெளியாயின.

புதுவை வேலு முதலியார், சிவாநந்தபுரம் செல்வராய முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் என்போர்,

> " தொழுவூர் வேலாயுத முதலியாரைக் கொண்டு அது வரை பாடியருளிய பாக்கள் முழுவதையும் நான்கு திருமுறைகளாக வகுத்து 1867-ம் ஆண்டில் அச்சியற்றி வெளியிட்டனர் "

என்பது சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடான ' திருவருட்பா, ஐந்து திருமுறைகள் ' பதிப்பில் இடம் பெறும் ' திரு அருட்பிரகாச வள்ளலார் திவ்ய சரித்திரம் ' என்ற பகுதியிலே காணப்படும் செய்தியாகும்[33].

தென்றிசை நோக்கி இராமலிங்கர் சென்னையிலிருந்து புறப்பட்டது 1855ஆம் ஆண்டு ; கருங்குழியிலே வாசஞ்

---

32. திருவருட்பா, ஆறாவது திருமுறை. சென்னை, சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு, 1942 : வசன பாகம், பக். 54.
33. 1942, பக். 58.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தொடங்கியது 1858ஆம் ஆண்டு; சமரச சுத்த சன்மார்க்க சங்கம் நிறுவியது 1865ஆம் ஆண்டு; வடலூரிலே தருமசாலை அமைத்தது 1867ஆம் ஆண்டு; மஞ்சக் குப்பம் நீதிமன்றத்தில் கூண்டு ஏறியது 1869ஆம் ஆண்டு. இக்கால அகராதியை நோக்கும்போது, 1865ஆம் ஆண்டினை அடுத்து, சிறப்பாக 1869ஆம் ஆண்டினை ஒட்டியே, இராமலிங்கரின் புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகள் வெளிப்போந்தன வாதல் வேண்டும் என்று கூற இடமுண்டு. முற்கிளந்த இராமலிங்கரின் 'உபதேச'ப் பகுதியும், 'திவ்ய சரித்திர'ப் பகுதியும் இவ்வாறு கருத உதவுகின்றன.

இராமலிங்கரின் புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகள் அடங்கிய பாடல்கள் எதுவும் நாவலரவர்களுக்குக் கிடைத்திருப்பின் இராமலிங்கரை அக் கருத்துகளுக்காகவும் நாவலரவர்கள் கண்டித்திருப்பார். ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டில் இடம் பெறும் விடயங்களை மேலெழுந்தவாரியாக நோக்குபவர்களுக்கும் இக் கூற்றின் தாற்பரியம் விளங்காமலிராது.

> "சைவ மரபிலே தோன்றி, சைவ சமயத்தைச் சார்ந்தொழுகும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிட்ட இராமலிங்கர், சாதி வேற்றுமைகளை வெறுத்துப் பாடியதை மடாதிபதிகளோ, அவர்களைச் சார்ந்தொழுகிய சைவ வேளாளர்களான ஆறுமுகநாவலர், சபாபதி நாவலர் போன்ற ஆகம பண்டிதர்களோ பொறுத்துக்கொள்ள இயலாமற் போனது நம்மால் புரிந்துகொள்ளக் கூடியதே. இதில் வியப்பென்னவென்றால், நால் வருணப் பாகுபாட்டினை வள்ளலார் வெறுத்ததற்காக வருணாசிரமிகள் யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை அவர் காலத்தில் வெளிப்படையாக எதிர்க்க வில்லை யென்பதுதான்.

இந்த நிலை சாதியாசாரப் பண்டிதர்களுக்கு வியப்பைத் தந்ததாற்றான்,

> ' வருணத்தாலும் ஆச்சிரமத்தாலும் கல்வி முதலிய பிறவற்றாலும் சங்கராசாரிய சுவாமிகளைத் தானும் அஞ்சலி செய்ய வேண்டிய தீக்ஷிதர் மரபிற் பிறந்தவர் இராமலிங்கப்பிள்ளை காலில் விழுந்து அவரை ஞானாசிரியராகக் கொண்டு வழிபட்டார் ' என்று 'போலியருட்பா மறுப்பு'ப் பிரசுரம் வேதனையோடு கூறுகின்றது ''

என்னும் சிவஞான கிராமணியாரின் கூற்று,[34] நாவலரவர்கள் தம் இயல்புக்கு முற்றும் மாறானது என்பது நாவலரவர்கள் எழுத்துகளைப் படித்தோர் அறிவர். சிவஞான கிராமணியாருக்கு வேதனைக் கூற்றாகத் தோற்றமளிப்பது போலியருட்பா மறுப்பில் எவ்வாறு நையாண்டிக் கூற்றாக அமைகின்றது என்பதை நோக்குதல் அவசியம்.[35]

> '' வருணத்தாலும், ஆச்சிரமத்தாலும் கல்வி முதலிய பிறவற்றாலும் மிகவுயர்ந்த சங்கராசாரிய சுவாமிகளை அஞ்சலி செய்யவுங் கூசி நாமுஞ் சபாநாயகருஞ் சமமென்று கூறி இறுமாக்குந் தீக்ஷிதர் மரபிற் பிறந்துந் தன் காலில் விழுந்து தம்மையே ஞானாசிரியனாக வழிபட்ட அதி தீவிரதர பரிபக்குவராகிய இந்தத் தீக்ஷிதருடைய எலும்பை ஆணாக்காத இராமலிங்கப் பிள்ளை இனி வேறு யாருடைய எலும்பை ஆணாக்கப் போகின்றார் !''

---

34. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 199.
35. த. கைலாசபிள்ளை (தொகு.), ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 105.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பகுதியின் பொருள் தெளிவாக அமைந்தபோதும் சிவ ஞான கிராமணியார் திரித்து வேறர்த்தம் கொண்டதனால் நாமும் பொருளை அவதானிக்க வேண்டிய நிலைமை ஏற் படுகின்றது. சமூகத்திலே உயர்நிலை வகித்த தீக்ஷிதரைக் காப்பாற்றி இருப்பின் இராமலிங்கரின் சிறப்பு விளம்பர மின்றியே பிரபல்லியமுற்றிருக்கும் ; அவ்வாறிருந்தும், இராமலிங்கர் அக் காரியத்தைச் செய்யவில்லை ; செய்ய முடியவில்லை, இதுவே போலியருட்பா மறுப்புக் கூற்றி னுடைய பொருள். பொருளைப் பிழையாக விளங்கிக் கொண்டதோடு அமையாது போலியருட்பா மறுப்புக் கூற் றினையே மாற்றி மேற்கோள் காட்டி, அம் மேற்கோளுக்கு உடுக்குறி தந்த பண்பினை என்னவென்று கூறுவது ?

> ''பொய் வேடத் துறவிகளுக்குப் புகலிடந் தரும் தமிழகமே ! நல்லோரை நடுங்கச் செய்யும் நீ என்று தான் திருந்துவையோ ? வந்தேறிய ஞானியர்க்கெல் லாம் வாழ்வளிக்கும் நீ, உன் சொந்த மகனை நொந் தழச் செய்தாயே ! இந்தப் பாவந் தொலைய, இனி யேனும் உன் ஆறு கோடிக் கண்களிலும் நீர் மல்க, மூன்று கோடி வாய்களாலும் வள்ளலாரை வாழ்த்து வாயா ? — வாழ்த்து ! வாழ்த்து ! வாழ்த்து !!! அது ஒன்றே நீ வாழ வழி.''

எனும் வார்த்தைகள் அப்பண்பினைத் தெளிவாக உணர்த்துகின்றன.[36] வீரபாண்டிய கட்டபொம்மனையும் கப்பலோட்டிய தமிழனையும் தமிழுணர்ச்சிக்குப் பயன்படுத் திய தமிழரசுக் கழகத் தலைவர், இராமலிங்க சுவாமிகளை யும் அவ்வரிசையிலே சேர்த்துக்கொண்டார், கட்டபொம்ம னுக்கும் வ. உ. சி. க்கும் ஆங்கிலேயர் எதிரிகளாக இருந்

36. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 194.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர் ; இராமலிங்கருக்குத் தமிழ் மொழி பேசும் மக்கட் கூட்டத்தின் ஒரு பகுதியினரே எதிரிகளாக நின்றனர். ஆயினும் அக்கூட்டத்தின் முன்னணி வீரராக நின்ற ஆறுமுக நாவலர் தமிழ் நாட்டிற்கு அந்நியர் தாமே ! ம. பொ. சிவஞான கிராமணியாருக்கு முன்பு, நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரின் விஞ்ஞாபனப் பத்திரிகையும் தீவாந்தர சைவ விநோதமும் அருட்பா மருட்பா விவகாரத்தைப் பிரதேச அடிப்படையில் இட்டுச் சென்றமை ஈண்டு மனங் கொளத் தக்கது. சிதம்பரத்தையே சைவ உலகின் கேந்திரமாகக் கொண்டு, சைவப் பணி புரியப் புறப்பட்ட யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரை ம. பொ. சிவஞான கிராமணியார் தமிழ் உணர்ச்சிக்குப் ' பலியாடு ' ஆக வழங்கியுள்ளார்.

> '' வள்ளலாரின் வாழ்க்கையில் ஒரே ஒரு நிகழ்ச்சி பற்றிய விபரங்களையே நான் அதிகமாக விரும்பித் தேடினேன். அது, அருட்பா மருட்பாப் போராட்டமாகும் ''

என்று கூறும் ம. பொ. சிவஞான கிராமணியார்,[37] நாவலரவர்கள் காலத்தில் நடைபெற்ற ' அருட்பா மருட்பா போராட்டம் ' சம்பந்தமாகப் பெற்ற ஒரே ஒரு கண்டன நூல், போலியருட்பா மறுப்பு எனும் பிரசுரமாகும். போலியருட்பா மறுப்புக்கு முன்பு வெளிவந்த ' திருவருட்பா தூஷணைப் பரிகாரம் ' எனும் கண்டன நூலோ அல்லது போலியருட்பா மறுப்பிற்கு எதிராக வெளிவந்த ' போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்காரணிய நாச மஹாபரசு ', ' தீவாந்தர சைவ விநோதம் ' முதலிய பன்னிரு கண்டன நூல்களோ அல்லது ' பேரம்பலப்

---

37. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 7.

பிரசங்கம்' எனும் பிரசுரமோ சிவஞான கிராமணியாருக்குக் கிடைக்கவில்லை. அருட்பா மருட்பா விவகாரத்தோடு நேரடியான தொடர்புடைய நூல்களிற் சிவஞான கிராமணியாருக்குக் கிடைத்த போலியருட்பா மறுப்பு ஒழிந்தவை, மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை *(1871–1907)* காலத்திற்குரியவை. போலியருட்பா மறுப்பினையும் சமரச சுத்த சன்மார்க்க சங்கமும் ஆ. பாலகிருஷ்ண பிள்ளையும் வெளியிட்ட 'திருவருட்பா'ப் பதிப்புகளையும் ஆதாரமாகக் கொண்டே சிவஞான கிராமணியார், ஆறுமுகநாவலர் காலத்து விவகாரத்தைப் பற்றிக் கருத்துரைத்துள்ளார் என்பதை ஈண்டு குறிப்பிடுதல் அவசியமாகும்.

சிவஞான கிராமணியார் நாவலரவர்களைப் பற்றித் தரும் சில செய்திகளை முதற்கண் நோக்குவோம். :

> '' தமிழகத்திலுள்ள சைவ மடாதிபதிகளும், அவர்களைச் சார்ந்திருந்த மகா வித்துவான்களும், சித்தாந்த சரபங்களும் வள்ளலாருக்கு எதிராகக் கிளம்பிய காலத்தில், இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் என்ற பெரியார் தமிழகத்துக்கு வந்தார். வந்தவர் திருவாவடுதுறை மடத்தில் தங்கிச் சைவ நெறி பரப்பும் தொண்டில் ஈடுபட்டார் ''

என்பது சிவஞான கிராமணியார் தரும் நாவலர் அறிமுகத்தின் ஒரு பகுதி.[38] திருவாவடுதுறை யாதீனத் தொடர்பு ஏற்படுமுன்பே நாவலரவர்கள் இந்தியப் பயணம் செய்து பழக்கப்பட்டவர். *1849*ஆம் ஆண்டிலே திருவாவடுதுறை யாதீன கர்த்தர் நாவலர் பட்டம் அளித்துக் கௌரவித்த பின்பு, நாவலரவர்கள் இந்தியப் பயணம் செய்த காலங்களிலே திருவாவடுதுறை யாதீனத்திலும் சில நாட்கள் தங்கி

---

38. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, *1967*, பக். *184*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கின்றார். திருவாவடுதுறை யாதீன வாசம் பயணத்தின் கட்டமாக இருந்ததேயொழிய பயணத்தின் நோக்கமாகவோ முழுக் கட்டமாகவோ நாவலரவர்களுக்கு இருக்கவில்லை. சென்னையும் சிதம்பரமுமே நாவலரவர்களின் இந்தியப் பயணங்களின் இலக்குகளாக அமைந்து காணப்படுகின்றன. உண்மை இவ்வாறாக ம. பொ. சிவஞான கிராமணியார் அவ்வாறு கூறுவதற்கான காரணம்,

"தமிழகத்து மடாதிபதிகள் நாவலருடைய நெஞ்சை நஞ்சாக்கி வள்ளலாருக்கு எதிராக அவரைப் பயன் படுத்தினர். ஏற்கனவே மடாதிபதிகள் அருட்பாவுக்கு எதிராக எழுப்பியிருந்த வழக்குக்கு நாவலர் பெருமான் தலை சிறந்த வக்கீலாகி விட்டார்"

என்னும் வசனங்கள் மூலம் தெளிவாகின்றது.[39] மடாதிபதிகளோடு நாவலரவர்களுக்குத் தொடர்பு இருந்ததை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவர் மடாதிபதிகளின் 'கைப்பாவை'யாக ஆடினார் என்ற கருத்து நாவலரவர்களைப் புரியாமையால் மட்டும் எழுந்த கூற்றா ?

"(மீனாட்சி சுந்தரம்) பிள்ளை அவர்களுக்குப் பின் தமது மடத்தில் ஆதீன வித்துவானாக இருக்கத் தகுந்தவரென்று கண்டு வைத்திருந்த சபாபதிப்பிள்ளை விஷயமாகத் தாம் செய்த குற்றத்துக்காக ஒருவகையான க்ஷமை நாவலரவர்களை வேண்டியவர்களும், ஒரு வியாசத்தை வைத்துக்கொண்டு ஆதீன சம்பிரதாயத்துக்கு மாறாக எழுந்து வந்து நாவலரவர்களுக்கு மரியாதை செய்தவர்களும், மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குக் காட்டாத பாஷ்யம், சிற்றுரை,

---

39. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 185.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரைகளை நாவலரவர்களுடைய சித்தாந்த அறிவைக் கண்டு மகிழ்ந்து காட்டினவர்களும், மடங்களின் சீர்கேட்டைப் பற்றி நாவலரவர்கள் பாலபாடம் முதலியவற்றில் எழுதியவற்றைக் கண்டும் போசன காலம் முதலியவற்றில் அவர்களைப் புகழ்ந்தவர்களும், அவர்களிடத்து அச்சமும் அன்பும் மதிப்பும் ஆகிய மூன்றும் பூரணமாக உடையவர்களும், நாவலரவர்களுடன் செல்லுஞ் சதாசிவப் பிள்ளைக்கு விபூதி நெற்றியில் இட்டு விடும்போது அது சிவம், இது சத்தி, சத்தியின்றிச் சிவம் ஒன்றுஞ் செய்யமாட்டாது என்று புகழ்ந்தவர்களுமாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களுக்கும்.......... ''

என்னும் வார்த்தைகள் நாவலரவர்களுடைய சரித்திரம் அதிகம் அறிந்த த. கைலாசபிள்ளைக்குரியவை ; 1934ஆம் ஆண்டிலே இரண்டாம் முறையாக வெளிவந்த அருணாசலக் கவிராயர் பாடிய 'யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்' எனும் நூலின் முகவுரையிலே (பக். 12-13) இடம் பெறுபவை. இவ்வார்த்தைகளில் அடங்கியிருக்கும் செய்திகள் பலவற்றை இன்று மறு பரிசீலனை செய்வது முடியாதென்று கருதிய இடத்தும் நாவலரவர்களின் 'பால பாடம், மூன்றாம் புத்தகம்' கிடைத்தற்குரியதாக உள்ளது.[40] இந் நூலில் இடம்பெறும் 'மடம்' என்ற கட்டுரை நாவலரவர்களின் இயல்பினை நன்கு வெளிப்படுத்துகின்றது. மடங்களில் நடைபெற்று வந்த குற்றங்களை எடுத்துக் கண்டித்தெழுதிய நாவலரவர்கள் மடாதிபதிகளின் கைப்பாவை ஆகினார் என்று கூற முற்படுதல் விஷமத்தனமாகும்.

---

40. இப்பால பாடம் 'நான்காம் பாலபாடம்' என்று இப்பொழுது வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிக மனமுடையவர்கள் புரட்சிகரமான சீர் திருத்தக் கருத்துகளை ஏற்கவில்லை என்ற வாதத்திற்காக மடாதிபதிகளின் கருவியாக நாவலரவர்களைக் காட்டிய ம. பொ. சிவஞான கிராமணியார்,

" பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் உரைநடையை வளப்படுத்திய பெருமையிலே இராம லிங்க வள்ளலாருக்கு அடுத்து நிற்பவர் நம் நாவலரே யாவர் "

என்று நாவலரவர்களை மேலும் அறிமுகஞ் செய்துள் ளார்.[41] 'மாக் அந்தோனி' பாணியிலே ம. பொ. சிவ ஞான கிராமணியார் செய்த அறிமுகத்தின் விளக்கம்,

" 19ஆம் நூற்றாண்டில் உரைநடைத் தமிழுக்குப் புது வாழ்வு தந்த பெரியார் மூவராவர். அவர்கள் — இராமலிங்கர், யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுகநாவலர், மாயூரம் முனிசீப் வேத நாயகம் பிள்ளை ஆகியோரா வர். இந்த மூவரும் சம காலத்தவர் என்பதோடு, சற்றேறக் குறையச் சம வயதினராகவும் இருந்தனர். நாவலரைவிட, வயதில் பத்து மாதங்கள் இளையவர் வள்ளலார். வள்ளலாருக்கு மூன்று ஆண்டுகள் இளையவர் வேதநாயகம் பிள்ளை.

வள்ளலார், தாம் உரைநடைத் தமிழில் இயற்றிய 'மனுமுறை கண்ட வாசகம்' என்ற நூலை வெளி யிட்டது, 1854ஆம் ஆண்டிலாகும். அதற்கும் முன்னதாக, 'ஒழிவிலொடுக்கம்' என்ற நூலை — அதன் பாடலுக்குத் தாம் இயற்றிய உரையோடு — 1851ஆம் ஆண்டில் வெளியிட்டார் வள்ளலார்.

41. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 185.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலர், உரைநடை நூல் வெளியிடத் தொடங்கியது, 1856ஆம் ஆண்டுக்குப் பிறகாம்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, தமது மொழி பெயர்ப்பான உரைநடைத் தமிழ் நூலை 1862இல் தான் வெளியிட்டார். அவருடைய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற உரைநடை நாவல் 1876இல் வெளியானது.[42] ஆகவே, உரைநடைத் தமிழை வளர்த்த பெருமைக்குரிய மூவருள் நம் இராமலிங்கப் பெருமானே முதல்வராக, மற்ற இருவருக்கும் வழிகாட்டியாக நிற்கின்றார்''

என்று பின்பு தலை நீட்டுகின்றது.[43] தமிழகத்துச் சொந்த மகனுக்குப் பெருமை தேடித் தரும் முயற்சியை வரவேற்பவர்களும், அம்முயற்சி வரலாற்றுப் போலியாக அமையாமல் இருப்பதை விரும்புவார்கள்.

ஆறுமுகநாவலர் இயற்றிய முதலாம், இரண்டாம், மூன்றாம் பால பாடங்கள் 11–8–1852 எனும் தேதிக்கு முன்பே அச்சிடப்பட்டுவிட்டன; இலங்கைத் தேசாதிபதி வில்லியம் அண்டர்சன் பிரபுவுக்கு 11–8–1852 தேதியிட்டு எழுதப் பெற்ற விண்ணபத்தில் இந்நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளதையும் வண்ணை சைவப் பிரகாச வித்தியா சாலையிற் பாட நூல்களாக வழங்கப்பெற்று வருவதையும் விண்ணப்பதாரர் குறிப்பிட்டுள்ளனர்.[44] நாவலரவர்களின்

---

42. பிரதாப முதலியார் சரித்திரம் வெளிவந்தது 1879 இலே ஆகும்.
43. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 293-294.
44. ச. தனஞ்சயராச சிங்கம், நாவலர் பணிகள், 1969, பின்னிணைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணம்' எனும் பெரிய புராண வசனம் பரிதாபி ஹூ, சித்திரை மீ (1852) யாழ்ப்பாணம் வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச்சிடப்பெற்றது. அவருடைய சைவ தூஷண பரிகாரம் ஆனந்த ஹூ, வைகாசி மீ (1854) அதே அச்சியந்திர சாலையிலிருந்து வெளிப் போந்தது. நாவலரவர்களின் சுப்பிர போதம், வச்சிர தண்டம் என்னும் துண்டுப் பிரசுரங்களும் 1855க்கு முன்பு வெளிவந்து விட்டன. உரைநடையில் நூல்களை எழுதுவதற்கு, யார் யாருக்கு முன்னோடி என்பதை முற்கிளந்த கூற்றுகள் தாமே எடுத்துரைப்பன.

கண்ணுடைய வள்ளலின் ஒழிவிலொடுக்கம் எனும் நூலுக்கு உரை கண்டவர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள். இராமலிங்கர் அவ்வுரையைத் தாம் இயற்றிய சிறப்புப்பாயிர விருத்தியுடனும் அரும் பதவுரையுடனும் 1851ஆம் ஆண்டில் வெளியிட்டார். வீரை கவிராச பண்டிதரின் சௌந்தரிய லகரி மூலத்தையும் 'சைவ எல்லப்ப நாவல'ரின் உரையையும் நாவலரவர்கள் பரி சோதித்துக் கொடுக்க, சதுரங்க பட்டணம் அண்ணாமலை முதலியார் தமது சரஸ்வதீவிலாச வச்சுக்கூடத்திற் பதிப் பித்தது சௌமிய ஹூ, கார்த்திகை மீ (1849) ஆகும். திருப்போரூர் சாந்தலிங்க சுவாமிகளின் கொலை மறுத்தலைத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் இயற்றிய வுரையுடன் விரோதிகிருது ஹூ, சித்திரை மாதத்திலும் (1851), பவணந்தி முனிவரின் நன்னூலைச் சங்கர நமச் சிவாயராற் செய்யப்பெற்று, சிவஞான முனிவராலே திருத்தப்பெற்ற வுரையுடன் அவ்வருடம் ஐப்பசி மாதத் திலும் (1851) நாவலரவர்கள் பரிசோதித்து யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச்சிட்டனர். நாவலரவர்களின் சூடாமணி நிகண்டுரைப் பதிப்பு சென்னையிலே சௌமிய ஆு, ஆடி மீ (1849) வெளிப் போந்தது. துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகளின் திருச்செந்திணிரோட்டக யமக வந்தாதிக்கு நாவலரவர்கள் கண்டவுரை சாதாரண ஆு, பங்குனி மீ (1851) யாழ்ப்பாணம் வித்தியாநுபாலன யந்திரசாலையிலிருந்து வெளிவந்தது. உரைநூற் பதிப்பிலும் உரை இயற்றுவதிலும் யார் யாருக்கு முன்னோடி என்பதை மேலும் விவரித்துரைக்க வேண்டியதில்லை.

'தமிழைத் துறக்காத துறவி' பற்றிக் கூறவந்த ம. பொ. சிவஞான கிராமணியார்,

> "இருபதாம் நூற்றாண்டுக் கம்பர்'[45] எனப் புகழ் பெற்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஒரு சமயம் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது,
>
> > 'இராமலிங்க சுவாமிகள் துறவடையாமல் நாவலர், வித்துவான் முதலிய பெயர்களை ஏற்றிருந்தால், தங்களுக்கு இலக்கண வித்வான் என்னும் பெயர் கிடைத்திராது'
>
> என்று கூறியதாக அறிகிறோம்"

என்று எழுதியுள்ளார்.[46] உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் பேராலே வெளிவந்த 'என் சரித்திர'த்தின்

---

45. திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் காலம் 1815–1876.

46. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 295.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குரல் போன்று சிவஞான கிராமணியார் குரல் தொனிக்கின்றது. இச்செய்தியை அவர் யாரிடமிருந்து அறிந்தார் என்ற பிரச்சினையை விட்டு, மீனாட்சிசுந்தரம் பிள்ளை இவ்வாறு கூறியிருப்பாரா என்பதைச் சிறிது நோக்குவோம்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளை நாவலரவர்களுக்கு எட்டு வயது மூத்தவர். திருவாவடுதுறை யாதீனத்தின் பதினைந்தாம் பண்டார சந்நிதிகள் அம்பலவாண தேசிகர் அருளாட்சிக் காலத்திலே (1844—1869) 1849ஆம் ஆண்டு நாவலரவர்களுக்கு ' நாவலர் ' என்ற கௌரவம் வழங்கப் பெற்றது. அதற்குக் காரண கர்த்தாவாக விளங்கியவர் சின்னப்பட்டத்தில் வீற்றிருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர். அவரே 1858க்குப் பின்பு திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை யாதீன வித்துவானாக நியமிக்கப்படக் காரணமாய் இருந்தவர். மீனாட்சிசுந்தரம் பிள்ளை அம்பலவாண தேசிகரையும் சுப்பிரமணிய தேசிகரையும் பாடிப் பரவியவர். 1864ஆம் ஆண்டு நாவலரவர்கள் கும்பகோணத்திலே தங்கியிருந்த காலை திருவாவடுதுறை யாதீன கர்த்தர் ஆணைப்படி மீனாட்சிசுந்தரம் பிள்ளை கும்பகோணம் சென்று நாவலரவர்களைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு அழைத்துச் சென்றவர்.

" மன்னுபெருந் தமிழ்ப்பாடை யிலக்கணமு
மிலக்கியமும் வரம்பு கண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன்
சிவாகமநூற் பரவை மூழ்கி
யுன்னுமநு பூதியெனும் விலைவரம்பி
லாமணிகை யுறக்கொண் டுள்ளா
நின்னுநய குணத்தினனாய்ச் சைமெனும்
பயிர்வளர்க்கு மெழிலி போல்வான் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-7-1995
LIBRARY

என்று நாவலரவர்களின் திருக்குறட் பரிமேலழகருரைப் பதிப்புக்கும்,

"கந்தவே டவத்திற் கருதரன் பான்முன்
வந்தவே ளென்ன வந்தவ தரித்தோ
னீற்றொடு கண்மணி நிறையப் பூண்பார்ப்
போற்றொடு பொலியும் புண்ணிய புருட
னவநெறி யாய வனைத்துங் களைந்து
சிவநெறி வளர்க்குந் தப்பிய குணத்த
னெழுத்து முதலாக வியம்பிலக் கணமும்
வழுத்திலக் கியமும் வரம்புகண் டெழுந்தோன்
சமயம் விசேடந் தகுநிரு வாணமென்
றமையுமுத் தீத்கையு மடைவுறப் பெற்றோன்
சுமங்கல விசேடச் சுருதியா மூலா
கமங்களின் முப்பொருள் கருதுபே ரருளான்
யுத்தியி னமைத்துணர்ந் தோங்க னுபூதி
சித்தியுற் றமைந்த சிவசிந் தாமணி
கற்றுணர் புலவருட் களிக்கு
முற்றுண ராறு முகநா வலனே"

என்று அவர்களின் திருக்கோவையாருரைப் பதிப்புக்கும் சிறப்புக் கவி சூட்டிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை நாவலரவர் களின் முகத்திற்கெதிரே இவ்வாறு கூற நினைத்திருப்பார் என்று எண்ணுவதும் பொருத்தமாகத் தெரியவில்லை.

இராமலிங்கருக்குப் பெருமை சம்பாதிப்பதற்காக ஆறுமுகநாவலரைப் 'பலியாடு' ஆக்க வழங்கிய சிவஞான கிராமணியார் ஆறாந் திருமுறை 'யில் இடம் பெறும் பாடல் களின் கால நிர்ணயத்திற் கவனஞ் செலுத்தாதது வியப்பிற் குரியதன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலியருட்பா மறுப்பின் நோக்கத்தினை அவதானிப் போம். இராமலிங்கரின் பாடல்களுடைய செல்வாக்கிற்குக் காரணம்,

" இராமலிங்கபிள்ளை திருவருள் பெற்றவரென்று அவர் பாடலிலும் அவர் மாணாக்கர் பாடலிலுஞ் சொல்லப் பட்டிருத்தலும், இராமலிங்கபிள்ளைக்கு இரசவாதந் தெரியுமென்றும், அவர் பல அற்புதங்களைச் செய் கின்றாரென்றும், அவரும் அவர் மாணாக்கர்களும் சொல்லிக்கொண்டு திரிதலுமேயன்றி வேறில்லை "

என்று போலியருட்பா மறுப்பின் ஆசிரியர் கருதினார்.[47] அக்கருத்தினால்,

" இராமலிங்கபிள்ளை ஓதாதே எல்லா மறிந்தவரென்ப தும், சிவபெருமானைச் சாக்கிரத்தே தரிசித்தவரென் பதும், திருவருளைப் பெற்றவரென்பதும், திருவரு ளைப் பிரசாதிப்பவரென்பதும், அற்புதங்கள் செய்ய வல்லவரென்பதும், இரசவாதந் தெரிந்தவரென்பதும் அசாத்தியமே......... "

என்று நிறுவி,

" அவருக்குத் திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் பெயரும் அவர் பாடலுக்குத் திருவருட்பாவென்னும் பெயரும் இடப் பட்டது நகைப்புக்கிடமே யாமென் றும், இராமலிங்க பிள்ளையும் அவர் மாணாக்கர் களும் உலகத்தாரை வஞ்சித்துப் பொய்ப்புகழ் பெற்று வயிறு வளர்க்கப் புகுந்த வேடங்களே இவை களென்றும் "

---

47. த. கைலாசபிள்ளை (தொகு.), ஆறுமுகநாவலர் பிர பந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 93-94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைநாட்ட முற்பட்டார்.[48] ஆறுமுகநாவலர் காலத்தில் நிகழ்ந்த அருட்பா மருட்பா போராட்டத்திலெழுந்த கண்டன நூல்களிலே போலியருட்பா மறுப்பு எனும் பிரசுரம் ஒன்றினை மட்டுமே நோக்கி,

> '' கொள்கைவழி உள்ள கருத்து வேறுபாடுகளை மறைத்துக் கொண்டு, தனிப்பட்ட முறையில், அடிகளாரைக் குறைத்தும் பழித்தும் பேசினர் ''

என்று கூறுபவர்கள்,[49] போலியருட்பா மறுப்பில் இடம் பெறும்,

> '' இவைகளெல்லாஞ் செய்யாது வாயில் வந்தபடி நம்மைத் தூஷிப்பது குலத்திற் பிறந்தாருக்கு அழகன்று ''

என்னும் பகுதியையும் மறந்துவிடுதல் நாகரிகமன்று.[50] போலியருட்பா மறுப்பிற்கு முன்பே தனிப்பட்ட முறையிலே தாக்கப்பெற்ற நாவலரவர்களை நோக்கிப் போலியருட்பா மறுப்பின் பிரசுரத்திற்குப் பின்பு பன்னிரு கண்டன நூல்கள் ஏவப்பட்டன.[51] இவற்றிலொன்று தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதிய ' போலியருட்பா மறுப்பின் கண்டனம் அல்லது குதர்க்காரணிய நாச மஹா பரசு ' என்பதாகும். தாம் எழுதிய இராமலிங்கர் வரலாற்றிலோ அல்லது ஆறுமுகநாவலர் வரலாற்றிலோ அருட்பா

---

48. த. கைலாசபிள்ளை (தொகு.), ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 109.
49. ம. பொ. சிவஞானம் : வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு, 1967, பக். 182-183.
50. த. கைலாசபிள்ளை (தொகு), ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 112.
51. சி. கணபதிப் பிள்ளை. நாவலர், 1968, பக். 24-25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருட்பா விவகாரம் பற்றிக் கூறாத சு. அ. இராமசாமிப் புலவர், தொழுவூர் வேலாயுத முதலியார் பற்றி எழுது மிடத்து,

> " எதிரிகளின் நூல் ஒன்று 'போலியருட்பா மறுப்பு' என்னும் பெயருடனும் பொய் பித்தலாட்டங்களுட னும் வெளிவந்துலாவியது. அப்போது வேலாயுத முதலியார் 'போலியருட்பா மறுப்பென்னும் குதர்க் காரண்ய நாச மகா பரசு' என்னும் நூல் ஒன்றை எழுதி வெளிப்படுத்தினார். இத்துடன் இப்போர் இந்நாளில் ஓய்ந்தது "

என்று கூறியுள்ளார்.[52] இராமலிங்கரின் பிரதம சீடருடைய கண்டன நூலின் மாண்பினைத் திருநெல்வேலித் தென் னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீட்டிலே இராமசாமிப் புலவர் இவ்வாறு கூறிய போதும், சுக்கில வருஷம், ஆனி உத்தர தரிசன தினத்திற்கு இன்னமும் நாட் கள் இருந்தன என்பதை நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

போலியருட்பா மறுப்பிற்கு எதிராக விடப்பட்ட பிறி தொரு நூல் தீவாந்தர சைவ விநோதமாகும். இதனை எழுதியவர் நரசிங்கபுரம் வீராசாமி முதலியார். 'விஞ் ஞாபனப் பத்திரிகை'யிலே ஈழத்தை இழித்துரைத்த வீரா சாமி முதலியார், அதே பாணியில் தீவாந்தர சைவ விநோ தத்தையும் படைத்துள்ளார்.[53]

> " செழியர் செம்பியர் சேரனென் றியம்புமு வேந்தர்
> வழியில் வந்தவம் மன்னவர் முன்னைநாள் வருநூல்

---

52. தமிழ்ப் புலவர் வரிசை, பத்தாம் புத்தகம், 1955, பக். 84.
53. சி. கணபதிப் பிள்ளை, நாவலர், 1968, பக். 24-25.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியினா ற்றமிழ் வழங்குநா டாள்கையில் முனிந்து
பழிபி றங்கிய கொலைமுதற் புரிந்தபா தகரை

" இன்ன தண்டமிழ் வழங்குநாட் டிருப்பது தவிர்த்துப்
பன்னும் பல்வகைச் சிங்களர் நிசாசரர் பலரும்
மன்னி மல்கிய விழிவெலாம் வைகிய விலங்கைத்
தன்னில் விட்டிடல் வழக்கெனப் பண்டைநூல்
சாற்றும்

" கொள்ளை கொள்ளுதல் கொலைசெய லாதிகுற்
றங்கள்
பள்ளர் கள்வர்கள் பறையர்கள் முதலிய பலவே
றெள்ளு கீழ்குலத் தியற்கையாஞ் செய்கையி லிவர்கள்
உள்ள வாறுயர் குற்றத்தா லிலங்கையி லுற்றார்

" காதல் பெருக விலங்குகள்போற் கலந்து வாழு
நாளதனில்
மாத ருடனே யாண்களையும் வந்த பைபில்
மார்க்கத்தார்
ஓதி யவர்க ளனைவரையு முடனே கிறிஸ்து மதமாக்கி
யாது மறிவொன் றில்லாரை யங்கே படிக்க முயற்சி
செய்தார் "

என்பன வீராசாமி முதலியாரின் தமிழ் மரபு. இராம லிங்கர் கோஷ்டியினர் எதிர்க்கட்சியிலே முக்கியத்துவம் வகித்த நாவலரவர்கள் தமிழகத்தவரல்லர் என்பதைத் தமது பிரச்சாரத்தில் நன்கு பயன்படுத்தியுள்ளனர் என்பதைத் தீவாந்தர சைவ விநோதம் காட்டுகின்றது. சைன பௌத்தருக் கெதிராகப் பல்லவர் காலத்து அடியார்கள் தமிழ் உணர்ச்சியைத் தூண்டியது போல இராமலிங்கர் கோஷ்டியினரும் பிரதேச உணர்ச்சியினைத் தூண்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்வரும் இரு பாடல்களும் நாவலரவர்களைப் பற்றித் தீவாந்தர சைவ விநோதம் கூறியவைக்கு எடுத்துக்காட்டு :

'' ஈழமுறு மானிப்பாய்க் கல்லூரிப்
பாதிரிமா ரியல்பின் மிக்கத்
தாழுதலில் ஆங்கிலமும் தமிழ்சிறிதும்
பயிற்றியுணச் சாத மிட்டு
வாழுமிட மும்மளிப்ப வாறுமுக
நாவல னென்போன்றா னங்கே
பாழிவாய் திறந்துண்டு கற்றுமுனங்
கிறிஸ்தவனாம் பண்பி னின்றான்.

அவ்வகையாய் மட்டுவாய்ப் பைராட் டென்ன
ஆறுமுக நாவலனுங் கிறித்து வப்பேர்
கவ்வைபெறப் பெற்றசில வாண்டு பின்னர்
கபடுமிகும் பாதிரிமா ருளவ றிந்து
செவ்வைமிகுங் கல்விச்செவ்வி வாய்ந்த சீலச்
சென்னையுளார் களைக்கிறித்து மதத்திற்
[சேர்க்கும்
எவ்வகையோ வதைத்தேடி முடிப்பா யென்ன
விந்தை பைராட் நாவலனை யனுப்பினரால் ''

தீவாந்தர சைவ விநோதத்தின் ஆசிரியர் பற்றி ' நல்லறிவுச் சுடர் கொளுத்தல் ' கூறுவது மேல்வருவது[54] :

'' வீராசாமி முதலியாரே ! உம்மை நாம் நோவதென்னை ? உம்மாலே திட்டப்படாத வித்துவான்கள் யார் ? உம்மாலே புகழப்படாத வித்துவான்கள் யார் ? உம்மாலே திட்டப்படாத பிரபுக்கள் யார் ?

54. த. கைலாசபிள்ளை (தொகு.) ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, முதற் பாகம், 1954, பக். 135-136.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மாலே புகழப்படாத பிரபுக்கள் யார்? உமக்குத் திருப்தி பிறப்பிக்க யாவரான் முடியும்? குபேரனாலும் முடியாதே! சில காலத்துக்கு முன்னே உம்மாலே குடிப்பிறப்பிழுத்துத் திட்டப்பட்டவர்களே இப்போது சத்துக்களைத் திட்டும்படி உம்மை ஏவி மறைந்து நிற்கின்றார்கள். அவர்கள் இன்னும் எத்தனை தரம் உம்மாலே திட்டப்படுவார்களோ! யாரறிவார்! ஐயையோ! வீராசாமி முதலியாரே! நீர் வயசினாலே மிக முதிர்ந்துவிட்டீர். தேகமோ அநித்தியம். இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ தெரியாதே. ஆதலினாலே, நீர் சத்துக்களை நிந்தித்தலையும், பஞ்சபாசத் தடையோடு கூடிய பசுக்களாலே செய்யப்பட்ட பசு நூல்களைப் பாராட்டிப் பொருள் கோடலையும் ஒழித்துவிட்டு எடுத்த தேகம் விழுவதற்கு முன்னே கடவுளையும், மெய்யடியார்களையும் வழிபட்டு, அடங்கியொழுகி, நற்கதி பெற்றுய்யக் கடவீர்''

ஆறுமுகநாவலர் உள்ளத்திலே இராமலிங்கர் கோஷ்டியினர் தம்மை மட்டுமன்றி ஈழத்தையும் இழிவுபடுத்திச் செய்த பிரச்சாரம் ஆழமாகப் பதிந்திருந்தது. இராமலிங்கர் காலத்திற்குப் பின்பு, யுவ வருடம், தை மாதம் (1876) நாவலரவர்கள் எழுதிய 'மித்தியாவாத நிரசனம்' எனும் கண்டனத்திலிருந்து எடுக்கப்படும் மேல் வரும் இரு பகுதிகள் இக் கூற்றினை வலியுறுத்துவன.

'' கந்தமடப் பிரபுவே!...... சைவப் பிரசாரகருக்கு விரோதமாகக் கருங்குழி இராமலிங்கபிள்ளையும் அவர் மாணாக்கரும் பதிப்பித்த புத்தகங்களிலுள்ள சில தூஷண வசனங்களை எடுத்து, உன் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே பேசிக் களிப்புற்றாயே........ இவ்வியாழ்ப் பாணம் ஒரு சிறு நூலேனும் ஒரு சிற்றுரையேனுஞ் செய்யப் பெறாத தேசம் என்றும், இங்கிருக்கிறவர் களெல்லாரும் பாண் குடிகள் என்றும், இங்கிருக் கிறவர்களெல்லாரும் சான்றார்கள் என்றும், அப் புத்தகங்களுட் சிலவற்றிலே பேசப்பட்டிருக்கின்றதே ! அவைகளையும் நீ நம்ப வேண்டுமே ! சைவப்பிரசார கர் மாத்திரஞ் சான்றாரென்றாலன்றோ நீ மகிழ்ச்சி யடையலாம்.[55]

கந்தமடப் பிரபுவே ! ........ சைவப் பிரசாரகர் சிதம்பரத்துத் தீக்ஷிதர்களோடும் எதிர்த்தது குற்றம் என்றிகழ்ந்தாய். இவ்வியாழ்ப்பாணத்தார் பலரைக் காணுந் தோறும் தீக்ஷிதர்கள் : எங்கள் முன்னோர் கள் உங்கள் முன்னோர்கள் வந்தபோது யாழ்ப்பாணத் துச் சாணாரப் பயல்களே ! ஒத்தி நில்லுங்கள் என்று சொல்ல, உங்கள் முன்னோர்கள் : நாங்கள் சிவ கங்கையில் தோய்ஞ் செழும்பியும், சபாபதியைக் கண் ணாரக் கண்டும், ஆடுந் தேவடியாளாடை பட்டும், குருக்களையரையுங் குருக்களையர் பெண்டாட்டியை யுங் கூடவைச்சுத் திண்டும், இன்னுஞ் சாண்டாரோ இன்னுஞ் சாண்டாரோ என்று சொல்லுகிறவர்கள்' என்று பேசிப் பேசி நிந்திக்கும் நிந்தையைச் சைவப் பிரசாரகர் நீக்கி விட்டது இவ்வியாழ்ப்பாணத்தாருக் குத் தீமையாய் முடிந்ததோ !''[56]

ஈழம் திரும்பும் நோக்கோடு சென்னையிலிருந்து புறப்பட்ட ஆறுமுகநாவலர் 1869ஆம் ஆண்டு, ஜூன் மாதம்

---

55. த. கைலாசபிள்ளை (தொகு.) ஆறுமுகநாவலர் பிர பந்தத் திரட்டு, இரண்டாம் பாகம், 1955, பக்.109.
56. ஷை நூல், பக். 110-111.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரம் வந்தார். நாவலரவர்களாற் கண்டிக்கப்பட்ட தீட்சிதர்கள், சிதம்பரத்திலே, இராமலிங்கரையும் அவர் கோஷ்டியினரையும் துணையாகக் கொண்டு, நாவலரவர்களுக்கு எதிராகக் கூட்டம் கூட்டினார்கள். அந்தக் கூட்டம் பேரம்பலத்திலே நடைபெற்றது.

" நிறை வெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலம் "

(1.80.4)

எனத் தேவார முதலிகளாற் போற்றப் பெற்ற பேரம்பலத்திலே, தேவார முதலிகளின் தேவாரம் உட்பட்ட பஞ்சபுராணத்தையே 'அருட்பா' என்று கொள்ளவேண்டும் என வற்புறுத்தி நின்ற நாவலரவர்களுக்கு எதிராக 1869ஆம் ஆண்டு, ஜூன் மாதம், ஏழாந் தேதி கூடினார்கள். ம. பொ. சிவஞான கிராமணியார் 'பேரம்பலப் பிரசங்க'த்தை அறிமுகப்படுத்துமாற்றைக் கவனிப்போம்.[57]

" ஒரே காலத்தில் இராமலிங்கரும் ஆறுமுகநாவலரும் சிதம்பரத்திற்கு வருகை தந்தார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, சிதம்பரம் நடராசப் பெருமான் கோயில் தீட்சிதர்களுள் சிலர் சுக்கில ஆண்டு, ஆனித் திங்கள் (1869) உத்தர தரிசனத்தன்று சிதம்பராலயத்திலுள்ள பேரம்பலத்திலே ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதிலே, தம்முடைய சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினார் வள்ளலார் "

பேரம்பலப் பிரசங்கத்திலே இராமலிங்கர் நாவலரவர்களை அவதூறாகப் பேசவில்லை என்ற கருத்தை முன் வைக்கவே

---

57. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 186.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞான கிராமணியார் இவ்வாறு கால்கோள் செய்கின்றார்.

" நாவலர் வழக்குத் தொடுத்தது, வள்ளலார் பொதுக் கூட்டத்தில் தம்மைத் தூஷித்ததாகவன்று. சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் அன்பர்கள் சிலருடன் தம்மைத் தூற்றியதாகவே வழக்குத் தொடுத்தார் "

என்று பின்பு துணிந்து சிவஞான கிராமணியார் கூறுகிறார்.[58] அவர் முடிபுக்குச் சான்றாகக் கொள்ளும் மேற்கோள்,

" ஆறுமுகநாவலரவர்கள் தமது பாடல்களைக் கண்டித்த காலை அவர் மீது கோபமும் பொறாமையும் கொண்டு சிதம்பரத்தின் கண்ணுள்ள ஆயிரக்கால் மண்டபத்திலிருந்து தம்மையடுத்த சிலரது தூண்டுதலால் ' நாவலர் ' என்ற சொற்கு அர்த்தம் விளக்கத் தொடங்கி, ' நாவல்லாதவர், நாவினால் அலர் உண்டாக்குவோர், நாவினால் துன்பப்படுபவர் ' என்பன முதலாய கூறினார் "

என்பதாகும்.[59] இம் மேற்கோள் ' இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு ' எனும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றதாம். இம் மேற்கோள் இடம் பெறுவதாகக் கூறத்தக்க பகுதி மேல் வருவது :[60]

---

58. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 188.
59. ஷை நூல், பக். 188
60. சி. கணபதிப் பிள்ளை, " ம. பொ. சி. கையில் கதிரைவேற் பிள்ளை, தினகரன், 16-8-1970.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், கருங்குழியார்க்கும், அவர் பாடல்களுக்குத் திருவருட் பிரகாச வள்ளலார், திருவருட்பாவெனப் பெயர் வைத்தல் அணுவளவும் ஒவ்வாதெனப் பிரசங்கித்தகாலை அதற்குத் தக்க சமாதானஞ் சொல்லத் தெரியாது வயிறெரிந்து மனம் புகைந்து ஒரு பிராமணனையுந் தம்முடன் சேர்த்துச் சிதம்பரத்தில் ஒரு பிரசங்கம் வைத்தார். அதில் ' நாவலர் ' என்ற சொல்லை எடுத்துக் கொண்டு, நா—அல்லாதவர், நாவினாலே பழிமொழியை உண்டாக்குவோர் நாவினாலே துன்பப் படுபவர் எனப் பலவாறு தூஷித்தார். அது கேட்ட ஒருவர் சபையிலெழுந்து, '' குழியாரே நுமக்கும் அப் பட்டத்திற்கும் வெகுதூரமே. திருவாவடுதுறை யாதீன மகா சந்நிதானம் வேறு யாருக்காவது அந்தப் பட்டத்தைக் கொடுத்ததுண்டா ? நீவிர் பொறாமைப் பட்டநர்த்தங் கொள்ளல் நன்றன்று. உம்மைத் தானா சிவனார் வந்து மாலையிட்டார். சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கும் நாவலர் என்னும் பெயரிருத் தலால் அதற்கும் இப்படித்தான் அர்த்தம் பண்ணுவீரா ? கணக்கராய உமக்கு நல்வேளாள குலத் தார்க்குரிய பிள்ளைப் பட்டத்தை யாவர் கொடுத் தார் ? அதற்கு மேல், சுவாமிகள் என்ற பட்டத்தைப் பொள்ளற் குடக்கு வள்ளற் பட்டங் கட்டினாற் போல வைத்துக் கொண்டீரே '' எனப் பலவாறு கண்டிக்க, இராமலிங்க பிள்ளை யெழுந்து போய்விட்டார். மற்றை நாள் இராமலிங்கபிள்ளை நாவலர் என்ற சொல்லை யெடுத்து இன்ன இன்னவாறு தூஷித்தார் என்று பத்திரிகை வெளிப்படுத்தப்பட்டது. அப் பத்திரிகையைக் கொண்டு நீதித் தலத்தில் நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இராமலிங்கபிள்ளை மீதும், பிராமணன் மீதும் வழக்குத் தொடுத்தனர் ''

மேற்கோளை மனம் போனவாறு திரித்ததோடு அமையாது, அதற்கு அநுவாதக் குறிகள் தந்து வெளியிட்டிருக்கும் பண்பு போற்றத் தக்கதா ? சிவஞான கிராமணியார் இவ்வாறு ஏன் செய்தார் ?

'' காரியத்தை விசாரியாதவர்கள் என்ன நினைப்பார்கள். ஆயிரக்கால் மண்டபத்தில் ஏதோ ஒரு மூலையிலிருந்து இராமலிங்கர் அன்பர் சிலருடன் அளவளாவினார். பேதைகள் இவர் நாவலரைத் தூற்றினார் என்று நாவலருக்குச் சொன்னார்கள். நம்பி நாவலர் வழக்குத் தொடுத்தார். ' வழக்குப் பொய் வழக்கு ' என்றுதானே யாரும் நினைப்பர்.''[61]

' பாரத சக்தி மகா காவியம் ' பாடிய சுத்தானந்த பாரதியார்,

''ஒரு சமயம் வடலூரில் வள்ளலார்' கையெழுத்துப் பிரதிகளை அலசிப் பார்த்தேன். இரு புறமும் வீசிய சொற்சிலம்பக் கடிதங்களும் கட்டுரைகளும் கிடைத்தன. ஆனால் வள்ளலார் கைப்பட எழுதிய ஆதாரம் எதுவுமில்லை. அவர் இவ்விவாதத்திலேயே தலையிடாமல் அடக்கமாகவே யிருந்ததாகத் தெரிகிறது ''

என்று துணிந்து,[62]

'' வள்ளலார் மாணவர் நாவலரைக் குறைவாகப் பேசியதாகத் தெரிகிறது. நாவலரால் மனப்புண்பட்ட தீக்ஷி

61. சி. கணபதிப் பிள்ளை. '' ம.பொ.சி. கையில் கதிரைவேற் பிள்ளை '', தினகரன், 16-8-1970.

62. நாவலர் பெருமான், 1948, பக். 205.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்களும் இராமலிங்க சுவாமிகளைத் துணைக் கொண்டு கனகசபையிலே கூட்டங் கூட்டி (1869 ஜூன்) சுக்கில வருஷம், ஆனி மாதம் நாவலரைத் தூஷித்தார்கள். அவர் பெயருக்கு விநோதமான அர்த்தங்கள் செய்தார்கள் ''

என்று முடித்திருக்கிறார்[63]. சுத்தானநத பாரதியார் ' அருட்சுடர் வள்ளலார் ' நூலிலே கூறுவதும் இங்கு நோக்கத் தக்கது :[64]

'' அக்காலத்தில் கிளர்ச்சிகள் வலுத்துத் தம்மைச் சுற்றித் தர்க்க வாதச் சிலம்பங்களும், கண்டன வாள் வீச்சுக்களும், முட்டுக் கடாக்களும் இகழ்ச்சிப் பறைகளும் பலமாயிருக்கும் போது எம்பெருமானார் என்ன செய்தார் ? இதுவும் அவனருட் கூத்தென நகைத்துத் தம் இன்கனி மொழியால் ' தம்மை யுணர்ந்தோர் பாட்டெலாம் அருட்பா : மற்றைப் பாடல் மருட்பா . . . . . . . ' என்று சாந்தமாகக் கூறித் தம் முன் அமைதியெய்தி யிருந்தார். அடக்கம் அமரருள் உய்க்கும் ''

சுத்தானந்தர் கூறியவை நம்பத்தக்கவையல்ல என்று கருதிப் போலும் சிவஞான கிராமணியார் இராமலிங்கர் தனித்திருந்து பேசியபோதே நாவலரவர்களைத் தூஷித்தார் என்று கூறிவைத்தார் !

பேரம்பலத்திலே நடைபெற்ற கூட்டம் பற்றித் த. கைலாசபிள்ளை,

---

63. நாவலர் பெருமான், பக். 202-203.
64. இராமச்சந்திரபுரம், அன்பு நிலையம், 1940, பக். 126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அதில் இராமலிங்கபிள்ளை உட்பட எல்லாரும் இவரை வாயில் வந்தபடி தூஷித்து, இவரை அடிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு போய்விட்டார்கள். இக்கூட்டத்தின் வரலாறு 'பேரம்பலப் பிரசங்கம்' என்னும் பெயர் கொடுத்து சி. சொ. சண்முகம் பிள்ளை, சி. அ. வேலாயுத பிள்ளை, சி. இரா. ஆறுமுகப்பிள்ளை என்னும் மூவரும் வெளிப் படுத்திய பத்திரிகையிற் காணப்படும். இராமலிங்க பிள்ளை பேசிய தூஷணைகள் அப்பத்திரிகையில் இருக் கின்றன "

என்று கூறியுள்ளார்[65]. ஆறுமுகநாவலர் யுவ வருடம், தை மாதம் (1876) வெளியிட்ட 'மித்தியாவாத நிரசனம்' எனும் கண்டனத்திலே,

" சுக்கில வருடம், ஆனி உத்தர தரிசன தினத்திலே, சிதம்பரத்துப் பேரம்பலத்திலே, வெகுசனக் கூட்டத் திலே, சுவாமி சன்னிதானத்திலே, சைவப் பிர சாரகரை, அவதூறாகப் பேசிய இராமலிங்கபிள்ளை" என்பர்.[66] 1869ஆம் ஆண்டு, திசம்பர் மாதம், 16ஆம் தேதி வெளிவந்த 'பிறீமன்' (Freeman) பத்திரிகை,[67]

" மிஸ்டர் இராமலிங்கபிள்ளையின் குற்றம் மேற்குறித்த கூட்டத்தில் நாவலர் என்ற சொல்லைப் பத்து வேறு பட்ட விதங்களிற் பகுத்தாராய்ந்து, பெரும்பாலும்

---

65. ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 73.

66. த. கைலாசபிள்ளை (தொகு.), ஆறுமுகநாவலர் பிர பந்தத் திரட்டு, இரண்டாம் பாகம், 1955, பக்.110.

67. K. Arumainayagam, " Arumuga Navalur, Karunguli and the Dikshadars ", *TRIBUNE*, Vol. 22, No. 36, p. 19 (25-2-1978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸ்டர் ஆறுமுகநாவலரின் நடத்தை, கல்வித்திறன் ஆகிய பண்புகளை விகற்பிக்கும் வகையிற் பத்து வித மான வேறுபட்ட பொருள் தந்ததிலே அடங்கியிருந் தது. இப் பொருள்களுள்ளே பொய்யன், வித்தை யில்லாதவன், நாவிற் பழிச் சொல்லை உடையவன் என்பன இடம்பெற்றிருந்தன. தீட்சிதர் கூட்டம் முடிவடைந்ததும், அங்கிருந்த மூவர் தம்முள்ளே கூடி ஆலோசித்து, அன்றிரவு தீட்சிதரும் இராமலிங்க பிள்ளையும் பேசியவற்றை எழுதி முழுவதையும் ஒரு சிறிய துண்டுப் பிரசுரமாக வெளிப்படுத்தினார்கள் ''

என்று ஆங்கிலத்திலே கூறுகின்றது. 'தனிப்பெருங் கருணை' இராமலிங்கரின் நேரடியான பங்கினைச் சுந்தானந்தரோ சிவஞான கிராமணியாரோ மறைத்துவிட முடியாது.

சிவஞான கிராமணியார் பேரம்பலப் பிரசங்கத்திலே இராமலிங்கர் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினார் என்று கூறிவிட்டு,

'' வள்ளலாரை வெறுக்கும் வைதிகர்கள் ஆறுமுக நாவ லரைக் கொண்டு போட்டிக் கூட்டம் நடத்திச் சன் மார்க்க இயக்கத்தை வெறுத்துப் பேசுமாறு செய்தனர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் போட்டிக் கூட்டங்கள் பல நடைபெற்று, கருத்துப் போர் வலுத்தது.

இந்நிலையில், வள்ளலார் தம்மை அவமதித்து விட்டதாக ஆறுமுகநாவலர் கடலூர் மஞ்சக்குப்பம் நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்தார் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொடர்ந்து கூறியிருக்கிறார்.[68] இராமலிங்கர் உட்பட்டோர் நடத்திய 'பேரம்பலப் பிரசங்க'த்திற்கு எதிராக நாவலரவர்கள் வேறு கூட்டம் நடத்தினார்கள் என்பதற்குச் சிவஞான கிராமணியார் எவ்விதமான ஆதாரங்களும் தரவில்லை. பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை,

> " அத்தரிசன தினத்தில் நாவலரும் சிதம்பரத்திற்றானே யிருந்தார். நடந்தவைகளையெல்லாம் நன்கு அறிந்து கொண்டார். அடுத்த நாளே மஞ்சக்குப்பக் கோட்டில் சுவாமி மீது மானநட்ட வழக்குத் தொடுத் தார் "

என்று கூறியுள்ளார்.[69] இக்கூற்றுக்கும் ஆதாரம் உண்டோ என்பது தெரியவில்லை. ஆயினும் 'பேரம்பலப் பிரசங்க'த்தினை ஆதாரமாகக் கொண்டு மானநட்ட வழக்குத் தொடுத்த நாவலரவர்கள் , தம் வழக்குக்கு ஊறாக அமையக் கூடிய செயல்களில் ஈடுபட்டிருப்பாரா என்பதைச் சிந்திக்க வேண்டும். நாவலரவர்களைப் 'பலி யாடு' ஆக வழங்கிய சிவஞான கிராமணியார் இராம லிங்கர் கோஷ்டியுடன் பலமுறை வாதுசெய்து ஆற்றாமை மீதூர நாவலரவர்கள் வழக்கு வைத்தார்கள் என்ற தொனிப் பொருளைத் தருவதற்காகவே முற்கிளந்தவாறு சோடித்துக் கூறுகிறார் என்றே கருத வேண்டும்.

மேல்வருவன ஆறுமுகநாவலர் தொடுத்த வழக்குப் பற்றியவை ; 'பிறீமன்' (Freeman) பத்திரிகையில் 1869ஆம் ஆண்டு திசம்பர் மாதம், 16ஆம் தேதி, 1870ஆம்

---

68. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 186.
69. நாவலர், 1968, பக் 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு, ஜனவரி மாதம், 20ஆம் தேதி, பெப்ருவரி மாதம், 3ஆம் தேதி ஆகிய மூன்று தினங்களிலே வெளிவந்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டவை.[70]

ஆறுமுகநாவலர் அறுவர் மீது வழக்குத் தொடுத்தார். முதலாம் எதிரி சபா நடேச தீட்சிதர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மான நட்டமும் பயமுறுத்தலும் ; அடுத்த நான்கு எதிரிகளாம் தீட்சிதர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டு பயமுறுத்தல் ; ஆறாம் எதிரியாகிய இராமலிங்கர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு மானநட்டமாகும். 1869ஆம் ஆண்டு, ஜூன் மாதம், ஏழாம் தேதி தீட்சிதர்கள் கூட்டிய கூட்டத்திலே, நாவலரவர்கள் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலை ஆவேதனங்களிற் சிவதீட்சை பெறாமலே தீட்சிதர் பூசைசெய்வதைக் கண்டித்தமையை விவாதிக்கும்போது தீட்சிதர்கள், நாவலரவர்களைக் கண்டபடி வைததோடு அமையாது அவரைச் சாணார் என்றும் மூடன் என்றும் நிந்தித்தனர். பிரதம தீட்சிதர் சபா நடேசன் ஆத்திர மிகுதியாலே தமது ஆசனத்தை விட்டெழுந்து, நாவலரவர்கள் தங்கியிருக்கும் இடம் சென்று, அவரை இழுத்து வந்து, நன்றாக அடிக்கப் பெருவிருப்பினை உணர்த்திய போதும், அவருடன் துணை போக யாரும் முன்வரவில்லை. இராமலிங்கரின் குற்றம் அக்கூட்டத்திலே ' நாவலர் ' என்ற சொல்லுக்கு விகற்பமான பத்து அர்த்தங்கள் கூறி அவதூறு செய்ததை உள்ளடக்கியது.

நாவலரவர்கள் பேரம்பலப் பிரசங்கம் சம்பந்தமாக வைத்த வழக்கு கடலூர் நீதிமன்றத்தில் இணை நீதிபதி

70. K. Arumainayagam, 'Arumuga Navalar, Karunguli and the Dikshadars, TRIBUNE, vol. 22, No. 36, pp. 18-21, (25-2-1978).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. றொபேர்ட்ஸ் (Mr. Robarts) முன்னிலையில் 1869ஆம் ஆண்டு, நவம்பர் மாதம், 18ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உள்ளூர் வழக்குரைஞர் ஒருவர் துணையுடன் நாவலரவர்கள் அன்று வழக்கினை நடத்தினார்கள். ஆனால், வழக்கின் இயல்பாலும், எதிரிகள் பல வழக்குரைஞர்களைப் பயன்படுத்தியதாலும், திறமையான வக்கீலின் இன்றியமையாமையை உணர்ந்து, நாவலரவர்கள் ஜி. பி. சவுந்தரநாயகம் பிள்ளையை வக்கீலாக வைத்துக் கொண்டார். அடுத்த தவணை நவம்பர் மாதம் 22ஆம் தேதி வந்தபோது சவுந்தரநாயகம் பிள்ளை நாவலரவர்களுக்காகச் சென்னையிலிருந்து வந்து கலந்து கொண்டார். அவர் 22ஆம், 23ஆம், 24ஆம் தேதிகளில் நாவலரவர்கள் சமர்ப்பித்திருந்த சாட்சிப் பட்டியலிலிருந்த ஒன்பது பேரில், நான்கு பேரை நீதிமன்றத்திலே விசாரித்தார். தம் கட்சிக்காரரின் வழக்கை நிரூபிக்க அச்சாட்சியங்கள் போதுமானவை என்று கருதியதாற் சவுந்தரநாயகம்பிள்ளை 25ஆம் தேதி வியாழக் கிழமை நீதிமன்றம் கூடியபோது தம் தரப்பு வாதத்தை முடித்துக்கொண்டதாக அறிவித்தார். அச்சந்தர்ப்பத்தில் அவர் நீதிமன்றத்தினை விளித்து, ஆற்றலும் சொல்வன்மையும் மிக்கதோர் உரையினை ஆற்றினார். இவ்வுரையிலே மானநட்டத்தினாற் பாதிக்கப்பெற்ற நாவலரவர்களின் நிலைமை, தரம், மதி நுட்பம், கல்வி, சமயார்வம், நாட்டுப்பற்று ஆகியவற்றை விரிவாக எடுத்துரைத்து. மானநட்டத்தினால் அவரது புகழுக்கு ஏற்பட்ட பங்கத்தினை அழுத்திக் கூறினார். சாட்சியங்கள் மூலம் முதலாம் எதிரி சபாநடேசருக்கும் ஆறாம் எதிரி இராமலிங்கருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் தெளிவாகவும் முற்றாகவும் நிரூபிக்கப்பட்டிருப்பதைச் சவுந்தரநாயகம் பிள்ளை எடுத்துக் காட்டினார். அடுத்துப் பேச எழும்பிய எதிர்த் தரப்பு வக்கீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸ்டர் ஸோ (Mr. Shaw) பல குறிப்புகளுடன் அமர்ந்து விட்டார். நீதிபதி முதலாம், ஆறாம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தொடுக்கத் தொடங்கினார். அப்பொழுது எதிர்த்தரப்பு வக்கீல் தம் கட்சிக்காரருக்குச் சாட்சியட்டவணை ஒன்றினை அணைக்க அவகாசம் கேட்ட போது, சவுந்தரநாயகம் பிள்ளையின் ஆட்சேபத்தினையொட்டி, உடனடியாக அட்டவணை சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென நீதிபதி பணித்தார். அட்டவணையிலே இடம்பெற்ற பேர்வழிகளைச் சோடிப்புக்கு இடமளியாமல் இருப்பதற்கு உடனடியாக விசாரிக்க வேண்டுமென்று சவுந்தரநாயகம் பிள்ளை வேண்டியதை அடுத்து, நீதிபதி பணிப்புரையின்படி, சாட்சிகள் அழைக்கப்பெற்ற போது ஒருவரும் முன்வரவில்லை. சவுந்தரநாயகம் பிள்ளை அட்டவணை தயாரித்தபோது அவர்கள் அங்கே இருந்ததையும், பின்பு உடனடியாக அவ்விடம் நீங்கியதையும், தம்மால் நிரூபிக்க முடியும் என்று கூறி, அச்சூழ்நிலை அவர்கள் தம் சாட்சியங்களை நம்பமுடியாமற் செய்வதோடு, அவற்றிற்கு அளிக்க வேண்டிய மதிப்பினையும் குன்றச் செய்துவிட்டதையும் எடுத்துக் கூறினார். மறுநாள் (26ஆம் தேதி) எதிரிகளின் சாட்சிகளை விசாரிக்கத் தீர்மானித்திருந்தபோதும், அவர்களுடைய வழக்குரைஞர் அன்று தாம் அவர்களின் தேவையைத் தவிர்த்துக் கொள்வதாகக் கூறினார்.

அடுத்த தவணை திசம்பர் மாதம் 18ஆம், 20ஆம் தேதிகளிலே நடைபெற்றபோது எதிரிகளின் சாட்சிகள் நால்வர் விசாரிக்கப்பட்டனர். சவுந்தரநாயகம் பிள்ளை அவர்களைக் குறுக்கு விசாரணை செய்து சாட்சியத்தினைக் குலைத்து விட்டார். எதிர்தரப்புச் சாட்சியங்களை ஒதுக்கி விடுவதற்கான சான்றுகள் போதுமான அளவு நீதிமன்றத்திலே வெளிப்படுத்தப்பட்டுள்ளதையும் அவர் தெளிவாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார். எதிர்த் தரப்பினர் பயன்படுத்திய பிறிதிடமிருப்பு வாதத்தினை மறுக்கத் தாம் புதிய சாட்சிகளை அழைக்க அனுமதி கேட்கப் போவதாகச் சவுந்தரநாயகம் பிள்ளை கூறினார். அவர் கூறியவைகளைக் கேட்ட நீதிபதி றொபேர்ட்ஸ் எவ்விதமான தாமதமுமின்றித் தமது தீர்ப்பினை எழுதிவிட்டார். அதன் சாரம், முதல் எதிரிக்கு ரூபா 50 அபராதம் அல்லது தவறினால் ஒரு மாதம் சாதாரண மறியல் ; இராமலிங்கர் விடுவிக்கப்பட்டார்.

தீர்ப்பினை விரிவாக வெளியிடத் தாம் கருதியிருப்பதாகப் 'பிறீமன்' பத்திரிகை 1870ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 20ஆம் தேதி இதழிலே கூறியுள்ளது. ஆயினும் இதுவரை 'பிறீமன்' குறிப்பிடும் தீர்ப்பு விரிவு பற்றிய வெளியீடு கிடைக்கவில்லை.

ஆறுமுகநாவலர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்திலே வைத்த வழக்கைப் பற்றியும் அங்கு நடந்த நிகழ்ச்சி ஒன்றினைப் பற்றியும் எஸ். வையாபுரிப் பிள்ளை மேல்வருமாறு கூறியுள்ளார் :[71]

> "சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது. இலக்கணம், இலக்கியம், சைவசமயப் பற்று, சொல் வன்மை முதலிய பல துறைகளிலும் மேம்பட்டு விளங்கியவர் ஆறுமுகநாவலர். இவர் சார்பாகக் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கப்பட்டது. எதிராளியாக விளங்கியவர்கள் இராமலிங்க சுவாமிகள் சார்பினர். வழக்கு எதைப் பற்றியென்றால், சுவாமிகள் தமது பாடலுக்கு அருட்பா என்று பெயரிட்டது

---

71. வை. கோவிந்தன் (தொகு.), காவியக் காதல், 'இராமலிங்க சுவாமிகள்', 1950, பக். 5-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியேயாகும். இதனை அருட்பா — மருட்பா விவகாரம் என்று கூறிவந்தனர். நாவலர் அருட்பா என்ற தொடரைத் தேவாரம் முதலிய அருள் நூல்களுக்கே சொல்லுதல் வேண்டும் என்றும், இராமலிங்க சுவாமிகள் பாடல்களுக்கு வழங்குதல் கூடாது என்றும், அவர்கள் தமது பாடல் — புத்தகத்தை அருட்பா என்று மகுடஞ் சூட்டி அச்சிட்டது தவறு என்றும் வாதித்துக் கோர்ட்டு மூலம் அவ்வாறு செய்தலை நிறுத்த உத்தரவு பிறக்க வேண்டும் என்று வழக்கிட்டனர். சுவாமிகளின் சார்பாக அவர்களின் மாணாக்கர்கள் பலர் அருட்பா என்றது சரியே என்றும், அப்பெயரை மாற்றும்படி நாவலா சார்பினர் கேட்டது சிறிதும் தக்கதன்று என்றும் வாதித்தனர். இந்த வழக்கு நடந்துகொண்டிருக்கும் பொழுது ஒரு முறை நாவலரும் சுவாமிகளும் ஒருவரை ஒருவர் கோர்ட்டு முகப்பில் சந்திக்கும்படி நேர்ந்தது. உடனே நாவலர் சிறிதும் பகையுணர்ச்சி யின்றி இராமலிங்க சுவாமிகளைப் பெருந்தன்மையுடன் வணங்கிப் போற்றினர். நாவலர் சார்பாக வந்தவர்கள் இதனைக் கண்டித்துக் கூறவே நாவலர், '' நீங்கள் நினைப்பது சரியல்ல ; சுவாமிகள் உண்மையான ஞானி, உண்மையான கவிஞர் '' என்று கூறிப் புகழ்ந்தாராம். ''

சி. வை. தாமோதரம் பிள்ளை பற்றி ' ஈழகேசரி 'யிலும் மல்லாகம் வி. கனகசபைப் பிள்ளை பற்றிச் ' செந்தமிழ் ' சஞ்சிகையிலும் பாரபட்சமற்ற முறையிற் கட்டுரைகள் எழுதியவரும், ஆய்வு முறைகளை நன்கு உணர்ந்தவருமாகிய எஸ். வையாபுரிப்பிள்ளையைக்கூடக் கட்டுக் கதைகள் ஏமாற்றிவிட்டன.

இராமலிங்கரின் வரலாறு 1869ஆம் ஆண்டிற்குப் பின்பு செவிவழிக் கதைகளால் வளர்ச்சியடைந்தது. அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி இராமலிங்கர் பற்றிய பல செய்திகளையும் மாற்ற உதவியிருக்கின்றது. ' அருட்பெருஞ் ஜோதி ' மீது வைக்கப் பட்ட வழக்குக்குரிய காரணமும் இராமலிங்கர் அடைந்த புனிதத் தன்மையை யொட்டி, அவதூறு என்பதல்லாமல் நூற்பெயர் பற்றியதாக உருவெடுத்தது. ' திருவருட் பிரகாச வள்ளலார் ' ஒருவரை அவதூறாகப் பேசியிருக்கமாட் டார் என்று கருதும் அளவிற்கு இராமலிங்கரின் வரலாறு மாற்றமடைந்துவிட்டது. இராமலிங்கரை எதிர்த்த நாவலரவர்களே, அவரை ' உண்மையான ஞானி ' என்று மதித்து வணங்கினார் என்று கூறும் அளவிற்குத் தமிழகத்திலே இராமலிங்கரின் வரலாறு போற்றப்படுவதற்கு உரியதாக மாறிவிட்டது. வால்மீகியின் இராமன் தமிழகத்திலே தெய்வமானான்.

வையாபுரிப் பிள்ளை தந்த செவிவழிச் செய்திகள், அவர் தம் காலத்திலேயே மேலும் வளர்ச்சி பெற்றுவிட் டன. மேல்வரும் பகுதி சான்றாகும் :[72]

" வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தினமன்று நீதி ஸ்தலத்தில் இரண்டு கட்சிக்காரர் களும் திரளாகக் கூடியிருந்தனர். சுவாமிகள் வரப் போவதை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந் தனர். திடீரென்று ஜனங்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இடுப்பில் முழங்காலுக்கு மேலே வெள் ளாடை தரித்து மேலேயும் அதே ஆடை போர்த்துக் கொண்டிருந்த உருவம் நீதிஸ்தலத்தை நோக்கி வந் தது. நடுத்தர உயரம், மெலிந்த சரீரம். நிமிர்ந்த

---

72. ' துமிலன் ' : ' புகழ்பெற்ற விவாதங்கள் : 2. அருட்பாவா ? மருட்பாவா ?, குமுதம், *31-8-1961*, பக். *36*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகம், தெளிந்த மாநிற மேனி, நீண்ட மெல்லிய நாசி, பொறி பறக்கும் கண்கள், விசனக் குறி தோன்றிய முகம்.

இராமலிங்க சுவாமிகள் நீதிஸ்தலத்திற்குள் பிரவேசித்தார். அவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

ஆறுமுகநாவலரவர்களும் எழுந்து நின்றார்கள் !

இதைக் கவனித்த நீதிபதி ஆச்சரியமடைந்தார். " வழக்குத் தொடுத்த நீங்களே எழுந்தீர்களே ?" என்று கேட்டார்.

" அவர் ஒரு பெரியவர் என்ற முறையில் எழுந்திருந்தேன் " என்று நாவலரவர்கள் பதிலளித்தாராம். அவருக்கே சுவாமிகளிடம் அவ்வளவு மதிப்பிருக்கும் போது, வழக்கு எதற்கு என்று நீதிபதி வழக்கைத் தள்ளிவிட்டாராம் "

இப்பகுதியிலுள்ள ஈற்று வசனம் ஒழிந்தவை ம. பொ. சிவஞான கிராமணியாரின் ' வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு ' எனும் நூலிலே சிற்சில மாற்றங்களுடன் எடுத்தாளப்பட்டுள்ளன.[73] தொடர்கதை ஆசிரியர் ' துமிலன் ' அவர்களின் கைவண்ணம் கூட, அவருக்குச் சான்றாக அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. ஆனால், அதனால் நாவலரவர்களுக்குக் கூட நன்மை கிடைத்திருக்கிறது !

---

73. பக். 186-187.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "கொள்கை அளவில் வள்ளலாரை ஆறுமுகநாவலர் வெறுத்தார் எனினும், தனிப்பட்ட முறையில் வள்ளலாரின் பெருமையை உணர்ந்து அவரை மனமார நேசித்தார் என்பதை நீதிமன்றத்தில் எழுந்து நின்று அவர் செலுத்திய மரியாதையால் அறிகிறோம். அத்தகைய கண்ணிய குணம் படைத்த பெரியார், வள்ளலாருக்கு எதிராக இருக்க நேர்ந்தது இறைவன் திருவிளையாடல் போலும்"

எனும் கூற்றுகளைக் காண்க.[74] மித்தியாவாத நிரசனத்தில் ஆறுமுகநாவலர்,

> "கருங்குழி இராமலிங்கபிள்ளையைச் 'சன்மார்க்கர்' என்று பாராட்டினாயே 'நாம் செத்தவர்களெல்லாரையும் உயிர்ப்பிப்போம்' என்று தேசமெங்கும் விளம்பரம் விடுத்து, இறந்த புருஷமாரை மீட்டும் பெற விரும்பி வந்து நெடுங்காலங் காத்துக் கிடந்த அமங்கலிகளெல்லாரையுங் குழந்தைகளோடு திருப்பிவிட்ட இராமலிங்க பிள்ளை 'சன்மார்க்கர்' தாமே"

என்று கூறியிருப்பதை[75] எழுத்தெண்ணி நோக்கியிருப்பின் நாவலரவர்களுக்கு முற்கிளந்த நன்மை கிடைத்திருக்குமா? வழக்கு நடந்தது 1869ஆம் ஆண்டு; மித்தியாவாத நிரசனம் எழுந்தது 1876ஆம் ஆண்டு.

---

74. ம. பொ. சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 187.

75. த. கைலாசபிள்ளை (தொகு.), ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு, இரண்டாம் பாகம், 1955, பக். 109-110.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலிங்கர் மீது நாவலரவர்கள் தொடுத்த அவதூறுக் குற்றச்சாட்டின் முடிவு பற்றியது மேல் வரும் பகுதி[76] :

"நாவலர் குறிப்பிட்ட அவதூறு வார்த்தைகளைத் தாம் பயன்படுத்தவில்லை என்று வள்ளலார் நீதிமன்றத்திலே கூறினார். தமது குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை நாவலர். அதனால், வள்ளலார் மீது தொடுத்த அவதூறு வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது"

இராமலிங்கர் மீது நாவலரவர்கள் தொடுத்தது பொய் வழக்கு ; அதனாலேயெ குற்றச்சாட்டுகளை நாவலரவர்கள் நிரூபிக்கவில்லை என்ற தொனிப்பொருள் இப் பகுதியிலுண்டு. வழக்கு கைவிடப்பட்டதா அல்லது தள்ளப்பட்டதா என்பதை வழக்குப் பதிவேடுகளை நோக்கிச் சிவஞான கிராமணியார் கூறியிருப்பதாகக் கருத அவர் நூலிற் சான்றெதுவும் இல்லை. அவருக்கு அதைப் பற்றி அக்கறை இல்லை. ஆனால், வழக்கு வைத்த நாவலரவர்களின் கூற்றுக் கவனிக்கத் தக்கது[77] :

"சுக்கில வருடம் ஆனி உத்தர தரிசன தினத்திலே, சிதம்பரத்துப் பேரம்பலத்திலே, வெகுசனக் கூட்டத்திலே, சுவாமி சன்னிதானத்திலே, சைவப் பிரசாரகரை அவதூறாகப் பேசிய இராமலிங்கபிள்ளை, அடுத்த மார்கழித் திருவாதிரைத் தரிசன தினத்திலே, மஞ்சக்குப்பக் கோர்ட்டிலே, வெகு சனக் கூட்டத்திலே, நியாயாதிபதி யெதிரே, தாஞ் சைவப் பிரசாரகரை அவதூறாக ஒரு சிறிதும் பேசவில்லை என்று

---

76. ம. பொ. சிவஞானம் : ஷெ நூல், பக். 186.
77. த. கைலாசபிள்ளை (தொகு.), ஷெ நூல், பக். 110.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்து எல்லாராலும் நகைக்கப்பட்டது அவ்வழக்குப் புத்தகம் பேசும் ''

இராமலிங்கரின் ' ஆறாந் திருமுறை 'யில் இடம் பெறுவது மேல்வரும் பாடல் :

'' பதியனே பொதுவிற் பரமநா டகஞ்செய்
பண்பனே நண்பனே யுலகில்
ஓதியனேன் பிறர்பா லுரத்தவார்த் தைகளால்
ஒருசில வாதங்கள் புரிந்தே
மதியிலா மையினா லகங்கரித் ததன்பின்
வள்ளலுன் னருளினா லறிந்தே
விதியைநா னொந்து நடுங்கிய தெல்லாம்
மெய்யனே நீயறிந் ததுவே ''

(பிள்ளைப் பெரு விண்ணப்பம், 40)

ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்துத் தமிழுலகின் கூறாக எண்ணியவர் ; ' நல்லறிவுச் சுடர் கொளுத்தல் ' சான்று பகருகின்றது ; அத்தோடு, சைவ உலகினைச் சிதம் பரத்தைக் கேந்திர தானமாகக் கொண்டு நெறிப்படுத்த ஆசைப்பட்டவர். இத்தகைய பண்பினரைக் குறுகிய பிர தேச அடிப்படையில் அன்று அவதூறு செய்தபோது ஈழத்துத் தமிழினம் நன்கு புரிந்து கொண்டது. அதற்குத் தமிழ்நாட்டில் இருந்து சுக்கில வருடம், மாசி மாதம் (1870) ஈழம் திரும்பிய நாவலரவர்களுக்கு ஈழத்துத் தமிழ் மக்கள் அளித்த வரவேற்புச் சான்றாக விளங்குகின்றது.

மேல் வருவது ' இலங்காபிமானி ' (Ceylon Patriot) 24–2–1870ஆம் தேதி தந்த செய்தியின் சுருக்கமாகும்[78] :

---

78. கா. பொ. இரத்தினம் (மலராசிரியர்) : நாவலர் நினைவு மலர், 1938, பக். 90-92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கீர்த்தி பெற்ற இப்பண்டிதர் உண்மையான பெரியார். ஆறு வருட காலமாக இந்தியாவிலே தங்கியிருந்து இன்று பின்னேரம் யாழ்ப்பாணம் வந்து சேர்வாராயினர் ; ....................................

இத்தமிழறிஞரை வரவேற்பதற்காக யாழ்ப்பாணத்துள்ள பெருமக்கள் பல ஆயத்தங்கள் செய்தனர் ; துறைமுகத்தில் ஒரு அலங்காரமான பந்தர் இதற்கென்றே இடப்பட்டது. இது மாத்திரமல்லாமல் துறைமுகத்திலிருந்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக் கணித்தாகவுள்ள அவருடைய வாசஸ்தானம் வரையிலுள்ள தெருவில் இடையிடையே நடைப்பந்தல்கள் பல இடப்பட்டன....

...... மாலை $5\frac{1}{2}$ மணி வரையிலாதலும் அங்கு குழூமி நின்றோர் ஆநந்த மேலீட்டினால் ஆரவாரஞ் செய்ய நாவலரவர்கள் இறங்கி, யாழ்ப்பாணத்துள்ள பெருமக்கள் சூழ்தரப் பந்தருள் கீழ்வந்து, விசேஷமாக அலங்காரஞ் செய்யப்பட்ட பல்லக்கில் ஏறி வாத்திய கோஷத்துடன், தம்மை எதிர்கொள்ளும்படி வந்தோரெல்லாம் இருமருங்கும் மெல்ல நடந்துவர அப்பல்லக்கின் மீது வருவாராயினர் ............

நாவலரவர்களைச் சிவிகையிலிருந்து இறங்கச் செய்து; அவர் வரவை உத்தேசித்து முந்தியே அலங்காரங்களும் ஆயத்தங்களும் செய்யப் பெற்றுள்ள மண்டபத்தில் அழைத்துச் சென்று ஒரு உந்நதமான ஆசனத்தில் அமரச் செய்தார்கள் .................. நாவலரவர்கள் தாம் செய்த பிரசங்க முடிவிலும் இங்குள்ளோர் தமக்கு அச்சமயத்திற் செய்த உபசரணையைப் பற்றியும் தம்மிடத்திற் பாராட்டிய அபிமானத்தை யிட்டும் சில பேசினார் ....................

யாழ்ப்பாணத்து மக்கள் ஒரு யாழ்ப்பாணப் பெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரை இதற்கு முந்தி இப்படியாக உபசரித்துப் பாராட்டியதில்லை யெனலாம் ''

## IV

ஆறுமுகநாவலர் சிதம்பரத்தில் நிறுவிய சைவப் பிரகாச வித்தியாசாலையும் சென்னை (பிராட்வே) தங்க சாலைத் தெருவில் அமைத்த வித்தியாநுபாலன யந்திர சாலையும் நாவலரவர்களுக்குப் பின்பும் தொடர்ந்து சைவத் தொண்டும் தமிழ்ப் பணியும் புரிந்து வந்தன. நாவலரவர்களின் சொத்துகளுக்கு ஆதிபத்தியம் பெற்ற நல்லூர் க. சதாசிவப்பிள்ளை, நாவலரவர்கள் பதிப்பித்த நூல்களை மீண்டும் பிரசுரித்தும், அவர் பரிசோதித்து வைத்திருந்தனவும் பதிப்பிக்கப் பெறாதவையுமாகிய நன்னூல் காண்டிகையுரை, பிரயோக விவேகவுரை, சிவஞானபோதச் சிற்றுரை, திருவிளையாடற் புராணம் முதலியனவற்றைப் பதிப்பித்தும், தாமாகவே வேறு சில நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தும், வேறு சிலரின் நூல்களை வெளியிட்டும் தமிழ் நூல் வெளியீட்டில் அக்கறை செலுத்தியதோடு அமையாது, தாமாகவும் பின்பு மனேசர் மூலமாகவும் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையை நடத்தி, அவ்வூரிலேயே 84 வயதிற் சாதாரண ஹூ, ஐப்பசி மீ (1910) எட்டாம் தேதி வியோகமடைந்தார். சதாசிவப்பிள்ளைக்குப் பின்பு சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகராக விளங்கியவர் கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளையாவர் (—1918). இவர் நல்லூர் தர்க்ககுடார தாலுதாரியவை. திருஞானசம்பந்தப்பிள்ளை சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலை முதலுபாத்தியாயராக விளங்கிய காலை, இரண்டாம் உபாத்தியாயராகச் சேர்ந்து, தர்க்க குடார தாலுதாரியவர்கள் நீங்கிய பின்பு, முதலுபாத்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யராகவும், சதாசிவப்பிள்ளை மறைந்த பின்பு தருமபரி பாலகராகவும் உயர்ந்தவர். இவர் சைவப் பிரகாச வித்தியா சாலையை நிர்வகித்ததோடு அமையாது, நாவலரவர்களும் சதாசிவப் பிள்ளையும் பதிப்பித்த நூல்களை மீண்டும் பிரசுரித்தும், நாவலரவர்களின் கந்த புராண வசனத்தை முற்றுவித்தும், மூன்றாம் பால பாடம் எழுதியும், சிலர் தம் நூல் வெளியீட்டில் உதவியும் தமிழ் நூல் வெளியிடும் பணியில் அக்கறை கொண்டவராக விளங்கியவர். இவரை அடுத்துச் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகராக விளங்கியவர் கோப்பாய் ச. விசுவநாத பிள்ளை. இவர் பொன்னம்பல பிள்ளையின் தமையனார் சபாபதிப் பிள்ளையின் புதல்வராவர். இவரை யடுத்து தியாகராஜ பிள்ளை, பவானியம்மாள், முதலியார் ஜி. சுப்பிரமணியம், ச. பொன்னுஸ்வாமி, ம. க. வே. கந்த சாமி உட்பட , தி. க. இராசேசுவரன் வரை, பலர் சிதம் பரம் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலக ராகப் பணிபுரிந்துள்ளனர். இவர்கள் நாலவர் அச்சகத் திலிருந்து வெளிப் போந்த நூல்களை மீண்டும் பிரசுரஞ் செய்துள்ளனர்.

வடகோவை சு. சபாபதி நாவலர், சுன்னாகம் அ. முருகேச பண்டிதர், நல்லூர் தர்க்ககுடாரதாலுதாரி வை. திருஞான சம்பந்தப்பிள்ளை, கோப்பாய் ச. பொன் னம்பல பிள்ளை, மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தி யாயர் முதலியோர் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியா சாலையின் முதலுபாத்தியாயராக விளங்கியுள்ளனர்.

சபாபதிநாவலர் 1866க்கு முன்பு சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் முதலுபாத்தியாயராக இருந் தனர்; பின்பு திருவாவடுதுறை யாதீன வித்துவானாகத் திகழ்ந்து, சென்னை முதலாம் இடங்களிற் பல காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்துவிட்டுக் கடைசி காலத்திற் சிதம்பரம் செங்கழு நீர்ப் பிள்ளையார் கோயில் வீதியில் வாழ்ந்து மறைந்தனர்; அங்கு சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலையும் நடத்தினார். சுன்னாகம் முருகேச பண்டிதர் 1878க்குப் பின்பு தமிழ்நாடு சென்றபோது சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமைப் பீடத்தையும் அலங்கரித்துள்ளார். நல்லூர் க. சதாசிவப் பிள்ளையின் கடைசி காலத்திற் கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளைக்கு முன்பு முதலுபாத்தியாயராக விளங்கியவர் தர்க்ககுடார தாலுதாரி திருஞானசம்பந்தப்பிள்ளை. கோப்பாய் பொன்னம்பலபிள்ளையுடன் உண்டுபட்ட கோபத்தாலே வித்தியாசாலையை விட்டு நீங்கிய தர்க்ககுடார தாலுதாரியவர்கள் சிதம்பரம் சொர்க்கபுர மடத்திலே தங்கி அங்கு சித்தாந்த வித்தியாசாலை நடத்திக் கொண்டிருந்தபோது மறைந்தனர். மட்டுவில் வேற்பிள்ளை உபாத்தியாயர் ஏறக்குறைய 1907ஆம் ஆண்டு முதல் பல வருடங்கள் சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக விளங்கியவர்; முதுமையாற் கற்பித்தலினின்று நீங்கிய பின்பும், நடேசப் பெருமாளைத் தரிசிக்கும் ஆவலாற் சிதம்பரத்திலேயே வாழ்ந்து மறைந்தவர். பண்டிதமணி ந. சுப்பையபிள்ளையும் மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகரும் வேற்பிள்ளை உபாத்தியாயரிடம் சிதம்பரத்திலே பயின்றவர்கள்.

இணுவில் நடராசையர் சிதம்பரத்திலே தங்கிப் பலருக்குச் சித்தாந்த பாடஞ் சொன்னவர். பன்னாலை ச. சிவானந்தையர் சிதம்பரம் பச்சைப்பன் ஆங்கில கலாசாலையிலே தமிழாசிரியராகச் சில ஆண்டுகள் விளங்கியவர். சிதம்பரத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றபோது, அதன் முதல் தமிழ்ப்பேராசிரியராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1931–1933) நியமனம் பெற்றவர் மட்டக்களப்பு காரை தீவைப் பூர்வீகமாகக் கொண்ட சுவாமி விபுலாநந்தராவர்.

ஞானப்பிரகாச முனிவர், வைத்தியநாத முனிவர், சுப்பிரமணிய தம்பிரான் முதலியவர்களை அடுத்து, நாவலரவர்களின் காலத்திற்குப் பின்பும், சுவாமி விபுலாநந்தரைப் போன்று, ஈழத்தைச் சேர்ந்த சமயப் பெரியார் பலர் சிதம்பரத்திலே தொண்டு செய்துள்ளனர்.

மதுரைத் திருஞானசம்பந்தர் மடத்திலே காஷாயம் பெற்று நைட்டிகப் பிரமசரியம் பூண்ட சித்தன்கேணி ஆ. அம்பலவாண நாவலர் (–1932) சைவப் பிரசாரகராக விளங்கி, சிதம்பரத்தில் ஆறுமுகநாவலர் சந்தான ஞானசம்பந்த சுவாமி ஆதீனம் எனும் மடாலயத்தை நிறுவி, அங்கு வாழ்ந்து சிவபதமடைந்தவராவர். வண்ணார்பண்ணையைப் பூர்வீகமாகக் கொண்டவரும், சூரியனார் கோயில் ஆதீனத்திலே துவராடை பெற்றவரும், இலக்கண சுவாமிகள் என்று பேரெடுத்தவருமான முத்துக்குமார தம்பிரான் சுவாமிகள் தம் அந்திம காலத்தைச் சிதம்பரத்திலே கழித்து, ஆங்கே தம் ஞானகுரு சூரியனார் கோயிலாதீனம் முத்துக்குமார தேசிக சுவாமிகளின் பேரால் இலவச நூல் நிலையம் ஒன்றினை நிறுவி, 1949ஆம் ஆண்டிலே சிதம்பரம் மாலைகட்டித் தெருவிலுள்ள மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலையிற் பரமுத்தி யடைந்தார். தஞ்சை அன்னப்பன் பேட்டை ஸ்ரீ தாயுமான சுவாமிகள் ஆதீனத்திலே துவராடை பெற்று, திருநெல்வேலியிலுள்ள செப்பறை மடத்திலே பல காலம் வாழ்ந்தமையாற் செப்பறைச் சுவாமிகள் என்று பெயர் பெற்ற சிதம்பர சுவாமிகள் சிதம்பரத்திலே சிவஞானத் திருத்தளி எனும் மடத்தை நிறுவி, அங்கிருந்து பலருக்குச் சைவசித்தாந்தம் பாடஞ் சொன்னவராவர். செப்பறைச் சுவாமிகள் ஈழத்தினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வீகமாகக் கொண்டவராவர். இவர் இலக்கண சுவாமி களுக்குப் பின்பே சமாதியடைந்தார்.

நாவலரவர்களின் காலத்திற்குப் பின்பும் ஈழத்துத் தமிழ்ப் புலவரைச் சிதம்பரம் தொடர்ந்து கவர்ந்து வந் துள்ளது. வடகோவை சபாபதி நாவலர் சிதம்பர சபா நாத புராணம், சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக் கோவை, திருச்சிற்றம்பல யமக வந்தாதி என்பனவற்றைப் பாடியுள்ளார். சிறுப்பிட்டி வை. தா. அமிர்தலிங்கம் பிள்ளை தில்லையந்தாதி பாடியுள்ளார் என்பர்.[79] வட கோவை வி. வேலுப் பிள்ளை திருத்தில்லை நிரோட்டக யமக வந்தாதி இயற்றியுள்ளார். பன்னாலை ச. சிவா னந்தையர் புலியூர்ப் புராணமும் புலியூரந்தாதியும் தந்துள் ளார். சிதம்பரத்திற்குப் பதிகம் இயற்றியவர்களில் ஒருவர் வேலணை க. இராமலிங்க பிள்ளையாவர். அண்மையில் மறைந்த சரவணை ஆ. தில்லைநாதப் புலவர் தில்லைச் சிலேடை வெண்பா யாத்துள்ளார். பண்டிதர் செ. சிவப் பிரகாசம் சில வருடங்களுக்கு முன்பு தில்லையந்தாதி ஒன்று பாடிப் பதிப்பித்துள்ளார்.

ஈழநாட்டின் தமிழ் அறிஞரும் ஈழத்தினைப் பூர்வீக மாகக் கொண்ட சமயப் பெரியோரும் ஆறுமுகநாவலருக்குப் பின்பும் சிதம்பரத்துக்கு அணி செய்துவந்துள்ளனர். சிதம் பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையும் தொடர்ந்து தன் பணியை ஆற்றி வந்துள்ளது.

" தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

---

79. க. கணபதிப் பிள்ளை, ஈழத்து வாழ்வும் வளமும், 1962, பக். 63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் சதாவதானம் நா. கதிரைவேற் பிள்ளையும்

ஆறுமுகநாவலர் சிவபரிபூரணமெய்தியபோது மேலைப் புலோலி நா. கதிரைவேற் பிள்ளைக்கு வயது எட்டு. நாவலரவர்கள் வியோகமடைந்தது பிரமாதி ஷு, கார்த்திகை மீ, 21ஆம் தேதி; பிள்ளையவர்கள் அவதரித்தது பிரசோற்பத்தி ஷு, மார்கழி மீ, 3ஆம் தேதி. ஆறுமுகநாவலர் கதிரைவேற்பிள்ளைக்கு வித்தியாரம்பம் செய்து வைத்ததாகக் கூடத் தெரியவில்லை. ஆயினும் கதிரைவேற்பிள்ளை சரிதம், நாவலரவர்களின் வரலாற்றிலே சென்று சங்கமமாகின்றது. இச் சங்கமம் இருபதாம் நூற்றாண்டின் விடியலிலே நாவலர் மரபு மறுமலர்ச்சி காண உதவியது.

நாவலரவர்கள் தாம் மேற்கொண்ட சைவப் பிரசாரணப் பணியைத், தம் நெறியிலே வாழ்ந்து, இலட்சிய வேட்கையுடன், செயற்படுத்த ஒரு வாரிசை விட்டுச் செல்லவில்லை. 1873ஆம் ஆண்டில் வி. சுப்பிரமணிய பிள்ளை மறைந்தபோது நாவலரவர்கள் தமது வாரிசற்ற நிலையை உணர்ந்துவிட்டார்.

" வேதனந்தான் கிடைத்திடினுங் கிடையாதுவிடினு [நிற்கோர்
மாதனமென் கருணையென மதித்தெனது கழகமமர்ந்
தேதமகல் பணிவழுவா தியற்றியவென் னிருநிதியே
நாதனது பொறாதுநினை நணுகுவித்தான் [றனதுலகே "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்னிடத்து நெடுங்கால நேரேகற் றெத்தனையோ
நன்மையெல்லாம் பெற்றபலர் நாடறியப் பகைத்
[தகன்ற
வன்மைமனத் தினராக மதித்தென்சொல் வழியொழுகு
நின்னையிழந் துயிர்வாழ்வேன் நெஞ்சமிக வலியேனே'

" இருநிலத்தோர் கோபியென வெடுத்துரைக்கு
[மென்சினத்துக்
கொருபொழுது மிலக்காகா தொழுகியென
[துளமுழுதும்
உருகியகா தலிற்கொள்ளை கொண்டவுற வினன்சீர்
பெருகியசுப் பிரமணிய பெருந்தகையோய்
[நீயன்றே "

முதலாம் நாவலரவர்கள் தம் பாடல்கள் இரங்கற்கவி மட்டு மல்ல ; கையற்ற நிலையிலே எழுந்த உள்ளப் புலம்பலு மாம். பிரமாதி ஹு, ஆடி மீ (1879). சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்திலே நாவலரவர்கள் ஆற்றிய இறுதிப் பிரசங்கத்தின் முடிவுரையும் வாரிசற்ற நிலையிலே எழுந்த ஆற்றாமையை உணர்த்தி நிற்கின்றது.[1]

" நான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருஷகாலம் உங்களுக்குச் சைவ சமயத்துண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயங் குன்றிப் போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும் போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக்கொள்ளுங்கள். இன்னும், என்

1. த. கைலாசபிள்ளை, ஆறுமுகநாவலர் சரித்திரம், 1919, பக். 32-33.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைப் போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய் அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவு களைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத் தைப் போதிக்க என்னைப் போல ஒருவரும் வரரார் ''

1870ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதத்திலே 'ஐந்தாம் குரவர்' என ஈழம் மீண்டபோது, யாழ்ப்பாணத்திலே தமக்களிக்கப்பெற்ற மாபெரும் வரவேற்பின் போது, நாவலரவர்கள் உணர்த்திய பீடுநிலையை, களத்திலே தனியனாக நின்று ஓய்ந்த நேரத்திலே, சுந்தரர் குருபூசையிலே, காண முடியவில்லை. நாவலரவர்கள் தமக்குப் பின் பணியைத் தொடர, ஒரு சைவப் பிரசாரகரைச் சுட்டிக் காட்டாது, அவரைத் தேடிக் கொள்ளும்படி கூறுதல் ஊன்றிக் கவனிக்கத் தக்கது. தம் தருமங்களுக்கு ஆதிபத்தியம் பெற இருக்கும் நல்லூர் க. சதாசிவப்பிள்ளையையோ, தாம் வாஞ்சித்த மருகர் பொன்னையபிள்ளையோ அவர் சுட்டிக் காட்டவில்லை. பொன்னையபிள்ளையின் (வித்துவ சிரோமணி ச. பொன்னம்பல பிள்ளையின்) போக்கு வேறு; நாவலரவர்களின் கருமம் வேறு. நாவலரவர்களைச் சார்ந்து வாழ்ந்த சதாசிவப்பிள்ளை உட்பட்ட ஏனைய மாணாக்கர், நாவலரவர்களுடைய இலட்சியப் பாதையிலே, அவர் நோக்கத்திற்கு இணங்க, முன்னேறிச் செல்லவில்லைப் போலும். இதனாலேயே நாவலர் தருமச் சொத்துக்களைக் கையாண்டவரும், அவர் ஒளியிலே காய்ந்தவர்களும் பெறாத இடத்தினைச் சித. சு. சபாபதிச் செட்டியார் பெற்றார். செட்டியாரவர்கள் நாவலரவர்களாலே தம் ஈமக் கிரியைகளைச் செய்ய நியமிக்கப்பெற்ற சிறப்பினை அடைந்தவர். நாவலர் பாரம்பரியத்தினைப் பயன்படுத்தியவர்கள், நாவலரவர்களின் வழியிலே சென்று, அதனைப் பேணாத நிலையிலே, அதன் மரபுகள் வலுவிழந்த கட்டத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தன. இக் கட்டத்திலேதான் மேலைப் புலோலி கதிரைவேற்பிள்ளையின் பணி ஆரம்பமாகிறது.

மேலைப் புலோலியிலே உதித்து, தமிழ்நாட்டிலே பானுவாகத் திகழ்ந்து, நீலகிரிக் குன்றூரிலே கரந்த சதாவதானம் கதிரைவேற்பிள்ளை பிரசோற்பத்தி ஞு (1871) மார்கழி மீ, 3ஆம் தேதி முதல் பராபவ ஞு (1907), பங்குனி மீ, 13ஆம் தேதி வரை இந்நிலவுலகிலே வாழ்ந்தது முப்பத்தாறு வருடங்களே. அவற்றிலே சிறந்தவையான கடைசிப் பதினான்கு வருடங்கள் தமிழ்நாட்டிற்குச் செலவழிக்கப்பட்டவை. கதிரைவேற்பிள்ளைக்கு இளமையிலேயே ஆசிரியராக விளங்கியவர்களிலே ஒருவர் நல்லூர் கா. தியாகராச பிள்ளை. தியாகராச பிள்ளை ஆறுமுக நாவலரின் மாணவர்கள் ; நாவலரவர்களின் சரித்திரங்கள் கூறாத மாணாக்கரில் ஒருவர். சைவ பூஷணசந்திரிகையின் சிறப்புக் கவியிலே " நம் மாட்டடைந்து பெருங்கலை பலவு மறிந்தோன் " என்பர் தியாகராச பிள்ளை. இருபத்திரண்டாம் வயதிலே தமிழ்நாடு சென்ற கதிரைவேற்பிள்ளை,[2] அங்கும் நாவலர் பரம்பரையின் தொடர்பு பூண்டு ஒழுகியவராவர். நல்லூர் க. சதாசிவப்பிள்ளை, " இலக்கிய இலக்கண தருக்க சித்தாந்த நூல்களை எம்மிடத்தும் பன்னாட் கோடன் மரபிற் பயின்ற பிரதம மாணவர் " என்பர்.[3] காசிவாசி செந்திநாதையரிடம் பெருமதிப்புக் கொண்டு, அவரைத் தம் சற்குருவாகக் கருதிக் கதிரைவேற்பிள்ளை பணிந்தவர்.[4] கதிரைவேற்பிள்ளை சபாபதி நாவல

2. சி. கணேசையர், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், 1939, பக். 87.
3. நா. கதிரைவேற்பிள்ளை, சைவ பூஷண சந்திரிகை, 1902, சிறப்புரை.
4. சி. கணேசையர், ஷை நூல், பக். 175.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிடமும் நட்புப்பூண்டு, அவரிடம் சிவஞான மாபாடியம் பெற்று வாசித்தவர் ; வண்ணை சுவாமிநாத பண்டித ருடனும் மிகுந்த நண்புடையவர். ஆறுமுகநாவலரின் மாணவர் பரம்பரையில் இடம்பெறும் கதிரைவேற்பிள்ளை, தமிழ் நாட்டிலும் அப்பரம்பரையுடன் நெருங்கிய தொடர்பு பூண்டு வாழ்ந்தவராவர்.

நாவலர் மரபின் முக்கியத்துவத்தைக் கதிரைவேற் பிள்ளை வேற்று மண்ணிலே நன்குணர்ந்தனர். இராம லிங்கபிள்ளை தமிழ்நாட்டிலே தெய்வீகம் அடைந்துவிட்ட காலத்திலே கதிரைவேற்பிள்ளை அங்கு சென்றார். இராம லிங்கரின் '' அருள்மாட்சி ''யைப் போற்றிப் புகழ முற் பட்டவர்கள், ஆறுமுகநாவலரை மறந்துவிடவில்லை ; அவர் மீது ஏற்பட்ட ஆற்றாமையை மறைக்க முற்படவில்லை. இந்நிலையிலே ஈழத்தவரின் பாரம்பரியத்தை விளக்க முற் பட்ட கதிரைவேலர், நாவலராகவே மாறினார் ; நாவ லரவர்களை இழித்துரைத்தவர்களைக் கண்டிக்கப் புறப்பட் டவர் நாவலராகவே தம்மை மாற்றிக் கொண்டார். இதனால், கதிரைவேலர் பணி, நாவலர் பணியாக முடி கின்றது.

'' திருஞானசம்பந்தப் பெருமானே முத்தமிழையும் சைவ சித்தாந்தத்தையும் வளர்த்து நிறுவற்குப் பின்னரும் ஒருரு வெடுத்து வந்தாலென, யாழ்ப்பாணத்து நல் லூரிலவதரித்து, பற்பல இலக்கிய இலக்கண தருக்க நீதி நூல்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் வெளிப்படுத்திச் செந் தமிழையும் சைவ சித்தாந்தத் தையும் வளர்த்து, பரமத கண்டன சுவமத ஸ்தாபனஞ் செய்து, சிவபத்தி சிவனடியார் பத்தி சிவாகம பத்திகளின் முதிர்ந்து, மெய்ஞ்ஞானப் பிரசங்கமாரி பொழிந்து, ஒப்பாரு மிக்காரு மின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா வித்துவ சிரோமணியாய், சைவ சித்தாந்த பானு! வாய், திக்கெலாம் மெய்ப்புகழ் விளங்கப் பெற்ற மகா சைவ ஞானாசாரிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெரு மான் அவர்கள் செய்த அதி யற்புத பரமோபகார வருஞ் செயல்களின் ஞாபகார்த்தமாக ''

கதிரைவேற்பிள்ளை சைவபூஷண சந்திரிகையின் இரண்டாம் பதிப்பினை 1902இலே ஆறுமுகநாவலருக்குச் சமர்ப்பிக் கிறார் ; முதலாம் பதிப்பிலே (1900) இச் சமர்ப்பணம் இல்லை. முதற் பதிப்பு 1900இலே வெளி வந்த பின்பு நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஆறுமுகநாவலரை மேன் மேலும் கதிரைவேற் பிள்ளை கண் முன்னே நிறுத்தியமையாலே இரண்டாம் பதிப்பிலே சமர்ப்பணம் செய்யப்பட்டது போலும்.

சென்னையிலே தம் வாழ்க்கையை முட்டுப்பாடின்றி நடத்த அச்சியந்திர சாலையிலே அச்சுத்தாள் திருத்திக் கொண்டு, தமிழ்க் கல்வியினை ஆவலுடன் மேன்மேலும் கற்றுக் கொண்டும், தமிழாய்விலும் சைவசமய ஆய்விலும் ஈடுபட்டுக் கொண்டும் வந்த கதிரைவேற் பிள்ளைக்கு 1897ஆம் ஆண்டிலே உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் பதவி கிடைத்தது. அவ்வாண்டிலேயே கதிரைவேற்பிள்ளை ' மாயாவாததும்ச கோளரி ' என்ற சிறப்புப் பெற்றார். இப்பட்டம் காசிவாசி செந்தினாதையர் தலைமையில் 1897ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், பன்னிரண்டாம் தேதி வழங்கப்பெற்றது.

ஸ்மிருதிகளை ஆதாரமாகக் கொண்டு சங்கராசாரி யரின் மதத்தை ஆதரித்த ஸ்மார்த்தருக்கு எதிராக ஆறுமுக நாவலர் தமது சமயப் பணியின் ஆரம்ப கட்டத்திலே குரல் எழுப்பினார். 1852இலே வெளிவந்த நாவலரவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராண வசனம் சான்று பகரும். பெரியபுராண வசனத்திலே உண்மை நாயன்மார் மகிமை, குருபூசை எனும் பகுதிகளிலே அக்குரல் தெளிவாகக் கேட்கின்றது.

> ''மங்கலியத்தைத் தரித்துக்கொண்டு தங்கள் தங்கள் நாயகருக்குத் துரோகஞ் செய்து இல்லொழுக்கிறந்த பெண்டிர்கள் போல, விபூதி ருத்திராக்ஷரங்களைத் தரித்துக் கொண்டு அச்சின்னங்களுக்குரிய சிவபெருமானோடு பசுக்களைச் சமமெனக் கூறியும் சிவவாக்காகிய சிவாகமங்களை நிந்தித்தும் அச்சிவபெருமானுக்குத் துரோகிகளாய் ஒழுகும் இவர்கள் மற்றை எப்பாதகந்தான் செய்யக் கூசுவார்கள்! ஐயையோ! இச் சிவத் துரோகிகளை நம்முடைய சைவ சமயிகள் வணங்குதலும், இவர்களிடத்தே புசித்தலும், இவர்களை விவாகம் சிராத்த முதலிய கருமங்களிலே தான பாத்திரமாகக் கொண்டு, தாம் வருந்தித் தேடிய பொருள்களைப் பாழுக்கிறைத்து எரிவாய் நரகத்துக்கு இரையாதலும் எவ்வளவு அறியாமை!''

என்பது உண்மை நாயன்மார் மகிமை. எட்டாம் பத்தியில் வருவது. ஆறுமுகநாவலரின் எதிர்ப்புச் சிவாகமப் புறக் கணிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலக் கல்வியின் பிரயோசனங்களை நன்குணர்ந்து, அதனை நன்முறையிற் பயன்படுத்தி, அந்நியர் ஆட்சியில் அதன் பலாபலன்களை அநுபவித்து நன்னிலை அடைந்த ஸ்மார்த்தர், தமிழர் சமூக வாழ்க்கயிற் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்தனர். பிறப்பாலும் பதவியாலும் உயர்ச்சியைத் தேடிக் கொண்ட ஸ்மார்த்தர், சங்கராசாரியரின் மதத்தைத் தமிழ் நாட்டிலும் வேரூன்ற வைக்கும் தீவிர முயற்சியிலே ஈடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தனர். ஆறுமுகநாவலரின் குரல் கேட்ட காலத்திலே அம்முயற்சி சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. சூளை சோமசுந்தர நாயகர் காலத்திலே *(1846–1901)* அதன் வேகம் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது. சோமசுந்தர நாயகருக்கு 51 வயது நடக்கும்போது கதிரைவேற்பிள்ளை ஸ்மார்த்தர்களின் மதத்தைத் தகர்க்கப் புறப்பட்டார். மாயாவாத தும்ச கோளரி, அத்துவித சித்தாந்த மகோத்தாரணர் என்ற பட்டங்கள் அவர் பணியைக் கௌரவிக்க அளிக்கப்பட்டவை. அத்தோடு பிள்ளையவர்கள் தமக்கு எதிராகச் செல்வாக்குள்ள ஒரு அணியையும் திரள வைத்துவிட்டார்.

கதிரைவேற் பிள்ளை மாயாவாத அணியுடன் தமக்கெதிராக வைணவர்களையும் அணி சேரச் செய்தனர். கதிரைவேற் பிள்ளை 1900இலே வெளியிட்ட சைவபூஷண சந்திரிகையிலே 'விஷ்ணுவும் விபூதிருத்திராக்க தாரணரே' என்று கூறிய விடயம் சென்னை வாழ் வைணவரின் எதிர்ப்பைத் தாமாகவே சம்பாதிக்கக் காரணமாயது. வைணவர்கள் 1901ஆம் ஆண்டு, ஜூலாய் மாதம் ஏழாம் தேதி புரசைவாக்கத்திலுள்ள ஸ்ரீநிவாசகப் பெருமாள் கோயிலில் ஸ்ரீஅழகிய மணவாள இராமாநுஜ ஏகாங்கியார் அவர்களை முதன்மையாக வைத்து வாதிக்குமாறு கதிரைவேற்பிள்ளை அறைகூவி அழைத்தனர். அறைகூவலை ஏற்றுக் கதிரைவேற் பிள்ளை, சைவசித்தாந்த சஞ்சீவினி சபையினர், வேதாந்தப் பிரசங்க சபையினர் முதலான சபையினர் சூழச் சென்றபோது, அவருக்கு எதிராக அந்தகர் ஒருவரை, வைணவர் நிறுத்தியமையாற் கதிரைவேற் பிள்ளை அந்தகரோடு வாதிடல் தருக்க நூலுக்கு விரோதம் என்றும் அவரை வெல்லினும் பெருமையின்று என்றும் கருதியமையால் வாதம் நிகழாது போயிற்று. அடுத்த வாரம் முதல் 1902ஆம் ஆண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி மாதம் இறுதியாக ஏழு மாதம் வரையும் 'விபூதி ருத்திராக்க விவாத சபை' எனும் கூட்டம் சைவ சித்தாந்த சஞ்சீவினி சபையினராலும் வேதாந்தப் பிரசங்க சபையினராலும் பல இடங்களிற் கூட்டப்பெற்றது. ஒவ்வோர் விளம்பரங்க டோறும் 'விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே' என்ற மேற் கோளைக் காட்டி, இதனை நிலை நிறுத்தக் கதிரைவேற் பிள்ளை சித்தமாய் இருப்பதனால் ஏகாங்கியார் அவர்களாவது, வேறெந்த வைணவ தாபகர்களாவது வந்து வாதிக்கக்க கடவர் என்று அழைக்கப் பட்டனர். அறைகூவலை வைணவர் ஏற்காது, மாயா வாதிகள் சிலரைத் துணையாகக் கொண்டு சிவதூஷணமாகவும் நூலாசிரியர் தூஷணமாகவும் துண்டுப் பத்திரிகைகள் பலவற்றை வெளியிட்டனர். இவற்றுக்கு மறுப்பாக, விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே, சீதரதியான நிருபணம், தசாவதார சிக்ஷாரக்ஷணியம், திராவிட வேத விபரீதார்த்த திரஸ்கார கண்டனம், அரங்கேற்றா பாசம், சைவபூஷண சந்திரிகைச் சயச் சிறப்பு, சிவசின்ன விஜயம், விவாத மத்தியஸ்த பத்ரம் வெளிப்படுத்தினார்க்கு ஓர் நல்விடை, ஆழ்வாரருளிச் செயல் பார்த்த விசாரதண்டனம், சென்னை மகாவித்வ ஜனசபை, வைணவ விப்பிரலம்பம், போலி வைணவர்க்குப் புத்தி புகட்டல், ஐயத்துவச கண்டனம், அரக்க சைவாகம குதர்க்க நிர்த்தூளி, பாஷண்ட பிடாலம்ப தூஷண குஞ்சர பஞ்சாசானனம், வைணவப் போலியர் வாய்மத மடக்கல், சிவோ பாலம்பன திமிர பாஸ்கரம், வாதத்திற்குப் பயந்தொளித்த வைணவர்க் கறிக்கை, நீறு என்னுஞ் சொல்லுக்கிட்ட வைரக் குப்பாயம், கண்டிகை யநர்த்த கானன குடாரி, ஆழ்வார் சரித்திராரணிய மகாபரசு முதலிய பல கண்டனங்கள் கதிரைவேற் பிள்ளை கட்சியினரால் வெளியிடப்பெற்றன. சென்னை ஸ்ரீ வேணுகோபால சுவாமி அரங்கத்தில் **1902**ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம், **16**ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேதி ' விஷ்ணு தாரண விபூதி ருத்திராக்க விவாத நிகமன சபை ' என ஒரு கூட்டம் சைவசித்தாந்த சஞ்சீவினி சபை, வேதாந்தப் பிரசங்க சபை, நடராஜ பக்தஜன சபை, சுத்தாத்துவித சைவ சித்தாந்த சபை, வாதபுரீச பாத சேகர பக்த ஜன சபை, வேதாகமோத்த சைவசித்தாந்த சபை என்பனவற்றால் அத்தியாச்சிரம பால சரஸ்வதி, ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் தலைமையிற் கூட்டப் பெற்றது. இச்சபையில் அத்துவித சித்தாந்த மகோத் தாரணர் விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே என் பதனைச் சித்தாந்தஞ் செய்தார். பாம்பன் குமர குருதாச சுவாமிகளும் ஆ. கிருஷ்ணையரும் ஏனையோரும் அநுவதித்து முடிக்க, ஞானானந்தர் வழிமொழிந்து வைணவரை வாதிக்கு மாறு அழைத்தனர். வைணவர் யாரும் முன்வரவில்லை. இவ் விருத்தாந்தத்தினைச் சைவ பூஷண சமயத்து வசம் விரித்துரைக்கின்றது.

இவ்விவாதத்தின் பின்னர் சிவநேயர் வேண்டுகோளின் படி முதற் பதிப்பித்த நூலை விரித்து, இன்றியமையாத விடயங்களைச் சேர்த்தும் சென்னை சி. நா. அச்சியந்திர சாலையிற் சுபகிருது ௵, கார்த்திகை ௴ (1902) சைவ பூஷண சந்திரிகையைக் கதிரைவேற் பிள்ளை பதிப்பித்தனர்.

ஆறுமுகநாவலர் பெரிய புராணத்திற்குச் சூசனம் எழு தும் போது ' சிவனது பரத்துவம் ' வரைந்தவர்.

' இப்படியே சுருதிகளும் அவைகளின் உபவிருங் கணங் களும் சிவனே விச்சுவாதிகரும் விச்சுவசேவியருமாமென் பது தெளிவுற விளக்குவதால், விஷ்ணு முதலிய பிறரைச் சிவனிலும் அதிகமென்றாயினும் சிவனோடு சமமென்றாயினும் கொள்ளுதல் சிவநிந்தையாகிய அதி பாதகமேயாம். ஆதலால், சிவனே பரம்பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று துணிந்து, அவரையே மெய்யன்போடு மனம் வாக்குக் காயங்களினாலே வழிபடுக''.

என்பன 'சிவனது பரத்துவம்' பற்றிய ஈற்று வசனங்களாம். நாவலரவர்கள் காலத்திலே 'சைவ-வைணவப் போர்' முக்கியத்துவம் பெறவில்லைப் போலும். தமிழ் நாட்டிலே சூளை சோம சுந்தர நாயகர், சி. வை. தாமோதரம் பிள்ளை முதலியோர் காலத்திலே வைணவ பிரசாரம் முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டது. இக் கூற்றினைச் சி. வை. தாமோதரம் பிள்ளையின் வீரசோழியப் பதிப்புரையும், சோம சுந்தர நாயகரின் நூல்களும் ஆதரிக்கின்றன. அவர்களுடைய கால கட்டத்தின் ஈற்றிலே கதிரைவேற் பிள்ளை வைணவ கண்டனம் செய்கிறார்.

மாயா வாதிகளையும் வைணவரையும் தமக்கு எதிராக அணி திரட்ட வைத்த கதிரைவேற் பிள்ளை பௌத்த மதத்தினரின் கோபத்திற்கும் ஆளானார். சென்னையிலே இருபதாம் நூற்றாண்டின் விடியலிலே பௌத்த மதம் மீண்டும் பிரசார நிலையை அடைந்தது. கதிரைவேற் பிள்ளை 'புத்தமத கண்டனம்' இயற்றித் திருமயிலாப் பூரிலே அரங்கேற்றஞ் செய்ததோடு, இராயப்பேட்டை பௌத்த ஆச்சிரமத்தின் பக்கத்திலே பெரிய பாளையத் தம்மன் மண்டபத்திலே பௌத்த மதத்தின் தத்துவங்களைக் கண்டித்து உபந்நியாசமும் செய்தனர். ஆறுமுக நாவலர் காலத்திலே தமிழ் மக்களிடையே பௌத்தம் செல்வாக்குப் பெறத் தொடங்கவில்லைப் போலும்.

மாயா வாதிகள், வைணவர், பௌத்தர் ஆகியோரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்ட கதிரைவேற் பிள்ளை, வேளாளரில் ஒரு பிரிவினரின் பகையையும் தேடிக் கொண்டார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக் கூறிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்கூறிலும் வேளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைசியர் என்றும், சூத்திரர் என்றும், இரு பிரிவினர் வாதிட்டனர். வேளாளர், வைசியர் என்பதை விளக்குமுகமாகக் கூடலூர் கனக சபைப் பிள்ளை வருண சிந்தாமணி என்ற நூலொன்றினை எழுதிச் சார்வரி ஞு, தை மீ (1901) வெளியிட்டனர். வருண சிந்தாமணியிலே ஆறுமுகநாவலர் வேளாளரைச் சூத்திரர் என்று கூறுவதற்காக, மண்டல புருடரின் சூடாமணி நிகண்டினைப் புரட்டிப் பதிப்பித்துள்ளார் என்று குற்றஞ் சாட்டப் பெற்றது. கூடலூர் கனகசபைப் பிள்ளை,

> "இவர் நெடுநாள் சத்தியவந்தரென்று பெயரெடுத்தும் கடைசிக் காலத்தில் இத் தீய செய்கைக்கு உடன்படலாமா! 'உள்ளியர் தெள்ளியராயினு மூழ்வினை மெள்ள நுழைந்துவிடும்' என்ற பழமொழி பொய்யாகாதென்பதைப் பிரத்தியட்ச மாகக் கண்டோம்"

என்று ஆறுமுகநாவலரைக் கிண்டலாகக் கண்டித்திருக்கிறார்.[5] கதிரைவேற் பிள்ளை 1899இலே பதிப்பித்த பெயரகராதியிலே வேளாளர் சூத்திரர் என்று கூறியிருந்தார். கதிரைவேற் பிள்ளை மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்றபோது, வேளாளர் வருணம் பற்றிய பிரச்சினை சூடுபிடித்தது. கதிரைவேற் பிள்ளை மீனாட்சியம்மன் திருக் கல்யாண மண்டபத்திலே வேளாளர் சூத்திரர் எனும் நாவலரவர்கள் கருத்தை ஆதரித்து உபந்நியாசஞ் செய்தனர். அத்தோடு அமையாது தமது கட்சியை விளக்கிப் பத்திரிகையிற் பிரசுரித்தனர். இப் பிரசுரத்திலே வருண சிந்தாமணியிலும் அதற்கு வழங்கப்பெற்ற சாற்றுக் கவிகளிலும் பல குற்றங்களைக் கதிரைவேற் பிள்ளை எடுத்துக் காட்டினார். வருண சிந்தாமணியும் இரண்டாம்

---

5. வருண சிந்தாமணி, 1901, பக். 519.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புக் கண்டது. இரண்டாம் பதிப்பிலே விவகார காண்டம் என்னும் பகுதி முழுவதும் யாழ்ப்பாணத்தாரை வைத பாகமாகும். கதிரைவேற் பிள்ளையோடு ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை போன்ற, தமிழ் நாட்டில் அரும்பணி புரிந்த ஈழத்தவரையெல்லாம் வைத காண்டம், விவகார காண்டம், வேளாளர் சிறப்புக் கூறப் புறப்பட்ட வருண சிந்தாமணி வசை நூலாக முடிந்தது.

மாயாவாதிகள், வைணவர், பௌத்தர், வேளாளர் மூன்றாம் வருணத்தவர் என்ற கட்சியினர் ஆகியோரின் பகையைத் தேடிக் கொண்டிருந்த கதிரைவேற் பிள்ளை எதிர் நோக்கிய அடுத்த பெரும் எதிர்ப்பு இராமலிங்கர் கோஷ்டியிலிருந்ததாகும்.

மறைமலையடிகளின் அருந்தவப் புதல்வர் வித்துவான் திருநாவுக்கரசு 'மறைமலையடிகள் வரலாறு' எனும் பாரிய நூலொன்றினை 1959ஆம் ஆண்டிலே வெளியிட்டனர். உ. வே. சாமிநாதையரின் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வரலாறு, என் சரித்திரம் என்பனவற்றைப் பயின்று அளவிலா மகிழ்வும் நலமுமடைந்த திருநாவுக்கரசு[6] தந்த சரித்திரத்திலே சாமிநாதையர் தந்த சரித்திரங்களின் இயல்பும் மணமும் மலிந்து காணப்படுகின்றன. சாமிநாதையரின் சரித்திர நூல்களின் இயல்பையும் பண்பையும் த. கைலாச பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை முதலாகப் பலர் தெளிவாக்கியுள்ளமை கண்டு நினைவு கூரத்தக்கது.

---

6. மறைமலையடிகள் வரலாறு, 1959, முகவுரை, பக். 10.

4-7-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு எழுதிய நூலிலே 40ஆம் பக்கத்திலிருந்து 49ஆம் பக்கம் வரை, 'அருட்பா மருட்பா போர்' நாடகம் ஒன்று விரிகின்றது ; திட்டமிட்டு எழுதிய நாடகம் ; சுத்தானந்த பாரதியாரின் அருட் சுடர் வள்ளலார், நாவலர் பெருமான் என்பனவற்றிற்கும், சிவஞான கிராமணியாரின் வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்பதற்கும் இடைப் படத் தோன்றிய கற்பனை நாடகம் ; நாடகத்தின் பேர் ' ஏயர்கோன் கலிக்காம நாயனார் நாடகம் '.

நாடகத்திற்குத் தோற்றுவாயுண்டு. அது நாடகாசிரியனைத் தெளிவாகக் காட்டிக் கொடுத்துவிடுகின்றது.

> '' முற்காலத் தோன்றல்கள்பால் உலகம் அளவு கடந்து அன்பு பாராட்டும் ; மதிப்புங் கொள்ளும். அதனால் தம் காலத்தில் வாழும் மாபெருந் தோன்றல்களை முற்காலத் தோன்றல்களுடன் ஒப்பப் பாராட்டி மகிழ மறுப்பது உலகியல்பு. அம்முறையில்தான் அருட்பா-மருட்பா கிளர்ச்சி தோன்றியிருத்தல் வேண்டுமேயன்றி மாபெரும் மெய்யுணர்வின் மேலோரான நாவலர் பிரானை அன்பர்கள் தவறாக நினையார் என்க.''[7]

' முற்காலத் தோன்றல்கள் ' சமய குரவர் என்பதும், ' தம் காலத்தில் வாழும் மாபெருந் தோன்றல் ' இராமலிங்க பிள்ளை என்பதும் கோடிடப்பட வேண்டியவை. சமயகுரவர்பாற் கொண்ட பேரன்பினாலேயே நாவலரவர்கள் இராமலிங்கர் பாடல்களை அருட்பா என்று ஏற்றுக் கொள்ள மறுத்தார் என்று சுத்தானந்தரைப் பின்பற்றித்[8] திருநாவுக்கரசு கூறுவதற்கு முரணாக உரைப்பது

7. மறைமலையடிகள் வரலாறு, 1959. பக். 42
8. நாவலர் பெருமான், 1948, பக். 207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலியருட்பா மறுப்பு[9] உண்மையைப் புறக்கணித்து விட்டுப் பொருந்தாக் காரணங்களை இருவரும் கற்பனை செய்துள்ளனர். தத்தம் சீடர் கண்டுபிடிக்க ஆறுமுக நாவலரும் இராமலிங்கரும் பங்கு பற்றாது ஒதுங்கியிருந் தனர் என்றும் திருநாவுக்கரசு தோற்றுவாயிலே கூறுவர். சுத்தானந்தர் இராமலிங்கருக்கு மட்டும் அந்த நிலையை அளித்திருந்தார்;[10] திருநாவுக்கரசு ஆறுமுக நாவலரை ஒதுக்கிவிடாமல் அவருக்கும் அந்த நிலையைச் சேர்த்து வழங்கியுள்ளார்.

> ''எப்போதும் இருதிறத்துச் சீடர்கள்தாம் தம்தம் குருவே உயர்ந்தோர், மற்றவர் தாழ்ந்தோர் என்று கலகமிடுவது வழக்கத்தில் உள்ள நிகழ்ச்சியாகும். அது போலவே எப்போதும் இரு திறத்துப் பெரியோர் களும் தமக்குள் அன்பும், மதிப்பும் உடையவர்களா கவே இருப்பர். அதுதானே உயர்ந்தோரியல்பு![11]

ஆறுமுகநாவலர் அருட்பா பற்றிப் பிரசங்கங்கள் செய்தது, போலியருட்பா மறுப்பு வெளியிட வைத்தது, அதற்கு மாறாக இராமலிங்கர் மாணாக்கரைக் கொண்டு பன்னிரு கண்டனங்கள் வெளியிடுவித்தது, இராமலிங்கர், நாவலர் பத வியாக்கியானம் செய்தது முதலியவையெல்லாம் திரு நாவுக்கரசு கூற்றிலே 'சுவாகா'!. திருநாவுக்கரசு தந்த தோற்றுவாயிலே கடலூர் நீதி மன்றத்திலே இராமலிங் கரும் ஆறுமுகநாவலரும் அன்பினால் அளவளாவியதைக் கண்டு நீதிபதி வழக்கைத் தள்ளிவிட்ட கட்டுக் கதையு

---

9. 'சிதம்பர மான்மியம்' கட்டுரை காண்க.
10. அருட்சுடர் வள்ளலார், 1940, பக். 126 ; நாவலர் பெருமான், 1948, பக். 205.
11. மறைமலையடிகள் வரலாறு, 1959, பக். 42.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டு.[12] இதனை விரித்துத் ' துமிலன் ' சுவைபட எழுதியுள்ளமை ஈண்டு நினைவுகூரத்தக்கது.[13] இராமலிங்கர் ' சன்மார்க்கர் தாமே ?' என்று கேட்ட நாவலரவர்களையே 'உண்மையான ஞானி ' என்று கூறவைத்தவர்கள், எதைத்தான் சோடித்துக் கூறார் ?

ஏயர் கோன் கலிக்காம நாயனார் கதை பெரிய புராணத்திலுண்டு. சுந்தரமூர்த்தி நாயனார் தம்பிரான் தோழர் ; வேண்டுவனவற்றை உரிமையோடு கேட்டு இறைவனிடம் பெற்றவர். சங்கிலியாரை மணம் புரிந்தமையாற் பரவையாருக்கு ஏற்பட்டபுலவியை நீக்கித் தம்துயர் தீர்க்க வேண்டிய சுந்தரர் பொருட்டு இரவிலே சிவபிரான் இருமுறை பரவையாரிடம் தூது சென்றார். இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற ஒருவர் இறைவனுக்குப் பழி வந்துவிட்டதே என்று வருந்தினார் ; தம்முயிர் போகாமல் இருக்கின்றதே என்று வெறுத்தார் ; உள்ளம் நடுங்காது இறைவனை ஏவியவரைக் காணின் யாது செய்துவிடுவேனோ என்று கோபித்தார். அவர்தாம் கலிக்காம நாயனார். அவருடைய கோபத்தை அறிந்த சுந்தரர் தாம் செய்தது பிழையெனக் கருதி இறைவனிடம் தீர்ப்புக் கேட்டார். இறைவன் இரு அடியாரையும் நண்பராகக் கருதிக் கலிக்காமருக்குச் சூலை நோய் கொடுத்து வருந்தச் செய்து, வன்றொண்டராலேயே சூலை நோய் நீங்கும் என்று அருளினார். சுந்தரரால் நீங்குவதிலும் சூலைநோய் தீராமல் வருந்துவதே மேலென்று கலிக்காமர் தீவிரதரத்தோடு நின்றனர். இறைவனாற் கட்டளையிடப் பெற்ற சுந்தரர் தம் சூலை நோய் தீர்க்க வரும் செய்தி அறிந்த கலிக்காமர், இறைவனைத் தூது

---

12. மறைமலையடிகள் வரலாறு, 1959, பக் 42.
13. குமுதம், 31-8-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்ட சுந்தரராற் சூலை தீர்வது பாபம் என்று கருதி, வாளாலே தல் வயிற்றை அறுத்து உயிர் நீத்தார். கலிக்காமர் வீடு அடைந்த சுந்தரர் நடந்ததை அறிந்து தாமும் உயிர் துறக்க முற்பட்டபோது, கலிக்காமர் உயிர்த்தெழுந்து வாளைப் பறித்துக் கொண்டார். சுந்தரர் கலிக்காமரின் பாதங்களிலே வீழ்ந்து வணங்கினார். அடியார்க்கு அடியாரான கலிக்காமர் வாளை எறிந்துவிட்டு சுந்தரர் பாதங்களிலே தாமும் விழுந்து போற்றினார். இருவரும் அன்று தொட்டுச் சிறந்த நண்பராயினர். இது பெரியபுராணம் சொல்லிய கதை.

இக் கதையை நாடகமாக்க முற்பட்டனர் திருநாவுக்கரசு. அவர் நாடகத்திலே கலிக்காம நாயனார், கதிரைவேற் பிள்ளை. சுந்தரர், இராமலிங்கரா அல்லது மறைமலையடிகளா என்பதுதான் தெளிவாகவில்லை !

கதிரைவேற் பிள்ளை காலத்திலே ஏற்பட்ட 'அருட்பா மருட்பா'க் கிளர்ச்சி எப்பொழுது ஆரம்பமாகியது? ம.பொ. சிவஞான கிராமணியார் 1897ஆம் ஆண்டென்பர்[14] சிவஞான கிராமணியார் மாயாவாதத்தை எதிர்த்துக் கதிரைவேற் பிள்ளை 'மாயாவாத தும்ச கோளரி' பட்டம் பெற்ற நிகழ்ச்சியையும் அருட்பா மருட்பாக் கிளர்ச்சியுடன் இணைத்துத் தோற்றுவாய் செய்துள்ளார். வேதாந்த கேசரி கோமளேசுவரன் பேட்டை சு. வடிவேல் செட்டியார் உட்பட மாயாவாதிகள் பின்னர் அருட்பா மருட்பாக் கிளர்ச்சியில் முக்கிய இடம் பெற்றது உண்மையே. ஆயினும் 1897இலே நடந்த கிளர்ச்சி மாயாவாதம் பற்றியதேயன்றி மருட்பா பற்றியதன்று. பின்பு,

---

14. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 354, 365.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு வாதங்களும் ஒருங்கிணைந்தமையால், சிவஞான கிராமணியாரால் அவற்றை வேறுவேறு பிரித்துக் காட்ட முடியவில்லைப் போலும். சிவஞான கிராமணியாருக்கு முன்பு 'மறைமலையடிகள் வரலாறு' எழுதிய திருநாவுக்கரசு இரண்டாவது மருட்பாக் கிளர்ச்சி 1901ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது என்று கருதவைக்கிறார்.[15] 1901ஆம் ஆண்டு நடந்தது 'விஷ்ணுவும் விபூதி ருத்திராக்க தாரணரே' என்ற சைவபூஷண சந்திரிகையின் கூற்றால் எழுந்த வைணவ வாதமாகும். அவ்வாதம் 1902ஆம் ஆண்டின் பிற்பகுதியிலே முடிந்தது. திருவாரூர் வி. கல்யாண சுந்தர முதலியார் 1903ஆம் ஆண்டிலே மருட்பாக் கிளர்ச்சி ஆரம்பித்தது என்று கருத இடமளிக்கிறார்.[16] ம.பொ. சிவஞான கிராமணியார் 1903ஆம் ஆண்டு அக்தோபர் மாதம் நாலாம் தேதி சிந்தாதிரிப் பேட்டை வேதாகமோக்த சைவ சித்தாந்த சபையார் கூட்டிய 'போலியருட்பாக் கண்டன மகா வித்வஜன சபை' யிலே திருமயிலை தணிகாசல முதலியார் தலைமையில் நா. கதிரைவேற் பிள்ளை நிகழ்த்திய மருட்பாக் கண்டனத்தைக் குறிப்பிட்டுள்ளார்.[17] கதிரைவேற் பிள்ளை கட்சியினர் நடத்திய முதற் கூட்டம் என்று இதனைத் துணியலாமோ தெரியவில்லை.

திருநாவுக்கரசு தமது நூலிலே கதிரைவேலர் காலத்திலே நடந்த கிளர்ச்சியைத் தொடக்கி வைத்தவர் கதிரை

---

15. மறைமலையடிகள் வரலாறு, 1959, பக். 44.
16. ஆ. தேவராசன் (பதி.), செந்தமிழ்ச் செம்மல் நா. கதிரைவேற் பிள்ளை: நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் சரித்திரம், 1969, பக். 15-22.
17. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 356—357.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலரே என்ற பொருள்பட எழுதியுள்ளார். 'தெய்வத் தன்மையுடையார்' என்று பாராட்டப் பெற்றவரும், 'சீவ காருண்ய ஒழுக்கத்தைப் பரப்பிய தூய துறவோரும்' ஆகிய 'ஞானி'யைக் கதிரைவேலர் பழிப்பதை அறிந்த பொதுமக்கள் கொதித்தெழ, அறிஞர் வருந்தி, கதிரை வேலரின் மருட்பாவுக்கு மறுப்புரைகள் பேசித் துண்டு விளம்பரங்கள் மூலம் அதனைக் கண்டித்தனர் என்பது திருநாவுக்கரசின் கூற்றுகளின் சுருக்கம்.[18]

கதிரை வேலர் காலத்திலே விவகாரம் புதுப்பிக்கப் பெற்ற வரலாற்றினை **1908**இலே திருவாரூர் வி. கல்யாண சுந்தர முதலியார் தெளிவாகக் காட்டியுள்ளார். அவ்வரலாறு அவர் எழுதிய கதிரைவேற் பிள்ளை சரித்திரத்திலுண்டு.

மாயாவாதிகள், வைணவர், பௌத்தர், வேளாளர், வைசியர் எனும் கட்சியினர் என்பவரோடு, கதிரைவேலர் புகழ் கண்டு பொருமிய சென்னைப் புலவர்களும் ஒன்று சேர்ந்து, அவருடைய புகழைச் சிறுக்கச் செய்யப் பல சூழ்ச்சிகளைச் செய்தும், அவை பயனிலவாயின கண்டு, யாழ்ப்பாணிகளைத் தாழ்த்திக் கூட்டம் போட்டால், கதிரைவேலர் களத்திலே குதிப்பர்; அப்பொழுது அவரைச் சார்ந்துநிற்கும் சென்னைப் பெரியோர் பிரதேசக் காய்ச்சலாற் பாதிக்கப்பட்டு, கதிரைவேலருக்கு எதிரியாவர் என்று கருதிப் பிரதேச துவேஷத் திட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். இவ்வஞ்சகமான திட்டத்தின்படி உயிர்ப்பிக்கப் பட்டதுதான், அருட்பா மருட்பா விவகாரம்.

கதிரைவேலரின் வைரிகள் சென்னை முல்லா வீதியிற் சபை கூட்டி நாவலரவர்களையும் கதிரைவேற் பிள்ளையை

---

**18.** மறைமலையடிகள் வரலாறு; **1959**, பக். **43**.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தூஷித்து, இராமலிங்கரை ஐந்தாம் குரவர் என்றும், அவர் பாடலை அருட்பா என்றும், ஐந்தாம் வேதம் என்றும் உபந்நியாசித்தனர். அப்பொழுதுகூட, கதிரைவேலர் அதனைப் பொருட்படுத்தாது சும்மா இருந்தனர். என்று திரு.வி.க. கூறுகிறார். கதிரைவேலர் கண்டிக்கப் புறப் படாததைச் கண்ட வைரிகள் பன்னிரு திருமுறைகளையும், அவற்றை அருளிய பரமாசாரிய சுவாமிகளையும், அவற்றை யும் அவர்களையும் துதித்துநின்ற ஆறுமுக நாவலரையும் தூஷித்துக் கூட்டம் போட்டார்கள். இதனைக் கண்டும் கேட்டும் சகியாத சென்னை சிந்தாதிரிப் பேட்டை வேதாக மோக்த சைவ சித்தாந்த சபையார் தூண்ட, அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, கதிரைவேலர், அருட்பா என்பது திருமுறையே என்றும், மருட்பா முக்குணவயத்தான் முறை மறந்தறையும் இக்காலப் புலவர் பாக்களே என்றும் நாட்டு வதை விரதமாகக் கொண்டனர்.

ம.பொ. சிவஞான கிராமணியார் வேளாளரின் உயர் சாதி மனப்பான்மையே கதிரைவேலர் காலத்திலே கிளர்ச்சி தோன்றியதற்குக் காரணம் என்று கூறுவர்.[19] கதிரை வேலருக்கு எதிராகத் திரண்ட கூட்டத்திலே ‘ வேளாளர் வைசியர் ’ என்று பேசிய கூட்டமும் முக்கிய இடம் வகித் ததை மறந்து சிவஞான கிராமணியார் இவ்வாறு கூறி யிருக்கிறார். வேளாளர் புராணமாகிய வருண சிந்தா மணி விவகார காண்டத்திலே யாழ்ப்பாணத்து வேளாளரை வசைபாடியதை மறந்துவிட்டு கதிரைவேலரின் எதிர்ப்பை, வேளாளரின் உயர்சாதி மனப்பான்மை என்று கூறுதல் பொருந்துவதாகத் தெரியவில்லை.

கதிரைவேலருக்கு எதிரான கட்சிக்கு மறைமலை யடிகள் முதல்வரான பின்பு, “ நடைபெற்ற ” வாதங்

---

19. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, 1967, பக். 362

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் திருநாவுக்கரசு முதற் கூட்டம், இரண்டாம் கூட்டம், மூன்றாம் கூட்டம் என்று வரிசைப்படுத்தி எழுதியுள்ளார்.

முதற் கூட்டம் 20–9–1903இலே சிந்தாதிரிப் பேட்டையில் நடந்தபோது, கதிரைவேலர் அருட்பாவைப் பற்றி ஒன்றும் பேசாமல் ஏதேதோ பொருத்தமில்லாமல் சுருக்கமாகச் சிலபேசி விரிவாக மற்றொரு நாள் பேசுவதாகக் கூறித் தம் மாணவர் சிலருடன் சடுதியில் ஒரு குதிரை வண்டியிலே ஏறிச் சென்றாராம். இரண்டாம் கூட்டம் 27–9–1903இலே சிந்தாதிரிப் பேட்டையில் ஒழுங்கு செய்யப் பெற்றபோது, கதிரைவேலர் கூட்டத்திற்கு வராமலே இருந்துவிட்டாராம். மூன்றாம் கூட்டம் 18–10–1903இலே நடந்தபோதும் இதே கதைதானாம். கதிரைவேலரும் அவர் கூட்டத்தாரும் கொட்டம் அடங்கி ஒடுங்கி ஒளிந்தனராம்.

இம் மூன்று நாட்போருக்கும் தளபதி மறைமலையடிகள் அவர் தவப் புதல்வர் முகவுரையிலே தந்தையார் நாட் குறிப்புகளை வரலாற்றிற்குப் பயன்படுத்தியதாகக் கூறியுள்ளார். தந்தை ஆங்கிலத்தில் எழுதியிருந்த நாட் குறிப்புக்களைத் தனையன் ஏனையோர் துணையுடன் அறிந்து பயன்படுத்தியுள்ளார். ஆயினும் அந்நாட்குறிப்புகள் மிகவும் சுருக்கமானவை என்ற தனையனின் குறிப்பு மறக் கொண்ணாதது. '' இன்றிவர் . . . . என்னைக் காண வந்தார் '', '' இன்று . . . . . இவ்விழாவில் தலைமை தாங்கினேன் '' என்றுதான் நாட்குறிப்புகளின் வாய்பாடு அமைந்திருந்தது என்பர் தனையன். ஆயினும் முதலாம் நாட் போர், இரண்டாம் நாட்போர், மூன்றாம் நாட்போர் பற்றிய 20–9–1903, 27–9–1903, 18–10–1903 குறிப்புகள் மட்டும் விரிவாய், விபரமாய் இருந்தன போலும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசுக்குப் போரை நிறுத்தவே விருப்ப மில்லை. சென்னையிலே தோற்ற கதிரைவேலரைக் காஞ் சிக்கு ஓட்டுகிறார்; தொண்டை நாட்டிலே தளபதி மறை மலையடிகளுக்கு வெற்றிவாகை சூட்டுகிறார். கதிரை வேலரைப் பின்பு சோணாட்டுக்கு ஓட்டுகிறார். திருச்சி யிலும் தளபதிக்கு வெற்றிவாகை சூட்டுகிறார்.

மகன் தந்தைக் காற்றும் கடனாலே, திருநாவுக்கரசு தன் கூற்றுகளிலே தவறு ஏற்பட்டிருப்பதைக் கவனிக்காமல் விட்டுவிட்டார். காஞ்சிப் போருக்கும் திருச்சிப் போருக் கும் தேதியிட்டதே அவர் விட்ட தவறு; தேதியிடாமல் இருப்பின் 'திருநா'வின் திட்டம் வெளியாகாமலே போயிருக்கும். காஞ்சிப் போர் 27-2-1905இலும், திருச் சிப்போர் அவ்வாண்டு ஜுலாய் மாதம் முதலிரு தேதி களிலும் நடந்தனவாம். 1904இலே ஒரு போரும் நடைபெற வில்லை என்பது திருநாவுக்கரசு, அவ்வாண்டு பற்றிக் கூறாததனால் ஏற்படும் கருத்து. ஆனால், அவ்வாண் டிலேதான் ஜுன் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை பெரும் போர் நடந்தது. அப்போர் நீதி மன்றத்திலே நடை பெற்றது; போரிலே வெற்றி பெற்றவர் கதிரைவேற் பிள்ளை; வெற்றி பெற்ற தேதி 21-11-1904.

விவாத சபை தோறும் சென்று இறைவனே அருட் பிரகாச வள்ளல் என்றும், சமய குரவர் திருமுறைகளே திருவருட்பா என்றும், இராமலிங்கர் அருட் பிரகாச வள்ளல் ஆகார் என்றும், அவர் பாடல் அருட்பா வன்று என்றும் கதிரைவேலர் சாதித்தனர். இராமலிங்கரை ஆதரித்த கட்சியினர் கதிரைவேற் பிள்ளைக்கு இன்னல் விளைக்கத் தொடங்கினர். அவர் உபந்நியாசம் செய்த சபைகளிலே புகுந்து ஆரவாரஞ் செய்தும், கல்லெறிந்தும் கலாட்டாச் செய்தனர். கதிரைவேலரைக் கொலை செய்யவும் முயற்சிகள் நடைபெற்றன. "அருட் பெருஞ் ஜோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பெருங்கருணை ''யின் 'மாட்சி' இருந்தவாறு என்னே! இந்நிலைமையினாற் கதிரைவேலர் கட்சியினரும் இராமலிங்கரைத் தனிப்பட்ட முறையிலே தாக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

வேதாகமோக்த சபையார் கதிரைவேலர் உபந்நியாசங்களின் சாரத்தையும் அவர்கட்சியினர் பேச்சுகளின் சாரத்தையும் திரட்டி 1904இலே 'இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு' எனும் நூலாகப் பு. பாலசுந்தர நாயகர் பேரால் வெளியிட்டனர். மருட்பா மறுப்பினைச் சான்றுப் பொருளாக வைத்து, 1904ஆம் ஆண்டு ஜூன் மாதம் மறைமலையார் கூட்டம் அவதூறு வழக்கு வைத்தது. வழக்கு இராமலிங்கர் தமையனார் மகன் ச. வடிவேலுப் பிள்ளை பேராலே வைக்கப்பட்டது. வழக்கு நால்வர் மீது வைக்கப்பட்டது; வழக்காளி மூன்றாம், நான்காம் எதிரிகள் மீது தாக்கல் செய்த குற்றச்சாட்டுகளை வாபஸ் செய்து கொண்ட பின்பு, முதலாம் எதிரியாகக் கதிரைவேற் பிள்ளையும் இரண்டாம் எதிரியாகப் பு. பாலசுந்தர நாயகரும் காணப்பட்டனர்.

மருட்பா மறுப்பு இராமலிங்க சுவாமிகள் மீது பல அவதூறுகளைச் சுமத்துவதாகவும், அவ்வவதூறுகள் இராமலிங்கருடைய அடியார், பக்தர் ஆகியோரைப் புண்படுத்துவதையும், தம் நெருங்கிய உறவினரதும், தம்முடையதுமான நற்பெயருக்குப் பங்கஞ் செய்வதையும், உள்ளத்தைப் புண்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன என்றும் வடிவேற் பிள்ளை குற்றஞ் சாட்டினார்.

வழக்கினைப் பல மாதங்களாக விசாரித்த நீதிபதி கான்சாகிப் எம். அஸூர்ஸூதின் சாகிப் எதிரிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கம் இராமலிங்கரின் சமய தத்துவங்களைக் கண்டிப் பதே யன்றி வழக்காளியின் மானத்தைப் பங்கப்படுத்துவ தன்று என்று தீர்ப்புக் கூறி, வழக்கினைத் தள்ளிவிட்டார்.

வழக்கின் மூலம் கதிரைவேலரைத் தண்டித்துவிடலாம் என்று மனப்பால் குடித்துத் தோல்வி கண்டு அவமான மடைந்தவர்கள் அதன்பின்பும், காஞ்சியிலும் திருச்சியிலும் போர் புரிந்தார்களாம்! இப்போர்களைப் போலத்தான் முதனாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள் போர்களும் போலும்!

அவதூறு வழக்கிலே வெற்றிபெற்ற கதிரைவேலரை நாயகமாகக் கொண்டு, சென்னை, சிதம்பரம், இராமநாத புரம், காஞ்சி, உறையூர், திருவண்ணாமலை, சீர்காழி முதலிய இடங்களிலே பன்னிரு திருமுறை உற்சவங்களே நடந்தனவாக அறியக் கிடக்கின்றதேயொழிய ' அருட்பாப் போர் ' பற்றி அதன் பிறகு கேட்கக்கூட முடியவில்லை. அவதூறு வழக்கிலே தோற்றவர்கள் உயர்நீதி மன்றத்திற்கு மேன்முறையீடு செய்து, அம்முறையீடும் 21–11–1905இலே தள்ளப்பட்டதுதான் கேட்கப்படுகின்றது. நிலைமை இவ் வாறாகத் திருநாவுக்கரசு சென்னை முதல் திருச்சி ஈறாக எவ்வித இடையீடும் இல்லாது மறைமலையார் கதிரை வேலரைத் துரத்தித் திரிந்ததாகக் கதைகட்டி விட்டிருக் கிறார். உ. வே. சாமிநாதையர் எழுதிய நூல்களிலே பயின்று பயின்று உண்டுபட்ட பழக்கம் போலும்!

' போலி யருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண் டன சண்ட மாருதம் ' கதிரைவேற் பிள்ளை நைட்டிக பிரமசாரியாக வாழாது குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டமை யால், அவ்வாழ்க்கைப் பொறுப்புகளைச் செவ்வனே நடத்த உழைக்க வேண்டி இருந்தது. சென்னையிலும் ஆரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் நீலகிரி குன்றூரிலும் ஆசிரியராகவும், கிளேரன் பாதிரியாரின் தமிழ்ப் பண்டிதராகவும் கதிரைவேற் பிள்ளை வேலை பார்ப்பதற்கு இல்லறத் தேவைகள் முக்கிய காரண மாகலாம். மேலும் அவர் வசதி வாய்க்கப்பெறாத குடும்பத் திற் பிறந்தமையால் முன்பு தமது கல்வியைத் தொடர முடியாது நிறுத்திப் பின்பு சென்னையில் அச்சகத்தில் வேலை பார்த்துக் கொண்டே உயர்கல்வி பயின்றமையும் மனங் கொளத்தக்கது. ஆயினும் சைவ சித்தாந்தத்தை நிலை நிறுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட சைவசித்தாந்த மகாசரபம் கதிரைவேற் பிள்ளை முழு நேரத்தையும் தன் குறிக்கோளின் ஈடேற்றத்திற்குப் பயன்படுத்தமுடியாது போயினும், பெரும் பொழுதை அந்நோக்கத்திற்காகச் செலவு செய்ய முடிந்தது. சமய வாதங்கள் புரிவதிலும் கண்டனங்கள் வரைவதிலும் மட்டுமன்றி, ஆறுமுக நாவலரைப் போன்று, சைவப் பிரசங்கம் ஆற்றுவதிலும் புராண படனம் செய்வதிலும் கதிரைவேலர் ஈடுபட்டனர். தணிகைப் புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் என்பனவற்றிலே பேரெடுத்தவர் கதிரைவேலர்.

ஆறுமுகநாவலர் திருக்கோயிற் புனருத்தாரணத் திலும் திருக்கோயிற்கிரியை முதலானவற்றிலும் மிகுந்த அக்கறை செலுத்திவந்தவராவர் ; திருக்கேதீச்சரம், கீரி மலை எனும் திருத்தலங்களின் புனருத்தாரணத்திலும், நல் லூர் கந்தசாமி கோயில் முதலான கோயில்களின் சிவாகம விரோதங்களை மாற்றியமைப்பதிலும் நாவலரவர்கள் மிகுந்த ஈடுபாடு காட்டியவராவர் ; மகேசுர பூசை முத லானவற்றைச் சிறப்பாக நடாத்துவதிலும், திருமுறை ஓது வதைப் பிரபல்லியப் படுத்துவதிலும் நாவலரவர்கள் கவனஞ் செலுத்தியுள்ளார். கதிரைவேற் பிள்ளை முதலில் எழுதிய நூல்களில் ஒன்று சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கமாகும். இந்நூல் சென்னை ரிப்பன் அச்சியந்திர சாலையில் 1896ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பர்.[20] அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்கள் (1886–1971) முதலானோருக்குக் கதிரைவேற் பிள்ளையின் சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் உதவி யிருத்தல் வேண்டும். கதிரைவேலரின் சைவபூஷண சந்திரிகையும் இவ்வழியிற் குறிப்பிடத்தக்க அரிய நூலாகும். சுன்னாகம் அ. வரத பண்டிதரின் ஏகாதசி புராணத்தைச் சென்னை பண்டிதமித்திர அச்சியந்திர சாலையில் அரும்பத வுரையுடன் விளம்பி ௵, ஆனி மீ (1898) கதிரைவேற் பிள்ளை பதிப்பித்தனர். கதிரைவேற் பிள்ளை வரத பண்டிதரின் சிவராத்திரி புராணத்திற்கு விருத்தியுரை எழுதத் தொடங்கியிருந்தார். அவ்விருத்தியுரையின் முதலிரு பகுதிகள் 1902இலே வெளிவந்தன ; எஞ்சியவை பற்றி அறியுமாறில்லை. ஏகாதசி, சிவராத்திரி விரதங்களின் மாண்புகளைக் கூறும் இவ்விரு நூல்களையும் சைவசமயி களின் விரத அனுட்டானங்களுக்கு உதவும் பொருட்டு, கதிரை வேலர் பதிப்பித்தனர். ஆறுமுக நாவலரும் சிவ ராத்திரி புராணத்தினைப் பதிப்பிக்க இருந்தனர் என்பது திருக்கோவையாருரைப் பதிப்பின் (1860) பிரகடன பத்தி ரிகை மூலம் அறியக்கிடக்கின்றது. கதிரைவேற் பிள்ளை சென்னை, சிதம்பரம், இராமநாதபுரம், காஞ்சி, உறையூர், திருவண்ணாமலை, சீர்காழி என்னும் திருத்தலங்களிலே திருமுறை மகோற்சவங்களைச் சிறப்பாக முன்னின்று நடாத்திக் காட்டியமையும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகநாவலருக்குப் பெரியபுராணத்திலே பக்தி மிகுதி. அதன் கதைகளைக் கட்டுக்கதைகள் என்று கூறிய தமையனைக் கூட மன்னிக்க அவர் தயாராக இருக்கவில்லை. நாவலரவர்கள் பெரிய புராணத்திற்கு வசனம் எழுதிய

---

20. தமிழ் நூல் விவர அட்டவணை, தொகுதி 1, பகுதி 1, (1961) பக். 209.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு அமையாது சூசனமும் எழுதத் தொடங்கியவர். சிவனடியார் மீது நாவலரவர்கள் கொண்ட பக்தியினை இவை காட்டுகின்றன. கதிரைவேற் பிள்ளை ஆதியில் எழுதிய நூல்களில் ஒன்று திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் சரித வசனச் சுருக்கமாகும். திரு.வி.க. நாயன்மார் வரலாறு' எழுதவும், பெரிய புராணவுரை காணவும் கதிரைவேற் பிள்ளையே காரணமாவர் என்பதுவும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

கந்தபுராண கலாச்சாரத்திலே ஊறியவர் ஆறுமுக நாவலர். அவர் இஷ்ட தெய்வம் முருகப்பெருமான். கந்தனுக்குப் பாமாலை சூட்டியதோடு அமையாது, அப்பெருமான் மீது எழுந்த நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டவர் ஆறுமுக நாவலர்; கந்தபுராண வசனமும் தந்தவர். சந்நிதி வேலவனைக் குல தெய்வமாகக் கொண்ட கதிரைவேற் பிள்ளை ஏவிளம்பி ௵, சித்திரை ௴ (1897) ஈழத்தினைப் பூர்வீகமாகக் கொண்டவரும் சரஸ்வதி பீடத்தினருமான கந்தப்ப சுவாமிகள் பாடிய கதிர்காமக் கலம்பகத்தைச் சென்னை ரிப்பன் அச்சியந்திர சாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தினார். முருகப்பெருமானின் பெருமைகளை எடுத்துக்காட்டுவது. 1900இலே வெளிவந்த சுப்பிரமணிய பராக்கிரமம் இது கதிரைவேற் பிள்ளை எழுதிய வசன நூலாகும். கதிரைவேலர் பழனித் தலபுராணத்தையும் 1903இலே பொழிப்புரையுடன் வெளியிட்டுள்ளார்.

ஆறுமுகநாவலர் போன்று கதிரைவேற் பிள்ளையும் உரையாசிரியராகப் பேரெடுத்தவர். நைடதம், கூர்மபுராணம், பழனித் தலபுராணம், சிவராத்திரி புராணம், திருவருணைக் கலம்பகம் முதலானவற்றிற்குக் கதிரைவேலர் உரைகண்டுள்ளார். ஆறுமுக நாவலரும் நைடதவுரையொன்றினைத் திருத்திக் கொண்டிருந்தார் என்றும் திருத்தம் முற்றுப் பெற்றிருந்தது என்றும் அறிகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் கதி யாதோ தெரியவில்லை. கதிரைவேலர் புதுக்கி யும் திருத்தியும் விளக்கியும் சேர்த்துக்கொடுத்த நைடத விருத்தியுரை பதிப்பிக்கப்பெற்றுள்ளது. கூர்ம புராணத் திற்கும் கதிரைவேலர் விருத்தியுரையே எழுதியுள்ளார். அவ் வுரை சஞ்சிகைகளாக வெளிவந்தது. முதலாஞ் சஞ்சிகை முதல் ஐந்தாம் சஞ்சிகை வரையும் முறையே விளம்பி ஞூ (1898–1899), புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்களிலே வெளிவந்தன; எஞ்சிய சஞ்சிகைகளின் விவரங்கள் தெரியவில்லை. திருவருணைக் கலம்பகத்தின் விருத்தியுரையும் சஞ்சிகைகளாக வெளிவந்தன; முதலா வது சஞ்சிகை சுபகிருது ஞூ, ஆவணி மீ (1902) வெளிவந்தது.

ஆறுமுகநாவலர் உரைக்கும் கதிரைவேற் பிள்ளை உரைக்கும் இடையே காணப்படும் ஒப்புமை வேற்றுமைகள் நோக்கத்தக்கவை. நாவலரவர்களின் உரைகள் பொது வாகப் பொழிப்புரையாகவே காணப்படுவன; கதிரைவேற் பிள்ளையின் உரைகளிலே, சில நீங்கலாக, விருத்தியுரை களே சிறப்பிடம் பெறுகின்றன. இவ்விருத்தியுரைகளிலே மேற்கோள், இலக்கணக் குறிப்பு, தத்துவ விளக்கம் முத லானவை சிறப்பாக இடம்பெறுகின்றன. கதிரைவேலரின் நைடத விருத்தியுரை பலபதிப்புக் கண்ட பெருமையுடை யது.

ஆறுமுகநாவலர் விட்டுச் சென்ற கருமத்தை, அவருக் குச் சில ஆண்டுகளின் பின்பு, திறம்படச் செய்து காட்டி, தாம் பிறந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பெருமை தேடித் தந்த மாண்பு உடையவர் சதாவதானம் கதிரைவேற் பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. நாவலர் தருமச் சுமை

யாழ்ப்பாணம் கந்தர்மடம் சின்னத் தம்பியின் புதல் வராகத் தோன்றி, நல்லூர் வித்துவசிரோமணி ச. பொன் னம்பல பிள்ளையிடம் இலக்கிய இலக்கணங்களை அமை தரக் கற்றவர். தம்பைய பிள்ளை எனப்படும் சுவாமிநாத பண்டிதர்; உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவரிடமும் மூன்று மாதம் வரையிற் பயின்றவர். இனிய கண்ட சாரீரமுடைய வராதலினாலும், வித்துவசிரோமணியவர்களின் புராண படனங்களிலே புராணங்களைப் பலமுறை அவருடன் சென்று படித்தவராதலினாலும், அவரைப் போன்று பண்டித ரவர்களும் நயமுறப் புராண படனங்களுக்குப் பொருள் சொல்லும் அழகையும் பயிற்சியையும் பெற்றுக் கொண் டனர். இச் சிறப்பினால் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் அறிமுகமாகிச் சைவசமயா விருத்திப் பணிகளினாலே பேரெ டுத்தவர் பண்டிதரவர்கள்.

" தன்னா சிரியன் றன்னைப் போல
வுன்னரு நூல்க ளுறுநர்க் குரைப்போ
னல்லூர் மாவை சொல்லூர் மருதடி
பல்லூ ராலயம் பணிந்திடச் சாரு
மடியவர் முன்ன ரடர்ந்து பலவாய்க்
குடில வார்த்தைகள் கூறி நிற்கும்
விவிலியர் தூடணம் வினவ றீதென
நவிலரு மோர்சபை நண்ணிடக் கூட்டியும்
பத்திரப் புத்தகம் பரிவொடு பதிப்பித்
தெத்திசை தனிலு மெண்ணில பரப்பியுங்
கண்டன மியற்றி மிண்டிடா தோட்டி
யெண்டகு கீர்த்தி பண்டையிற் படைத்தோன்
கொச்சைச் சமயக் குழியில் வீழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வச்செழு வூரி லடர்ந்த வெழுவரின்
முன்னர்ச் சென்று முதல்வன் மேன்மையைப்
பன்னிச் சைவப் பண்பைத் தேற்றித்
திருத்திய கருணை திகழ்ந்த வறிஞன் ''

எனச் சைவப் பிரசாரகர் மாதகல் சு. ஏரம்பையர் திருக் கோவையாருண்மைப் பதிப்பின் சிறப்புப் பாயிரத்திற் பண்டிதரவர்கள் ஆற்றிய கல்விப் பணியையும் சைவசமயாபி விருத்தியின் பொருட்டுப் புரிந்த புறச் சமய கண்டனப் பணியையும் புகழ்ந்துரைத்துள்ளனர். பண்டிதரவர்கள், புராண படனாதிகளாலும் கல்விப் போதனையாலும் ஈட்டிய பொருளைக் கொண்டு சைவ சமயாபிவிருத்தியின் பொருட்டுத் தமிழ்நாட்டில் அரும்பணிகளாற்றினார்கள்.. இராமலிங்கரின் தமையனார் புதல்வர் வடிவேலுப் பிளளை பேரால் 1904ஆம் ஆண்டிலே தொடுக்கப்பெற்ற மான நட்ட வழக்கு நடந்தபோது, தமக்கு உற்ற துணைவராய் விளங்கிய பண்டிதரவர்களைச் சதாவதானம் நா. கதிரை வேற் பிள்ளை நைடதவுரையின் ' நாத்தியுரை'யிலே, நாவலரவர்களைப் போல வித்தியாசாலை தாபித்தல் முதலிய சிவ புண்ணியங்களைச் செய்து, சைவ சித்தாந்த பரிபாலனஞ் செய்யா நிற்பவர் என்று போற்றியுள்ளார்.

எல்லாத் தருமங்களுக்கும் மூலமாய், அவ்வெல்லாத் தருமங்களையும் தன்னுள் அடக்கி, அவ்வெல்லாத் தருமங்களுக்கும் மேற்பட்டு விளங்கும் சிவதருமமாக நாவலரவர்களாற் கருதப்பெற்றது பாடசாலைகளைத் தாபித்துக் கற்பித்தலாகும். அவர் பரம்பரையில் வந்த பண்டிதரவர்கள் அதனைப் போற்றித் திருச் செந்தூரிலே சுப்பிரமணிய வித்தியாசாலையையும் பின்னர் மேலையூரில் அறுபத்து மூவர் வித்தியா சாலையையும் நிறுவிப் பல இடையூறுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியிலும் தொடர்ந்து அவற்றைப் பலகாலம் நடாத்தி வந்தனர்.

நாவலரவர்கள் செய்யக் கருதிய முக்கிய சிவபுண்ணியங்களுள் தேவார பாராயணத்தை எல்லாத் தலங்களிலும் நடைபெறச் செய்தல் வேண்டும் என்பதொன்றாகும். இந்தச் சிவபுண்ணியத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன் பண்டிதரவர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணிய வித்தியாசாலை மாணாக்கருக்குத் திருமுறை, திருப்பாடற் பாராயணத்தை இன்றியமையாப் பயிற்சியாக அமைத்துப் பாராயணத்திற்கு அவர்களை விருத்தாசலம், சிதம்பரம், சீர்காழி, குடந்தை, திருநெல்வேலி முதலிய திருத்தலங்களுக்கு அனுப்பிவைத்து, தேவார பாராயணத்தை—அருட்பாவின் மாட்சியைப் பிரபல்லியப் படுத்தினார்கள்.

சுவாமிநாத பண்டிதர் சென்னையிலே சைவ வித்தியாநு பாலனயந்திர சாலை என்ற பெயரிலே அச்சகம் ஒன்றினை நிறுவிச் சமய நூல்களையும் கருவி நூல்களையும் வெளியிட்டுச் சமயக் கல்விக்கும் தமிழ்க் கல்விக்கும் உதவினார். இவரும் சபாபதி நாவலரும் தனித்தனியே நிறுவிய அச்சகங்கள் ஆறுமுக நாவலர் நிறுவிய அச்சகத்தினை ஞாபகமூட்டுவதும் குறிப்பிடத்தக்கது. சபாபதி நாவலர் நிறுவியது சித்தாந்த வித்தியாநு பாலன யந்திரசாலையாகும்.

நல்லூர் சின்னத் தம்பிப் புலவரின் கல்வளையந்தாதியைச் சுவாமி நாத பண்டிதர் சென்னை ஆறுமுக விலாசம் அச்சு என்ற அச்சகத்திலே ஜய ஞு, கார்த்திகை மீ (1894) பதிப்பித்து வெளியிட்டனர். திருச்சிற்றம்பலக் கோவையாருண்மை எனும் திருக்கோவையாருக்குப் பேரின்பப் பொருள் கூறும் நூலையும் பண்டிதரவர்கள் ஜய ஞு, பதிப்பித்துள்ளார். நல்லூர் வித்துவ சிரோமணி ச. பொன்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல பிள்ளை வுரையுடன் மகாபாரதம் ஆதிபருவத்தைச் சென்னை ரிப்பன் அச்சியந்திர சாலையிற் பண்டிதரவர்கள் 1898இலே அச்சிட்டு வெளிப்படுத்தினார் என்பர்.[1] பலரும் பலபடக் கருதி வெளிப்படுத்தாது வைத்திருந்த சிவஞானபோத மாபாடியத்தின் சில பகுதிகளையாவது சைவ உலகிற்களித்த முதலிருவருள் ஒருவர் சுவாமிநாத பண்டிதர். பண்டிதரவர்கள் சிவஞான போதமும் வார்த்திகம் என்னும் பொழிப்புரையும், ஈவஞான போதமா பாடியமும் சிற்றுரையும் உடைய பதிப்பினைப் பராபவ ஞு வெளியிட்டனர். இப்பதிப்பிலே மாபாடியவுரை கிடையாத பகுதிகளுக்குச் சிற்றுரை தரப்பட்டுள்ளது. பண்டிதரவர்கள் 1916இலே வெளியிட்ட சிவாக்கிரபாடிய முதற் சூத்திர மொழி பெயர்ப்புடன் அண்டங்களின் பிரிவு எனும் மாபாடியத்தின் இரண்டாஞ் சூத்திர மூன்றாம் அதிகரணத்தின் இறுதிப் பகுதியையும் சேர்த்து வழங்கினர். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தொகுத்துக் குறிப்புரை வரைந்த முத்தக பஞ்ச விஞ்சதி எனும் சுன்னாகம் முத்துக் குமார கவிராசரின் தனிப்பாடற் றொகுப்பைப் பண்டிதரவர்கள் தமது அச்சியந்திர சாலையில் 1907இலே அச்சிட்டு உபகரித்தனர். பண்டிதரவர்கள் 1908இலே திருக்குறள் மூலப் பதிப்பு ஒன்றினையும் வழங்கியுள்ளார். ஆறுமுகநாவலர் எழுதத் தொடங்கி, த. கைலாச பிள்ளை முற்றுவித்த திருவிளையாடற் புராண வசனத்தைப் பண்டிதரவர்கள் தமது அச்சகத்திலே சாதாரண ஞு, புரட்டாதி மீ (1910) அச்சிட்டு வெளிக் கொணர்ந்தார். தேவாரத் திருமுறையை முப்பது பழைய சுவடிகளுடன் பரிசோதித்து, முன்வந்த அச்சுப் புத்தகங்களிற் காணப் பெற்ற ஏறக்குறைய 1,500 பிழைகளை ஏட்டுப் பிரதிகளிற் கண்ட

---

1. தமிழ்நூல் விவர அட்டவணை, தொகுதி, 1, பகுதி 2 (1962) பக். 556.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தங்களின் உதவியுடன் மாற்றித் திருமுறைப் பெருமை முதலிய அரிய விடயங்களும் சேர்த்துச் சாதாரண ஞ, பண்டிதரவர்கள் சைவ உலகிற் களித்தனர். இவர் சூடாமணி பதினோராவது, பன்னிரண்டாவது நிகண்டு, திருவாதவூரடிகள் புராணம், சர்வ ஞானோத்தரம் என்பனவற்றையும் ஆறுமுகநாவலரின் பாலபாடம் முதலானவற்றையும் கூடப் பதிப்பித்துள்ளார்.

சுவாமிநாத பண்டிதர் திருநான்மறை ஆராய்ச்சி மறுப்பு முதலிய கண்டன நூல்களையும் சைவ நூற் சார சங்கிரகம் முதலிய சமய நூல்களையும் சுயமாகவும் எழுதியுள்ளார்.

" குருவாக்கிய பரிபாலனம் பண்ணி நாவலரவர்கள் செயலை அநுகரிக்க வந்து தோன்றிய " சுவாமிநாத பண்டிதர் பற்றியவை மேல்வரும் கூற்றுகள் :

> " 1911ஆம் ஆண்டில் அவர் ' நாவலர் தரும சிந்தனை' என்னும் கண்டனம் ஒன்றிற் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரி பாலகராகிய பொன்னம்பல பிள்ளையையும், நாவலர் தரும ஸ்தாபனங்களையும் கடுமையாகத் தாக்கி எழுதினர். அக் கண்டனத்தைக் கண்ணுற்ற புலவர் (குமார சுவாமிப் புலவர்) அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதை நிறுத்தினர் ".

இவை சுன்னாகம் அ. குமார சுவாமிப் புலவரின் கனிட்டர் முத்துக்குமார சுவாமிப் பிள்ளை தம் தந்தை பற்றி எழுதிய " குமார சுவாமிப் புலவர் வரலாறு " எனும் நூலில் இடம் பெறுபவை.[2] இவ்வார்த்தைகளை நோக்குபவர்

---

2. 1970, பக். 124.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிலே எத்தகைய எண்ணம் தோன்றும்? நாவலரவர்களின் தருமத்தை நாவலரவர்களின் மரபினருள் ஒருவரே கடுமையாகக் கண்டித்துள்ளனர் என்ற கருத்து எழாமற் போகாதன்றோ? மேலும், சுவாமிநாதபண்டிதர் பற்றி எத்தகைய அபிப்பிராயம் உருவாகும்? கண்டனத்தால் ஒதுக்கப்பட்டவராகக் குறிப்பிடப்பெற்ற சுவாமிநாத பண்டிதர் நாவலரவர்களின் மரபினருட் போற்றப்பட்டவர்களில் ஒருவர் அவர்மீது இரங்கற்பா பாடியவரும் நாவலர் பரம்பரையிலே வந்தவருமான பெரியார் அண்மையிலேதான் மறைந்தனர்; அவ்விரங்கற்பா சரித்திரப் பிரசித்தம் உடையதன்றோ?

ஆறுமுகநாவலர் மறைவுக்குப் பின்னர் நல்லூர் க. சதாசிவப் பிள்ளை, நாவலரவர்களின் தருமங்களுக்கு ஆதிபத்தியம் பெற்றார். சதாசிவப் பிள்ளை, நாவலரவர்களைப் போன்று நைட்டிக பிரமசாரியாக விளங்கியபோதும், அவர்களிடம் காணப்பெறாத இலௌகிகப் பற்று உடையவராகக் காணப்படுகிறார். திருவாரூர் வி. கலியாண சுந்தர முதலியார் எழுதிய 'வித்தியாபிமானிகளுக்கு விக்யாபன நிரசனம்' எனும் கண்டன நூலிலே அப்பற்றினாலே சதாசிவப் பிள்ளை செய்த சில காரியங்கள் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.[3]

சதாசிவப் பிள்ளை ஒருவருக்கு ரூபா ஐயாயிரம் செலவழித்து வீடுவாங்கிக் கொடுத்தாராம்; வேறொருவருக்கு ரூபா ஆயிரம் கொடுத்தாராம்; இன்னுமொருவருக்கு பீ.ஏ. வரை படிப்பிக்கப் பொருள் செலவழித்தாராம்; தமையனார் சுப்பிரமணிய பிள்ளையின் புத்திரியுடைய புத்திரர் இருவருக்கும் வயது வந்தபின் தனித்தனி ரூபா

3. 1911, பக். 24, 34, 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்நூறு கொடுக்கும்படி 1897இலே பிறப்பித்த உயிலிலே குறிப்பிட்டிருந்தாராம்.

சதாசிவப்பிள்ளை சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியா சாலையை ஆரம்பத்திலே தாமாகவும், பின்னர் மனேஜர் மூலமாகவும், வண்ணை சைவப் பிராகாச வித்தியா சாலையை ஆரம்பம் முதல் மனேஜர் மூலமாகவும் நாடாத்தி வந்தனர்.

சிதம்பர வித்தியா சாலையிலே ஒரு காலத்து முதலுபாத்தியாயராக இருந்த சுன்னாகம் பூ. முருகேச பண்டிதர் மூன்று நான்கு மாதங்களாகச் சம்பளம் பெறாமையினாலே, அன்னமிட்டார்க்குப் பணங்கொடுத்தல் தடையுற, அவர்கள் அன்னமிட மாட்டோம் என்று மறுத்துவிட, மனேஜரிடம் பலமுறை வேதனம் கேட்டும் கொடுபடாமையால், சிவகாமியம்மை சந்நிதியிற் சென்று, ஒரு செய்யுளிலே தமது முறைப் பாட்டைச் சொல்லிப் பிரார்த்தித்துக் கொண்டு வித்தியா சாலையை விட்டகன்றார் என்ற கதையொன்றுண்டு.

சம்பந்தநாத முதலியார் முதல் வண்ணை வித்தியா சாலைக்குப் பலர் மனேஜராக இருந்தனர். முதல் மனேஜரான சம்பந்தநாத முதலியார் வித்தியாசாலை அபிவிருத்தியிற் சிரத்தையில்லாதவர்கள் செய்த கலகத்தாலே தமது பதவியை வேண்டாமென்று துறந்தனர் என்பர். த. கைலாசபிள்ளை வித்தியாசாலை விஷயத்தைக் குறித்து ஒருவர்மீது வழக்குத் தொடுத்த கதையும் உண்டு. கைலாசபிள்ளையை மனேஜராகச் சதாசிவப்பிள்ளை நியமிக்கும்வரை வண்ணை வித்தியா சாலையும் சீராக நிர்வகிக்கப்படவில்லை என்று கருதச் சான்றுகளுள.

சதாசிவப் பிள்ளை தம் காலத்திலேயே நாவலர் தருமங்களுக்கு ஒரு தருமபரி பாலகரை நியமிக்க எண்ணி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1897ஆம் ஆண்டு, திசம்பர் மாதம், 31ஆம் தேதி கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளையை 'எக்ஜிக்கியூட்டர்' ஆக நியமிக்கும் உயிலைப் பதிவு செய்தனர். என்று அறியக் கிடக்கிறது. வண்ணை சி. சுவாமிநாத பண்டிதர் இவ் வுயிலுக்குச் சாட்சியாகக் கையொப்பமிட்டவர். அதனால் இவ்வுயிலில் இடம் பெற்ற செய்திகளை அவர் அறிந்த வராகலாம். சதாசிவப் பிள்ளை பின்பு இந்த உயிலை மாற்றிக் கைலாசப் பிள்ளையையும் 'எக்ஜிக்கியூட்டர்' ஆகச் சேர்த்துப் பிறிதொரு உயில் எழுதியதாகவும் அதனைப் பதிவு செய்வதற்கு முன்பே வியோகமடைந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது. இரண்டாவது முறை யாகச் சதாசிவப் பிள்ளை எழுதிவைத்த உயில் வெளிவர வில்லைப் போலும். சதாசிவப் பிள்ளை சாதாரண ஹூ, ஐப்பசி மீ (1910) வியோகமடைந்ததை அடுத்து வெளிப் படுத்தப்பட்டது, கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளையை மட்டும் 'எக்ஜிக்கியூட்டர்' ஆக நியமிக்கும் உயிலாகும். ஆயினும் அந்த உயிலிலே 1897ஆம் ஆண்டிலே பதிவு செய்யப்பெற்றதும் சுவாமிநாத பண்டிதர் சாட்சிக் கை யொப்பம் இட்டதுமான உயிலில் இடம்பெற்ற பல விட யங்கள் காணப்பெறவில்லையாம்; இடம்பெறாத விட யங்கள் நாவலர் தரும சொத்துகள் பற்றிய தரவுகளாம். இதனால் 1910ஆம் ஆண்டிலே சதாசிவப் பிள்ளை வியோக மடைந்ததை அடுத்து வெளிப்படுத்தப் பெற்ற உயில் பலவிதமான ஐயங்களைத் தோற்றுவித்தது. யாழ்ப்பாணத் திலே வெளிவந்த 'குருசந்திரோதயம்' எனும் பத்திரிகை யிற் சதாசிவப் பிள்ளைக்கு மரணிப்பதற்குப் பதினைந்து நாளின் முன் அறிவு கலங்கிவிட்ட தென்றும், 84 வயது சென்று விட்டதென்றும், ஆதலால் புதிதாக வெளிவந்த உயில் தெளிந்த அறிவோடு அவர்களால் எழுதப்படவில்லை என்றும், அவருடைய சொத்துகளை யாராவது விற்றாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கினாலும் செல்லாது என்றும் விளம்பரம் செய்யப் பட்டிருந்தது.

சதாசிவப் பிள்ளையின் பொறுப்புகளை உயிலின் அடிப் படையில் ஏற்றுக் கொண்ட கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளைக்கும் வண்ணை சி. சுவாமிநாத பண்டிதருக்கு மிடையே மனத்தாங்கல் சதாசிவப் பிள்ளையின் கடைசி காலத்திலேயே தோன்றிவிட்டது. இவர்களுக்கிடையே உண்டுபட்ட பகைமை, தர்க்க குடாரதாலுதாரி வை. திரு ஞானசம்பந்தப்பிள்ளை விஷயமாகவே என்று திரு. வி. க. முதலானோராற் கருதப்படுகின்றது.

சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலை முதல் உபாத்தியாயர் தர்க்க குடாரதாலுதாரி திருஞான சம்பந்தப் பிள்ளை வேதனம், பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும் விஷயம் முதலிய காரணங்களால் இரண்டாம் உபாத்தியாயர் கோப் பாய் ச. பொன்னம்பல பிள்ளையுடன் கோபித்துக் கொண்டு, வித்தியாசாலையை விட்டு விலகி, சிதம்பரம் சொர்க்கபுர மடத்தில் தங்கி, அங்கு சித்தாந்த வித்தியா சாலை நடத்தும் காலத்திலே வியோகமானார். தர்க்க குடார தாலுதாரியவர்கள் வியோக மடைந்ததை அடுத்து, அவருடைய மாணாக்கரும் நண்பரும் அவருக்குக் கொடுத்த பொருள்களை எடுத்துக்கொண்ட பின்பு, எஞ்சிய பொருளை இருநூரு ரூபாவுக்குத் தாம் எடுத்துக்கொள்வதாகச் சுவாமி நாத பண்டிதர் பொன்னம்பல பிள்ளைக்குக் கூறியதாகவும், பிள்ளையவர்கள் அவற்றைத் தர்க்ககுடாரதாலுதாரியவர் களின் மருகருக்குக் கொடுக்கப் போவதாகக் கூறிவிட்டு, பண்டிதரவர்கள் மீது தர்க்க குடார தாலுதாரியவர்களின் மருகர் குறை நினைக்கும்படி அவருக்குக் கடிதமெழுதிய தாகவும், அதனை அறிந்த சுவாமிநாத பண்டிதர் சதாசிவப் பிள்ளைக்கு எழுதிய கடிதத் தோடு பொன்னம்பல பிள்ளைக்

கும் சுவாமி நாத பண்டிதருக்கும் இடையே இருந்த உறவு முறிந்ததாகவும் சுவாமிநாத பண்டிதர் கட்சியினர் கூறுவர். நீறு பூத்த நெருப்பாக அமைந்திருந்த பகைமை சாதாரண ஞூ, ஐப்பசி மீ சதாசிவப்பிள்ளை மறைந்ததையடுத்து விசுவரூபம் கண்டது.

சுவாமிநாத பண்டிதர் நாவலரவர்களின் நூல்களை வெளியிடுவதைத் தடுக்கப் பொன்னம்பல பிள்ளை வழக்குத் தொடுக்க முயன்று புத்தகவுரிமைச் சட்டம் ஆதரவாக அமையாததால் அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டு, பண்டிதரவர்கள் பொருளாசையினால் அநுமதி யின்றி நாவலரவர்களின் நூல்களை அச்சிட்டு நாவலரவர்களின் வித்தியாசாலை வரும்படிக்குக் கெடுதி செய்வதன் மூலம் நாவலரவர்களின் தருமத்திற்குக் கேடு விளைவிக்கின்றார் என்று பிரசாரம் செய்துவந்தனராம்.

இக்கட்டத்திலேதான் சுன்னாகம் முத்துக் குமாரசுவாமிப் பிள்ளை குறிப்பிடும் 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தரும சிந்தனை' எனும் துண்டுப் பிரசுரம் வெளிவந்தது. அதிலும் பதினாறு பிரதிகள் மட்டுமே அச்சிடப்பெற்றன. அதற்கு மேல் ஒரு பத்திரிகையேனும் தேடிக்காட்ட வல்லுநர் ஆண்மக்களே'' என்பர் திரு. வி. க.[4] இந்தத் துண்டுப் பிரசுரத்திலே முற்பகுதி ஆறுமுக நாவலர் விபவ ஞூ, சித்திரை மீ (1868) வெளியிட்ட ''சைவசமயிகளுக்கு விக்கியாபனம்; பிற் பகுதி சுவாமி நாத பண்டிதரின் தரும சிந்தனை.

''ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் கருத்தின்படி அவர்கள் மாணாக்கரும், அவர்கள் மருகர் மாணாக்கருமாகிய

4. வித்தியாபிமானிகளுக்கு விக்யாபன நிரசனம், 1911, பக். 39.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னாலே திருச்செந்தூரில் தாபிக்கப்பட்ட சுப்பிரமணிய வித்தியாசாலை, அவர்கள் சிதம்பர வித்தியாசாலைக்கு இடையூறுண்டாவதற்கு ஏதுவாயிருக்கின்றதென ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கின்றார் என்று யான் கேள்விப்பட்டேன். அதனுண்மை அறியாதவர்கள் அதனை மெய்யெனக் கருதி மயங்காமைப் பொருட்டும், அவர்கள் தருமத்தை இதுகாறும் நடாத்தினவர்களாலேயோ என்னாலேயோ யாழ்ப்பாண வித்தியாசாலை சிதம்பர வித்தியாசாலைகட்கு இடையூறுளதாயிற்றென்பதை அவ்வித்தியாசாலைகளின் ஆவேதனங்களாலும் நாவலரவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விஷயமாக வெளிப்படுத்திய சிறு புத்தகங்களாலும், பிற புத்தகங்களாலும் அவர்களுக்குப் பின் அவ்வித்தியாசாலைகளை நடாத்தினவர்கள் நிகழ்த்திய செயல்களாலும் ஆராய்ச்சி செய்து உண்மையை யாவர்க்கும் வெளிப்படுத்தக் கருதியும், முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலும் அவசிய கர்த்தவ்விய சிவபுண்ணியமாமென்பது நாவலரவர்கள் கருத்தாமென்பதைப் பலருமறிதற் பொருட்டும் இவ் விக்கியாபனத்தைத் தாலிபுலாக நியாயம் பற்றி முதற்கண் வெளிப்படுத்தினேன் ''

என்று கூறும் சுவாமிநாத பண்டிதர் திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய வித்தியாசாலை நாவலரவர்கள் கருத்திற்கு ஒத்ததா இல்லையா என்பதைச் சிந்திக்க வைக்கிறார். இத் தருமசிந்தனையைத் தருமபரி பாலகராகிய பொன்னம்பலபிள்ளையையும் நாவலர் தரும ஸ்தாபனங்களையும் கடுமையாகத் தாக்கிய கண்டனம் என்று கூறலாகுமோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துண்டுப் பிரசுரத்திற்கு மறுப்பாகச் சிவபுரி ஸ்ரீ கலியாண சுந்தரம் பேரால் தருமபரி பாலகரவர்கள் எழுதிய தாகக் கருதப்படும் ' வித்தியாபிமானிகளுக்கு விக்யாபனம் ' அழுக்காறு மிகுந்து, தனிப்பட்ட குரோதத்தினைப் புலப் படுத்தி, மாசு நிறைந்து வெளிப் போந்தது. பொன்னம்பல பிள்ளையின் மறுப்புக்கு மறுப்பாகத் திரு. வி. க. எழுதிய '' வித்தியாபிமானிகளுக்கு விக்கியாபன நிரசனம் '' எனும் கண்டனமே சுவாமிநாத பண்டிதர் கட்சியினரால் வெளி யிடப் பெற்ற உக்கிரமான கண்டனமாகும்.

'' வித்தியாபிமாணிகளுக்கு விக்கியாபன நிரசனம் '' சென்னை சைவ வித்தியாநுபாலன யந்திர சாலையில் அச் சிடப் பெற்று விரோதிகிருது ஹு, ஆவணி மீ (1911) வெளியிடப் பெற்றது. இக்கண்டனம் நாவலர் தருமம், அவர்களுக்குப் பின் சுமையாகிவிட்ட கதையைத் தெளி வாகக் காட்டி நிற்கின்றது.

> '' சைவ சமய விருத்தியின் பொருட்டு முயலுமெனக்கு நம்மவர்ககளாலே அவமதிப்பும் இடையூறுஞ் செய்யப் பட்டபோது, நான் தமிழ்க் கல்வியையுஞ் சைவ சமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளி லும் போக்குங் காலத்தை முன் பயின்ற இங்கிலிஷி லேயே போக்கி உத்தியோகமுஞ் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்கு மதிக்கப்படல் வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவபெருமா னுடைய பெருங்கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதொரு பெருஞ்செல்வம்.''

என்ற நாவலரவர்களின் தரும சிந்தனையின்[5] அடிப்படை யிற், கண்டனம் விண்டு காட்டும் தில்லுமுல்லுகளை, நோக் கும்போது விசனமே எஞ்சுகின்றது.

---

5. வே. கனகரத்தின உபாத்தியாயர் : ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், 1968, பக். 96.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிநாத பண்டிதர் பராபவ ஞு (1906) முதல் நாவலரவர்களின் முதற்பால பாடம் முதலான நூல்களைப் பதிப்பித்துள்ளார். தருமபரி பாலகர் சதாசிவப் பிள்ளை அச்செய்கையை எதிர்த்ததாகத் தெரியவில்லை. மேலும், யாழ்ப்பாணத்திலும் வை. ஆறுமுகப் பிள்ளை, விவேகானந்த யந்திரசாலை யதிபர், சைவ பரிபாலன சபையினர் போன்றோரும் நாவலரவர்களின் நூல்களைப், பண்டிதரவர்களைப் போன்று, சதாசிவப் பிள்ளை காலத்திலேயே பதிப்பித்துள்ளனர். இவற்றையும் சதாசிவப் பிள்ளை எதிர்த்ததாகத் தெரியவில்லை. எனவே, புதிய தருமபரி பாலகரிடம் அநுமதி பெறவேண்டிய அவசியம் இருந்ததாகக் கூறுவதற்கில்லை.

ஆறுமுகநாவலர் நூல்களை அச்சிட்டு விற்று, அவ்வரும்படியைக் கொண்டு தம் வித்தியாசாலைகளை நடாத்தினாரா என்பது சிந்திக்கத்தக்கது. நாவலரவர்கள் தம் ஆவேதனங்களில் மறந்தும் புத்தக வருவாயால் வித்தியாசாலைகள் நடாத்தப் பெற்றன என்று கூறவில்லை. கீலக ஞு, ஆவணி மீ (1848) வண்ணார் பண்ணையிலே தாபிக்கப் பெற்ற சைவப் பிரகாச வித்தியாசாலையின் ஆசிரியர்கள் நல்லூர் க. சதாசிவப் பிள்ளை, மு. சுவாமிநாதையர், இணுவில் நடராசையர், விசுவநாதையர், ஆறுமுகப் பிள்ளை, கந்தசுவாமிப் பிள்ளை, கு. ஆறுமுகச் செட்டியார் என்போர் விசுவாவசு ஞு, தை மீ (1846) முதலாக இராத்திரியிலும் காலையிலும் வேதனங் கொடாது, நாவலரவர்களிடம் தமிழ்க் கல்வி பெற்றவர்கள். அவர்கள் வித்தியாசாலை ஆரம்பித்த காலத்திலே வேதனம் பெறாது படிப்பித்து வந்தனர். பின்னர் பிடியரிசி தண்டி, அதனாலே சிலர் அற்ப வேதனம் பெற்றுவந்தனர். 1852இலே அண்டர்சன் பிரபுவுக்குச் சமர்ப்பித்த விண்ணப்பத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியரிசி தண்டி விற்பதனால் வரும் வருட வருமானம் இருபது பவுண் என்றும் சாதாரணமான வேதனம் கொடுக்கவும் வருடத்திற்கு நூறு பவுண் தேவைப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்பு பிடியரிசி வரவு தண்டற் கூலிக்குத் தானும் போதாமை கண்டு விடப்பட்டதாகவும் பழைய ஆசிரியருட் சிலர் வித்தியாசாலையை விட்டு நீங்கியதாகவும் அறிகிறோம். வேதனமின்றி நடாத்தப்பெற்ற வித்தியாசாலையில் ஆசிரியர்களுக்குக் காலயுத்தி ஞ, சித்திரை மீ (1858) முதலாகவே வேதனம் முறையாகக் கொடுக்கப் பெற்றது. கொழும்பு இ. நன்னித்தம்பி முதலியார் நள ஞ, பங்குனி மீ (1857) அனுப்பிய பணத்தைக் கொண்டு வாங்கிய வர்த்தக சாலையின் வரும்படியும் கு. கதிரைவேற் பிள்ளை முதலியோர் அளித்த பண உதவியும் அவ்வாறு செய்ய வழிவகுத்தன. 1870ஆம் ஆண்டு முதல் வண்ணை வித்தியாசாலைக்கு அரசாங்க நன்கொடையும் கிடைத்தது. எனவே வண்ணை வித்தியா சாலை வர்த்தக சாலைகளின் வரும்படி, அரசாங்க நன்கொடை, நவராத்திரி வரும்படி முதலியனவற்றால் நடைபெற்றது என்று கருதக் கிடக்கிறது. சிதம்பரம் வித்தியா சாலை மகமை முதலியனவற்றின் வருவாயால் ஏற்பட்ட இருப்பு, அரசாங்க நன்கொடை, மக்கள் நன்கொடை, காரைதீவு ஆறுமுகப் பிள்ளையின் காணிகளுடைய வரும்படி முதலியனவற்றால் நடைபெற்றன. 1849ஆம் ஆண்டு முதலாக நாவலரவர்கள் பல நூல்களைப் பதிப்பித்திருக்கிறார் என்பது மனங்கொளத் தக்கது. திருக்கோவையாருரை, திருக்குறளுரை, சேதுபுராணம், பதினோராம் திருமுறை என்பன பிறர் பொருளுதவியால் அச்சிடப் பெற்றன; ஏனையவை எவ்வாறு அச்சிடப் பெற்றன என்பது கூறப் பெறாதபோதும், வித்தியாசாலைகளின் வருவாய் கொண்டு அச்சிடப்பெற்றிருக்கலாம் என்று கருத இடமுண்டு. ஆயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும், நாவலரவர்கள் தம் ஆவேதனங்களில் புத்தக வருவாயால் வித்தியாசாலைகள் நடைபெற்றன என்று கூறவில்லை என்பது கவனிக்கத் தக்கது. எனவே நாவலரவர்களின் வித்தியாசாலைத் தருமங்கள் புத்தக விற்பனையால் நடந்தன என்று கூறல் பொருத்தமாகத் தெரியவில்லை.

கோப்பாய் சரவணமுத்து அவர்களின் புதல்வர் பொன்னம்பல பிள்ளை, சித. மு. பசுபதிச் செட்டியாரின் சகோதரிகளில் ஒருவரான தெய்வானையை முதற்றாரமாக மணந்தவர் ; அத்தாரத்தால் அவருக்குச் சந்ததி இல்லை ; இரண்டாம் தாரமாக வரித்தவருக்குப் பெண் மகவொன்றுண்டு. பொன்னம்பல பிள்ளையின் தமையனார் சபாபதிப் பிள்ளையின் புதல்வரே அருணாசலம் பிள்ளையும் விசுவநாத பிள்ளையும். சித. மு. பசுபதிச் செட்டியாரின் பெரிய தந்தையின் மகனும், நாவலரவர்களின் ஈமக் கிரியைகளைச் செய்தவருமான சித. சு. சபாபதிச் செட்டியாரின் புதல்வி கமலாம்பிகை யம்மையாரின் கணவர் அருணாசலம் பிள்ளை. பொன்னம்பல பிள்ளையை அடுத்துத் தருமபரிப பாலகராக விளங்கியவர் விசுவநாத பிள்ளை.

கோப்பாய் ச. பொன்னம்பல பிள்ளை வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் வித்துவ சிரோமணி ச. பொன்னம்பல பிள்ளை பணிபுரிந்த காலை உபாத்தியாயராக இருந்தவர் ; பின்பு காரைக்குடியிலே வித்தியாசாலையொன்றிலே உபாத்தியாயராகச் சில காலம் இருந்து விட்டு, தர்க்ககுடார தாலுதாரி திருஞானசம்பந்தப் பிள்ளை சிதம்பரம் வித்தியாசாலையிலே முதல் உபாத்தியாயராக விளங்கிய போது, இரண்டாம் உபாத்தியாயராகச் சேர்ந்து முதலுபாத்தியாயராகவும் தருமபரிபாலகராகவும் உயர்ந்தவர். பொன்னம்பல பிள்ளையின் இலௌ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிக விஷயங்களைத் திரு, வி. க. '' வித்தியாபிமானிகளுக்கு விக்யாபன நிரசனம் '' எனும் கண்டனத்திலே விரிவாகத் தந்துள்ளார்.[6] இவற்றை நோக்கும்போது, சதாசிவப் பிள்ளை காலத்திலும் பார்க்கப் பொன்னம்பல பிள்ளையின் காலத்திலே நாவலர் தருமம் பாத்திரமின்றி நின்ற நிலை தெளிவாகத் தெரிகின்றது.

'' சிவனடி யாரைச் சிவனென மதிப்போ
னுவமையில் தம்பைய வுத்தம னென்று
நிலங்கொள வழங்கு நீதி
நலங்கொளுஞ் சுவாமி நாத விற்பனனே ''

— சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர்.

6. *1911, பக். 12, 25.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
4-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

462575

UNIVERSITY OF PERADENIYA
4 - 7 - 1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org